ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான

பிள்ளைலோகாசார்யர் திருவாய்மலர்ந்த

தத்வத்ரய

விஶதவாக்ஶிகாமணியாகிய

ஸ்ரீமணவாளமாமுனிகளருளிச்செய்த

வ்யாக்யாநம்.

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபாபதியான,

புதுப்பட்டு - திருவேங்கடாசாரியரால்

சுத்தப்பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால்

ஸ்ரீநிகேதன முத்ராக்ஷரசாலையில்

அச்சிடப்பட்டது.

விஜய ஸ்ரீகார்த்திக

ரௌத்ரிநாமஸம்வத்ஸரம்

ஸ்ரீ ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை

(லிமிடெட்.)

இச்சபையில் தமிழ்லிபியில் அச்சிட்ட க்ரந்தங்கள்.

	ரூ. அ. ப.
...ஸ்லோகம்	0-1-6
...ணிஸ்லோகம்	0-2-6
...ஸ்லோக டிப்பணி	0-2-6
...ட பரமதாமசா... பாஷ்யஸஹிதம்)	0-7-0
...ஷி	0-7-6
...திருமொழி 1 & 2 பத்து	2-0-0
3 to 5 ,,	3-5-0
...ந்த விருத்தம்-ஸவ்யா...டி	1-6-0
...ரு ஸவ்யாக்யானம்	0-14-0
...திருப்பள்ளியெழுச்சி	0-3-0
...அமலனாதிபிரான்	0-7-6
2. பெரியதிருமொழி 1 முதல் 3 பத்துக்கள்	2-9-0
,, 4 to 7	2-13-0
,, 8 to 11	2-10-0
திருக்குறுந்தாண்டகம்	0-2-6
திருநெடுந்தாண்டகம்	1-0-0
...திருவந்தாதி (அரும்பதஸஹிதம்)	0-9-0
...டாம் திருவந்தாதி	0-6-0
...ன்றாம் திருவந்தாதி	0-6-0
20. நான்முகன் திருவந்தாதி	0-7-0
21. திருவிருத்தம் (அரும்பத [illegible])	1-14-0
22. திருவாசிரியம்	0-3-0
23. பெரிய திருவந்தாதி (ப்ரதிபதஸஹிதம்)	0-6-0
24. திருவெழுகூற்றிருக்கை	0-3-0
25. சிறிய திருமடல்	0-4-6
26. பெரிய திருமடல்	0-5-0
27. இராமாநுச நூற்றந்தாதி (உரையுடன்)	0-8-0
28. உபதேசரத்தினமாலை	1-0-0
29. திருவாய்மொழி நூற்றந்தாதி	0-15-6
30. [illegible]	0-1-6
31. மதிசாரண முச்சயம்	0-9-0
32. ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்	2-5-0
33. ஞானஸாரம்-ப்ரமேயஸாரம் ஸவ்யாக்யானம்	0-8-0
34. ரஹஸ்யத்ரய ப்ரதீபிகை யென்கிற பரகாலநல்லான் ரஹஸ்யம்	1-3-6
35. ஆர்த்திப்ரபந்த வ்யாக்யானம்	0-6-0
36. ஸப்தகாதை	0-3-0
37. சதுஸ்லோகீ வ்யாக்யானம்	0-12-6

மேற்கண்ட க்ரந்தங்களுக்கெல்லாம் [illegible]

இப்படிக்கு,

ம. திருவேங்கடமுடையானையா,

காரியதரிசி தரணிகாரி,

ந. 88 செங்கல்வராயமுதலி வீதி, சென்னை.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.



பரமகாருணிகரான

பிள்ளைலோகாசார்யர் திருவாய்மலர்ந்தருளிய

தத்வத்ரயம்.

தொடங்கும்போது அநுஸந்திக்கும் [illegible]

தனியன்கள்.

[illegible] பத்மநாபரருளிச்செய்தது.

பிள்ளைலோகாசார்யர் விஷயமான தனியன்

லோகாசார்ய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே

ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம: ||

மணவாளமாமுனிகளருளிச்செய்தது

ரஹஸ்யார்த்த ஸம்ப்ரதாயபரம்பரையிலே [illegible]

லோககுரும் குருபிஸ்ஸஹ பூர்வை:

கூரகுலோத்தமதாஸமுதாரம் ।

ஸ்ரீநகபத்யபிராமவரேஸம்

தீப்ரஸயாநகுரும் ச பஜேஹம் ॥

பூர்வோக்தகுருபரம்பரைக்கு ப்ரதமாக [illegible]

திருவாய்மொழிப்பிள்ளை யருளிச்செய்தது

கூரகுலோத்தமதாஸர் விஷயமான தனியன்

லோகாசார்யக்ருபாபாத்ரம் கௌண்டிந்யகுலபூஷணம்

ஸமஸ்தாத்மகுணாவாஸம் வந்தே கூரகுலோத்தமம் ॥

மணவாளமாமுனிகளருளிச்செய்தது

திருவாய்மொழிப்பிள்ளை விஷயமான தனியன்

நம: ஸ்ரீஸைலநாதாய குந்தீநகரஜந்மநே

ப்ரஸாதலப்த பரமப்ராப்ய கைங்கர்ய [illegible]

மணவாளமாமுனிகளுக்கு மாதாமஹரான
கோட்டூரழகிய மணவாளப்பெருமாள்பிள்ளை தனியன்.

லோகாசார்ய பதாம்போஜ ராஜஹம்ஸாயிதாந்தரம் ।
ஜ்ஞாநவைராக்ய ஜலதிம் வந்தே ஸௌம்யவரம் குரும் ॥

மணவாளமாமுனிகளருளிச்செய்த
திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான்
தாதரண்ணரையன் விஷயமான தனியன்.

நம: ஸ்ரீசைலநாதாய குந்தீநகரஜந்மநே ।
ப்ரஸாதலப்த பரமப்ராப்ய கைங்கர்யசாலிநே ॥

சாற்றும்போதநுஸந்திக்கும்

தனியன்கள்.

வானமாமலை ஜீயரருளிச்செய்தது.

கோதிலுலகாசிரியன் கூரகுலோத்தமதாதர்
தீதில்திருமலையாழ்வார்செழுங்குரவை மணவாளர்
ஓதரியபுகழ்நாவீறுடையபிரான்றாதருடன்
போதமணவாளமுனி பொன்னடிகள்போற்றுவனே.

வாழியுலகாசிரியன்வாழியவன்மன்னுகுலம்
வாழிமுடும்பையென்னுமாநகரம் - வாழி
மனஞ்சூழ்ந்த பேரின்பமல்குமிகு நல்லார்
இனஞ்சூழ்ந் திருக்கு மிருப்பு.

ஓதுமுடும்பையுலகாசிரியனருள்
ஏது மறவாதவெம்பெருமான் - நீதி
வழுவாச்சிறுநல்லூர்மாமறையோன்பாதந்
தொழுவார்க்குவாரா துயர்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

விசதவாக்சிகாமணியான மணவாளமாமுனிகள்

திருவாய்மலர்ந்தருளிய

தத்வத்ரயவ்யாக்யாநம்.

அவதாரிகை.

“அநாதிமாயயா ஸுப்த:” (க) என்கிறபடியே, அநாத்யசித்ஸம்பந்த நிபந்தநமான அஜ்ஞாநாந்தகாரத்தாலே அபிபூதராய், ஆத்மஸ்வரூபம் பரசேஷைகபரமாய், ஜ்ஞாநாநந்தமயமாய், பகவதநந்யார்ஹசேஷமாயிருக்கும்படியை அறியப்பெறாதே, “தேவோஹம், மநுஷ்யோஹம்” (உ) என்று ஜடமான தேஹத்திலே அஹம் புத்தியைப் பண்ணியும், தேஹாதிரிக்தாத்மஜ்ஞாநம் பிறந்தாலும் “ஈச்வரோஹமஹம் போகீ” (ங) என்று, ஸ்வதந்த்ர புத்தியைப் பண்ணியும், சேஷத்வ ஜ்ஞாந முண்டாய்த்தாலும் அப்ராப்தவிஷயங்களிலே அந்வயிக்கிறதும், இப்படி “யோந்யதா ஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்யதே । கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா” (ச) என்கிறபடியே, ஆத்மஸ்வரூபத்தில் அபஹார ப்ரவ்ருத்தருமாய், அகில பாபமூலமான ஆத்மாபஹாரத்தைப் பண்ணி, அசாஸ்த்ரீயத்வாதி தோஷதுஷ்டமான ஸம்ஸாரத்திலே பொருந்தியிருப்பாராய்; “விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும் । பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதிஸம்யுதா” (ரு) என்கிறபடியே, கரணகளேபரமாய், போகமோக்ஷஸாதநமாய், அதிசயிதமாய்க் கிடைத்த தசையிலே பரமதயாளுவான ஸர்வேச்வரன், ஸ்வசர ணாரவிந்தஸமாச்ரயணீயனாகக் கொடுக்க ஸரீரத்தைக்கொண்டு ஸமாச்ரயணம் பண்ணி உஜ்ஜீவிக்கலாயிருக்க, அத்தை யாதே “[illegible] புழுவேன்” (௬) படியே, அ[illegible], ஆஹா[illegible] கொடுத்த கொ[illegible]யைக்கொண்டு அகங்கையேறலாயிருக்க நீராய்ச்சாலே யொழுகிக

கடலிலே புகுவாரைப்போலே, ஸம்ஸார நிஸ்தரணத்துக் குடலான
வற்றையும் ஸம்ஸரணத்துக்குடலாக்கி, அநாத்யவித்யா ஸஞ்சித
அநந்த புண்யபாபரூப கர்மாநுகுணமாக மாறிமாறிப் பலபிற
ப்பும் பிறந்து, பிறந்த ஜந்மந்தோறும் துரந்ததாபத்ரய தவாநல தஹ்ய
மாநராய், இப்படி அநாதிகாலம் போராநிற்கச்செய்தேயும், அதீ
தாநாகத மறியாமையாலே, அதிலே ஒரு க்லேஶமன்றிக்கே கர்ப்ப
ஜந்ம பால்ய யௌவந வார்த்தக மரண நரகரூபாவஸ்தா ஸப்தக
த்தை ப்ராபித்து, து:கபரம்பரைகளை யநுபவித்து, இப்படி அந
ந்தக்லேஶபாஜநமான ஸம்ஸார ஸாகரத்திலே அழுந்திக்கிடந்தலை
கிற சேதநருடைய அநர்த்தவிஶேஷத்தை யநுஸந்தித்து, இவர்க
ளுடைய உஜ்ஜீவநத்துக்கு க்ருஷிபண்ணிக்கொண்டு போருகிற
ஸர்வபூதஸுஹ்ருத்தான ஸர்வேஶ்வரன், (எ) "ஏவம் ஸம்ஸ்ருதி
சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: । ஜீவே து:காகுலே
விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே" என்கிறபடியே, தன்னு
டைய திருவுள்ளத்தில் பிறந்த அபாரகாருண்யத்தாலே, (அ) "ஜாய
மாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந்மதுஸூதந: । ஸாத்த்விகஸ்ஸ
து விஜ்ஞேயஸ்ஸ வை மோக்ஷார்த்தசிந்தக:" என்கிறபடியே, ஜாய
மாநகாலத்தில் பண்ணின விஶேஷ கடாக்ஷத்தாலே நிரஸ்த ரஜஸ்த
மஸ்கருமாய், ப்ரவ்ருத்தஸத்த்வகுணகருமாய், முமுக்ஷுக்களான சேதநரு
க்கு தத்த்வஜ்ஞாநம் பிறந்தாலல்லது மோக்ஷஸித்தியில்லாமையாலே,
தத்த்வஜ்ஞாநம் ஸம்பாத்யமானவளவில், அது ஶாஸ்த்ரஜந்யமாதல்
உபதேஶகம்யமாதல் ஆகவேண்டுமாகையாலும், ஶாஸ்த்ர ஜந்யமா
னவில் (கூ) "ஶாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேஶம்" என்கிறபடியே
ஹுக்லேஶஸாத்யமாகையாலே து:ஸ்ஸாத்யமாகையாலும், வரு
ந்தி ஸாதிக்கப்பார்த்தாலும் (க0) "அநந்தபாரம் பஹுவேதித
வ்யமல்பஶ்ச காலோ பஹவஶ்ச விக்நா:" என்கிறபடியே, சேதநர் மந்
தமதிகளுமாய், மந்தாயுஸ்ஸுக்களுமாய் அதுக்குமேலே விக்நங்க
ளும் அநந்தங்களாயிருக்கையாலே எல்லார்க்கும் மொக்ஷஸித்திக்கை
ரிதாகையாலும்; இனித்தான் ஶாஸ்த்ராப்யாஸத்துக்கு அநதிகாரி
களான ஸ்த்ரீஶூத்ராதிகளுக்கு முமுக்ஷுத்வமுண்டானாலும் நிஷ்
ப்ரயோஜநமாம்படி யிருக்கையாலும்; உபதேஶகம்ய மானவளவில்,
உக்ததோஷ மொன்றுமில்லாமையாலும்; இந்தவிஶேஷத்தைத்

மூலம்.—(க) முமுக்ஷுவான சேதநனுக்கு மோக்ஷமுண்டாம்போது தத்வத்ரயஜ்ஞானமுண்டாகவேணும்.

திருவுள்ளம்பற்றி, ஸகல ஶாஸ்த்ரநிபுணராய் ஸகல சேதநோஜ்ஜீவநகாமராய் பரமகாருணிகரான பிள்ளைலோகாசார்யர், ஶ்ருதிஸ்ம்ருதிதிஹாஸ புராணாதிகளிலே த்ரவகாஹமாம்படி பரக்கச்சொல்லப்படுகிற சிதசிதீஶ்வர தத்வங்களுடைய ஸ்வரூப ஸ்வபாவவிஶேஷங்களை, அகில சேதநர்க்கும் ஸுக்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும் இப்ரபந்தமுகேந அருளிச்செய்கிறார்.

நடுவிற்றிருவீதிப்பிள்ளை பட்டர், ஆச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களுடைய ப்ரபந்தநிர்மாணத்துக்கும்கருத்திதுவிறே. நிரஹங்காரராய் பரஸம்ருத்தியப்ரியராய் க்யாதிலாபாதி நிரபேக்ஷராயிருக்கிறவிவர்கள் பலரும் ப்ரபந்தமிடவேண்டுவானென்? ஒருவரிட்ட ப்ரபந்தத்தை மற்றுமுள்ளவர்கள் பரிபாலநம்பண்ண வமையாதோ? என்னில்; ஆழ்வார்கள்பலரும் ஏககண்டராயருளிச்செய்கையாலே அர்த்தத்துக்கு ஆப்ததமத்வஸித்திக்காப்போலே, ஆசார்யர்கள் பலரும் ஏககண்டமாக வருளிச்செய்த வர்த்தமென்று மந்தமதிகளும் விஶ்வஸிக்கைக்காக; இன்னமுமொரொன்றில் அவிஶதமானவர்த்தவிஶேஷங்கள், ஒரொன்றிலே விஶதமாயிருக்கும்; அதுக்கடி ஶக்திவிஶேஷங்களும் ஸங்கோசவிஸ்தாரங்களும். இது வுசகர்த்ருகங்களான ப்ரபந்த விஶேஷங்களுக்கு மொக்கும்.

(வ்யாக்யாநம்.) (முமுக்ஷுவான சேதநனுக்கு மோக்ஷமு டாம்போது தத்வத்ரயஜ்ஞாநமுண்டாகவேணும்) முமுக்ஷு ான்-மோக்ஷேச்சையுடையவன், 'ஸம்ஸாரவிமோசநத்தில் இ யுடையவனென்றபடி. முமுக்ஷுவான—என்கையாலே, ஸ நிவ்ருத்தியில் இச்சை ஒருவனுக்குண்டாகையிலுள்ள வ தோற்றுகிறது. இந்தவிச்சை பிறவாமையிறே, அநாதிகாலப் ஸரித்தது. உஜ்ஜிஜீவயிஷுவான ஸர்வேஶ்வரனும் இந்த வ பிறக்குமளவுமிறே பார்த்திருக்கிறது.

ஸம்ஸாரத்தைப் பூண்கட்டிக்கொள்ள விச்சிக்கக்கடவ ஆத்மாவுக்கு தந்நிவ்ருத்தியில் இச்சைபிறக்கை துர்லபமிறே. இப்போது,

இவர் சேதநரென்றதும் ஸாபிப்ராயம். அதாவது — சைதந்யப்ரயோஜநமுண்டாகத் தொடங்குகிறது இப்போதென்கை; அநாதிகாலம் வ்யர்த்தமே போய்த்ததிக்கணிறே சைதந்யம்; அதாவது-உஜ்ஜீவநத்துக்கு உறுப்பாகாமை. இனித்தான் ஸம்ஸார நிவ்ருத்தியை யிச்சிக்கிறது — *நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுகபாவைகலக்ஷணமாகிற பகவத்ப்ராப்திக்கு உறுப்பாகவிறே. (கக) தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வாவது; ஆத்மப்ராப்திக்கு உறுப்பாக ஸம்ஸாரநிவ்ருத்தியை யிச்சித்தாலும் விபரீதஜ்ஞாநகார்யமாமித்தனை. ஆகையால் பகவத்ப்ராப்திக்கு விரோதியான ஸம்ஸாரத்தினுடைய விமோசநத்திலிச்சையுடையவனை யதிகாரிக்கு, அப்படியிருந்துள்ள மோக்ஷமாகிற புருஷார்த்தம் ஸித்திக்கும்போது தத்வத்ரயஜ்ஞாநமுண்டாகவேணுமென்கை.

தத்வஜ்ஞாநோதயத்துக்கு முன்னே முமுக்ஷு ஜநிக்கக்கூடுமோ? என்னில்; (கஉ) "பரீக்ஷ்ய லோகாந்" (அ) "ஜாயமாநம் ஹி" இத்யாதி ப்ரமாணங்களிற் சொல்லுகிற ப்ரக்ரியையாலே கூடும்.

உண்டாகவேணுமென்று அபேக்ஷிதத்வம் தோற்ற வருளிச்செய்கையாலே, (கந) "தத்வஜ்ஞாநாந்மோக்ஷலாப:" என்கிற நியமம் தோற்றுகிறது. (கந) "தத்வஜ்ஞாநாந்மோக்ஷ:" என்கிறவிது, ஸகல வித்யாங்க ஸாதாரணமிறே. மோக்ஷத்திலும் தத்வத்திலுமிறே விப்ரதிபத்தியுள்ளது. ஆனால் (கந) "ஜ்ஞாநாந்மோக்ஷ:" என்கிற நியமம் கொள்ளும்போது (கச) "பஶுர்மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவஸம்ஶ்ரயா: தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம்" (கரு) "யம் யம் ஸ்ப்ருஶதி பாணிப்யாம் யம் யம் பஶ்யதி சக்ஷுஷா। ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர்பாந்தவா ஜநா:" என்று, ஜ்ஞாநயோக்யதையில்லாத திர்யக் ஸ்தாவரங்களுக்கும் வைஷ்ணவ ஸம்பந்தத்தாலே மோக்ஷஸித்தியைச் சொல்லுகிற சாஸ்த்ரங்களுக்கு வையர்த்யம் வாராதோ? என்னில்; வாராது; அவற்றுக்கு முமுக்ஷுத்வந்தானுமில்லையிறே. இங்கு, முமுக்ஷுவான சேதநனுக்கிறே மோக்ஷஸித்திக்கு தத்வஜ்ஞாநமுண்டாகவேணுமென்றது. அங்கு தானும் முமுக்ஷுத்வமும், தத்வஜ்ஞாநமும், இரண்டும் இவற்றின் பக்கலின்றிக்கே

யிருக்கச்செய்தேயும், இவை யிரண்டாலும் பூர்ணனாயிருப்பானொருவைஷ்ணவனுடைய அபிமாநமிறே! கார்யகரமாகச் சொல்லுகிறது.

ஆகையாலே, அபிமாநியானவனுடைய ஜ்ஞாநவிசேஷத்தைக் கடாக்ஷித்தே, அபிமாநாந்தர்ப்பூதனான விவர்க்கும் ஈச்வரன் கார்யஞ்செய்கையாலே, "தத்த்வஜ்ஞாநாந்மோக்ஷ:" (க௫) என்கிற விது, அவ்விடத்திலும் ஸத்வாரகமாக வித்திக்கும். தத்வஜ்ஞாநமென்றதே,-தத்வத்ரயஜ்ஞாநம் என்கையாலே தத்வங்களை அநேகமாகவும், ஸ்தூலமாகவும் கொள்ளுகிற பாஹ்ய குத்ருஷ்டிமதங்கள் அர்த்தாத் ப்ரதிக்ஷிப்தங்கள்.

இவர் தாம் தத்வத்ரயம் - என்று நிர்ணயிக்கைக்கு ப்ரமாண மென்? என்னில்; நிர்தோஷ ப்ரமாணமான வேதாந்தம், "போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா" (க௬) என்று போக்த்ருரூபத்தாலும், போக்யரூபத்தாலும், ப்ரேரயித்ருரூபத்தாலும், சித் அசித் ஈச்வர தத்வங்கள் மூன்றையுமிறே சொல்லுகிறது. ஆகையாலே "வேதாந்தப்ரதிபாத்யம், தத்வத்ரயமுமே" என்று நிச்சயித்து, மோக்ஷமுண்டாம்போது தத்வத்ரயஜ்ஞாநமுண்டாகவேணும் என்கிறார்.

ஆனால், "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே" (க௭) என்று வேதாந்தங்கள், பகவத்தத்வ ஜ்ஞாநமொன்றுமே மோக்ஷஸாதநமென்னாநிற்க; தத்வாந்தரபரி ஜ்ஞாநத்தையும் இவர் மோக்ஷஸாதநமாக வருளிச்செய்வானென்! என்னில்; பகவத் தத்வத்தை யறியும்போது, ஸகல சேதநாசேதந விலக்ஷணமாகவும், இவற்றுக்கு காரணமாகவும், வ்யாபகமாகவும், தாரகமாகவும், நியாமகமாகவும், சேஷியாகவு மறியவேண்டுகை யாலும், தத்வாந்தரங்களை யறியாதபோது இப்படி யறிய விரகில்லாமையாலும், தத்வத்ரயஜ்ஞாநமுண்டாகவேணும் என்னக் குறையில்லை. "போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா" (க௬) "ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரஞ்ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி" (க௮) என்கிற ச்ருதிக்கும் சேர்த்தியிதுவிறே. இங்ஙனன்றாகில், "தமேவம் வித்வாந்" (க௭) இத்யாதி ச்ருதி

(௨.) தத்வத்ரயமாவது - சித்தும், அசித்தும், ஈஶ்வரனும்.

(௩.) சித்தென்கிறது - ஆத்மாவை.

யோடு இதற்கு விரோதம்வரும். ஆகையால் இந்த ஶ்ருதிச்சாயை யாலே இவரும் அருளிச்செய்தாராகையாலே, வேதாந்தவிரோத ப்ரஸங்கமொன்றுமில்லை.

௨. (அவதாரிகை) தத்வத்ரயந்தானேதென்னு மாகாங்க்ஷை யிலே யருளிச்செய்கிறார்;

(வ்-ம்) (தத்வத்ரயமாவது சித்துமசித்து மீஶ்வரனும்) என்று. சித்—ஆவது-சைதந்யாதாரமானவஸ்து. அசித்—ஆவது-சைதந்ய அநாதாரமானவஸ்து. ஈஶ்வரன் - ஆகிறான்-யோகவைஶேஷிகாதி தந்த்ரத்திலுள்ளார் சொல்லுகிற கணக்கிலே யொரு புருஷவிஶேஷ மன்றிக்கே, வேதாந்திகள் சொல்லுகிற சிதசிந்நியந்தா. (௧௯) "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:" (௨0) "ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶ:" என்னக்கடவதிறே.

௩. (அ-கை.) உத்தேஶக்ரமத்திலே, தத்வத்ரயத்திலுடையவும் ஸ்வரூப ஸ்வபாவவிஶேஷங்களை உபபாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் சித் தத்வத்தை உபபாதிக்க உபக்ரமிக்கிறார்;

(வ்-ம்) சித் என்கிறது ஆத்மாவை - என்று. நடுவிற்றிருவீதிப் பிள்ளை பட்டரும், ஆச்சான் பிள்ளையும், முதலான ஆசார்யர்கள் தத்வத்ரயமருளிச்செய்கிற விடத்தில், அசித்உபக்ரமமாக வருளிச்செய்தார்கள். இவர் சித் உபக்ரமமாக வருளிச்செய்தார். இதுக் குக்கருத்து-அசித் தத்வம் ஹேயதயா ஜ்ஞாதவ்ய மாகையாலும், ஈஶ்வரன் உபாதேயதயாஜ்ஞாதவ்ய னாகையாலும். இப்படி இரண்டு தத்வத்தையு மறிகைக்கு அதிகாரியான சேதநனுடைய ஸ்வ ரூபந் தன்னை முதலிலே யறிந்துகொள்ளவேணுமிறே! என்று.

அவர்கள்தானப்படி யருளிச்செய்வானென்? என்னில்; ஆத் மாவினுடைய ப்ரக்ருதே: பரத்வஜ்ஞாநம் ப்ரக்ருதியை யறியாத போது கூடாமையாலே, முந்துற ப்ரக்ருதிதத்வத்தையறிந்து, அநந் தரம் தத்வ்யதிரிக்தனாய் ததந்தர்வர்த்தியான வாத்மாவை யறிந்து,

அநந்தரம் ஆத்மாவுக்கந்தர்யாமியாய் ஶரீரத்துக்கு ஆத்மாவைப் போலே உபயத்துக்கு மபிமாநியாயிருக்கிற பரமாத்மாவினுடைய ஸ்வரூபத்தை யறிகை புத்யாரோஹக்ரமமாகையாலே யருளிச் செய்தார்கள்.

அசிதுபக்ரமமாகச் சொல்லுகிறவிது, (உக) "அந்நமயம்" தொடங்கி "ஆநந்தமயன்" அளவும் ஆரோஹித்த ஶ்ருதிமர்யாதைக் குச்சேரும்; சிதுபக்ரமமாகச் சொல்லுகிறவிது, (க௭) "[illegible]" இத்யாதிஶ்ருதிக்குச் சேரும்; ஆகை யால், இரண்டுக்ரமமும் வேதாந்தஸித்தம்; (உஉ) "[illegible]" என்று ஆளவந்தாரும், (உ௩) "[illegible]" என்று பாஷ்யகாரரும் அருளிச்செய்த வசநங்கள் உபயகோடியிலும் சேரும். எங்ஙனேயென்னில்; சிதுபக்ரமமே ஜைநக்குத்தானே ஸ்வாஸமாயிருந்ததிறே. அசிதுபக்ரமயோஜ நையில் வந்தால் க்ரமவிவக்ஷையாவன்று, அவர்களப்படி யருளிச்செய் தது; ஸமஸ்தபதமாக வருளிச்செய்கையாலே. ஸமாஸத்தில் அப்ய ர்ஹித மாதல், அல்பாக்ஷரமாதல் முற்படக்கடவதென்கிற ந்யா யத்தைப்பற்ற அல்பாக்ஷரமான சித்சப்தம் முன்னாக வருளிச் செய்தார்களித்தனை. அப்யர்ஹிதனான ஈஶ்வரன்றன்னை முதலிலெ டாதே, சித்சப்தத்தாலே சேதநனைச்சொல்லிற்று, (உ௪) "[illegible]" என்கிற வநுஶாஸநபலத்தாலே; இப்படி யிரண்டு க்ரமமும் வைதிகபரிக்ருஹீதமாகையாலே, இரண்டும் முக்ய மென்று கொள்ளக்குறையில்லை.

சித்சப்தம், (உ௫) "[illegible]" என்று, ஜ்ஞாநவாசிஶப்தங்களோடே ஸஹபடிதமாகையாலும், ஜ்ஞாநாஶ்ரயவஸ்துவில் இதுக்கு ப்ரஸித்திப்ராசுர்ய மில்லாமையாலும், (கக) "[illegible]" (உ௬) "[illegible]" (உ௭) "[illegible]" (உ௮) "[illegible]" என்று, இப்படி ஶ்ருதிஸ்ம்ருதிகளிலே பலவிடங் களிலும் சொல்லுகையாலே, ஆத்மஶப்தத்துக்கு ஜீவவிஷயத்தில்

(௪.) ஆத்மஸ்வரூபம்—“ சென்றுசென்று பரம்பரமாய் ” என்கிறபடியே, தேஹேந்த்ரிய மந:ப்ராண புத்திவிலக்ஷண மாய், அஜடமாய், ஆநந்தரூபமாய், நித்யமாய், அணுவாய், அவ்யக்தமாய், அசிந்த்யமாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், ஜ்ஞாநாஶ்ரயமாய், ஈஶ்வரனுக்கு நியாம்யமாய், தார்யமாய், ஶேஷமாயிருக்கும்.

ப்ரஸித்திப்ராசுர்ய முண்டாகையாலும், ஸித்தென்கிறது - ஆமாவை யென்று, ஸ்ப்புடமாக வருளிச்செய்கிறார்.

௪. (அ-கை.) இனி, இந்த ஆத்மாவினுடைய ஸ்வரூப மிருக்கும் படி யெங்ஙனே? என்கிற ஶங்கையிலே, ஆத்மஸ்வரூபலக்ஷணத்தை யருளிச்செய்கிறார்

(வ்-ம்) (ஆத்மஸ்வரூபம் “ சென்று சென்று பரம்பரமாய் ” என்றுதொடங்கி). ஶ்ருதி ஸ்ம்ருத்யாதிகளிலே ஒன்றைச் சொல்லலாயிருக்க, இப்போது ஆழ்வாரருளிச்செய்த சந்தையை யெடுத்தது தத்வ ப்ரதிபாதகங்களான ஶ்ருத்யாதிகளிலுங்காட்டில் தத்வதர்ஶிகளில் ப்ரதாநரான ஆழ்வாருடையவசநமே தத்வநிர்ணயத்துக்கு முக்யப்ரமாணமென்று தோற்றுகைக்காக; (உகூ) “விஷயஸ்ய வேதிகா ஸ்வேதீய ஸர்வதா ஸாக்ஷிண:” என்றிறே பரமாசார்யரு மருளிச்செய்தது. ஸ்வரூபமாவது-ஸ்வம்மானரூபம். அதாவது - அஸாதாரணாகாரம். (௩௦) “சென்று சென்று பரம்பரமாய்” என்றது-போய்ப்போய் ஒன்றுக்கொன்று மேலாயிருக்கிற * அந்நமயப்ராணமய மநோமயங்களுக்கு அவ்வருகா யென்றபடி. ‘தேஹேந்த்ரிய மந:ப்ராண புத்திவிலக்ஷணமாய்’ என்கிற விடத்தில் புத்தி ஶப்தத்தால்-மஹத்தநுக்ருஹீதமான அந்த:கரணத்தைச் சொல்லுகிறதோ? ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறதோ? என்னில்; இவருக்கிங்கு விவக்ஷிதம் ஜ்ஞாநமாகவேணும்; தத்வஶேகரத்தில் தேஹாதிவைலக்ஷண்ய மருளிச்செய்கிறவிடத்தில் அப்படி யருளிச்செய்கையாலே. (௩௧) “தேஹேந்த்ரிய மந:ப்ராண தீப்யோऽந்ய:” என்றிறே! ஆளவந்தாரு மருளிச்செய்தது. உத்தேஶம், லக்ஷணம், பரீக்ஷையென்று மூன்றுவகைப்பட்டிறே! தத்வநிர்ணயக்ரம மிருப்பது; அதில் “ஸித்தமஸித்தமீஶ்வரனும்” என்று, தத்வத்ரயத்தையுமுத்

(௫) ஆத்மஸ்வரூபம் தேஹாதி விலக்ஷணமானபடி யென்? என்னில்;

தேஶித்து, உத்தேஶக்ரமத்திலே அவற்றினுடைய ஸ்வரூபஶோதநம் பண்ணுவதாக நினைத்து, ப்ரதமத்திலே சிச்சப்தோத்திஷ்டனான ஆத்மாவினுடைய ஸ்வரூபஶோதநம் பண்ணுவதாக உபக்ரமித்து, “தேஹேந்த்ரிய மந:ப்ராண புத்திவிலக்ஷணமாய்” என்று தொடங்கி “ஶேஷமாயிருக்கும்” என்னுமளவாக ஸ்வரூபலக்ஷணத்தை யருளிச்செய்தார். அத்தைப்பரீக்ஷிக்கிறார்மேல்.

(௫)(அ-கை.)அதில் ப்ரதமத்திலே ஆத்ம ஸ்வரூபத்தினுடைய தேஹாதி வைலக்ஷண்யத்தை ஶோதிப்பதாக தஜ்ஜிஜ்ஞாஸுக்களுடைய ப்ரஶ்நத்தை அநுபாஷிக்கிறார்;

(வ்-ம்.) (ஆத்ம ஸ்வரூபம் தேஹாதிவிலக்ஷணமானபடியென்? என்னில்) என்று. இது தன்னை தத்வஶேகரத்தில் இவர் தாமே விஸ்தரேண வருளிச்செய்தார்.

தேஹம்-அநேகாவயவ ஸங்காதாத்மகமென்னுமிடம் ஸித்தம்; அதில் எல்லா அவயவங்களுக்கும் சைதந்யமுண்டாகில், அநேக சேதநோபலப்தி ப்ரஸங்கிக்கும். அவயவங்களுக்கு அந்யோந்யம் விவாதநியமமும், அவற்றில் மமதாபுத்தியும், மமதாவ்யவஹாரமுங்கூடாது. [“ஓரவயவத்துக்கே சைதந்யங்கொள்ளில்; அது விச்சிந்நமானால், அவயவாந்தரம் அதநுபவித்ததை ஸ்மரிக்கக்கூடாது. பின்பு, அஹம்புத்தி வ்யவஹாரங்களும், மமதாபுத்தி வ்யவஹாரங்களும் தவிரவேணும்; ஸர்வ ஶரீரவ்யாபியான ஸுகதுஃகாநுபவமுங் கூடாது. அவயவ ஸங்காதாத்மகமன்று, ஶரீரம் அவயவி, அதிலே சைதந்யமென்னவு மொண்ணாது: உபலம்பாநுபபத்திகளில்லாமையாலே. அவயவி ஸ்வீகாரம் அநுபபந்நமாகையாலே. கிஞ்ச,
(௩௨) “ [illegible] ஜ்ஞாநஃ, [illegible] ஜ்ஞாநஃ, [illegible]” என்று, ஶரீராஹமர்த்தங்களில் பிறக்கிற பேத ப்ரதிபத்தியும், பேத வ்யவஹாரமும் கூடாது;
(௩௩) “[illegible]” என்கிற விடத்திற்போலே, அமுக்யமென்னவொண்ணாது; முக்யே பாதகமில்லாமையால். அன்றிக்கே, அஹம்

புத்திக்கு ஶரீரம் விஷயமென்று கொண்டாலும், ப்ருதியாலும் ப்ருத்யர்த்தாபத்திகளாலும் தேஹாதிரிக்தனாய், தேஹாந்தரபரிக்ரஹயோக்யனான ஆத்மா ஸித்தன். பாஹ்யேந்த்ரியங்களும் ஆத்மாவாக மாட்டாது; ஒருவனே ஸர்வேந்த்ரிய விஷயங்களையு மறிகையால். இப்படிக் கொள்ளாதபோது, "யாவனொருவன் நானிவ்வர்த்தத்தைக் கண்டேன், அந்தநானே ஸ்பர்ஶியா நின்றேன்" என்கிற ப்ரதிஸந்தாநமுங் கூடாது. சக்ஷுஸ்ஸே ஆத்மாவாகில், அந்தன் ரூபத்தை ஸ்மரியா தொழியவேணும். ஶ்ரோத்ரமே ஆத்மாவாகில், பதிரன் ஶப்தத்தை ஸ்மரியா தொழியவேணும். இப்படி மற்றையிந்த்ரியங்களிலுங்கண்டுகொள்வது. அந்தஃகரணமும் ஆத்மாவாகமாட்டாது; கர்த்தாவினுடைய ஸ்மரணாதி கார்யங்களுக்குக் கரணமாகக் கல்பிதங்களாகையாலே. இது தானே ஸ்மரிக்கிறதென்னவொண்ணாது; ஸ்மரணத்துக்குக் கரணமில்லாமையாலே. கரணமும் இது தானேயென்னவொண்ணாது; விருத்தமாகையாலே. வேறேயொன்று கரணமென்னில்; அது பாஹ்யகரணமாகில், அதில்லாதவனுக்கு ஸ்ம்ருதி கூடாது; அந்தஃகரணமாகில், ஆத்மாவுக்கு மநஸ்ஸென்று பேரிட்டதாய்விடும். அந்தஃகரணம் அநபேக்ஷிதமாகில், இந்த்ரியார்த்தஸம்பந்தமுண்டானபோதெல்லாம்ஜ்ஞாநம்பிறக்கவேணும்; ஆகையால், மநஸ்ஸூம் ஆத்மாவாகமாட்டாது. ப்ராணன்களும் ஆத்மாவாகமாட்டாது; ஸங்காதரூபங்களாகையாலே. தேஹம் ஆத்மாவென்கிற பக்ஷத்துக்குச் சொன்ன தூஷணங்கள் இங்கும் துல்யம். ஜ்ஞாநமும் ஆத்மாவாகமாட்டாது; "எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது, நஶித்தது" என்று க்ஷணிகமுமாய், ஆத்மதர்மமுமாய்த் தோற்றுகையாலே. ஸ்த்திரனாயிருப்பானொருத்தனுண்டென்னுமிடம், "நேற்றுக்கண்டநானே இன்றுங் காணாநின்றேன்" என்கிற ப்ரத்யபிஜ்ஞையாலே ஸித்தம்''] என்று, இப்படி விஸ்தரேண வருளிச்செய்தாரிறே.

(௯) (அ-கை.) இப்படி தனித்தனியே யெடுத்துக் கழிக்குமளவில் க்ராந்தவிஸ்தரமாமென்று மந்தமதிகளுக்கும் ப்ரதிபத்தியோக்யமாம்படி, தேஹாதிகளை ஸமுச்சித்யோபாதாநம் பண்ணி, அவற்றிற் காட்டில் ஆத்மாவுக்குண்டான வைலக்ஷண்யத்தைச் சில யுக்திவிஶேஷங்களாலே ஸங்க்ரஹமாக வருளிச்செய்கிறார்;

(௯) தேஹாதிகள் "என்னுடைய தேஹாதிகள்" என்று, ஆத்மாவில் வேறுபட்டுத்தோற்றுகையாலும், 'இதம்' என்று தோற்றுகையாலும், ஆத்மா "நான்" என்று தோற்றுகையாலும், இவை யொருகால் தோற்றி யொருகால் தோற்ருமையாலும், ஆத்மா எப்போதுந் தோற்றுகையாலும், இவை பலவாகையாலும், ஆத்மா ஒருவனாகையாலும், ஆத்மா—இவற்றில் விலக்ஷண னென்று கொள்ளவேணும்.

(வ்ய.) (தேஹாதிகள்) என்று தொடங்கி. "தேஹாதிகள் "என்னுடைய தேஹாதிகள்" என்று - ஆத்மாவில் வேறுபட்டுத் தோற்றுகையாலும், "இதம்" என்று தோற்றுகையாலும், ஆத்மா "நான்" என்று தோற்றுகையாலும்" அதாவது-தேஹாதிகளானவை என்னுடையதேஹம், என்னுடைய இந்த்ரியம், என்னுடைய மநஸ்ஸு, என்னுடையப்ராணன், என்னுடைய புத்தியென்று, மமதா புத்திக்கும், மமதாவ்யவஹாரத்துக்கும் விஷயமாய்க்கொண்டு அஹமர்த்தபூதனான வாத்மாவுக்கு அந்யமாய்த்தோற்றுகையாலும், அப்படியே "இது தேஹம், இது இந்த்ரியம்" என்று இதம்புத்தி வ்யவஹாரவிஷயமாய்க் கொண்டு அஹமர்த்த வ்யதிரிக்தமாய்த் தோற்றுகையாலும்; அங்ஙனன்றிக்கே, ஆத்மா அஹமர்த்தபூதனாய்க்கொண்டு தோற்றுகையாலு மென்றபடி.

"இவை ஒருகால் தோற்றி ஒருகால் தோற்ருமையாலும் ஆத்மா எப்போதுந் தோற்றுகையாலும்" 'இவை' என்று தேஹேந்த்ரியாதிகளைப் பராமர்ஸிக்கிறது. தேஹம் ஒருகால் தோற்றி ஒருகால் தோற்ருமையாவது-ஜாக்ரத்தஸையில் (ஙஃ) "ஸ்தூலோஹம், க்ருஶோஹம்" இத்யாதிகளாலே அஹம் புத்தி வ்யவஹாரவிஷயமாய்க்கொண்டு ஆத்மத்வேந தோற்றியிருந்ததேயாகிலும், ஸுஷுப்தி தஸையில் அப்படி தோற்ருதிருக்கை.

ஆத்மா எப்போதுந் தோற்றுகையாவது - "உறங்குவதுக்கு முன்பு இவையெல்லாம் அறிந்திருந்த நான் உறங்குகிறபோது என்னுடம்பு முட்படவறிந்திலேன்" என்று, ப்ரத்யபிஜ்ஞை பண்ணுகையாலே, உபயாவஸ்தையிலும் தேஹாதந்யனா யிருப்பானொரு ஆத்மா உண்டென்று தோற்றுகை.

அதவா, ஜந்மமரணப்ரவாஹத்தாலே தேஹம் ஒருகால்தோற்றி ஒருகால் தோற்றாமையாலும், "நான் ஜந்மாந்தரத்தில் பண்ணின அதிலுடைய பலமிது" என்கிற லோகவ்யவஹாரத்தாலே, ஆத்மா ஜந்மமரணாதிகளைக்கொண்டு எப்போதுந் தோற்றுகையாலு மென்னவுமாம்.

அப்படியே, சக்ஷுராதிரூபேண தோற்றியிருக்கிற இந்த்ரியங்கள், அந்த பதிராத்யவஸ்த்தைகளில் தோற்றாமையாலும்; ஸங்கல்பாதிஹேதுத்வேந தோற்றியிருக்கிற மநஸ்ஸு, ஒரு காலவிசேஷங்களிலே மூடமாய்க்கொண்டு ஒன்றுந் தோற்றாமையாலும்; உச்ச்வாஸநிச்வாஸாதிகளாலே தோற்றியிருக்கிற ப்ராணன்கள், ஒரோ மோஹதசைகளிலே நெற்றியைக்கொற்றிப் பார்க்கவேண்டும்படி தோற்றாமையாலும்; விஷயக்ரஹணவேளையில் ப்ரகாசிக்கிற ஜ்ஞாநம் விஷயக்ரஹணாபாவதசையில் தோற்றாமையாலும்; இப்படியன்றிக்கே, "நான் கண்ணும்செவியும் முன்பு விளங்கியிருந்தேன், இப்போது அந்தனும் பதிரனுமானேன்; முன்பு என்னுடைய மநஸ்ஸு விசதமாயிருக்கும், இப்போ தொன்றுந் தெரிகிறதில்லை; நானப்போது நிஷ்ப்ராணனாய்க் கிடந்தேன், இப்போது ஸப்ராணனானேன்; எனக்கப்போது ஜ்ஞாநமுண்டாயிருந்தது, இப்போது நசித்தது" என்று, இவை தோற்றினபோதோடு தோற்றாதபோதோடு வாசியற ஆத்மா எப்போதுந் தோற்றுகையாலும்,

இவை பலவாகையாலும் ஆத்மா ஒருவனாகையாலும்; மீண்டும் இவை யென்று தேஹாதிகளைப் பராமர்சிக்கிறது. தேஹத்துக்குப்பன்மை அநேகாவயவ ஸங்காதாத்மக மாகையாலே; இந்த்ரியங்களுக்குப் பன்மை சக்ஷுச்ச்ரோத்ராதிவ்யக்தி பேதத்தாலே. மநஸ்ஸுக்குப்பன்மை - மநோபுத்தி சித்தாஹங்கார ரூபமானபேதத்தாலே. ப்ராணனுக்குப்பன்மை, ப்ராணாபாநாதி பேதத்தாலே ; புத்திக்குப்பன்மை — கடஜ்ஞாந படஜ்ஞாநாதிபேதத்தாலே. இப்படி தேஹாதிகளோரொன்றே பலவாகையாலும்; இங்ஙனன்றிக்கே, அஹம்புத்தி வ்யவஹாரார்ஹனான ஆத்மா ஒருவனாகையாலும், ஆத்மா இவற்றில் விலக்ஷணனென்று சொல்லவேணும். அதாவது-இப்படி தேஹாதிப்ரகாரத்தையும், ஆத்மாவினுடைய ப்ரகாரத்தையும் நிரூபித்தால், ஆத்மா தேஹாதிகளானவற்றில்

(ஏ.) இந்தயுக்திகளுக்குக் கண்ணழிவுண்டேயாகிலும், ஶாஸ்த்ரபலத்தாலே ஆத்மா தேஹாதி விலக்ஷணனாகக் கடவன்.

வேறுபட்டிருப்பானொருவனென்று அவஶ்யம் அங்கீகரிக்கவேணு மென்கை.

ஏ. (அ-கை.) இப்படி யுக்தியாலே ஸாதிதமான வர்த்தத்தை ஶாஸ்த்ரபலத்தாலே த்ருடீகரிக்கிறார்;

(வ்-ம்.) (இந்த யுக்திகளுக்குக் கண்ணழிவுண்டேயாகிலும் ஶாஸ்த்ரபலத்தாலே ஆத்மா தேஹாதிவிலக்ஷணனாகக் கடவன்) என்று. கண்ணழிவுண்டே யாகிலும் என்கையாலே - ஸர்வதா இதுக்குக் கண்ணழிவுசொல்ல வொருவர்க்கும்போகாது; அது தானுண்டாய்த்தாகிலும் இவ்வர்த்தம் ஶ்ருதிஸ்ம்ருத்யாதி ஸகலஶாஸ்த்ரஸித்தமாகையாலே, ஶாஸ்த்ரபலந்தானே இவ்வர்த்தத்தை ஸாதிக்குமென்று கருத்து. (௧௫) "வெஷ்விஂஶொயம் வஙாஷ:" (௧௬) "வெஷ்விஂஸ ஞூஊஹவதீ" (௧௭) "ஸ-ஞகாநிவ ஙவெஸ்ண உவெஸ்ணெநி யாணிவ। டவெஸ்ண தவெஸ்ண ஜூாநமநா ஊயரெய॥ உநஉவகாரொவெணவொக்ஷும் வகா ரெணகஹஂகூதி:। வகாரெண ஹகாரெண உஹாநு ஞூ கூதிரவ்ருதெ॥ ஞூஊாத ஸஉகாரெண வஷ்விஂஶஉ ஞூ கீதி-த:" (௧௮) "பஉவாஙஉ ஞூகூதெத ஞூாக்ஷஉ வஙாஷஉ வஷ்விஂஶக:। ஸணவ ஸவஸ-ஞகாஊா நா உதுஹி யீயதெ" (௨௭) "ஞூஊாஶஷொகூா ஶாஷொ நிஶஸணஉ ஞூகூதெதஉ வா:। ஞூவுஜுவுயளநக்ஷு ஹகஹுாவிஶ ஜஜஷை" (௧௧) "விஷஉ வுயமுதஉவஂஸ ஶ்ரிஉவா ணுாஷி ஶக்ஷணஂ। தஜெதாஹுதி கஜெதுதாஂ ஸஂஜ்தாஂ ராஜநு கரொஉமூஹஸ்" (௨௦) "கிஂகவஉக ஞ்ரஉகிஂநஶீர ஷுவ தயொஷரஸ்। கிஉஷாஷாஷிகஂகவஂ ஜெவ தஜெவதஂ உஹீவஜெ॥ ஸஉக்ஷாவய வெஹுஸஂ வுயஷு-ஜெவ வுவஷீத:। கொஹுஜெதுவ நிவஜெநா ஸ-ஞகாஷிஜய வாஷிவ॥"

(௮.) அஜடமாகையாவது - ஜ்ஞாநத்தையொழியவுந் தானே தோற்றுகை.

(௯.) ஆநந்தரூப மாகையாவது-ஸுகரூபமா யிருக்கை.

---

(௪௧) “[illegible]” என்று, இப்படி ஶ்ருதி ஸ்ம்ருத்யாதி ஸகல ஶாஸ்த்ரப்ரதிபந்நமான ஆத்மாவினுடைய தேஹாதிவிலக்ஷணத்வம் ஸுப்ரதிபந்நமென்று நினைத்திறே! ஶாஸ்த்ர பலத்தாலே ஆத்மா தேஹாதிவிலக்ஷணனாகக் கடவனென்று ஸுநிஶ்சயமாக இவரருளிச்செய்தது.

௮. (வ்-ம்.) (அஜடம்) இத்யாதி. அஜடத்வமாவது - அநந்யாதீநப்ரகாஶத்வம். ஸ்வயம்ப்ரகாஶத்வ மென்றபடி. ஸ்வயம்ப்ரகாஶத்வ மாகையாவது-தீபம் தீபாந்தரநிரபேக்ஷமாக ஸ்வவ்யவஹாரத்துக்கு ஹேதுவாகிற வோபாதி, ப்ரகாஶாந்தர நிரபேக்ஷமாக ஸ்வ வ்யவஹாரத்துக்கு ஹேதுவாகை.

அத்தை யருளிச்செய்கிறார்; (ஜ்ஞாநத்தை யொழியவுந் தானே தோற்றுகை) என்று. (௪௨) “ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: புருஷ:” (௪௩) “அத்ராயம் புருஷ: ஸ்வயம்ஜ்யோதிர்ப்பவதி” (௪௪) “விஜ்ஞாநகந:” (௨௮) “ஜ்ஞாதா ஜ்ஞாநமய:” (௪௫) “ஜ்ஞாநமயம் வ்யாபி ஸ்வஸம்வேத்யம் அநுபமம்” (௪௬) “ஆத்ம ஸம்வேத்யம் தஜ்ஜ்ஞாநம்” என்னக்கடவதிறே.

௯. (வ்-ம்.) (ஆநந்தரூபம்) இத்யாதி. ஆநந்தரூபத்வமாவது-ஸ்வதஸ்ஸுகத்வம். அதாவது—ஸ்வபாவமேயநுகூலமாயிருக்கை. (௪௭) “[illegible]” என்கிறபடியே, தனக்குத்தானே ஸுகரூபமா யிருக்கை யென்றபடி.

(௰.) உணர்ந்தவன் ஸ்வதகமாக ஜ்ஞாநங்கிறதே சொல்லுகையாலே அநுகூலமாகக் கடவது.

௰. (அ-கை) இப்படி ஆத்மஸ்வரூபம் ஸ்வதந்த்ரமாயிருக்கு மென்றுமிதில். ஸ்வாதந்த்ர்ய ப்ரத்யகத்வத்தை ப்ரமாணமாக அருளிச்செய்கிறார்: (உணர்ந்தவன்) என்று தொடங்கி.

(வ்-ம.) "ஸ்வதகமாய் ப்ரகாசிக்கையென்கிற ப்ரத்யக்த்வமேதாவதே, இதின் ப்ரமாணம்" என்றிறே! தத்வப்ரகாசத்திலும் இதை அருளிச்செய்தது; ஸ்வஸ்மை ப்ரகாசமானதாகத் தன்னை பிரிக்கையாலும், ப்ரத்யக்த்வம் ப்ரமாணமாயாலும், ஸ்வாபிமானத்துக்கு ஸம்ஸாரத்துக்கு ஸ்வதந்த்ர ஸ்வகதமாகவேயுமிறே. "இப்போது ஸுகம் பிரஸ்தாபித்தேன்" என்கிறீர்! "ஸுக மாயிருக்கிறேன்" என்கிற புக்குப்ரத்யக்வத்தைச் சொன்னது; ப்ரதிபக்ஷ்யர்கள் அப்படியாகப் பிரஸ்தாபிக்க "இனி ஸுகமாய் படுத்தேன்" என் கிறபடியாலே பிரத்யக்ஷமாகயாலே: இது தன்னை ப்ரத்யக்ஷத்திலே (௲அ) ஸ்வலக்ஷண ஸ்வரூப ஸ்வதந்த்ரஸ்வாஸ்ரயே, ஸ்வ-ஸ்வரூப ஸ்வாநுபூதி; ஸ்வதந்த்ர ஸ்வத்வ ஸ்வரூப தஜ்ஞாநேஸ்வரூப ஹ்ருதயே ஸ்வரூபாத்ம ஸ்வ ஸ்வரூபம் ஜ்ஞாத்ருத்வஜ்ஞாநம் ஸ்வஸ்ய. ஜீவாத்மா, யதேஷ்டம் ஸ்வ ஸ்வரூபம் தத்ர ஜ்ஞாநேவ ஸ்வாத்ம ஜ்ஞானதஸ்து; ஸ்வதந்த்ரஸ்வ ஸ்வ ஸ்வாத்மநிவ தத்" என்று, பாஷ்யகாரர் அருளிச்செய்தார். ஸ்வரூபம் அநுகூலமென்று தில், ப்ரமாணஸ்வதந்த்ரம் காட்டுது. (௲க) "ஸ்வாமித்வ ஸ்வத்வ ஸ்ரீ ஸம்பந்தம்" இத்யாதிகளாலும் இவற்றுக்கும் ஸித்தம் (௲௰) "ஜ்ஞாத்ருத்வம்" (௨அ) "நித்யோ நித்யானாம் சேதநஸ்சேதனாநாம்" (௲க) "ஜ்ஞாநாநந்த ஸ்வரூபம்" (௲௨) "ஜ்ஞாநானந்தைக லக்ஷணம்" இத்யாதி ஸ்ருதிஸ்ம்ருதிகளாலும் ஆத்மாவினுடைய ஆநந்தரூபத்வம் ஸம்ப்ரதிஷ்டம்.

ஆக, கீழ் ப்ரக்ருதித் தத்வம் சொல்லுகையாலே தேஹாத்மவாதம் நிரஸ்தமாய்த்து அணுத்வ ஆநந்தரூபத்வங்களைச் சொல்லுகையாலே ஜடாத்மவாதம் நிரஸ்தமாய்த்து.

(கக.) நித்யமாகையாவது - எப்போது முண்டாகை.

(கஉ) எப்போது முண்டாகில் ஜந்மமரணங்க ளுண்டாகிறபடி யேன்? என்னில்; ஜந்மமாவது - தேஹஸம்பந்தம், மரணமாவது-தேஹவியோகம்.

(கக) (வ்-ம்) (நித்யம்) இத்யாதி. நித்யத்வமாவது-ஸர்வகால வர்த்தித்வம். அத்தை யருளிச் செய்கிறார், (எப்போது முண்டானை) என்று.

(கஉ) (அ-வ.) உக்தியாதி ப்ரஸங்கத்தை யநுவதித்துப் பரிஹரிக்கிறார்; (எப்போது முண்டாகில்) என்று தொடங்கி.

(வ்-ம்.) அதாவது-ஆத்மா ஸர்வகாலவர்த்தியாயிருக்குமாகில், (ருங) "ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத" (ருச) "ஸ [illegible] ஸோம்யே [illegible] ஸ்ருஜத" (ருரு) "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" (ருசா) "[illegible] யேந ஜீவாந் வ்யசஸர்ஜ பூம்யாம்" இத்யாதி ப்ரமாணவாக்யங்களால் ஆத்மாவுக்குச் சொல்லப்படுகிற ஜந்ம மரணங்களுண்டாகிறபடியென்? என்னில்; அவற்றிற் சொல்லுகிற ஜந்மமாவது-தேஹஸம்பந்தம்; மரணமாவது-தேஹவியோக மென்கை.

நித்யனாகில் ஸ்ருஷ்டிக்கு முன்பு ஏகத்வாவதாரணம் கூடாதென்னில்; ஏகத்வமாவது - நாமரூபவிபாகா பாவமாகையாலே, கூடும். ஸம்ஹாரதசையில் ஆத்மா வில்லையாகில், ஈஶ்வரனுக்கு உபாதாநத்வங்கூடாது; அக்ருதாப்யாகமக்ருதவிப்ரணாஶங்களும் வரும். ஆகையால், ஆத்மநித்யத்வம் கொள்ளவேணும். (ருஎ) "ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித்" (ருஅ) "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ" (ருகூ) "நித்யோ நித்யாநாம்" (சா0) "ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ வித்த்யநாதீ உபாவபி" (சாக) "ந ஜாயதே ம்ரியதே வா கதாசித் நாயம் பூத்வா பவிதா வா ந பூய: । அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே" என்று, ஆத்ம நித்யத்வப்ரதிபாதிகைகளான ஶ்ருதிஸ்ம்ருதிகள் அநேகமிறே.

(கங.) அணுவானபடி என்னென்னில்;

(கச.) ஹ்ருதய ப்ரதேஶத்தில் நின்றும் உத்க்ரமித்துப்போவது வருவதாமென்று ஶாஸ்த்ரம் சொல்லுகையாலே, ஆத்மா அணுவாகக்கடவது.

(கரு) (வ்-ம்.) அசித்விலக்ஷணமாய், அஜடமாய், ஆநந்தரூபமாய், நித்யமாயிருந்தாலும் விபுவாயிருக்கலாமிறே; ஏவம்பூதமான வாத்மஸ்வரூபம் அணுவென்று அறியும்படி யெங்ஙனே? என்கிற ஜிஜ்ஞாஸா ப்ரஸங்கத்தை யநுவதிக்கிறார்; (அணுவானபடி யென்னென்னில்) என்று.

(கசு) (அ-கை) அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார், (ஹ்ருதயப்ரதேஶத்தில் நின்றும) என்று தொடங்கி.

(வ-ம்., அதாவது- (கஉ) "ஹ்ருத்யேஷ ஹ்யாத்மா" என்று ஹ்ருதயஸ்திதியையும் (கங) "தேந ப்ரத்யோதேநைஷ ஆத்மா நிஷ்க்ராமதி சக்ஷுஷோ வா மூர்த்நோ வாऽந்யேப்யோ வா ஶரீரதேஶேப்ய:" என்று உத்க்ரமணத்தையும், (கச) "யே வை கே சாஸ்மால்லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி" என்று கமநத்தையும், (கரு) "தஸ்மால்லோகாத் புநரேத்யஸ்மை லோகாய கர்மணே" என்று ஆகமநத்தையும், நிர்தோஷப்ரமாணமான வேதாந்தஶாஸ்த்ரம் சொல்லுகையாலே அணுவாகக்கடவதென்கை. விபுவாகில் இவையொன்றுங் கூடாதிறே. ஸூத்ரகாரரும் ஆத்மாவினுடைய அணுத்வம் ஸாதிக்கிறவளவில், (கசு) "உத்க்ராந்திகத்யாகதீநாம்" என்று இவற்றாலேயிறே முந்துற ஸாதித்தது; (கஎ) "ஏஷோऽணுராத்மா சேதஸா வேதிதவ்ய:" (கஅ) "வாலாக்ரஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச। பாகோ ஜீவ: ஸ விஜ்ஞேய:" (ககூ) "ஆராக்ரமாத்ரோ ஹ்யவரோऽபி த்ருஷ்ட:" (உ०) "ஸூக்ஷ்மாணாமப்யஹம் ஜீவ:॥ ஸ்வாகைர் ஜ்ஞாநநேத்ரைகலக்ஷணம்॥ க்ஷேத்ரஜ்ஞோ ... ஜ்ஞாநநேத்ர ... ஶரீரே ... விஶக்திகா:" இத்யாதி ஶ்ருதிஸ்ம்ருதிகளாலும் ஆத்மாவினுடைய அணுத்வம் ஸம்ப்ரதிபந்நம்.

(௨௫.) அணுவாய் ஹ்ருதயத்திலேயிருக்குமாகில், ஶரீரம் எங்குமொக்க ஸுகது:கங்களை புஜிக்கிறபடி யென்? என்னில்;

(௨௬) மணித்யுமணிதீபாதிகள் ஓரிடத்திலேயிருக்க ப்ரபை எங்குமொக்க வ்யாபிக்குமாபோலே, ஜ்ஞாநம் எங்குமொக்க வ்யாபிக்கையாலே அவற்றை புஜிக்கத்தட்டில்லை.

(௨௫. (அ-கை.) இப்படி இருக்குமாகில், ஸர்வஶரீரவ்யாபியான ஸுகது:க்காநுபவம் கூடும்படி யெங்ஙனே? என்கிற ஶங்கையை அநுவதிக்கிறார்; (அணுவாய்) என்று தொடங்கி.

(வ்-ம.) அதாவது - அணுபரிமாணமாய் ஹ்ருதயப்ரதேஶமாத்ரத்திலே நின்றவிடமாகில், (௭௧) "பாதே மே வேதநா ஶிரஸி மே வேதநா, பாதே மே ஸுகம் ஶிரஸி மே ஸுகம்" என்று ஆபாதசூடம், ஶரீரமெங்குமொக்க ஸுகது:கங்களை புஜிக்கிறபடி யெங்ஙனே? என்னில் என்கை.

(௨௬) (அ-கை.) அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார்; (மணித்யுமணி) என்று தொடங்கி.

(வ்-ம) அதாவது - மணித்யுமணிதீபாதிகளான ப்ரபாவத்பதார்த்தங்கள் ஏகதேஶஸ்தங்களாயிருக்கச்செய்தேயும், தத்ப்ரபை சுற்றெங்கும் வ்யாபிக்கிறாப்போலே, ஆத்மா ஹ்ருதயப்ரதேஶத்திலே இருக்கச்செய்தே தத்தர்மமான ஜ்ஞாநம் எங்குமொக்க வ்யாபிக்கையாலே, ஶரீரமெங்குமொக்க ஸுகது:க்கங்களை புஜிக்கைக்கு ஒரு விரோதமில்லை யென்கை.

இதுதான், (௭௨) "[illegible]" என்கிற ஸூத்ரார்த்தம்; (௭௩) "[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(கஎ.) ஒருவனே ஏககாலத்திலே யநேக தேஹங்களைப் பரிக்ரஹிக் கிறதும் ஜ்ஞாநவ்யாப்தியாலே.

ஸூத்ரகாரரும் ... ஸாதித்தார் ... ப்ரதீபவதாவேஶஸ்ததா ஹி தர்ஶயதி" என்றாரிறே! இதுக்கு பாஷ்யம்.

இப்படி, ஜ்ஞாநவ்யாப்தியாலே ஸர்வத்தையும் புஜிக்குமென்னுமிடம் ப்ருஹதாரண்யகத்திலே சொல்லப்பட்டது. (எது) "ஸ்ருஜ்யா வாஸ: ஸரீராணி வாஸாம்ஸி நாநாரூபாணி பவதி, ஸ்ருஜ்யா ப்ராணம் ஸரீரஸ்ருஷ்டம் ப்ராணேந ஸஹ ஸஞ்சரதி, ஸ்ருஜ்யா ஸக்ரந்தம் ஸரீரஸ்தம் ஸக்ராந்தாவ்யாப்நோதி, ஸ்ருஜ்யா ஸ்ரோத்ரம் ஸரீரஸ்தம் ஸ்ரோத்ரேண ஸஹ ஸஞ்சரதி, ஸ்ருஜ்யா ஜிஹ்வாம் ஸரீரஸ்தம் ஜிஹ்வயா ஸஹ ஸஞ்சரதி, ஸ்ருஜ்யா சக்ஷுஷா ஸரீரஸ்தம் சக்ஷுஷா ஸஹ ஸஞ்சரதி, ஸ்ருஜ்யா ஸ்ரீரம் ஸரீரஸ்தம் ஸர்வாண்யேதாநி வ்யாப்நோதி, ஸ்ருஜ்யா பாஹ்யம் ஸரீரஸ்தம் ஸர்வம் பஶ்யதி, ஸ்ருஜ்யா வாசா ஸரீரஸ்தம் வாசா ஸஹ ஸஞ்சரதி, ஸ்ருஜ்யா ப்ராணம் ஸரீரஸ்தம் ப்ராணேந ஸஹ ஸஞ்சரதி" என்றிப்படி சொல்லுகையாலே.

(கஅ) (அ-ரை) ஏகஶரீரமாத்ரத்துக்கு இப்படிக்கொண்டாலும் ஒருவன் ஏககாலத்திலே அநேகதேஹங்களைப் பரிக்ரஹிக்கிறது ஸ்வரூபவ்யாப்தியாலே யாகவேண்டாவோ! என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்; (ஒருவன்) என்றுதொடங்கி.

(வ-ம்) ஒருவனுக்கே அநேகதேஹ பரிக்ரஹம், காலபேதத்தாலே ஸம்பவிக்குமிறே; அத்தைவ்யாவர்த்திக்கைக்காக (ஏககாலத்திலே) என்கிறது. ஏககாலே அநேகதேஹபரிக்ரஹம் ஸௌபரி ப்ரப்ருதிகளிலே ஸம்ப்ரதிபந்நமிறே.

(கஅ.) அவ்யக்தமாகையாவது - கடபடாதிகளை க்ரஹிக்கிற சக்ஷுராதிகளால் தோற்றுதிருக்கை.

(கக.) அசிந்த்யமாகையாவது - அசித்தோடு ஸஜாதீய மென்று நினைக்கவொண்ணுதிருக்கை.

(கஅ) (வ்-ம்.) (அவ்யக்தமாகையாவது-கடபடாதிகளை க்ரஹிக்கிற சக்ஷுராதிகளால் தோற்றுதிருக்கை.) (எ-நு) "[illegible]" என்றிறே! பாஷ்யகாரரு மருளிச்செய்தது. அப்படியே யிவரு மருளிச் செய்கிறார்.

இங்ஙனன்றிக்கே, ஒரு ப்ரமாணத்தாலும் தோற்றுதிருக்கை யென்னில் துச்சத்வம் வருமிறே. ஆகையால். மாநஸஜ்ஞாநகம்ய மித்தனை யல்லது ஐந்த்ரியிகஜ்ஞாந கம்யம் அன்றென்கை.

அவ்யக்தஸப்தார்த்தம். (க0) "சென்று சென்று பரம்பரமாய்" என்று தொடங்கி ஆத்மஸ்வரூபவைலக்ஷண்யத்தை யருளிச் செய்கிற ஆழ்வாரும், (க0) "ஞானங்கடந்ததே" என்று, ஐந்த்ரியக ஜ்ஞாநகோசரத்வத்தையிறே! அருளிச்செய்தது.

(கக) (வ்-ம்) (அசிந்த்யமாகையாவது - அசித்தோடு ஸஜாதீய மென்று நினைக்கவொண்ணுதிருக்கை) (எ-நு) "[illegible]" என்றிறே! இதுக்கும் பாஷ்யகாரர் அருளிச்செய்தது.

ஆகையாலே, இவரும் இப்படி யருளிச்செய்கிறார். அங்ஙனன்றிக்கே. அசிந்த்யத்வமாவது-ஒருபடியாலும் சிந்திக்கைக்குயோக்ய மன்றிக்கே யிருக்கை யென்னில் ; ஆத்மவிஷயமான ஸ்ரவண மநநாதிகளுக்கும் வையர்த்த்யம் ப்ரஸங்கிக்குமிறே. ஆகையால் அசித் ஸஜாதீய புத்த்யநர்ஹத்வமே அசிந்த்ய ஸப்தார்த்த மாகக் கடவது.

ஆக. (எசு) "அவ்யக்தோயமசிந்த்யோயம்" என்று, கீதோபநிஷதாசார்யன் அருளிச்செய்தபடியே, இவரும் ஆத்மஸ்வரூப

(உ0.) நிரவயவமாகையாவது - அவயவஸமுதாய மன்றிக்கே யிருக்கை.

(உக.) நிர்விகார மாகையாவது - அசித்துப்போலே விகரிக்கை யன்றிக்கே யொருபடிப் பட்டிருக்கை.

(உஉ.) இப்படி யிருக்கையாலே ஶஸ்த்ரம், அக்நி, ஜலம், வாதம், ஆதபந்தொடக்கமான வற்றால் சேதித்தல், தஹித்தல், நனைத்தல், ஶோஷிப்பித்தல்செய்கைக்கு அயோக்யமா யிருக்கும்.

வைலக்ஷண்ய ப்ரகடநார்த்தமாக இவ்விடத்திலே யருளிச்செய்தா ராயிற்று.

(உ0) (வ்-ம்) (*நிரவயவமாகையாவது-அவயவஸமுதாய மன்றிக்கே யிருக்கை*); *அதாவது - (சஎ) "விஜ்ஞாநமயஃ" என்றும், (சச) "விஜ்ஞாநகநஃ" என்றும் சொல்லுகிறபடியே ஜ்ஞாநைகாகார மாகையாலே, அசித்வஸ்துக்களைப்போலே அவயவஸங்காதாத்மக மன்றிக்கே யிருக்கை.*

(உக) (வ்-ம்.) (*நிர்விகார மாகையாவது - அசித்துப்போலே விகரிக்கை யன்றிக்கே யொருபடிப்பட்டிருக்கை.*) *அதாவது - (கஅ) "அஜோ அக்ஷரம் ஹரஃ" (எஅ) "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹரஃ" என்று, அக்ஷரஶப்தவாச்யமான வஸ்துவாகையாலே, க்ஷணக்ஷரண ஸ்வபாவ மாகையாலே, க்ஷரஶப்தவாச்யமான அசித்துப்போலே விகரிக்கை யன்றிக்கே, ஸதைகரூபமாயிருக்கை.*

ஆகையிறே (எசு) "அவிகார்யோயமுச்யதே" என்று, கீதோப நிஷதாசார்யன் அருளிச்செய்தது,

(உஉ.) (அ-கை.) *ஏவம்ப்ரகார மாகையாலே, சேத்யாதி விஸ ஜாதீயமா யிருக்குமென்கிறார் மேல்;*

(வ்-ம் (இப்படி) *என்று தொடங்கி, இப்படியென்று - அவ் யக்தாதிகள் நாலையும் அநுபாஷிக்கிறதாதல், நிர்விகாரத்வ மாத் ரத்தையாதல். (ஶஸ்த்ரம்-அக்நி) இத்யாதி, அதாவது-ஶஸ்த்ராக் ந்யாதிகள் சேதநதஹநாதிகளைப் பண்ணும்போது தத்தத்வஸ்துக்*

(௨௩.) ஆர்ஹதர் ஆத்மாவை தேஹபரிமாணன் என்றார்கள்.
(௨௪.) அது ஶ்ருதிவிருத்தம்.

களிலே வ்யாபித்துச் செய்யவேண்டுகையாலும், ஆத்மா ஸர்வ அசித்தத்வ வ்யாபகனாகையாலே, அவற்றிற் காட்டில் அத்யந்தஸூக்ஷ்மரூபனாகையாலும்; வ்யாப்யமாய் ஸ்தூலமாயிருக்கிறவற்றை வ்யாபகமாய் ஸூக்ஷ்மமான ஆத்மவஸ்துவை வ்யாபித்து விகரிப்பிக்கமாட்டாமையாலே. ஶஸ்த்ராக்நிஜலவாதாதிகளாலேவரும் சேதந தஹந க்லேதந ஶோஷணங்களுக்கு அநர்ஹனாயிருக்குமென்கை. (௭அ) ''𑌨𑍈𑌨𑌂 𑌛𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑍈𑌨𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌪𑌾𑌵𑌕𑌃 । 𑌨 𑌚𑍈𑌨𑌂 𑌕𑍍𑌲𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌪𑍋 𑌨 𑌶𑍋𑌷𑌯𑌤𑌿 𑌮𑌾𑌰𑍁𑌤𑌃 ॥ 𑌅𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌯 𑌮𑌦𑌾𑌹𑍍𑌯𑍋𑌽𑌯 𑌮𑌕𑍍𑌲𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌶𑍋𑌷𑍍𑌯 𑌏𑌵 𑌚 । 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌃 𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌰𑌚𑌲𑍋𑌽𑌯𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃'' என்றருளிச்செய்தானிறே.

(௨௩) (அ-கை) இப்படி நிர்விகாரமான ஆத்மவஸ்துவுக்கு பரிணாமித்வங்கொள்ளுகிற ஆர்ஹதமதம் அயுக்தமென்னுமிடத்தை தர்ஶிப்பிக்கிறார் மேல்: (ஆர்ஹதர்) இத்யாதியால்.

(வ்-ம்) ஆர்ஹதராகிறார் - ஜைநர். அவர்கள் (௭௧) ''யாவத்தேஹவ்யாபீநா'' இத்யாதிப்ரகாரேண ஆபாதசூடம் தேஹத்திலுண்டான ஸுகாத்யநுபவம், ஆத்மா தேஹபரிமாணனல்லாதபோது கூடாது: ஆகையால், ஆத்மா ஸ்வகர்மாநுகுணமாகப் பரிக்ரஹிக்கும் கஜ பிபீலிகாதி ஶரீரங்களுக்கு அநுகூலமாகப் பரிணமித்து, தத்தத்தேஹபரிமாணனாயிருக்குமென்றிறே சொல்லுவது. அத்தையருளிச்செய்கிறார், (தேஹபரிமாணனென்றார்கள் என்று).

(௨௪) (அ-கை) அத்தைநிராகரிக்கிறார்; (அதுஶ்ருதிவிருத்தம்) என்று.

(வ்-ம்) இவ்விடத்தில் இவர்க்கு விவக்ஷிதையான ஶ்ருதி யேதென்னில்; (௭௨) ''𑌅𑌮𑍃𑌤𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌹𑌰𑌃'' என்று, ஆத்மாவினுடைய நிர்விகாரத்வப்ரதிபாதிகையான ஶ்ருதியாகவேணும்; ''தேஹபரிமாணன் என்கிறபக்ஷம், ஆத்மா நிர்விகாரன் என்கிற

உரு. அநேகதேஹங்களைப் பரிக்ரஹிக்கிற யோகிகள் ஸ்வரூபத்துக்கு ஶைதில்யம் வரும்.

உசா. ஜ்ஞாநாஶ்ரய மாகையாவது - ஜ்ஞாநத்துக் கிருப்பிடமா யிருக்கை.

ஶ்ருதியாலே பாதிதம்'' என்று இவர்தாமே தத்வஶேகரத்திலே யருளிச்செய்கையாலே. (சஎ) "ஏஷோணுராத்மா'' (சஅ) "வாலாக்ர ஶதபாகஸ்ய'' இத்யாதி ஶ்ருதிகளும், தேஹபரிமாணபக்ஷத்துக்கு பாதிகைகளாகையாலே அவற்றையும் இவ்விடத்திலே சொல்லுவாருமுண்டு.

(உரு) ஏதத்விஷயமாக தூஷணாந்தரமும் அருளிச்செய்கிறார்;

(அநேகதேஹங்களைப் பரிக்ரஹிக்கிற யோகிகள் ஸ்வரூபத்துக்கு ஶைதில்யம் வரும்) என்று. அதாவது - தேஹபரிமாணம் என்னும்பக்ஷத்தில், ஸம்ஸித்தயோகராய் ஸௌபரியைப்போலே ஏககாலத்திலே யநேகதேஹங்களைப் பரிக்ரஹிக்குமவர்களுக்கு தங்களுடைய ஸ்வரூபத்தை யநேகமாக சிதிலமாக்கிக்கொண்டு அவ்வவதேஹங்களைப்பரிக்ரஹிக்க வேண்டிவருமென்கை. பரகாயப்ரவேஶமுகேந அநேகஶரீரங்களைப் பரிக்ரஹிக்கிற யோகிகள் ஸ்வரூபத்துக்கு ஸ்தூலமான ஶரீரத்தைவிட்டு ஸூக்ஷ்மமான ஶரீரத்தைப் பரிக்ரஹிக்குமளவில, இதுக்கெல்லாமது அவகாஶம் போராமையாலே ஶைதில்யம் வருமென்னவுமாம். (சகூ)"ஏவஞ்சாத்மாகார்த்ஸ்ந்யம்'' என்கிற ஸூத்ரத்தில் சொல்லுகிறபடியே, அல்பமஹத்பரிமாணங்களான கஜபிபீலிகாதி ஶரீரங்களை, ஸ்வகர்மாநுகுணமாகப் பரிக்ரஹிக்குமவர்களுக்கு, கஜஶரீரத்தைவிட்டு பிபீலிகாஶரீரத்தைப் பரிக்ரஹிக்குமளவில் கஜஶரீரஸமபரிமாணமா யிருக்கும். அந்த ஸ்வரூபத்துக்கு பிபீலிகாஶரீரம் அவகாஶம் போராமையாலே ஶைதில்யம் வருமென்று இங்ஙனே இவ்வாக்யத்துக்கு யோஜித்தாலோவென்னில, "யோகிகள் ஸ்வரூபத்துக்கு'' என்கையாலே, அது இவ்விடத்தில் இவர்க்கு விவக்ஷிதமன்று.

(உசா) (ஜ்ஞாநாஶ்ரய மாகையாவது - ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமா யிருக்கை.) ஜ்ஞாநமாவது - ஸ்வஸத்தாமாத்ரத்

உஎ. ஆத்மா, ஜ்ஞாநத்துக் கிருப்பிடமன்றிக்கே ஜ்ஞாநமாத்ர மாகில்;

உஅ. நானறிவேன்று சொல்லவேணும், நாணறியா நின்றேனேன் னக்கூடாது.

தாலே ஸ்வாஶ்ரயத்தைப் பற்றி ஸ்வ பரவ்யவஹாரத்துக்கு உடலா யிருப்ப தொரு ஆத்மதர்மம். இதுக்கு ஆத்மா ஆஶ்ரயமாகையாவது - தீப ப்ரபை களிரண்டும் தேஜோத்ரவ்யமாயிருக்கச்செய்தே தீபம் ப்ரபைக்கு ஆஶ்ரயமா யிருக்கிறப்போலே தானும் ஜ்ஞாந ஸ்வரூபனா யிருக்கச்செய்தே ஸ்வதர்மமான ஜ்ஞாநத்துக்குத் தன்னையொழிய ப்ருதக்ஸ்த்தித்யுபலம்பங்கள் இல்லாதபடி தான் ஆதாரமாயிருக்கை. (அ௰) "ஜாநாத்யேவாயம் புருஷ:" (அக) "ஸ ஸர்வோ ஜ்ஞாதா" (அஉ) "நபஶ்யோ ம்ருத்யும் பஶ்யதி" (அஙு) "விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்" (அச) "ஜ்ஞாநாத்யாயம் புருஷ:" (அரு) "ஏஷ ஹி த்ரஷ்டா ஶ்ரோதா ஜ்ஞாதா மந்தா போத்தா கர்த்தா விஜ்ஞாநாத்மா புருஷ:" (அசு) "ஏவமேவாஸ்ய பரித்ரஷ்டு:" இத்யாதி ஶ்ருதிகளாலே, ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வம் ஸித்தம்.

(உஎ) ஏவம்பூதமான ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வத்தை யிசையாதே ஜ்ஞாநமாத்ர மென்று சொல்லுகிற பௌத்தாதிகளுடைய மதத்தை நிராகரிக்கைக்காக தத்தத்பக்ஷத்தை யநுவதிக்கிறார்; (ஆத்மா, ஜ்ஞாநத்துக்கு இருப்பிட மன்றிக்கே ஜ்ஞாநமாத்ரமாகில) என்று.

(உஅ) (அஎ) "அஹமிதம் ஜாநாமி" என்கிற ப்ரத்யக்ஷத்தாலே அத்தை நிராகரிக்கிறார்; (நானறிவு)என்றுதொடங்கி.

அதாவது - ஆத்மாவுக்கு ஜ்ஞாநாஶ்ரயத்வ மன்றிக்கே கேவலம் ஜ்ஞாநமாயிருக்குமளவ யுள்ளதாகில, "நானறிவு' என்று, தன்னை ஜ்ஞாநமாத்ரமாகச் சொல்லுகையொழிய, "நான் இத்தை யறியாநின்றேன்" என்று, தன்னை ஜ்ஞாதாவாகச் சொல்லக்கூடாதென்கை.

உகூ. ஜ்ஞாதாவென்றபோதே, கர்த்தா போக்தா வென்னுமிடம் சொல்லிற்றாய்த்து.

௩௦. கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் ஜ்ஞாநாவஸ்த்தாவிஶேஷங்களாகையாலே.

இவ்வர்த்தத்தை நானறியாநின்றேன் என்கையாலே, விஷய க்ராஹியானதொரு ஜ்ஞாநத்துக்குத்தான் ஆஶ்ரயமென்னுமிடந் தோற்றாநின்றதிறே; இப்படி, ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வம் ப்ரத்யக்ஷஸித்தமாகையாலே அபாதிதமென்றுகருத்து.

(அஅ) "ஜடஃஸஂவிதெஹீ_த்ந்ா_தவிதெ_த்ந்ா விஃஹெஷெஹு-ஙா தி யஷி_தெஷெகஂெஹாஹஂஃவெஂகஃஹு-ஙா" என்று, பட்டரும் இப்படியிறே! பௌத்தமத நிராகரணம் பண்ணுகிற விடத்தில் அருளிச்செய்தது.

(உகூ) ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் மூன்றும் சொல்லவேண்டியிருக்க, 'ஜ்ஞாநாஶ்ரயமாய்' என்று ஜ்ஞாத்ருத்வ மாத்ரத்தைச் சொல்லி, மற்றையவை யிங்குச் சொல்லாதொழிவா னென்? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்;

(ஜ்ஞாதா வென்றபோதே கர்த்தா போக்தா என்னுமிடம் சொல்லிற்றாய்த்து) என்று.

(௩௦.) இப்படி, ப்ரதிஜ்ஞாமாத்ரத்தால் போராதென்று அதுக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார்; (கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் ஜ்ஞாநாவஸ்த்தாவிஶேஷங்க ளாகையாலே) என்று.

(அகூ) "ஹெயொவாஷெயதா ஜ்ஞாநஃஞுஂ ஜ்ஞாத்ருக்வ ஃா_த்நஃ । த_த்வ_த ஹாணொவாஷாநவிகீஷ-ஃா கா_த்ரு_தாஶ_யா" என்கிறபடியே, ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வம், ஹேயோபாதேய ப்ரதிபத்திக்கு ஹேதுவாயிருக்கும்; அவ்வோஹேயங்களை விடுகையாலும், உபாதேயங்களைப் பற்றுகையாலும் உண்டான சிகீர்ஷை - கர்த்ருத்வமடியாயிருக்கும்; கர்த்தாவுக்கேயிறே! சிகீர்ஷை யுள்ளது; அந்த சிகீர்ஷைதான் ஜ்ஞாநாவஸ்தா விஶேஷமிறே; அத்தோடு கர்த்ருத்வத்துக்கு

௩௧. சிலர், குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது, ஆத்மாவுக் கில்லை யென்றார்கள்.

உண்டான ப்ரத்யாஸத்தியைக் கடாக்ஷித்து கர்த்ருத்வத்தை ஜ்ஞாநாவஸ்தாவிஶேஷ மென்று உபசரித்து அருளிச்செய்கிறா ரல்லது, கர்த்ருத்வமாவது - க்ரியாஶ்ரயத்வ மாகையாலே, அத்தை ஜ்ஞாநாவஸ்தாவிஶேஷமென்று முக்யமாகச்சொல்லப்போகாதிறே.

க்ரியையாவது- (௬0) "ஜாநாதி, இச்சதி, யததே, கரோதி" என்று, ஜ்ஞாநசிகீர்ஷா ப்ரயத்நாநந்தரபாவியான ப்ரவ்ருத்தி யாகையாலும், ததாஶ்ரயத்வம் கர்த்ருத்வ மாகையாலும், அத்தை ஜ்ஞாநாவஸ்த்தாவிஶேஷமென்றது உபசாரப்ரயோகம் என்றே கொள்ளவேணும்.

இனி, போக்த்ருத்வமாவது - போகாஶ்ரயத்வம். போகமாவது - ஸுகதுஃகரூபமான வநுபவஜ்ஞாநம். அது ஜ்ஞாநாவஸ்தா விஶேஷமிறே. ததாஶ்ரயத்வத்தை ஜ்ஞாநாவஸ்தாவிஶேஷமென்று சொல்லுகையாலே இதுவும் ஔபசாரிகம்.

இப்படி, ஜ்ஞாத்ருத்வத்துக்கும் இவற்றுக்கு முண்டான ப்ரத்யாஸத்த்யதிஶயத்தாலே ததைக்யகதநம் பண்ணலாம்படி யிருக்கையாலே, ஜ்ஞாத்ருத்வம் சொன்னபோதே கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் சொல்லிற்றாய்த்தென்னத் தட்டில்லையிறே.

(௩௧) இப்படி ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமா யிருந்துள்ள கர்த்ருத்வத்தை யில்லை யென்று, ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வத்தைக்கொள்ளுகிற ஸாங்க்யரை நிராகரிக்கிறார்; (சிலர்) என்று தொடங்கி.

சிலரென்று அவர்கள்பக்கல் தமக்குண்டானஅநாதரம் தோற்ற வருளிச்செய்கிறார்.

(குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது ஆத்மாவுக் கில்லை யென்றார்கள்.) குணங்களென்றும் ப்ரக்ருதியென்றும் பேதமில்லை யிறே! இவர்களுக்கு; ஆகையாலே, ப்ரக்ருதிக்கே யென்கிற ஸ்தாநத்திலே (குணங்களுக்கே) என்கிறார்.

௩௨. அப்போதிவனுக்கு ஶாஸ்த்ரவஶ்யதையும், போக்த்ருத்வமும் கோலையும்.

---

(௯௧) "ப்ரக்ருதிநைவ - ஸர்வதேஹே ஶோபாத்மகாநி, ஶ்ராவ்யத்ருஶ்யாஸ்வாத்யாநவஷ்டப்ய ந ஶப்தாத்யாவரணகார்யாணி, ஸத்த்வஜாதீநி யாநி, காமக்ரோதாதி ரூபேண விகாராணி, ஸந்த்ஸநாதநிரோதகாநி, ஸ்வேச்சாப்ரவ்ருத்தாநி, ஸர்வாணி ஜ்ஞாநவித்வம்ஸகாநி" என்றிறே! அவர்களுடைய ஸித்தாந்தம். ஆகையால், ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வமுள்ளது, ஆத்மாவுக் கில்லையென்றபடி. அதாவது-கடவல்லியிலே, (௫௭) "நஜாயதே ம்ரியதே" இத்யாதியாலே, ஆத்மாவுக்கு-ஜந்மமரணாதிகளான ப்ரக்ருதி தர்மங்களை யெல்லாம் ப்ரதிஷேதித்து, (௯௨) "ஹந்தா சேந்மந்யதே ஹந்தும் ஹதஶ்சேந்மந்யதே ஹதம் । உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே" என்று, ஹநநாதிக்ரியைகளில் கர்த்ருத்வத்தையும் நிஷேதிக்கையாலும், ஸ்ரீகீதையிலே ஸர்வேஶ்வரன்றானே, (௯௩) "நாந்யம் குணேப்ய: கர்தாரம் யதா த்ரஷ்டாநுபஶ்யதி" (௯௪) "கார்யகாரண கர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதிருச்யதே । புருஷ: ஸுகது:காநாம் போக்த்ருத்வே ஹேதுருச்யதே" என்று சொல்லுகையாலும், இப்படி அத்யாத்மஶாஸ்த்ரங்களிலே ஆத்மாவுக்கு அகர்த்ருத்வத்தையும், குணங்களுக்கே கர்த்ருத்வத்தையும் சொல்லுகையாலே, கர்த்ருத்வமுள்ளது ப்ரக்ருதிக்கே; ஆத்மாவுக்கு கர்த்ருத்வமில்லை; போக்த்ருத்வமாத்ரமே யுள்ளதென்றுயித்து அவர்கள் சொல்லுவது.

(௩௨) அத்தை நிராகரிக்கிறார்; (அப்போது) என்று தொடங்கி.

அதாவது - ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வமாய் ஆத்மாவுக்கு கர்த்த்ருத்வ மில்லையானபோது, இவனுக்கு விதி நிஷேதரூபமான ஶாஸ்த்ரத்துக்குத்தான் அதிகாரியாய்க்கொண்டு அதின் வஶத்திலே நடக்கவேண்டுகையும், விஹித நிஷித்தகரண ப்ரயுக்த ஸுகதுக்கரூப பலபோக்த்ருத்வமும் சேராதென்கை.

ரு௩. ஸாம்ஸாரிக ப்ரவ்ருத்திகளில்கர்த்ருத்வம் ஸ்வரூபப்ர யுக்த மன்று.

ரு௪. குணஸம்ஸர்க்க க்ருதம்.

சேதநன் கர்த்தாவாகாதபோது ஶாஸ்த்ரத்துக்கு வையர்த்யம் ப்ரஸங்கிக்கும். (௬௫) "ஶாஸ்த்ர ஃபலம் ப்ரயோக்த்ரி" (௬௬) "கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்வாத்" என்னக்கடவதிறே.

இனித்தான், (௬௭) "ஸ்வர்க்காமோயஜேத" (௬௮) "ஜ்யோ ஜ்யோ க்ஷேமோ ப்ரஹ்மோபாஸீத" என்று, ஸ்வர்க்கமோக்ஷாதிபல போக்தாவையிறே! கர்த்தாவாக ஶாஸ்த்ரம் நியோகிக்கிறதும்; ஆகையாலே, பலபோக்தாவே கர்த்தாவாகவும் வேணுமிறே. அசேதநத்துக்கு கர்த்ருத்வமாகில் சேதநனைக் குறித்து விதிக்கவுங்கூடாது. (௬௯) "ஶாஸநாச்சாஸ்த்ரம்" என்னக்கடவதிறே. ஶாஸநமாவது ப்ரவர்த்தநம். ஶாஸ்த்ரத்துக்கு ப்ரவர்த்தகத்வம் - போதஜநநத்வாரத்தாலே. அசேதநமான ப்ரதாநத்துக்கு போதத்தை விளைக்கப் போகாதிறே; ஆகையால் ஶாஸ்த்ரம் அர்த்தவத்தாம்போது போக்தாவான சேதநனுக்கே கர்த்ருத்வ மாகவேணும். இதெல்லாவற்றையுந் திருவுள்ளம்பற்றியிறே! அப்போ திவனுக்கு ஶாஸ்த்ரவஶ்யதையும், போக்த்ருத்வமுங் கொள்ளயு மென்று அருளிச்செய்தது.

(ரு௩) ஆனால், கர்த்த்ருத்வமெல்லாம் இவனுக்கு ஸ்வரூப ப்ரயுக்தமாமோ? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்; (ஸாம்ஸாரிக ப்ரவ்ருத்திகளில் கர்த்ருத்வம் ஸ்வரூபப்ரயுக்த மன்று) என்று.

ஸாம்ஸாரிக ப்ரவ்ருத்திகளாவன - ஸ்த்ர்யந்நபாநாதி போகங்களை யுத்தேஶித்துப் பண்ணும் ஸ்வ வ்யாபாரங்கள். அவற்றில், கர்த்த்ருத்வம் ஔபாதிகமாகையாலே ஸ்வரூப ப்ரயுக்த மன்றென்கை.

(ரு௪) ஆனால், அதுதானிவனுக்குவந்தபடி யென்? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்; (குணஸம்ஸர்க்க க்ருதம்) என்று.

௩௫. கர்த்ருத்வந்தா னீஶ்வராதீநம்.

, குணங்களாகிறன - ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள். அவற்றினுடைய ஸம்ஸர்க்கத்தாலே யுண்டான தென்றபடி. (௧௦௦) "ப்ரக்ருதே꞉ க்ரியமாணாநி குணை꞉ கர்மாணி ஸர்வஶ꞉ । அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே" என்னக்கடவதிறே. இதெல்லாம், (௯௯) "கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்வாத்" என்கிற ஸூத்ரத்திலே, பூர்வபக்ஷஸித்தாந்த ரூபேண, பாஷ்யகாரர்தாமே விஸ்தரேண வருளிச்செய்தார்.

(௩௫) இப்படி ஸாங்க்யபக்ஷத்தை நிராகரித்து, ஆத்மாவுக்கே கர்த்ருத்வத்தை ஸாதித்தார்-கீழ்; இந்தகர்த்ருத்வந்தான் ஸ்வாயத்தமோ பராயத்தமோ வென்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார்; (கர்த்ருத்வந்தான் ஈஶ்வராதீநம்) என்று.

அதாவது இவ்வாத்மாவினுடைய கர்த்ருத்வந்தான் ஸ்வாதீநமன்றிக்கே, ஈஶ்வராதீநமாயிருக்கு மென்றபடி.

(௧௦௧) "பராத்து தச்ச்ருதே꞉" என்று, வேதாந்த ஸூத்ரத்தாலே, ஆத்மாவினுடைய கர்த்ருத்வம் பராயத்தமென்று ஸித்தமாகச்சொல்லப்பட்டதிறே. ஶாஸ்த்ரார்த்தவத்வத்துக்காக கர்த்ருத்வம் ஆத்மதர்மமென்று கொள்ளவேணும். அந்த கர்த்தாவுக்கு தர்மமான ஜ்ஞாநேச்சாப்ரயத்நங்கள் பகவததீநங்களா யிருக்கையாலும், அந்த ஜ்ஞாநாதிகள் பகவ தநுமதியொழிய க்ரியாஹேதுவாகமாட்டாமையாலும், இவனுடைய கர்த்ருத்வம் ஈஶ்வராதீநம் என்கிறது. "இவனுடைய புத்திமூலமான ப்ரயத்நத்தை யபேக்ஷித்து ஈஶ்வரன் அநுமதி தாநம்பண்ணுகையாலே, அந்தக்ரியாநிபந்தநமான புண்யபாபங்களும் சேதநனுக்கேயாகிறது" என்று, விவரணத்திலே ஆச்சான்பிள்ளையும்; இப்படி, கர்த்ருத்வம் பரமாத்மா யத்தமானாலும் விதி நிஷேதவாக்யங்களுக்கும் வையர்த்யம் வாராது; (௧௦௨) "க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து விஹிதப்ரதிஷித்தாவையர்த்யாதிப்ய꞉" என்று, பரிஹரிக்கப்படுகையாலே; அதாவது - விஹிதப்ரதிஷித்தங்களுக்கு வையர்த்யாதிகள் வாராமைக்காக, இச்சேதநன்பண்ணின ப்ரதம ப்ரயத்நத்தை யபேக்ஷித்

துக்கொண்டு ஈஶ்வரன் ப்ரவர்த்திப்பிக்கு மென்றபடி. எங்ஙனே யென்னில்; எல்லாசேதநருக்கும் ஜ்ஞாத்ருத்வம் ஸ்வாபாவிகமாகை யாலே, ஸாமாந்யேந ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியோக்யதை முண்டாயே யிருக்கும்; இப்படியான ஸ்வரூபத்தை நிர்வஹிக்கைக்காக, ஈஶ்வ ரன் அந்தராத்மாவாய்க்கொண்டு நில்லாநிற்கும்; அவனாலே யுண் டாக்கப்பட்ட ஸ்வரூபஶக்தியை யுடையனான சேதனன், அவ்வோ பதார்த்தங்களிலே யுக்பந்நஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்நனாய்க்கொண்டு வர்த்தியாநிற்கும்; அவ்விடத்தில மத்யஸ்தனாகையாலே, உதாஸீ நனைப்போலே யிருக்கிற பரமாத்மாவானவன் அந்தசேதநனுடைய பூர்வவாஸநாரூபமான விதிநிஷேத ப்ரவ்ருத்தியிலே யநுமதியையும் அநாதரத்தையு முடையனாய்க்கொண்டு, விஹிதங்களிலே யநுக்ர ஹத்தையும், நிஷித்தங்களிலே நிக்ரஹத்தையும் பண்ணாநிற்பானாய், அநுக்ரஹாத்மகமான புண்யத்துக்கு பலமான ஸுகத்தையும், நிக் ரஹாத்மகமான பாபத்துக்குப்பலமான துஃகத்தையும் அவ்வோ சேத நர்க்குக் கொடாநிற்கும். இது தன்னை யபியுக்தருஞ் சொன்னார். (௧௦௩) "[illegible]
[illegible]
[illegible]
[illegible]
ஸோ ஹரி:" என்று, அடியிலே, "ஸர்வநியந்தாவாய் ஸர்வாந்த ராத்மாவான ஸர்வேஶ்வரன், தனக்குண்டாக்கிக்கொடுத்த ஜ்ஞாத் ருத்வரூபமான ஸ்வாதந்த்ர்யஶக்தியாலே இப்புருஷன்றானே அவ் வோவிஷயங்களிலே ஜ்ஞாந சிகீர்ஷாப்ரயத்நங்களை யுண்டாக்கிக் கொண்டு வர்த்தியாநிற்கும்; அவ்விடத்திலே அஶாஸ்த்ரீயங்க ளிலே உபேக்ஷித்தும், ஶாஸ்த்ரீயங்களிலே அநுமதிபண்ணியும். அவ்வோ விஷயங்களிலே நிக்ரஹாநுக்ரஹங்களைப் பண்ணாநின்று கொண்டு, அவ்வோகர்மபலத்தையும் ஸர்வேஶ்வரன் கொடாநிற்கு மென்றார்கள். இப்படி ஸர்வப்ரவ்ருத்திகளிலும் சேதநனுடைய ப்ரதமப்ரயத்நத்தை யபேக்ஷித்துக்கொண்டு பரமாத்மா ப்ரவர்த்திப் பியா நிற்குமென்ற காய்த்து" என்று, தீபப்ரகாஶத்திலே ஜீயரும் அருளிச்செய்த வர்த்தங்கள் இவ்விடத்திலே யநுஸந்தேயங்கள்.

ஆனால், (க0ச) "ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி, தம் யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதே, ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி, தம் யமதோ நிநீஷதே" என்று—உந்நிநீஷையா லும், அதோநிநீஷையாலும், ஸர்வேஶ்வரன்றானே ஸாத்வஸாது கர்மங்களைப் பண்ணுவியாநிற்குமென்கிறவிது சேரும்படியென்? எனில்: இது ஸர்வஸாதாரணமன்று. யாவனொருவன் பகவத்விஷ யத்தில் அதிமாத்ரமான ஆநுகூல்யத்திலே வ்யவஸிதனாய்க்கொண்டு ப்ரவர்த்தியாநிற்கும்; அவனை யநுக்ரஹியாநின்றுகொண்டு பக வான்றானே ஸ்வப்ராப்த்யுபாயங்களாய் அதிகல்யாணங்களான கர் மங்களிலே ருசியை ஜநிப்பிக்கும்; யாவனொருவன் அதிமாத்ர ப்राதிகூல்யத்திலே வ்யவஸிதனாய்க்கொண்டு ப்ரவர்த்தியாநிற்கும்; அவனை ஸ்வப்ராப்தி விரோதிகளாய், அதோகதிஸாதநங்களான கர்மங்களிலே ஸங்கிப்பிக்கும் என்று இந்த ஶ்ருதிவாக்யங்களுக்கு அர்த்தமாகையாலே. இது தன்னை ஸர்வேஶ்வரன்றானே யருளிச் செய்தானிறே. (க0ரு) "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே, இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவஸமந்விதா:" என்று தொடங்கி, (க0சா) "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம், ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே॥ தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம:, நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா" என் றும், (க0எ) "அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீஶ்வரம்" என்றுதொடங்கி (க0அ) "மாமாத்மபரதேஹேஷு ப்ரத்விஷந்தோऽப்யஸூயகா:" என்னுமளவாக அவர்களுடைய ப்ராதி கூல்யாதிஶயத்தைச் சொல்லி, (க0கூ) "தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் । க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு" என்றும் அருளிச்செய்கையாலே.

ஆகையால், அநுமந்த்ருத்வமே ஸர்வஸாதாரணம்; ப்ரயோஜ கத்வம் விஶேஷவிஷயமென்று கொள்ளவேணும். (க0௨. "க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து" என்கிற, ஸூத்ரத்திலே இதெல்லாம் பாஷ்யகாரர் தாமே அருளிச்செய்தார்.

௩௬. ஜ்ஞாநாஶ்ரயமாகில் ஶாஸ்த்ரங்களிலே யிவனை ஜ்ஞாந மென்று சொல்லுவானேன்? என்னில்;

இவை யெல்லாவற்றையுந் திருவுள்ளம்பற்றியிறே! (கர்த்ருத் வந்தான் ஈஶ்வராதீநம்) என்று அருளிச்செய்தது.

ஆக, கீழ்ச்செய்ததாயிற்று அது; 'ஜ்ஞாநாஶ்ரயமாகை யாவது-ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமாயிருக்கை'' என்று, ப்ரதமத் திலே ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வத்தைச்சொல்லி, ஜ்ஞாந மாத்ரமென்பாரை நிராகரித்துக்கொண்டு, ஜ்ஞாத்ருத்வ கதநாநந் தரம் கர்த்த்ருத்வ போக்த்ருத்வங்கள் சொல்லவேண்டுகையாலே, அவை யிரண்டும் ஜ்ஞாத்ருத்வபலத்தாலே தன்னடையே வருமெ ன்னுமிடத்தை தர்ஶிப்பித்து, குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது; ஆத்மாவுக் கில்லையென்பாரை நிராகரித்துங்கொண்டு, ஆத்மாவினு டைய கர்த்ருத்வத்தைஸ்தாபித்து, அந்த கர்த்த்ருத்வத்தில் ஸ்வ ரூபப்ரயுக்தமல்லாத வர்ஶத்தையும், அஜ்ஞானிவனுக்கு வருகைக் கடியையுஞ்சொல்லி, இப்படி ஆத்மாவுக்குண்டான கர்த்த்ருத்வந் தான் ஸர்வாவஸ்தையிலும் ஈஶ்வராதீநமா யிருக்கு மென்று நிகமித்தாராய்த்து.

இதெல்லாம் ஆத்மாவினுடைய ஜ்ஞாநாஶ்ரயத்வகதந மடியாக வந்ததிறே.

இப்படி, ஆத்மா ஜ்ஞாநாஶ்ரயமாயிருக்குமாகில், (கக0) "யோ விஜ்ஞாநே திஷ்டந்" (எஎ) "விஜ்ஞாதா஽யம்" (ககக) "விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே' என்றும், (ககஉ) "ஜ்ஞாநஸ்வரூபமத்யந்தநிர்மலம் பரமார்த்தத:" (ககங) "ஜ்ஞாநஸ்வரூபமகிலம் ஜகதேதத் அபுத்தய: । விஜ்ஞாநம் பரமார்த்தோஹி த்வைதிநோ஽தத்யதர்ஶிந:" என்றும், ஶாஸ்த்ரங்களிலே இவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானென்? என்கிற ஜிஜ்ஞாஸை ப்ர ஶமநத்தை யநுவதிக்கிறார்;

(ஜ்ஞாநாஶ்ரயமாகில் ஶாஸ்த்ரங்களிலே யிவனை ஜ்ஞாநமென்று சொல்லுவா னென்னென்னில்) என்று.

௩௭. ஜ்ஞாநத்தையொழியவுந் தன்னை யறிகையாலும், ஜ்ஞாநம் ஸாரபூதகுணமாய் நிரூபகதர்மமாகையாலும் சொல்லிற்று.

௩௮. நியாம்யமாகையாவது - ஈஶ்வரபுத்த்யதீநமாக வெல்லா வ்யாபாரங்களு முண்டாம்படி யிருக்கை.

இப்படி, ஶாஸ்த்ரங்கள் சொல்லுகைக்கு மூலம் இன்னதென்கிறார்; (ஜ்ஞாநத்தையொழியவும் தன்னை யறிகையாலும்) என்று தொடங்கி.

அதாவது - ஜ்ஞாநம் ஸ்வாஶ்ரயத்துக்கு ஸ்வயம்ப்ரகாஶகமாயிருக்குமோபாதி, ஜ்ஞாநநிரபேக்ஷமாகத் தனக்குத்தானே ப்ரகாஶிக்கையாலும், ஜ்ஞாநம் இவனுக்கு ஸாரபூதகுணமாகையாலும், ஸ்வரூபாநுபந்தித்வேந ஸ்வரூபநிரூபக தர்மமாகையாலும் சொல்லிற்றென்கை.

இதுதான்-(கசஃ) "தத்³கு³ணஸாரத்வாத்து தத்³வ்யபதே³ஶ: ப்ராஜ்ஞவத் | யாவதா³த்மபா⁴வித்வாச்ச ந தோ³ஷஸ்தத்³த³ர்ஶநாத்" என்கிற ஸூத்ரத்வயத்தாலும் சொல்லப்பட்டது. (கசரு) "ஜ்ஞாநேந தத்³வ்யபதே³ஶஸ்து, ஜ்ஞாநஸ்யைவ ஸாரகு³ணத்வாத், ஸ்வரூபாநுப³ந்தி⁴த்வேந ஸ்வரூபநிரூபககு³ணத்வாத், ஸ்வஸ்வரூபவத் ஜ்ஞாநஸ்ய ஸ்வப்ரகாஶத்வாச்சேதி" என்றிறே! தீபத்திலே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது.

(நியாம்யமாகையாவது - ஈஶ்வரபுத்த்யதீநமாக எல்லா வ்யாபாரங்களும் உண்டாம்படி யிருக்கை.) அதாவது - (கசசு) "ய ஆத்மநி திஷ்ட²ந் ஆத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத³ யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:" என்று இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, அந்தராத்மதயா நின்று நியமிக்கை - ஈஶ்வரனுக்கு ஸார்வகாலீநமாகையாலே, இவ்வாத்மவஸ்து அவனுக்கு நியாம்ய மாகையாவது-ஶரீரத்தினுடைய ஸகல ப்ரவ்ருத்திகளும் ஶரீரியினுடைய புத்த்யதீநமாக உண்டாமாபோலே, ஶரீரபூதமான இவ்வாத்மவஸ்துவினுடைய ஸகல வ்யாபாரங்களும் ஶரீரியான பரமாத்மாவினுடைய புத்த்யதீநமாகவே யுண்டாம்படி யிருக்கையென்றபடி.

௯௯. காார்யமாகையாவது-அவனுடைய ஸ்வரூப ஸங்கல்பங்களை யொழிந்தபோது தன் ஸத்தை யில்லையாம்படி யிருக்கை.

இப்படி, தச்சரீரதயா தததீந ஸகல ப்ரவ்ருத்திகளையும் அசேதநமான ஶரீரம்போலே தானாக வொருப்ரவ்ருத்தியுண்ணமாட்டாதபடி யிருக்கையன்றிக்கே, ஜ்ஞாந சிகீர்ஷாப்ரயத்நபூர்வக ப்ரவ்ருத்திக்ஷமனா யிருக்கையாலும், ஸகல ப்ரவ்ருத்திகளிலும் இவனுடைய ப்ரதம ப்ரயத்நத்தையபேக்ஷித்துக் கொண்டு ஈஶ்வரன் அநுமதிதாநம் பண்ணுகையாலும், விதிநிஷேத ஶாஸ்த்ர வையர்த்த்யமுமில்லை.

(௯௧) இவனுடைய ப்ரவ்ருத்திமூலமாக ஈஶ்வரன் பண்ணும் நிக்ரஹாநுக்ரஹங்களுக்கும், அநுகுணமான பலப்ரதாநத்துக்கும் விரோதமில்லையென்னுமிடம் கீழ்ச்சொல்லப்பட்டது.

(கார்யமாகையாவது - அவனுடைய ஸ்வரூப ஸங்கல்பங்களை யொழிந்தபோது தன்ஸத்தை யில்லையாம்படி யிருக்கை.) அதாவது (௧௭) "ஸ்ஷெஸ்த்-விசாரண:" (௧௧௮) "ஸத்வம் வ ஜாசெந வ திஷ்தி" (௧௧௯) "ஸவெஸவாஸ்னா தநிஸ்ரணி ஸ-தாமி ஸவ-ஸ்வரா-தா ந ஸஸெவி-தா:" (௭௨௦) "ஸதஸ்வா கக்ஷாஸ்ஷ வ ஶாஸெநமாஸ்ய-ரா ஊநீ ஜஸெளவிஶ்ரதளதிஷ்தா:" என்று, இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, ஈஶ்வரன் ஸகல சேதநாசேதநங்களையும் பற்றி நியமநதாரகனாகையாலே, இவ்வாத்மவஸ்து தார்யமாகையாவது - தனக்கு நியமநதாரகமாய்க்கொண்டு தன் ஸத்தாஹேதுவாயிருக்கிற அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தையும், இந்த ஸ்வரூபாஶ்ரிதத்வத்துக்கும் ஸத்தாநுப்ரவ்ருத்திரூபமான ஸ்திதிக்கும்ஹேதுவாயிருந்துள்ள அவனுடைய நித்யேச்சாகார்ய ஸங்கல்பத்தையும் ஒழிந்தபோது தன் ஸத்தாஹாநி பிறக்கும்படியிருக்கையென்றபடி.

இப்படி, தார்யவஸ்துக்களை ஸ்வரூப ஸங்கல்பங்களிரண்டாலும் தரிக்குமென்னுமிடம் அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபா.

திக்கப்பட்டது. எங்ஙனே யென்னில்; "ஈஶ்வரன் தன் ஸ்வரூப நிரூபகதர்மங்களுக்கும், நிரூபிதஸ்வரூப விஶேஷணங்களான குணங்களுக்கும்போலே, ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த த்ரவ்யங்களுக்கும் அவ்யவஹிதமாக ஸ்வரூபேண ஆதாரமாயிருக்கும். அவ்வோ த்ரவ்யங்களை யாஶ்ரயித்திருக்கும் குணாதிகளுக்கு அவ்வோ த்ரவ்யத்வாரா ஆதாரமாயிருக்கும். ஜீவர்களாலே தரிக்கப்படுகிற ஶரீரங்களுக்கு ஜீவத்வாரா ஆதாரமாயிருக்குமென்று சிலர் சொல்லுவார்கள். ஜீவனை த்வாரமாகக்கொள்ளில், ஸ்வரூபத்தாலுமே ஆதாரமாமென்று சில ஆசார்யர்கள் சொல்லுவார்கள். இப்படி, ஸர்வமும் ஆஶ்ரயத்தைப் பற்ற ப்ருதக்ஸித்த்யநர்ஹ விஶேஷணமாகையாலே, இவற்றின் ஸத்தாதிகள் ஆஶ்ரயஸத்தாதீநங்கள்; ஸர்வவஸ்துக்களினுடையவும் ஸத்தைக ஸங்கல்பாதீநமாகையால் வந்த-அநித்யங்கள் அநித்யேச்சையாலே உத்பந்நங்களாயும், நித்யங்கள் நித்யேச்சாஸித்தங்களாயு மிருக்கை. இவ்வர்த்தத்தை (௧௨௧) "[illegible]" என்கிற ஶ்லோகத்தாலே அபியுக்தர் விவரித்தார்'

"இத்தாலே, ஸர்வஜ்ஞனுடையவும் ஸத்தாநுவ்ருத்தியுடையானஸ்திதியும் ஈஶ்வரேச்சாதீநையானபடியாலே ஸர்வமும் ஈஶ்வரஸங்கல்பாஶ்ரிதமென்று சொல்லுகிறது. குருத்ரவ்யங்கள் ஸங்கல்பத்தாலே த்ருதங்க ளென்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுமது (௧௨௨) "[illegible]" என்கிறபடியே, ஓரோ ப்ரதேஶவிஶேஷங்களிலே விழாதபடி நிறுத்துகையைப் பற்ற. இப்படி இச்சாதீநஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்திகளான வஸ்துக்களுக்கு பரமாத்மஸ்வரூப மென்செய்கிறது? என்னில்; பரமாத்மாவினுடைய இச்சை யிவ்வஸ்துக்களை பரமாத்மாவின் ஸ்வரூபாஶ்ரிதங்களாக வகுத்துவைக்கும். இப்படி, ஸர்வவஸ்துவும் ஈஶ்வரஸ்வரூபாதீநமுமாய், ஈஶ்வரேச்சாதீநமுமாயிருக்கும்; லோகத்திலும் ஶரீரம்-ஶரீரியினுடைய ஸ்வரூபாஶ்ரயமுமாய், ஸங்கல்பாஶ்ரயமுமா யிருக்கக்காணாநின்றோம். இவனிருந்தகாலமிருந்து, இவன் விட்டபோது ஒழிகையாலே ஸ்வரூபாஶ்ரிதம். இவ்வர்த்தம், ஸங்கல்பமில்லாத ஸுஷுப்த்யாத்யவஸ்தைகளிலே தெளிவது. ஜாக்ராதிதஶைகளில் ஸங்கல்பத்தாலே விழாதபடி தாங்கும்

௪௦. ஶேஷமாகையாவது - சந்தந குஸும தாம்பூலாதிகளைப் போலே, அவனுக்கிஷ்டவிநியோகார்ஹமாயிருக்கை.

போது ஸங்கல்பாஶ்ரித மென்னக்கடவது" என்று, இப்படி ரஹஸ்யத்ரயஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

(ஶேஷமாகையாவது-சந்தந குஸும தாம்பூலாதிகளைப்போலே அவனுக்கு இஷ்ட விநியோகார்ஹமா யிருக்கை.) அதாவது-சந்தந குஸுமாதி பதார்த்தங்கள் தனக்கென்னவிருப்பதோ ராகாரமின்றிக்கே, பூஸுமவனுக்கும் சூடுமவனுக்கும் உறுப்பாய், விநியோகங் கொள்ளுமவனுக்குத் தானும் விநியோகங்கொண்டு, தானுகந்த விஷயங்களுக்கும் கொடுக்கலாம்படி இஷ்ட விநியோகார்ஹமா யிருக்குமாபோலே சேதநன்றுவாயிருக்க ஸ்வப்ரயோஜந கந்தமன்றிக்கே தன்னுடைய ஸ்வரூபஸ்வபாவ வைலக்ஷண்ய மெல்லாவற்றாலும் ஶேஷிக்கு அதிஶயகரமாய், விநியோகதஶையில் அவனுக்குத் தானும் விநியோகங்கொண்டு,(கஉ௩) "அடியார்க்கென்னையாட்படுத்த விமலன்" என்றபடியே, தானுகந்தவர்களுக்கும் உறுப்பாக்கலாம்படி. வேண்டின விநியோகத்துக்கு யோக்யமாயிருக்கை யென்றபடி. சித் த்ரவ்யத்துக்கு அசித்த்ரவ்யங்களை த்ருஷ்டாந்தமாகச் சொல்லிற்று- பாரதந்த்ர்யாதிஶயம் சொல்லுகைக்காகவிறே. ஆத்மஸ்வரூப யாதாத்ம்யம் இதுவாகையாலே யிறே! ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகிறதஶையிலே (கஉ௪) "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்று, ஆழ்வார் அருளிச்செய்தது (கஉரு) "பரகதாதிஶயாதாநேச்சயோபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ ஶேஷ: பரஶ்ஶேஷீ" என்று, ஶேஷஶேஷித்வலக்ஷணம் பாஷ்யகாரராலே யருளிச்செய்யப்பட்டது. இந்த லக்ஷணார்த்தத்தை யநுஸரித்துக்கொண்டு, (கஉகூ) "உத்தேஶ்யாய ஸ்வாதிஶய ஸம்பாதநஸ்வபாவயோரநயோஶ்சேதநயோ ஶேஷஶேஷிணௌ" என்று, ஶேஷஶேஷித்வலக்ஷணத்தை அபியுக்தரானவர்களும் சொல்லிவைத்தார்கள். (கஉ௭) 'யதேஷ்ட விநியோகார்ஹ: ஶேஷஶப்தேந கத்யதே ஸ்வம் ஸ்வாம்யேந யதா தத்வத் யதேஷ்டம் விநியுஜ்யதே' என்று சொல்லுகையாலே, ஶேஷத்வமாவது- இஷ்டவிநியோகார்ஹத்வம் என்னுமிடம் ஶாஸ்த்ரஸித்தம்.

சக. இதுதான் க்ருஹ க்ஷேத்ர புத்ர களத்ராதிகளைப்போலே, ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு யோக்யமாம்படி யிருக்கை யன்றிக்கே, ஶரீரம்போலே யவற்றுக் கயோக்யமா யிருக்கை.

இப்படி, ஈஶ்வரவிஷயத்தில் ஆத்மாவுக்குண்டான ஶேஷத்வந்தான், (சஉஅ) "யஸ்யாஸ்மி ந தமந்தரேமி" (கஉக) "பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்தி்தே" (கங0) "தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: । நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச" (கஙக) "ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி । ஆத்மதாஸ்யம் ஹரேஸ்ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர" என்று, ஶ்ருதி ஸ்ம்ருத்யாதிகளிலே சொல்லப்படாநின்றதிறே.

(சக) ஒருவனுக்கு க்ருஹக்ஷேத்ராதிகளும் ஶேஷமாய், ஸ்வஶரீரமும் ஶேஷமா யிருக்கச்செய்தே, க்ருஹக்ஷேத்ராதிகள் - ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு அர்ஹமாய், ஶரீரம் - அவற்றுக்கு அநர்ஹமாயிருக்கக்காண்கையாலே, இவ்வாத்மவஸ்து ஈஶ்வரனுக்கு ஶேஷமாமிடத்தி லிருக்கும்படி யெங்ஙனே? என்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார்; (இதுதான்) என்றுதொடங்கி.

இதுதானென்றது - இப்படி ஈஶ்வரஶேஷமாகச் சொல்லப்பட்ட ஆத்மவஸ்துதா னென்றபடி.

(க்ருஹ க்ஷேத்ர புத்ர களத்ராதிகளைப்போலே) என்கிற விடத்தில், ஆதிஶப்தத்தாலே- தந தாந்யாராம தாஸ தாஸீவர்க்கங்களைச் சொல்லுகிறது.

(ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு யோக்யமாம்படி யிருக்கை யன்றிக்கே) என்கிறவிடத்தில், ப்ருதக்ஸித்தியாவது- ஸம்ஹோபலம்பநியம மின்றிக்கே, ஶேஷியானவனை யொழியவும் தான்ஸித்திக்கை.

ஆதிஶப்தத்தாலே - அநேக ஸாதாரணத்வத்தைச் சொல்லுகிறது; க்ருஹக்ஷேத்ர தாஸதாஸீப்ரப்ருதிகள்- பித்ரு புத்ர ஜ்யேஷ்ட்ட கநிஷ்ட்டாதிகளுக்கு ஸாதாரண ஶேஷமாயிருக்கும்; புத்ரனும்

சஉ, ஆத்மஸ்வரூபந்தான், பத்த முக்த நித்யரூபேண மூன்று படிப் பட்டிருக்கும்.

மாதா பித்ரு ப்ராத்ருவ்யாதிகளுக்கு ஸாதாரணசேஷமாயிருக்கும்; சாஸ்த்ரமும் (கஙஉ) "ஸோம: ப்ரதமோ விவிதே கந்தர்வோ விவித உத்தர:, த்ருதீயோ அக்நிஷ்டே பதிஸ் துரீயஸ்தே மநுஷ்யஜா:" என்று - பாணிக்ரஹணத்தளவும் ஸோமாதிகளுக்கு சேஷமாகச் சொல்லுகையாலே. அநேகஸாதாரணமாயிருக்கும்; இப்படி யன்றிக்கே, சரீரம்போலே யவற்றுக்கு அயோக்யமாயிருக்கையாவது- அப்ருதக்ஸித்தமாய், அநந்யஸாதாரணமான சரீரம்போலே. ப்ருதக்ஸித்த்யாதிகளானவற்றுக்குத் தான் அநர்ஹமாயிருக்கை.

"ப்ருதக்ஸ்தித்யாதிகளுக்கு" என்று பாடமாகில், ஆதிசப்தத்தாலே ப்ருதகுபலப்தியைச் சொல்லுகிறது. அப்போதைக்கு, இதுதான் க்ருஹ க்ஷேத்ர புத்ர மித்ர களத்ராதிகளைப்போலே, பிரிந்துநிற்கைக்கும், பிரிந்துதோற்றுகைக்கும் அர்ஹமாம்படியிருக்கையன்றிக்கே, சரீரம்போலே தததர்ஹமாயிருக்குமென்று பொருளாகக்கடவது. (கஙங) "அயமேவாத்மசரீரபாவ: ப்ருதக்ஸித்த்யநர்ஹாதாராதேயபாவ:, நியந்த்ருநியாம்யபாவ:, சேஷசேஷிபாவஸ்ச" என்றும், (கஙச) "யஸ்ய சேதநஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே நியந்தும் தாரயிதும் ச சக்யம் தச்சேஷதைகஸ்வரூபஞ்ச தத் தஸ்ய சரீரம்" என்றும் வேதார்த்தஸங்க்ரஹத்திலும், ஸ்ரீபாஷ்யத்திலும், ஆத்மசரீரபாவலக்ஷணமாக பாஷ்யகாரர் அருளிச்செய்த நியந்த்ருநியாம்யபாவம், ஆதாராதேயபாவம், சேஷசேஷிபாவமாகிற மூன்றும் இவ்விடத்திலே சொல்லப்படுகையாலே, (கஙரு) "யஸ்யாத்மா சரீரம் யஸ்யாக்ஷரம் சரீரம்" என்று, இத்யாதி ப்ரஸித்தமான ஆத்மாவினுடைய பரமாத்ம சரீரத்வம் அர்த்தாத் உக்தமாயிற்று.

ஆக, கீழே ஆத்மஸ்வரூபத்தினுடைய சோதநம்பண்ணப்பட்டது.

(சஉ) இனி, ஏவம்பூதமான ஆத்மஸ்வரூபம், அநாத்யசித்ஸம்பந்த தத்வியோக தத்ந்வயங்களாலே பத்தமுக்த நித்யரூபேண த்ரிப்ரகாரமாயிருக்கும்படியை யருளிச்செய்கிறார்;

௪௩. பத்தரென்கிறது-ஸம்ஸாரிகளை.

௪௪. முக்தரென்கிறது - ஸம்ஸாரஸம்பந்த மற்றவர்களை.

---

(௪௩) (ஆத்மஸ்வரூபந்தான் பத்தமுக்தநித்யரூபேண மூன்று படிப்பட்டிருக்கும்) என்று.

இதில், பத்தரென்கிறதாரை! என்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்: (பத்தரென்கிறது ஸம்ஸாரிகளை) என்று.

அவர்களாகிறார் - திலதைலவத், தாருவஹ்நிவத், துர்விவேச குணத்ரயாத்மகாசித் பகவந்மாயாதிரோஹித ஸ்வரூபராய், அநாத்யவித்யா ஸஞ்சிதாநந்த புண்யபாபரூப கர்மவேஷ்டிதராய், தத்தத் கர்மாநுகுண விவித விசித்ர தேவாதிரூபதேஹவிசேஷ ப்ரவிஷ்டராய், அவ்வோ தேஹங்களிலே அஹம்புத்தியையும் தேஹாநுபந்திகளிலே மமதாபுத்தியையும் பண்ணி துர்வாஸநாருசி விவசராய், ஸ்வஸ்வகர்மாநுகுண ஸுகதுக்கபரம்பரைகளை யநுபவிக்குமவர்கள்.

(௪௪) இனி, முக்தரென்கிறதாரை யென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்;

(முக்தரென்கிறது - ஸம்ஸாரஸம்பந்த மற்றவர்களை) என்று; அவர்களாகிறார்—அநாதிகர்ம ப்ரவாஹ ப்ரயுக்தமான ஸம்ஸாரஸம்பந்தம் நடவாநிற்கச்செய்தே, மோக்ஷருசிக்கு ப்ரதிபந்தகமான கர்மவிசேஷம், அநுபவத்தாலே யாதல், ஸாமாந்யேநவநுஷ்டிக்கும் ப்ராயச்சித்த கர்மங்களாலே யாதல், அநபிஸம்ஹிதபலமாய் அத்யுத்கடமான ப்ராமாதிக புண்யங்களாலேயாதல்க்ஷபித்து, அதடியாக ஜாயமாநதசையில் பகவத்கடாக்ஷத்தாலுண்டான ஸத்த்வோத்ரேகத்தாலே மோக்ஷருசிபிறந்து, ஸத்குருஸமாச்ரயண ஸம்ப்ராப்த வேதாந்தவேத்ய பரப்ரஹ்மஜ்ஞாநராய், தத்ப்ராப்திரூப மோக்ஷ ஸித்த்யர்த்தமாக, ஸ்வவர்ண ஸ்வாச்ரமோசிதமான கர்மங்களை பலஸங்க கர்த்ருத்வத்யாக பூர்வகமாக வநுஷ்டித்து (௧௩௬) "யஜ்ஞேந விவிதிஷந்தி" என்றும் (௧௩௭) "கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே" என்றும் சொல்லுகிறபடியே, அந்த ஸத்கர்மாநுஷ்டாநத்தாலேஜ்ஞாநோத்பத்தி விரோதி ப்ராசீநகர்மம் க்ஷபித்தவாறே அந்தஃகரணம்

௪௫. நித்யரென்கிறது-ஒருநாளும் ஸம்ஸரியாத ஶேஷஶேஷாஶநாதிகளை.

நிர்மலமாய், பகவதேகாவலம்பியான ஸம்யக்ஜ்ஞாநமுதித்து; அநந்தரம், (௧௩௮) "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதிபி: । நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே" என்கிறபடியே, இப்படி பஹுதர ஜந்மஸாத்யமான கர்ம ஜ்ஞாநங்களாலே பிறந்த தைலதாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதிஸந்தாந ரூப பக்திமூலமாகவரும் பகவத்ப்ரஸாதத்தாலேயாதல், அன்றிக்கே தன்னுடைய நிர்ஹேதுகஸௌஹார்த்தவிஶேஷத்தாலே யாத்ருச்சிகாதி ஸுக்ருத பரம்பரைகளைக் கல்பித்து, அதடியாக விஶேஷகடாக்ஷத்தைப்பண்ணி, அநந்தரம் அத்வேஷத்தைஜநிப்பித்து, ஆபிமுக்யத்தை யுண்டாக்கி ஸாத்விக ஸம்பாஷணத்தை விளைத்து, அவ்வழியாலே ஸதாசார்ய ஸமாஶ்ரயணத்திலேமூட்டி, ததுபதேஶமுகேந தத்வஜ்ஞாநத்தைப் பிறப்பித்தல், தன்னுடைய விஶேஷகடாக்ஷந் தன்னாலே தத்வஜ்ஞாநத்தைப்பிறப்பித்தல்செய்து, மஹாவிஶ்வாஸ பூர்வகமாகத் தன்திருவடிகளே உபாயமென்று நிற்கும்படிபண்ணும் பகவதாகஸ்மிகக்ருபையாலே உபாயாந்தரவிஷயத்தில் பிறந்த துஷ்கரத்வாதி புத்திமூலமாக வரும் ப்ரபதநமூலமான பகவத்ப்ரஸாதத்தாலேயாதல், ஸாம்ஸாரிக ஸகலதுரிதங்களும் கழிந்து ஆவிர்ப்பூத ஸ்வரூபராய் பகவதநுபவ கைங்கர்யைக போகரானவர்கள்.

அவிஶேஷேண, "முக்தரென்கிறது - ஸம்ஸாரஸம்பந்தமற்றவர்களை" என்கையாலே பகவதநுபவத்தில் ருசியின்றிக்கே, தத் ஸமாஶ்ரயணத்தைப்பண்ணி ஸம்ஸாரநிவ்ருத்தியை யுண்டாக்கிக் கொண்டு தேஶவிஶேஷத்திலேபோய் ஸ்வஸ்வரூபாநுபவம்பண்ணியிருக்கும் கேவலரையும் சொல்லிற்றாயிற்று.

(௪௫) இனி, நித்யரென்கிற தாரையென்னும் ஆகாங்க்ஷையிலேயருளிச்செய்கிறார்;

(நித்யரென்கிறது - ஒருநாளும் ஸம்ஸரியாத ஶேஷஶேஷாஶநாதிகளை) என்று. ஒருநாளும் ஸம்ஸரியாத வென்கையாலே - முக்தரை வ்யாவர்த்திக்கிறது; நிவ்ருத்த ஸம்ஸாரரிறே! அவர்கள்; இவர்கள் அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரிறே! (௧௩௯) "ஸஹஸ்ர

ஸஹஜகாஸ்ய ஸ்வாபாவிகஸ்ய ஸ்வபாவா:'' என்றுரிறே! பட்டர்; (௧௬௰) "நித்யாநித்யாநாம்" என்றும், (ருது) "ஜ்ஞாஜ்ஞௌ த்வா வஜாவீஶநீஶௌ" என்றும் சொல்லுகிறபடியே ஆத்மஸ்வரூபம் நித்யமாயிருக்க; (௧௬௧) "ஸஸெனவ" என்பது, (௧௬௧) "ஸதெ நம" என்பதாகிறது பகவத்விஷயஜ்ஞாந ராஹித்ய ஸாஹித்யங்களாலேயிறே; ஆகையால், இவர்களை நித்யரென்கிறதும், பகவத் ஜ்ஞாநத்துக் கொருநாளும் ஸங்கோச மில்லாமையாலே யென்று கொள்ளவேணும். இந்த வைபவத்தைப்பற்றவிறே! (௧௬௨) "யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:" என்றும், (௧௬௩) "யத்ரர்ஷய: ப்ரதமஜாயே புராணா:" என்றும் ஶ்ருதி இவர்களை ஶ்லாகிக்கிறது. பாஷ்யகாரரும் இவர்களுடைய வைபவத்தை, (௧௬௪) "ஸ்வாநுரூப" இத்யாதியாலே, ஸ்ரீகத்யத்திலே பரக்கவருளிச்செய்தார்.

ஆகையாலே, "ஒருநாளும் ஸம்ஸரியாத" என்றபோதே, இவர்களுடைய வைபவமெல்லாம் சொல்லிற்றாயிற்று.

அஶேஷ ஶேஷவ்ருத்தியிலும் அந்விதனாய், கைங்கர்யபரர்க்கெல்லாம் படிமாவாயிருக்கையாலே, திருவநந்தாழ்வானை ஶேஷனென்கிறது. (௧௬௫) "நிவாஸ ஶய்யாஸந பாதுகாம்ஶுகோபதாந வர்ஷாதபவாரணாதிபி: । ஶரீரபேதைஸ்தவ ஶேஷதாம் கதைர்யதோசிதம் ஶேஷ இதீரிதே ஜநை:" என்றிறே! ஆளவந்தாரு மருளிச்செய்தது.

மற்றுள்ள ததீயரைப்போலே அநியதமாயிராதே, ஸர்வேஶ்வரன் அமுதுசெய்த ஶேஷமொழிய வமுதுசெய்யாத நியமத்தைப் பற்ற, ஶேஷாஶநரென்று-ஸேநமுதலியாரை நிரூபிக்கிறது. (௧௬௬) "த்வதீயபுக்தோஜ்ஜிதஶேஷபோஜிநா" என்றுரிறே! ஆளவந்தாரும்; (௧௬௭) "வநாதிநாயஸ்ய ஸமஸ்தவஸ்துவைபவம் பரிஷாஶ்ரயஸ்ய ஸேநாந்யஸ்துதி:" என்று, ஆழ்வானு மருளிச்செய்தார்.

ஆதிஶப்தத்தாலே - (௧௬௮) "ஶேஷஶேஷாஶந கருட ப்ரமுக நாநாவிதாநந்த பரிஜந பரிசாரிகா பரிசரித

௪௬. ஜலத்துக்கு அக்நி ஸம்ஸ்ருஷ்டஸ்த்தாலீ ஸம்ஸர்க்கத்தாலே ஔஷ்ண்ய ஶப்தாதிக ளுண்டாகிறப்போலே, ஆத்மாவுக்கும் அசித்ஸம்பந்தத்தாலே அவித்யா கர்ம வாஸநா ருசிக ளுண்டாகிறன.

[illegible]" என்கிறபடியே, பகவத் கைங்கர்யைகபோகராயிருந்துள்ள வைநதேயப்ரமுகரான நித்யஸித்தரை யெல்லாம் சொல்லுகிறது.

(௪௬) பூர்வோக்தமான ஸ்வரூப வைலக்ஷண்யத்தை யுடைய ஆத்மாவுக்கு அவித்யாதி தோஷஸம்பந்தம் வந்தபடியென்? என்கிற சங்கையிலே, ஸத்ருஷ்டாந்தமாக தத்ஹேதுவையருளிச்செய்கிறார்; ஜலத்துக்கு என்று தொடங்கி.

அதாவது ஸ்வபாவதஏவ நிர்விகாரமாய் ஶீதளமாயிருக்கிற ஜலத்துக்கு, அக்நியோடே ஸம்ஸ்ருஷ்டையான ஸ்த்தாலியோட்டை ஸம்ஸர்க்கத்தாலே ஔஷ்ண்ய ஶப்தோத்ரேக ரூபங்களான விகாரங்க ளுண்டாகிறப்போலே, ஸ்வதஃஜ்ஞாநாநந்தாமல ஸ்வரூபனான ஆத்மாவுக்கும் குணத்ரயாஶ்ரயாசித்ஸம்பந்தத்தாலே அவித்யாகர்ம வாஸநாருசிக ளுண்டாகிறனவென்கை.

இவருடைய திருத்தம்பியாரும், ஆசார்ய ஹ்ருதயத்திலே (௩௪௩) "[illegible]" என்று அருளிச்செய்தாரிறே,

இப்படி, ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலே (௨௮) "நிர்வாணமய ஏவாயமாத்மா ஜ்ஞாநமயோऽமல: । து:காஜ்ஞாநமலா தர்மா: ப்ரக்ருதேஸ்தே ந சாத்மந: ॥ ஜலஸ்ய நாக்நிஸம்ஸர்க: ஸ்தாலீஸங்காத்ததாபி ஹி । ஶப்தோத்ரேகாதிகாந் தர்மாந் தத்கரோதி யதா ந்ருப ॥ ததாத்மா ப்ரக்ருதிஸங்காதஹம்மாநாதிதூஷித: । பஜதே ப்ராக்ருதாந் தர்மாநந்யஸ்தேப்யோ ஹி ஸோऽவ்யய:॥" என்று சொல்லப்பட்டது.

அவித்யையாவது-அஜ்ஞாநம். அதுதான்-ஜ்ஞாநாநுதய, அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாந ரூபேண அநேகவிதமாயிருக்கும்.

சஎ. அசித்துகழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள்.

கர்மமாவது-கரணத்ரயக்ருதமாய், புண்யபாபாத்மகமான க்ரியாவிசேஷம். அதில், புண்யம் ஐஹிகாமுஷ்மிக நாநாவித போக ஸாதநதயா பஹுவிதமாயிருக்கும்; பாபமும்-அக்ருத்யகரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசாராஸஹ்யாபசார ரூபேண அநந்தமாயிருக்கும்.

வாஸநையாவது - முன்புசெய்துபோந்தவற்றிலே மீளவும் மூளுகைக்குறுப்பான ஸம்ஸாரம். இதுதான், ஹேதுபேதத்தாலே பஹுவிதமாயிருக்கும்.

ருசியாவது - ரஸாந்தரத்தாலும் மீட்கவொண்ணாதபடி யொன்றிலேசெல்லுகிற விருப்பம். இதுவும், விஷயபேதத்தாலே பஹுவிதமாயிருக்கும்.

அவித்யாகர்மவாஸநாருசிகளுண்டாயிற்றின வென்னாதே, உண்டாகிறன வென்கையாலே - இவற்றினுடைய ப்ரவாஹரூபத்வம் சொல்லப்பட்டது,

சஎ. இப்படி, ஆத்மாவுக்கு வந்தேறியான அவித்யாதிகள் தானே எவ்வவஸ்தையிலே கழிவது? என்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்;

(அசித்துகழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள்) என்று. அதாவது-காரணநிவ்ருத்யா கார்யநிவ்ருத்தியாகையாலே, அசித்ஸம்பந்த நிபந்தநமாக வந்த விவையும், தத்ஸம்பந்தம் கழிந்தவாறே கழியுமென்று தத்வவித்துக்கள் சொல்லுவர்க ளென்றபடி.

"என்பர்கள்" என்ற வித்தை பரமதமாக்கி, * மயர்வறமதிநல மருளப்பெற்றவர்களுக்கு பகவத்ப்ரஸாதவிசேஷத்தாலே, அசித்துகழியும்முன்னே அவித்யாதிகள் கழியக்காண்கையாலே அந்த நியமமில்லையென்று இவர்க்குக்கருத்து என்று சொல்லுவாருமுண்டு. அது முக்யமன்று; அவர்கள் திருமேனியோடே யிருக்கச்செய்தே, பரமபக்தி பர்யந்தமாகப் பிறந்ததேயாகிலும் (கஉ௦) "வினைப்படலம் விள்ளவிழித்துன்னை மெய்யுற்றுலுள்ளவுலகளவும் யானு முளனாவனென்கொலோ" என்கையாலே; (சஉக) "ஸவ-

௫க. அது தேஹபேதத்தாலே யென்னில்.

௫உ. ஸௌபரிஶரீரத்திலு மதுகாணவேணும்.

௫௩. ஒருவன் ஸம்ஸரிக்கையும், ஒருவன் முக்தனுகையும், ஒருவன் சிஷ்யனுகையும், ஒருவன் ஆசார்யனுகையும் கூடாது

ஸுகோத்தாரு யிருக்கிறகாலத்திலே வேறொருவன் (கஅ0) "அஹம்து:கீ" என்று, து:கோத்தாருயிருக்கிற விந்த ஸுகது:க்கவ்யவஸ்தை கூடாதென்கை; ஸுகது:கங்களிரண்டும ஏகாஶ்ரயகதமாகில் உபயப்ரதிஸந்தாநமும ஒருவனுக்கே யுண்டாகவேணுமிறே; ஆகையால், ஸுகது:கங்கள் நியதங்களாகையாலே, ஆத்மபேதமுண்டாகவேணுமென்று கருத்து.

௫க. அந்த ஸுகது:கவ்யவஸ்தைக்கு ஹேது, தேஹபேதமென்கிறவர்களுக்குத்தரமருளிச்செய்கிறார்;

(அது தேஹபேதத்தாலே யென்னில) என்று.

௫உ அதுக்கு அநுபபத்தி சொல்லுகிறார்;

(ஸௌபரிஶரீரத்திலும் அது காணவேணும்) என்று. அதாவது-தேஹபேதம் ஸுகது:கநியமத்துக்கு ஹேதுவாகில், அநேக தேஹபரிக்ரஹம்பண்ணின ஸௌபரிஶரீரத்திலும் அந்த நியமம் காணவேணுமென்கை.

தேஹபேதம் ஸுகது:கநியமத்துக்கு ஹேதுவன்றாகில், ஜந்மாந்தராநுபவத்தை இஜ்ஜந்மத்திலே ஸ்மரிக்க வேண்டாவோ! என்னில்; ஸ்மரியாதொழிகிறது ஸம்ஸ்காரத்திலுடைய அநுத்பவத்தாலேயாதல், நாஶத்தாலேயாதல் ஶரீராந்தரத்தில் ஸுகது:கஸ்ம்ருத்யாதிகளின்றிக்கே யொழிகிறதும இரண்டத்தொன்றாலே யென்னில், ஒருஶரீரம்தன்னிலும் ஸ்ம்ருதிகூடாதொழியவேணும். ஆகையால், ஸுகது:கநியமததுக்கு ஹேது-தேஹபேத மென்னவொண்ணாது.

௫௩. அப்படி, ஸுகது:க வ்யவஸ்தாநுபபத்தியே யன்று. ஏகாத்மா வென்னும்பக்ஷத்தில் பத்தமுக்த வ்யவஸ்தாநுபபத்தியும் ஶிஷ்யாசார்ய வ்யவஸ்தாநுபபத்தியும் உண்டென்கிறார் மேல்;

௫௪. விஷமஸ்ருஷ்டியுங்கூடாது.

௫௫. ஆத்மபேதம் சொல்லுகிற ஸ்ருதியோடும் விரோதிக்கும்.

(ஒருவன்ஸம்ஸாரிக்கையும)என்றதொடங்கி. அதாவது-ஏகாத்மாவாகில், (௧௬௧) "அநேகஜந்ம ஸாஹஸ்ரீம் ஸம்ஸாரபதவீம் வ்ரஜந் । மோஹச்ரமம் ப்ரயாதோஸௌ வாஸநாரேணுகுண்டித:" என்கிறபடியே ஒருவன் ஸம்ஸாரிக்கையும், (௧௬௨) "ப்ரஜ்ஞாத்வா ஜ்ஞாத்வா வாசதேவாசக்ஷு:" என்கிறபடியே ஒருவன் முக்தனாகையும், (௧௬௩) "தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத், ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம், தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரசாந்தசித்தாய சமாந்விதாய யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்ரஹ்மவித்யாம்" என்கிறபடியே, ஒருவன் சிஷ்யனாய்வந்து உபஸத்திபண்ண ஒருவன் ஆசார்யனாயிருந்து அவனுக்குஉபதேசிக்கையுங் கூடாதென்கை.

(௫௪) இன்னமுமோரநுபபத்தி சொல்லுகிறார்; (விஷமஸ்ருஷ்டியுங்கூடாது) என்று. அதாவது - ஏகாத்மாவாகில் தேவதிர்யகாதிரூபேண, சில ஸுகோத்தரமாகவும், சில து:கோத்தரமாகவும், சில ஸுகது:கமிச்ரமாகவும், இப்படி லோகத்தில் பதார்த்தங்களை விஷமமாக ஸர்வேச்வரன் ஸ்ருஷ்டிக்கக்கூடாதென்கை. ஜீவபேதமும், கர்மதாரதம்யமுமிறே! விஷமஸ்ருஷ்டிக்குஹேது.

(௫௫) இப்படி, யுக்தியாலே அநேகவிரோதங்களை தர்சிப்பித்தாரிறே; இவ்வளவேயன்று, இப்பக்ஷத்துக்குஸ்ருதிவிரோதமுமுண்டென்கிறார்; (ஆத்மபேதம் சொல்லுகிற ஸ்ருதியோடும் விரோதிக்கும்) என்று. அதாவது-ஏகாத்மா வென்கிறபக்ஷம், (௧௬௪) "நித்யோ நித்யாநாம் சேதநச்சேதநாநா மேகோ பஹூநாம் யோ விததாதி காமாந்" என்று, ஆத்மபேதத்தைச் சொல்லுகிற ஸ்ருதிக்கும் சேராதென்றபடி. இந்த ஸ்ருதி ஆத்ம

ருசு. ஶ்ருதி, ஔபாதிகபேதத்தைச் சொல்லுகிற தென்ன வொண்ணாது.

ருஎ. மோக்ஷதசையிலும் பேதமுண்டாகையாலே.

ருஅ. அப்போது தேவமநுஷ்யாதிபேதமும், காமக்ரோதாதிபேத மும் கழிந்து, ஆத்மாக்கள் ஸ்வரூபம் அத்யந்தம் ஸம மாய், ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணாதபடி யிருந்ததேயாகிலும்.

பேதத்தைச் சொல்லுகிறதென்னில்; (௬௬) "ஹோதா ஹோதா ஹ்ருஷ்" என்றும், (௪அ) "வ்யோமாதீந்" என்றும், (ருஅ) "ஜ்ஞா ஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ" என்றும், (கசுச) "க்ஷேத்ரஜ்ஞ க்ஷேத்ர விஜ்ஞாநயோ:" என்றும், ஜீவைகத்வ ப்ரதிபாதிகைகளான அநேகஶ்ருதிகளோடும் விரோதிக்கும். ஆகையால், இது ஔபாதிக பேதத்தைச் சொல்லுகிறதென்றிறே! அவர்கள் சொல்லுவது.

(ருசு) அத்தை நிஷேதிக்கிறார், (ஶ்ருதி, ஔபாதிகபேதத்தைச் சொல்லுகிற தென்னவொண்ணாது) என்று. ஔபாதிக பேதமாவது - தேவமநுஷ்யாதிபேதமும், காமக்ரோதாதிபேதமும்.

(ருஎ) ஔபாதிகபேதமென்னவொண்ணாமைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார்; (மோக்ஷதசையிலும் பேத முண்டாகையாலே) என்று. அதாவது - (கசுரு) "ஸதா பஶ்யந்தி" (கசுசு) "ஸ ஏகதா பவதி" (கசுஎ) "ஸர்வே ஸ்ம ஸமாப்தா:" (கசுஎ) "ஶ்ருத்வாநாம் வஶமாகதி:" (௪சுஅ) "ஸாயுஜ்யம் ப்ரதிபந்நாயே" (கசுக) "யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:" என்று, மோக்ஷதசையிலும் ஆத்மபேதத்தை ஶ்ருதிஸ்ம்ருதிகள் சொல்லுகையாலே அப்படி சொல்லவொண்ணாதென்கை.

மோக்ஷதசையாவது - ஸர்வோபாதிவிநிர்முக்ததசையிறே. அந்ததசையிலும் ஆத்மபேதம் ஶ்ருதி ஸித்தமாகையாலே, (௪௦) "நித்யோ நித்யாநாம்" என்கிற ஶ்ருதியும் ஆத்மபேதத்தைச் சொல்லுகிறதென்றதாயிற்று.

(ருஅ) ஆனால், ஆத்மபேதப்ரதிபத்திக்கு ஹேதுவாய், ஔபாதிகமாயிருந்துள்ள தேவமநுஷ்யாதிபேதமும், காமக்ரோதாதிபேத

௫௯. பரிமாணமும், எடையும், ஆகாரமு மொத்திருக்கிற பொற் குடங்கள், ரத்நங்கள், வ்ரீஹிகள் தொடக்கமானவற்றுக்கு பேதமுண்டாகிறாப்போலே ஸ்வரூபபேதமும் ஸித்தம்.

௬௦. ஆகையா லாத்மபேதம் கொள்ளவேணும்.

மும்கழிந்து ஆத்மாக்களுடைய ஸ்வரூபம் அத்யந்தஸமமாய், ஒருப்ரகாரத்தாலும் பேதகதந்த்ரத்துக்கு யோக்யதை யில்லாதபடி யிறே மோக்ஷதசையிருப்பது; அவ்விடத்தில், ஆத்மபேதம் ஸித்திக்கிறபடி யெங்ஙனே? என்கிற வாதிப்ரஸங்கத்தை யநுவதிக்கிறார்; (அப்போது) என்று தொடங்கி - (ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணாதபடி யிருந்ததேயாகிலும்) என்று.

(௫௯) த்ருஷ்டாந்தமுகேந பேதத்தை ஸாதிக்கிறார்; (பரிமாணமும்) என்று தொடங்கி அதாவது - அளவும், தூக்கமும், வடிவும் ஒத்திருக்கிற பொற்குடங்கள், ரத்நங்கள், வ்ரீஹிகள் முதலான பதார்த்தங்களுக்கு பேதஸமாயிருப்பதொரு லக்ஷணமில்லையேயாகிலும் அதிலே நாநாத்வம் காண்கிறாப்போலே, ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணாதபடி ஏகாகாரரான முக்தாத்மாக்களுக்கும் ஸ்வரூபபேதம் ஸித்திக்குமென்றபடி.

(௬௦) கீழ்ச் சொன்னவற்றையெல்லாம் அநுபாஷித்துக்கொண்டு, "ஆகையால் ஆத்மபேதம்கொள்ளவேணும்" என்று நிகமிக்கிறார்.

ஆக, கீழ்ச்செய்ததாயிற்று - சிலர் ஆத்மபேதமில்லை, ஏகாத்மாவே யுள்ளதென்றார்கள் என்றுதொடங்கி இவ்வளவாக, முன்பு தாமருளிச்செய்த ஜீவாநந்த்யப்ரதிபடமான ஏகாத்மவாதத்தை உத்க்ஷேபித்து, யுக்தியாலும், ஶாஸ்த்ரத்தாலும் பஹுமுகமாக அதனைத் தூஷித்து, ஆத்மபேதத்தை ஸாதித்தாராயிற்று. மேல், ஆத்மஸ்வரூபலக்ஷணத்தை விஸ்தரேண வருளிச்செய்கிறார். அதில, அசித்விலக்ஷணத்வம், அஜடத்வம், ஆநந்தரூபத்வம், அவ்யக்தத்வம், அசிந்த்யத்வம், நிரவயவத்வம், நிர்விகாரத்வம்,

௬௧. இப்போ திவர்களுக்கு லக்ஷணம், ஶேஷத்வத்தோடே கூடின ஜ்ஞாத்ருத்வம்.

௬௨. இவர்களுடைய ஜ்ஞாநந்தான் ஸ்வரூபம்போலே நித்ய த்ரவ்யமாய், அஜடமாய், ஆநந்தரூபமாயிருக்கும்.

௬௩. ஆனால், ஜ்ஞாநத்துக்கும் ஸ்வருபத்துக்கும் வாசி என்? என்னில்;

ஜ்ஞாநாஶ்ரயத்வமாகிற இவை ஜீவேஶ்வர ஸாதாரணம். நியாம்யத்வாதிகள் மூன்றும் சிதசித் ஸாதாரணம். நித்யத்வம் தத்வத்ரய ஸாதாரணம். அணுத்வமும் அசித்பரமாணுஜீவஸாதாரணம். இவை யித்தனையும் சேரக்கூடி, ஆத்மஸ்வரூபத்துக்கு அசிதீஶ்வரா வ்யாவ்ருத்தியை வித்திப்பிக்கையாலே, இவற்றை லக்ஷணமென்னக் குறையில்லை.

(௬௧) அப்படி யன்றிக்கே, ஸங்க்ரஹமாக வொருலக்ஷணம் அருளிச்செய்கிறார், (இப்போது இவர்களுக்கு லக்ஷணம், ஶேஷத்வத்தோடே கூடின ஜ்ஞாத்ருத்வம்) என்று. இவர்களென்கிறது-த்ரிவித சேதநரையும். லக்ஷணமாவது - அஸாதாரண தர்மமிறே. ஆகையால், ஶேஷத்வமாத்ரத்தைச் சொல்லில் அசித்வ்யாவ்ருத்தி வித்தியாமையாலும், ஜ்ஞாத்ருத்வமாத்ரத்தைச் சொலில் ஈஶ்வரவ்யாவ்ருத்தி வித்தியாமையாலும், ஶேஷத்வேஸதி ஜ்ஞாத்ருத்வமே லக்ஷணமென்கிறார்.

(௬௨) இப்படி, ஜ்ஞாதாவான ஆத்மாவினுடைய ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்குமுண்டான ஸாதர்ம்ய வைதர்ம்யங்களை யருளிச்செய்கிறார் மேல்; (இவர்களுடைய ஜ்ஞாநந்தான்) என்று தொடங்கி. (ஸ்வரூபம்போலே நித்யத்ரவ்யமாய், அஜடமாய், ஆநந்தரூபமாயிருக்கும்) இத்தால்-நித்யத்வ த்ரவ்யத்வ அஜடத்வ ஆநந்தரூபத்வங்கள், ஸ்வரூபத்தோபாதி ஜ்ஞாநத்துக்குமுண்டென்றபடி.

(௬௩) நித்யத்வாதிகளை யுபபாதித்து வைதர்ம்யத்தைச்சொல்லுமளவில் அநேகக்ரந்த வ்யவஹிதமாமென்று நினைத்து, ஸாதர்ம்யஞ் சொன்ன வநந்தரம், வைதர்மயத்தையும் சொல்லுவதாக தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்; (ஆனால், ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் வாசி யென்? என்னில்) என்று,

௬௪. ஸ்வரூபம் - தர்மியாய், ஸங்கோச விகாஸங்களுக் கயோக்யமாய், தன்னை யொழிந்தவற்றை ப்ரகாஶிப்பியாமலே தனக்குத் தான் ப்ரகாஶிக்கக் கடவ்தாய், அணுவாயிருக்கும். ஜ்ஞாநம்-தர்மமாய், ஸங்கோச விகாஸங்களுக்கு யோக்யமாய, தன்னை யொழிந்தவற்றை ப்ரகாஶிப்பிக்கக்கடவதாய், தனக்குததான் ப்ரகாஶியாதே ஆத்மாவுக்கு ப்ரகாஶிக்கக் கடவதாய், விபுவாயிருக்கும்.

௬௫. அதில்; சிலருடையஜ்ஞாநம் எப்போதும் விபுவாயிருக்கும்; சிலருடையஜ்ஞாநம் எப்போதும் அவிபுவாயிருக்கும்; சிலருடைய ஜ்ஞாநம் ஒருகால் விபுவாய ஒருகால் அவிபுவாயிருக்கும்.

---

(௬௪) வைதர்ம்யந்தன்னை யருளிச்செய்கிறார்; (ஸ்வரூபம் தர்மியாய) என்றுதொடங்கி. அதாவது-தர்மிதவம், ஸங்கோச விகாஸாயோகயதவம், ஸ்வவ்யதிரிக்தார்த்தா ப்ரகாஶகத்வம், ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாஶத்வம், அணுத்வம,இவைஸ்வரூபததுக்குவிஶேஷம்.

தர்மதவம், ஸங்கோச விகாஸயோக்யத்வம், ஸ்வவ்யதிரிக்தார்த்த ப்ரகாஶகத்வம், ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாஶரஹிதத்வம், ஸ்வாஶ்ரயஸ்ய ஸ்வப்ரகாஶகத்வம், விபுத்வம், இவை ஜ்ஞாநத்துக்கு விஶேஷமென்றபடி. (விபுவாயிருக்கும்) என்ற-ஜ்ஞாநததினுடைய ஸ்வாபாவிகவேஷதகதை யருளிசசெய்தாரிததனையிறே.

(௬௫) ஸகல சேதநருடைய ஜ்ஞாநமும் இப்படி யிராதொழிவானென்? என்கிற சங்கையிலே ஸஙகோசா ஸஙகோச நிபநதநமான தாரதம்யத்தை யருளிச்செய்கிறா, (அதில் சிலருடையஜ்ஞாநம்) என்று தொடஙகி.

அதாவது (௧௭0) "அயர்வறு மமரர்கள்" என்கிறபடியே பகவத்ஜ்ஞாநத்துக்கொருநாளும் ஸஙகோச மின்றிக்கே தத ஸ்வரூபரூபகுண விபூதிகளை ஸதாநுபவமபண்ணுகிறநித்யஸூரிகளுடைய ஜ்ஞாநம், எப்போதும் விபுவாயிருக்கும். * பொயநின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமாயிருக்கிற பத்தருடையஜ்ஞா

௫௬. ஜ்ஞாநம் நித்யமாகில் "எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது, நஶித்தது" என்கிறபடி யேன்? என்னில்;

௫௭. இந்த்ரியத்வாரா ப்ரஸரித்து, விஷயங்களை க்ரஹிப்பது மீளுவதாகையாலே, அப்படிச்சொல்லக் குறையில்லை.

நம், கர்மாநுகுணமாக ஸங்கோசவிகாஸங்களோடே கூடிக்கொண்டு எப்போதும் அவிபுவாயிருக்கும். (௧௭௧) "கரைகண்டோர்" என்கிறபடியே, பகவதப்ரஸாதத்தாலே ஸம்ஸாரஸாகரத்தைக்கடந்து அக்கரைப்பட்ட முக்தருடையஜ்ஞாநம், பூர்வாவஸ்தையில அவிபுவாய், உத்தராவஸ்தையில (௧௭௨) "ஸ ச ஆநந்த்யாய கல்பதே" என்கிறபடியே, விபுவா யிருக்குமென்கை.

(௫௬) இனிமேல், ஜ்ஞாநத்துக்குச்சொன்ன நித்யத்வாதிகளை உபபாதிக்கிறார்; அதில் ப்ரதமத்திலே, "எனக்கிப்போது ஜ்ஞாநம் பிறந்தது,எனக்கிப்போது ஜ்ஞாநம் நஶித்தது" என்று, உத்பத்தி விநாஶவத்தாகச் சொல்லப்படுகிற ஜ்ஞாநத்துக்கு நித்யத்வம் கூடும்படி யெங்ஙனே? என்கிற ஶங்கையைப் பரிஹரிக்கைக்காக தஜ்ஜிஜ்ஞாஸாப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார், (ஜ்ஞாநம் நித்யமாகில் "எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது நஶித்தது என்கிறபடி யென்னென்னில்) என்று.

(௫௭) அதுக்கு உத்தரமருளிச்செய்கிறார்; (இந்த்ரியத்வாரா ப்ரஸரித்து விஷயங்களை க்ரஹிப்பது மீளுவது ஆகையாலே அப்படி சொல்லக் குறையில்லை) என்று. அதாவது - (௧௭௨) "ஸ ச ஆநந்த்யாய கல்பதே" (௫௮) "ஸர்வம் ஹ பஶ்ய: பஶ்யதி" என்று, முக்ததசையில ஸர்வவிஷயமாகச் சொல்லுகையாலே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரிக்கைக்கு யோக்யமா யிருக்கச்செய்தேயும், (௧௭௩) "யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாலநாந்மணே:" என்கிறபடியே, கர்மத்தாலே ஸங்குசிதமாய், (௧௭௪) "யதா ஹி தீபாவ் ஹ்ரஸ்வ: ... ஜ்ஞாநம் தத ... ஸர்வகதம் ... கர்மணா ..." என்கிறபடியே, கர்மாநுகுணமான தாரதம்யத்தை யுடைத்தாய்க்

௫௮. இது தான் ஏகமா யிருக்கச்செய்தே நாநாவாய்த் தோற்று கிறது, ப்ரஸரணபேதத்தாலே.

கொண்டு, (௧௭௫) "ஐந்த்ரியாணாம் ஹி ஸெளஷாம் யதேகம் க்ஷரதீந்த்ரியம் । தேநாஸ்ய க்ஷரதி ப்ரஜ்ஞா த்ருதே: பாத்ராதிவோதகம்" என்கிறபடியே, இந்த்ரியத்வாரா புறப்பட்டு விஷயங்களை க்ரஹிப்பது மீளுவதாகையாலே, தாத்ருஶமான விகாஸத்தாலும் ஸங்கோசத்தாலும் வந்த ப்ரகாஶாப்ரகாஶங்களைக் கொண்டு, பிறந்தது நஶித்தது என்னக்குறையில்லை என்கை.

(௫௮) இப்படி, இந்த்ரியத்வாரா ப்ரஸரிக்கிற ஜ்ஞாநம் ஏகமா யிருக்கச்செய்தே, விஷயக்ரஹணவேளையில ப்ரகாஶிக்கும்போது தர்ஶந ஶ்ரவணாதி ஸமஜ்ஞாபேதத்தை யுடைத்தாய்க்கொண்டு, அநேகத்வேந ப்ரகாஶிக்கிறபடி யெங்ஙனே? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்; (இதுதான் ஏகமாயிருக்கச்செய்தே நாநாவாய்த் தோற்றுகிறது, ப்ரஸரணபேதத்தாலே) என்று. அதாவது-ஏகரூபமாக ப்ரஸரிக்கை யன்றிக்கே, சக்ஷுஶ்ஶ்ரோத்ராதி யநேகேந்த்ரிய த்வாரா ப்ரஸரித்து, ரூபஶப்தாதி யநேகவிஷயங்களை க்ரஹிக்கிற விதுக்கு தர்ஶந ஶ்ரவணாதி ஸம்ஜ்ஞாபேதேந தோற்றுகிற நாநாத்வம்-ப்ரஸரணபேத நிபந்தநமென்கை. இத்தால் - நித்யமான ஜ்ஞாநத்துக்கு உத்பத்திவிநாஶ வ்யவஹாரஹேது வின்னதென்று சொன்ன வநந்தரத்திலே, ப்ராஸங்கிகமாக அதினுடைய நாநாத்வேந ப்ரகாஶநஹேதுவும் சொல்லப்பட்டதாயிற்று.

ஆத்மாவினுடைய தர்மபூதஜ்ஞாந நித்யத்வம், (௧௭௬) "ந ஹி விஜ்ஞாதுர்விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதே, நஹித்ரஷ்டுர் த்ருஷ்டேர் விபரிலோபோ வித்யதே" (௧௭௭) "ஜ்ஞாநம் வைராக்யம் ஐஶ்வர்யம் தர்மஶ்ச மநுஜேஶ்வர । ஆத்மநோ ப்ரஹ்மபூதஸ்ய நித்யமேதச் சதுஷ்டயம் । யதோதபாந கரணாத் க்ரியதே ந ஜலாம்பரம் । ஸதேவ நீயதே வ்யக்திம் அஸத: ஸம்பவ: குத: । ததா ஹேயகுணத்வம்ஸாத் அவபோதாதயோ குணா: । ப்ரகாஶ்யந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மநோ ஹி தே" என்று, ஶ்ருதி ஸ்ம்ருத்யாதிகளில் சொல்லப்பட்டதிறே.

கூகூ, த்ரவ்யமானபடி யேன்னேன்னில்;

எo. க்ரியாகுணங்களுக் காஶ்ரயமாய், அஜடமா யிருக்கை யாலே த்ரவ்யமாகக்கடவது.

(கூகூ) இப்படி யிருந்துள்ள ஜ்ஞாநநித்யத்வத்தை யருளிச்செய்தாராய் நின்றார் கீழ்; இனி, இதினுடைய த்ரவ்யத்வத்தை உபபாதிப்பதாக தஜ்ஜிஜ்ஞாஸாப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்; (த்ரவ்யமான படி யென்? என்னில்;) என்று.

(எo) தத்ஹேதுக்களை யருளிச்செய்து த்ரவ்யத்வத்தை ஸாதிக்கிறார்; (க்ரியாகுணங்களுக்கு ஆஶ்ரயமாய் அஜடமாயிருக்கை யாலே த்ரவ்ய மாகக்கடவது) என்று. க்ரியையாவது - ஸங்கோசவிகாஸங்கள். குணமாவது - ஸம்யோகவியோகங்கள். அஜடத்வமாவது - ஸ்வயம்ப்ரகாஶத்வம். (களஅ) "க்ரியாஶ்ரயோ த்ரவ்யம், குணாஶ்ரயோ த்ரவ்யம்" என்று, த்ரவ்யலக்ஷணம் சொல்லப்படுகையாலே, க்ரியாஶ்ரயத்வமும் குணாஶ்ரயத்வமும் ஓரொன்றே த்ரவ்யத்வஸாதகம். இவற்றோடே அஜடத்வத்தையும் சொல்லுகையாலே அதுவும் த்ரவ்யத்வஸாதகமென்று இவர்க்குக்கருத்து. எங்ஙனே? என்னில்; ஜடவஸ்துக்களிலே த்ரவ்யாத்ரவ்யங்க ளிரண்டு முண்டு; அஜடவஸ்துக்களிலே அத்ரவ்யமாயிருப்ப தொன்றில்லையிறே. ஆகையால்-"ஜ்ஞாநம், த்ரவ்யம், அஜடத்வாத், யதஜடம், தத்த்ரவ்யம், யதா ஆத்மாதி" என்று அஜடத்வந் தன்னைக்கொண்டே த்ரவ்யத்வம் ஸாதிக்கலாமிறே. ஆகையிறே! "இதுதான் அஜடமுமாய், ஸங்கோசவிகாஸங்களுக்கும் ஸம்யோக வியோகாதிகளுக்கும் ஆஶ்ரயமுமாயிருக்கையாலேத்ரவ்யம்" என்று, தத்வஶேகரத்திலும் இவ ரருளிச்செய்தது. இப்படி த்ரவ்யமாயிருக்குமாகில், இதுக்கு ஆத்மகுணத்வம் கூடும்படி என்? என்னில்; நித்யததாஶ்ரயத்வத்தாலே கூடும். (களகூ) "ஆஶ்ரயாநந்யதா வ்ருத்தே ராஶ்ரயேண ஸமந்வயாத் । த்ரவ்யத்வம் குணத்வம் ஜ்ஞாநஸ்யோபபத்யதே" என்றிறே! ஆளவந்தார் அருளிச்செய்தது. ஆஶ்ரயாநந்யதோவ்ருத்தித்வம், க்ரியாஶ்ரயத்வஞ் சொன்னபோதே சொல்லிற்றாயிற்று. இதுதான் ஜ்ஞாநத்துக்கே யன்றிறே! ப்ரபாதிதேஜஃப்தார்

எக. அஜடமாகில் ஸுஷுப்தி மூர்ச்சாதிகளில் தோற்றவேண்டாவோ வென்னில்;

எஉ. ப்ரஸரண மில்லாமையாலே தோன்றுது.

எரு. ஆநந்தரூபமாகையாவது - ஜ்ஞாநம்ப்ரகாஶிக்கும்போது அநுகூலமாயிருக்கை.

எச. விஷஶஸ்த்ராதிகளைக் காட்டும்போது ப்ரதிகூலமா யிருக்கைக்கடி தேஹாத்மப்ரமாதிகள்.

த்ரகப்ரமைகளுக்கு பொக்குமிறே. ஆகையால்; த்ரவ்யத்வ குணத்வங்களிரண்டும் ஜ்ஞாநத்துக்கு உபபந்நம்.

(எக) கீழ் ஜ்ஞாநத்துக்குத் தாமருளிச்செய்த அஜடத்வ விஷயமான ஜிஜ்ஞாஸாப்ரஸ்நத்தை யநுவதிக்கிறார்; (அஜடமாகில ஸுஷுப்திமூர்ச்சாதிகளில் தோற்றவேண்டாவோ? என்னில்) என்று. அதாவது-ஜ்ஞாநம் ஸ்வயம்ப்ரகாஶமாயிருக்குமாகில் எப்போதும் ப்ரகாஶிக்கவேண்டாவோ, ஸுஷுப்த்யாத்யவஸ்தைகளில் ப்ரகாஶியாதொழிவானென்? என்கை.

(எஉ) அதுக்கு உத்தர மருளிச்செய்கிறார்; (ப்ரஸரண மில்லாமையாலே தோன்றுது) என்று. அதாவது-ஜ்ஞாநம் ஸ்வாஶ்ரயத்துக்கு ஸ்வயமேவப்ரகாஶிப்பதுதான் விஷயக்ரஹணவேளையிலிறே. ஸுஷுப்த்யாத்யவஸ்தைகளில் தமோகுணாத்யபிபவத்தாலே ஸங்குசிதமாய், திரோஹிதங்களான மணிப்ரகாஶாதிகளைப்போலே, ப்ரஸரண மில்லாமையாலே ப்ரகாஶியாதென்கை.

(எரு) இனிமேல், இதினுடைய வாநந்தரூபத்வத்தை யுபபாதிக்கிறார்; (ஆநந்தரூபமாகையாவது) என்று தொடங்கி; ஜ்ஞாநம் ப்ரகாஶிக்கும்போதாவது-ஸ்வாஶ்ரயத்துக்கு விஷயங்களை தர்ஶிப்பிக்கும்போது; அப்போதிறே! இதுதான் ப்ரகாஶிப்பது. அவ்வவஸ்தையில் அநுகூலமாயிருக்கையாவது - அவ்வோ விஷயங்களெல்லாம் அநுகூலமாய்த் தோற்றுகையாலே, அவற்றை விஷயீகரித்தகிந்தஜ்ஞாநம் ஸ்வாஶ்ரயத்துக்கு ஸுகரூபமாயிருக்கை.

(எச) ஆனல், விஷஶஸ்த்ராதிகளை தர்ஶிப்பிக்கும்போது அவற்றை விஷயீகரித்த ஜ்ஞாநம் ப்ரதிகூலமாயிருப்பானென்? என்

௭௫. ஈஶ்வராத்மக மாகையாலே யெல்லா பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம், ப்ராதிகூல்யம் வந்தேறி.

௭௬. மற்றை யாநுகூல்யம் ஸ்வாபாவிகமாகில், ஒருவனுக்கு ஒருகாலோரிடத்திலே அநுகூலங்களான சந்தந குஸுமாதிகள், தேசாந்தரே காலாந்தரே இவன்றனக்கும், அத்தேசத்திலே அக்காலத்திலே வேறேயொருவனுக்கும் ப்ரதிகூலங்களாகக்கூடாது

கிற ப்ரஸங்கத்தை யுட்கொண்டு அருளிச்செய்கிறார்; (விஷஸஸ்த்ராதிகள்) என்று தொடங்கி. அதாவது - அவற்றை ஹர்ஷிப்பிக்கும் போது, அவற்றை விஷயீகரிக்கிற ஜ்ஞாநம் து:கரூபமாயிருக்கைக்குக் காரணம் அவற்றில் பாதகத்வபுத்திக்கு மூலமான தேஹாத்மப்ரமம், கர்மம், ஈஶ்வராத்மகத்வாஜ்ஞாநாதிகளுமென்கை;

௭௫. இவை தனக்கு ஸ்வாபாவிக மேதேது? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்; (ஈஶ்வராத்மக மாகையாலே) என்று தொடங்கி. அதாவது - (௧௫ய) "ஜக³த்ஸர்வம் ஶரீரம் தே" (௧௫௪) "தாநி ஸர்வாணி தத்³வபு:" (௧௫௨) "தத்ஸர்வம் வை ஹரேஸ்தநு:" என்று, ஸகலபதார்த்தங்களும் பகவச்சரீரமென்று ஶாஸ்த்ரங்களிலே சொல்லப்படா நின்றதிறே. அப்படி பகவதாத்மகங்களாகக் காணும்போது, ஸகல மநுகூலமாய்க்கொண்டு தோற்றுகையாலே எல்லா பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம்; இவற்றில் தோற்றுகிற ப்ராதிகூல்யம், தேஹாத்மப்ரமாதி மூலமாகையாலே வந்தேறி என்கை.

(௭௬) இப்படி, ஈஶ்வராத்மகமாகையாலே ஸகலபதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவமென்பானென்?; சந்தந குஸுமாதிகளிலுண்டான வாநுகூல்யம் ஸ்வாபாவிகமன்றோ' என்கிற சங்கையின்மேலே யருளிச்செய்கிறார்; (மற்றை யாநுகூல்யம் ஸ்வாபாவிகமாகில்) என்று தொடங்கி. மற்றையாநுகூல்ய மென்கிறது - தாமருளிச்செய்த பகவதாத்மகத்வத்தால் வந்த வாநுகூல்யத்தை யொழிய, சந்தந குஸுமாதி பதார்த்தங்களில் தோற்றுகிற வாநுகூல்யத்தை. அது அவற்றுக்கு ஸ்வாபாவிகமாகில், போக்தாவாயிருப்பானொருவனுக்கு ஒருகாலத்திலே ஒருதேசத்திலே அநுகூ

லங்களாயிருந்ததை, காலாந்தரத்திலேயாதல், தேசாந்தரத்திலேயாதல், இவன்றனக்கே ப்ரதிகூலங்களாகாது; இவனுக்கநுகூலங்களாயிருக்கிற தேசகாலங்கள்தன்னிலே வேறே யொருவனுக்கு ப்ரதிகூலங்களாகத்தானாகை கூடாது. இப்படி, ப்ரதிகூலங்களாய்த் தோற்றக் காணாநின்றோமிறே. ஆகையால், பதார்த்தங்களிடத் தத்பான வாநுகூல்யமே ஸ்வாபாவிகம்; ப்ராதிகூல்யம் ஸ்வாபாவிகமன்று, என்கை. (ச ... கூ) "வஸ்த்வேகமேவ து:காய ஸுகாயேர்ஷ்யாகமாய ச । கோபாய ச யதஸ்தஸ்மாத் வஸ்து வஸ்த்வாத்மகம் குத: । ததேவ ப்ரீதயே பூத்வா புநர் து:காய ஜாயதே । ததேவ கோபாய யத: ப்ரஸாதாய ச ஜாயதே । தஸ்மாத் து:காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம்" என்று, இவ்வர்த்தம் ஸ்ரீபராசரபகவானாலே விசதமாகச் சொல்லப்பட்டதிறே.

இத்தால் சொல்லிற்றாயிற்றதென்? என்னில்; விஷஶஸ்த்ராதிகள் ப்ரதிகூலங்களாயும், சந்தநாதிகள் அநுகூலங்களாயும், தோற்றுகிறது — தேஹாத்மப்ரமத்தாலே. ப்ரஹ்மாத்மகமாகையாலே, எல்லாப் பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம். ஆகையால், அவ்வாகாரத்தாலே காணும்போதும், ஸர்வவிஷய ப்ரகாஶகமானபோதிலும், ஜ்ஞாநம் — ஆநந்தரூபமாயிருக்குமென்றதாயிற்று.

ஆக, இச்செய்ததாயிற்று — "சித்தென்கிறது ஆத்மாவை" என்று, முதலிலே சித்சப்தவாச்யமான ஆத்மவஸ்துவை உத்தேசித்து, அநந்தரம், "தேஹாதிவிலக்ஷணனாய்" என்று தொடங்கி "ஶேஷமாயிருக்கும்" என்னுமளவாக தத்ஸ்வரூப லக்ஷணத்தை விஸ்தரேண சொல்லி, "தேஹாதிவிலக்ஷணமானபடியென்; என்னில்". என்று தொடங்கி "ஶேஷமாகையாவது" என்னுமளவாக உக்தலக்ஷணத்தைப் பரீக்ஷித்து, அநந்தரம், ஏவம்பூதமான வாத்மஸ்வரூபம் பத்த முக்த நித்யரூபேண த்ரிப்ரகாரமாயிருக்கும்படியையும், பத்தாத்மாக்களுக்கு அவித்யாதிகளுண்டாகைக்கு ஹேதுவையும், தந்நிவ்ருத்தி க்ரமத்தையும், த்ரிவிதாத்மவர்க்கமும் தனித்தனியே அநந்தமாயிருக்கும்படியையும் சொல்லி, அந்த ஜீவாநந்த்ய ப்ரதிபடமான ஏகாத்மவாதத்தை யுக்திஶாஸ்த்ரங்களாலே நிரஸித்து, ஆத்ம

பேதத்தை ஸாதித்து, முன்பு விஸ்தரேண சொன்னபடி யன்றிக்கே ஸங்க்ரஹமாக த்ரிவிதாத்மாக்களுக்கு முண்டான லக்ஷணத்தை தர்ஶிப்பித்து, அநந்தரம், ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்கு முண்டான ஸாதர்ம்ய வைதர்ம்யங்களைச் சொல்லி, ஜ்ஞாந விபுத்வ ப்ரஸங்கத்திலே த்ரிவித சேதநருடைய ஜ்ஞாநத்துக்குமுண்டான விசேஷத்தைச் சொல்லி, முன்பு ஜ்ஞாநத்துக்குச் சொன்ன நித்யத்வ த்ரவ்யத்வாஜடத்வாநந்தரூபத்வங்களை யிடையே யுபபாதித்து, இப்படி சித்தத்வத்தினுடைய வேஷத்தை யருளிச்செய்து தலைக்கட்டினார்.

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

மணவாளமாமுனிகள் திருவடிகளே ஶரணம்

சித்ப்ரகரணம் முற்றிற்று.

ஸ்ரீ

அசித்ப்ரகரணம்

௧. அசித்து-ஜ்ஞாநசூந்யமாய், விகாராஸ்பதமாயிருக்கும்.

௨. இது, ஶுத்தஸத்வமென்றும், மிஶ்ரஸத்வமென்றும், ஸத்வ ஶூந்யமென்றும் த்ரிவிதம்.

௩. இதில் ஶுத்தஸத்வமாவது - ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதே கேவலஸத்வமாய், நித்யமாய், ஜ்ஞாநாநந்தஜநகமாய்,

---

தத்வத்ரயமாவது-சித்தும் அசித்தும் ஈஶ்வரனும் என்று உத்தேசித்த க்ரமத்திலே, ப்ரதமம் சிச்சப்தவாச்யனான ஆத்மாவினுடைய ஸ்வரூப ஸ்வபாவ விஶேஷங்களை ஸ்புடமாக வருளிச்செய்தார் கீழ்; அநந்தரம், அசித்வஸ்துவினுடைய ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை அதிஸ்புடமாக வருளிச்செய்கிறார்.

(௧) அதில் ப்ரதமத்திலே அசில்லக்ஷணத்தை யருளிச்செய்கிறார்; (அசித்து - ஜ்ஞாநசூந்யமாய், விகாராஸ்பதமா யிருக்கும்) என்று. அசித்தாகிறது-சைதந்யாநாதாரமான வஸ்துவிறே! அது தன்னை யருளிச்செய்கிறார்; (ஜ்ஞாநசூந்யமாய்) என்று. அத்தைப் பற்றவிறே! ஶ்ருதி, போக்யஶப்தத்தாலே அசித்தைச் சொல்லிற்று. விகாராஸ்பதமாகையாவது - விகாரத்துக்கு இருப்பிடமாயிருக்கை. விகாரமாவது-அவஸ்தாந்தராபத்தி; அதாவது-சித்ஸ்வரூபம்போலே, ஸதைகரூபமா யிராதொழிகை.

(௨) இப்படி இதினுடைய லக்ஷணத்தை யருளிச்செய்தவநந்தரம், இவ்வசித்தத்வந்தான் - ஸத்வைகாதாரமாயும், ஸத்வாதிகுணத்ரயாதாரமாயும், ஸத்வாதிகுணஶூந்யமாயும், மூன்றுவகைப்பட்டிருக்கும்படியை யருளிச்செய்கிறார்; (இது, ஶுத்தஸத்வமென்றும், மிஶ்ரஸத்வமென்றும், ஸத்வஶூந்யமென்றும் த்ரிவிதம்) என்று.

(௩) உத்தேசித்த க்ரமத்திலே, அசித்த்ரயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவ விஶேஷங்களை ப்ரதிபாதிப்பதாக நினைத்து, ப்ரதமம்

கர்மத்தா லன்றிக்கே கேவலப்பகவதிச்சையாலே விமாந கோபுரமண்டப ப்ராஸாதாதிரூபேண பரிணமிக்கக்கட வதாய், நிரவதிகதேஜோரூபமாய், நித்யமுக்தராலும் ஈஸ்வரனாலும் பரிச்சேதிக்கவரிதாய், அத்யத்புதமா யிருப்ப தொன்று.

ஸத்த்வத்தின்படியை யருளிச்செய்கிறார்; (இதில் சுத்தஸத்த்வமாவது) என்று தொடங்கி. சுத்தஸத்த்வமென்றது - ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதஸத்த்வகுணத்தையுடையதென்றபடி; அத்தை யருளிச்செய் கிறார்; (ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதே கேவலஸத்த்வமாய்) என்று. (௧௨௪) "க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே" (௧௨௫) "தத்வக்ஷரே பரமே வ்யோமந்" (௧௨௬) "ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" (௧௨௭) "வைகுண்டே து பரே லோகே ஸ்ரீவைகுண்டே" என்று, ஸ்ருதிஸ்ம்ருதிக ளிலே யிப்படி சொல்லாநின்றதிறே. (நித்யமாய்) அதாவது - அநாதிநிதநமா யிருக்கை. (௧௨௮) "ததக்ஷரே பரமே வ்யோமந்" (௧௨௯) "காலாதீத ஸ்வரூபாய ஸர்வகாரணதேஹிநே। ஸர்வேஷா மபி லோகாநாம் நித்யாய நிர்மலாத்மநே" (௧௩௦) "யத்தத் காரண காரணம் ஸர்வேஸ்வரம் அவ்யக்தம் ஸர்வஜ்ஞம் ஸ்வாபாவிகம் ..." என்று, இதி னுடைய நித்யத்வமும ஸ்ருதிஸ்ம்ருதிகளிலே சொல்லப்பட்டது. (ஜ்ஞாநாநந்தஜநகமாய்) ஸத்த்வமாகையாலே ஜ்ஞாநாநந்த ஜநகமாயிருக்குமிறே. ஸத்த்வம் - ஜ்ஞாநஸுகாவஹமா யிறே! இருப் பது. ஆகையிறே! (௧௨௭) "ஸ்ரீவைகுண்டே" என்ற வநந்தரத்திலே "வைகுண்டே" என்றது.

(கர்மத்தாலன்றிக்கே கேவல பகவதிச்சையாலே, விமாந கோ புர மண்டப ப்ராஸாதாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய்) அதா வது-சேதநன் கர்மாநுகுணமாக விச்சிக்க, அந்த விச்சாநுகுண மாக பகவத்ஸங்கல்பத்தாலே சதுர்விம்ஸதிதத்வமாய்க்கொண்டு பரிணமித்து, சேதநர்க்கு போக்ய போகோபகரண போகஸ்த்தாந ங்களாகிற ப்ராக்ருததத்த்வம்போ லன்றிக்கே, ஸ்வபோகார்த்தமாக வுண்டான பகவதிச்சையாலே விமாநகோபுராதிரூபேண பரிண மியாநிற்கு மென்கை (௧௩௧) "தேவாநாம் பூரயோத்யா"

தஸ்யாம் ஹிரண்மய: கோச: ஸ்வர்கோ லோகோ ஜ்யோதிஷாவ்ருத: யோ வை தாம் ப்ரஹ்மணோ வேத அம்ருதேநாவ்ருதாம் புரீம்" (௬௨) "அபராஜிதா பூர் ப்ரஹ்மண:" (௬௩) ப்ரஜாபதே: ஸபாம் வேச்ம ப்ரபத்யே" என்று ச்ருதிகளிலேயும் ஸங்க்ஷேபேண நித்யவிபூதியிலுண்டான திவ்யநகர திவ்யாயதநாதிகள் சொல்லப்பட்டது. இது தன்னை பாஷ்யகாரர் ஸ்ரீவைகுண்டகத்யத்திலே (௬௪) "திவ்யாவரண சதஸஹஸ்ராவ்ருதே, திவ்யகல்பக தருபசோபிதே, திவ்யோத்யான சதஸஹஸ்ர கோடிபிராவ்ருதே; அதிப்ரமாணே, திவ்யாயதநே கஸ்மிம்ஶ்சித் விசித்ர திவ்யரத்நமய திவ்யாஸ்தாந மண்டபே" என்று தொடங்கி, விஸ்தரேண அருளிச்செய்தாரிறே. (திவ்யதேஜோரூபமாய்) அதாவது - அக்நியாதித்யாதி தேஜ:பதார்த்தங்களையும் கத்யோதகல்பமாக்கும்படி, அளவிறந்த தேஜஸ்ஸையுடையதாயிருக்கை. (௬௫) "ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி:" (௬௬) "அத்யர்காநல தீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: । ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷ்யம் தேவதாநவை:" என்னக்கடவதிறே. (௬௭) "சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதி" (௬௮) 'சுடர்ப்பட்டோங்கு சுடர்ச்சோதிவெள்ளம்' (௬௯) "விளங்குஞ்சுடர்ச்சோதி" என்று ஆழ்வாரும், இதினுடைய நிரவதிக தேஜோரூபத்வத்தைப் பலவிடங்களிலும் அருளிச்செய்தாரிறே.

(நித்யமுக்தராலும் ஈச்வரனாலும் பரிச்சேதிக்கவரிதாய்) அதாவது - இதினுடைய பரிமாணத்தை ஒருவராலும், அளவிடவொண்ணாதபடியிருக்குமாயிற்று. (௭௦) '[illegible]' என்று நித்யரால் பரிச்சேதிக்க வொண்ணாதென்று ஸ்ரீவைகுண்டகத்யத்திலே பாஷ்யகாரர் அருளிச்செய்த விது முக்தருக்கு மொக்குமிறே. ஈச்வரஜ்ஞாநத்தோபாதி இவர்களுடைய ஜ்ஞாநத்துக்கும் ஸர்வதர்சித்வமுண்டாகையாலே; அவனால் பரிச்சேதிக்கலாமாகில் இவர்களாலும் பரிச்சேதிக்கலாமிறே. ஆகையால் அவனுக்குமரிதென்கை. ஆனால், இவர்களுடைய ஸர்வஜ்ஞதைக்குக் கொத்தை வாராதோ? என்னில்; வாராது. ஸர்வஜ்ஞதையாவது ஸர்வத்தையுமுள்

௪. இத்தைச்சிலர் ஜடமென்றூர்கள், சிலர் அஜடமென்றூர்கள்.
௫. அஜடமானபோது, நித்யர்க்கும் முக்தர்க்கும் ஈஶ்வரனுக்கும் ஜ்ஞாநத்தையொழியவும் தோற்றும்.

லபடி யறிகையிறே. பரிச்சேத்யமாகில் பரிச்சேதித்தறிகையும்; அபரிச்சேத்யமாகில அப்படி யறிகையுமிறே! உள்ளது; ஸீமையில்லாததொன்றுக்கு ஸீமையறியாமை ஸர்வஜ்ஞதைக்கு அநுகுணமென்னுமிடம், (உ௦௪) "ஜெவிகவநூஷிரோவயிரஷரிணா நாவீகவயாஜதாயுடெத யஷ்ரவெரவ ஐயாவீநெநவயநவயொஞவஷ ஜதாஷீயடெதயஷாஜெஷூரவ தஉஜதாஉநநமநணா ஶவஷ ஜதாயாவிஉநவெஷ்ராஉாபமொஜஉிஉஞயாஷியவிஉநூ ஶூரஜொய ஶிதநூவூதெ" என்று, ஸ்ரீஸ்தூியிலே ஆழ்வானருளிச்செய்தார். இங்ஙனன்றாகில், (உபக)'தனக்குந் தன்றன்மை யறிவரியான்' என்கிறவிதுவும், ஸர்வஜ்ஞதையோடு விரோதிக்கும். ஆகையால்; நித்யமுக்தேஶ்வரர்களால் அபரிச்சேத்யமென்றவிதில் குறையில்லை; இத்தால், இதினுடைய வைபவம் சொன்னபடி. (அத்யத்புதமா யிருப்பதொன்று) அத்யத்புதத்வமாவது அநுக்ஷணம் அபூர்வாஶ்சர்யாவஹத்வம், (உ௦௫) "க்ஷணேக்ஷணே யந்நவதாமுபைதி" என்றாரிறே! பாஷ்யகாரர். ஆக, ஶுத்தஸத்வமாவது- இப்படி யிருப்பதொன்றென்றதாயிற்று.

(௪) (இத்தைச்சிலர் ஜடமென்றூர்கள்; சிலர் அஜடமென்றூர்கள்) அதாவது - இந்த ஶுத்தஸத்வந்தன்னை, இந்தசாஸ்த்ரகர்த்தாக்களிலே சிலர் ஜடமென்றுசொன்னூர்கள்; அங்ஙனன்றிக்கே, சிலர் அஜடமென்றுசொன்னூர்களென்கை. (உ௦௪) "ஜஹஜஷாஉாஷிஉா௦ கெஷிஉாஷநூ" என்றிறே! அபியுக்தருஞ்சொல்லிற்று.

(௫) ஜடமாகையாவது ஸ்வயம்ப்ரகாஶமன்றிக்கே யிருக்கை; அஜடமாகையாவது- ஸ்வயம்ப்ரகாஶமாயிருக்கை. அத்தை யருளிச்செய்கிறூர்; (அஜடமானபோது, நித்யர்க்கும் முக்தர்க்கும் ஈஶ்வரனுக்கும் ஜ்ஞாநத்தை யொழியவுந்தோற்றும்) என்று. அஜடமானபோதென்றது, ஜடமென்றும் ஒருபக்ஷஞ் சொல்லுகையாலே, அப்படி யன்றிக்கே யிப்படியானபோதென்றபடி. அந்தப்பக்ஷத்தை விட்டு இத்தை யுபபாதிக்கையாலே இவர் தமக்கு இதுவே திரு

௯. ஸம்ஸாரிகளுக்குத் தோற்றாது.

வுள்ளமென்று தோற்றாநின்றதிறே; ஜ்ஞாநத்தை யொழியவுந் தோற்றுமென்றது - ஜ்ஞாநத்தாலே தன்னை யறியவேண்டாதபடித் தானே ப்ரகாசிக்குமென்றபடி.

(௯) இப்படி ஸ்வயம்ப்ரகாசமா யிருக்குமாகில், ஸம்ஸாரிகளுக்கு ஜ்ஞாநவேத்யமாகவேண்டாதே தானே தோற்றவேண்டாவோ? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்; (ஸம்ஸாரிகளுக்குத் தோற்றாது) என்று. இதுதான், அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. எங்ஙனே யென்னில்; "த்ரிவிதாசேதநங்கள்" என்றெடுத்து, "அவற்றில், ப்ரக்ருதியும் காலமும் ஜடங்கள்; சுத்தஸத்வமான த்ரவ்யத்தையும் ஜடமென்று சிலர் சொல்லுவர்கள். ஜடத்வமாவது - ஸ்வயம்ப்ரகாச மன்றிக்கே யிருக்கை. பகவச்சாஸ்த்ராதி பராமர்சம் பண்ணினவர்கள் ஜ்ஞாநாத்மகமாக சாஸ்த்ரஸித்தமாகையாலே, சுத்தஸத்வத்ரவ்யத்தை ஸ்வயம்ப்ரகாச மென்பர்கள். இப்படி ஸ்வயம்ப்ரகாச மாகில், ஸம்ஸாரிகளுக்கு சாஸ்த்ரவேத்ய மாகவேண்டாதே தானே தோற்றவேண்டாவோ? என்னில்; ஸர்வாத்மாக்களுடையவும் ஸ்வரூபமும், தர்மபூதஜ்ஞாநமும் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்க, ஸ்வரூபம் தனக்கே ஸ்வயம்ப்ரகாசமாய் வேறெல்லார்க்கும் ஜ்ஞாநாந்தர வேத்ய மானாப்போலவும், தர்மபூதஜ்ஞாநமும் ஸ்வாச்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகாசமாய், இதரர்க்கு ஸ்வயம்ப்ரகாச மல்லாதாப்போலவும், இதுவும் நியதவிஷயமாக ஸ்வயம்ப்ரகாசமானால் விரோத மில்லை. (௨௦௫) "யோவேத்தி யுகபத்ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: । தம் ப்ரணம்ய ஹரிம் ஶாஸ்த்ரம் ந்யாயதத்வம் ப்ரவக்ஷ்யதே" என்கிறபடியே, தர்மபூதஜ்ஞாநத்தாலே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரித்துக்கொண்டிருக்கிற ஈச்வரனுக்கு சுத்தஸத்வத்ரவ்யம் ஸ்வயம்ப்ரகாசமா யிருக்கிறபடி யெங்ஙனே? என்னில்; இவனுடைய தர்மபூதஜ்ஞாநம், திவ்யாத்மஸ்வரூபம் முதலாக ஸர்வத்தையும் விஷயீகரியாநிற்க, திவ்யாத்மஸ்வரூபம் - ஸ்வயம்ப்ரகாசமா யிருக்கிறாப்போலே இதுவும் ஸ்வயம்ப்ரகாசமா யிருக்கலாம். இப்படி நித்யர்க்கும் துல்யம். விஷயப்ரகாசநகாலத்திலே தர்மபூதஜ்ஞாநம்

ஏ. ஆத்மாவிலும் ஜ்ஞாநத்திலும் பிந்நமானபடி யேன்? என்னில்;

அ. நானென்று தோற்றுமையாலும், ஶரீரங்களாய்ப் பரிணமிக்கையாலும், விஷயங்களையொழியவுந் தானே தோற்றுகையாலும், ஶப்தஸ்பர்ஶாதிகளுண்டாகையாலும் பிந்நமாகக்கடவது.

ஸ்வாஶ்ரயமாத்ரத்துக்கே ஸ்வயம்ப்ரகாஶமானாப்போலே முக்தர்க்கும் அவ்வவஸ்தையிலே இது ஸ்வயம்ப்ரகாஶமானால் விரோதமில்லை. தர்மபூதஜ்ஞாநத்திலுடையஸ்வாத்மப்ரகாஶகஶக்தியானது விஷயப்ரகாஶநமில்லாதகாலத்தில் கர்மவிஶேஷங்களாலே ப்ரதிபத்தையானாப்போலே, சுத்தஸத்வத்திலுடைய ஸ்வாத்மப்ரகாஶநஶக்தியும் பத்ததஶையில் ப்ரதிபத்தையாகையாலே, சுத்தஸத்வம் பத்தர்க்கு ப்ரகாஶியாதொழிகின்றது. (௨0௧) "யதி ஸ்வயம் [illegible] ப்ரகாஶேத" இவ்வளவு அவஸ்தாந்தராபத்தி, விகாரித்ரவ்யத்துக்கு விருத்தமன்று. ஆகையால், ப்ரமாணப்ரதிபந்நார்த்தத்துக்கு யுக்திவிரோதஞ்சொல்ல வழியில்லை." என்று இப்படி, ரஹஸ்யத்ரயஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

(ஏ) கீழ், ஆத்மாவும் அஜடமாய் ஜ்ஞாநமும் அஜடமாயிருக்கச்செய்தே, அந்யோந்யம் பிந்நமென்னுமிடத்தை தர்ஶிப்பித்தாப்போலே சுத்தஸத்வமும் அஜடமாயிருக்கச்செய்தே, இவையிரண்டிலும் பிந்நமாயிருக்கும்படியை தர்ஶிப்பிக்கைக்காக, தஜ்ஜிஜ்ஞாஸாப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்; ஆத்மாவிலும் ஜ்ஞாநத்திலும் பிந்நமானபடி யென்? என்னில்) என்று.

(அ) அநேகஹேதுக்களாலே யது தன்னை தர்ஶிப்பிக்கிறார்; (நானென்று தோற்றுமையாலும்) என்று தொடங்கி; அதாவது - ஆத்மவஸ்து ப்ரத்யக்காகையாலே அஹமென்று ப்ரகாஶியாநிற்கும்; இது பராக்காகையாலே இதமென்றிறே! ப்ரகாஶிப்பது. இத்தாலே ஆத்மாவில் பிந்நமென்றபடி, ஶரீராதிகளாய்ப் பரிணமிக்கையாலே, ஆத்மாவிலும் ஜ்ஞாநத்திலும் இரண்டிலும் பிந்நமென்றபடி ஏகரூபமாகையாலே ஆத்மாவுக்குப் பரிணாமமில்

௬. மிஶ்ரஸத்வமாவது-ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள் மூன்றேடு ங்கூடி பத்தசேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்கு திரோதாயகமாய், விபரீதஜ்ஞாநஜநகமாய், நித்யமாய். ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், ப்ரதேஶபேதத்தாலும் காலபேதத்தாலும் ஸத்ருஶமாயும் விஸத்ருஶமாயு மிருக்கும் விகாரங்களை யுண்டாக்கக்கடவதாய், ப்ரக்ருதி, அவித்யை, மாயையயென்கிற பேர்களை யுடைத்தா யிருக்கும் அசித்விஶேஷம்.

லையிறே;ஜ்ஞாநத்துக்குப் பரிணாமமுண்டேயாகிலும் ஶரீராதிகளாய்ப் பரிணமியாதிறே. விஷயநிரபேக்ஷமாக ப்ரகாஶிக்கையாலும், ஶப்தஸ்பர்ஶாதிகளுக்குஆஶ்ரயமாகையாலும்,விஷயஸந்நிதியிலொழிய ப்ரகாஶிப்பதுஞ்செய்யாதே ஶப்தாத்யாஶ்ரயமன்றிக்கே தத்க்ராஹகமாயிருக்கிற ஜ்ஞாநத்தில் பிந்நமென்றபடி.

(௬) ஆகவிப்படி, சுத்தஸத்வத்தினுடைய ப்ரகாரத்தை யருளிச்செய்தாராய் நின்றார்கீழ்; அநந்தரம். மிஶ்ரஸத்வப்ரகாரத்தை யருளிச்செய்வதாக (மிஶ்ரஸத்வமாவது) என்று தொடங்குகிறார்; மிஶ்ரஸத்வமாவது- ரஜஸ்தமஸ்ஸுக்களோடே கூடின ஸத்வகுணத்தை யுடைத்தானது. அத்தை யருளிச்செய்கிறார்; (ஸத்வரஜஸ் தமஸ்ஸுக்கள் மூன்றேடுங்கூடி) என்று. (உ0எ) "த்ரிகுணம் தஜ்ஜகத்யோநிரநாதிப்ரபவாப்யயம்" என்று (உ0அ) "த்ரிகுணம்கர்மிணாம்க்ஷேத்ரம் ப்ரக்ருதே:ரூபமுச்யதே" (உ௧௧) "ஸத்வம்ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதிஸம்பவா:" என்னக்கடவதிறே.(பத்தசேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்குதிரோதாயகமாய்) அதாவது - குணத்ரயாத்மகமா யிருக்கையாலே ரஜஸ்தமோம்ஶத்தாலே ஜ்ஞாநாதிகளுக்கு திரோதாநத்தைப் பண்ணு மென்கை. சேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்கு திரோதாயகமா யென்று ஸாமாந்யேநசொல்லாதே, "பத்தசேதநருடைய" என்று விஶேஷிக்கையாலே,கர்மஸம்ஸ்ருஷ்டரானசேதநருடைய ஜ்ஞாநாதிகளுக்கே அது திரோதாயக மென்றபடி. அல்லது, இச்சிகமாக ப்ராக்ருத ஶரீரபரிக்ரஹம்பண்ணுகிற நித்யமுக்தருடைய ஜ்ஞாநாதிகளுக்கும் இது ஸங்கோசத்தைப் பண்ணவேண்டிவருமிறே- ஆகையாலே,

(உ௬0) “[illegible] । [illegible]” என்கிறபடியே நித்யமுக்தரும் இங்கேவந்து நதிகேஹங்களைப் பரிக்ரஹித்து சேஷிக்கு அதிசயத்தைப் பண்ணுமளவில் அவர்களுக்கிது ஸங்கோசத்தைப் பண்ணுமை), பத்தசேதநருடைய ஜ்ஞாநாதிகளுக்கே இது திரோதாயக னுமிடம் ஸித்தம். (உ௬௧) “[illegible]” (௧) “[illegible]” (உ௬௨) “[illegible]” என்கைக்கடவதிறே. (விபரீதஜ்ஞாந காய்) விபரீதஜ்ஞாநமாவது—அதஸ்மிம்ஸ்தத்புத்தி:. அதாவது— ந்மாவானதேஹத்தில் ஆத்மபுத்தியும், அஸ்வதந்த்ரமான வாத் துவில் ஸ்வதந்த்ரபுத்தியும், அநந்யசேஷமானவது தன்னில் சேஷத்வபுத்தியும், அநீஶ்வரரானவர்கள் பக்கல் ஈஶ்வரத்வ யும், அபுருஷார்த்தமான ஐஶ்வர்யாதிகளிலே புருஷார்த்த த்தியும் அநுபாயங்களானவற்றில் உபாயத்வபுத்தியும் தொடக்க ளை. யதாஜ்ஞாநத்தைமறைக்குமவன்றிக்கே, இப்படியிருந் ா விபரீதஜ்ஞாநங்களையும் பத்தசேதநர்க்கு உண்டாக்காநிற்கு ற்று, (உ௬௩) “[illegible] விபரீத நஜநநீ” என்று இதுதன்னை பாஷ்யகாரர் அருளிச்செய்தா . (நித்யமாய்) அதாவது—உத்பத்திவிநாஶரஹிதமா யிருக்கை.) “[illegible]” (உ௬௪) “[illegible]” (உ௬௫) “[illegible]” (உ௬௬) “[illegible]” என்னக்கடவதிறே. (ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய்) வது—ஸர்வேஶ்வரனுடைய ஜகத்ஸ்ருஷ்ட்யாதிலீலைக்கு உபகர யிருக்கை. (உ௬௭) “[illegible]” (உ௬௮) “[illegible]” (உ௭0) “[illegible]” என்று

சொல்லப்படுகிற ஸர்வேஶ்வரனுடைய லீலைக்கு ஞணத்ரயாத்மிகை யானப்ரக்ருதியிறே ப்ரதாநோபகரணம். (௨௧) "ஸிதாஸிதாஶ்ச ரக்தாஶ்ச ஸர்வகாமதுகா விபோ:" என்னக்கடவதிறே. (௨௨) "க்ரீடா ஹரேரிதம் ஸர்வம்" என்று, தானே யருளிச்செய்தா னிறே. (ப்ரதேசபேதத்தாலும் காலபேதத்தாலும் ஸத்ருஶமாயும் விஸத்ருஶமாயுமிருக்கும் விகாரங்களை யுண்டாக்கக்கடவதாய்) ப்ரதேசபேதமாவது-குணவைஷம்யமில்லாத ப்ரதேசமும், குணவைஷம்யமுள்ள ப்ரதேசமும். இது தனக்கு குணவைஷம்யமுள்ளது, கார்யோந்முகமான ஸ்தூலத்திலேயிறே. அல்லாதவிடமெல்லாம் குணஸாம்யாபந்நமா யிருக்குமித்தனை. அதில், குணவைஷம்ய மில்லாதவிடம் ஸத்ருஶவிகாரமாயிருக்கும், வைஷம்யமுள்ளவிடம் விஸத்ருஶவிகாரமாயிருக்கும். ஸத்ருஶவிகாரமாவது - நாமரூப விபாக நிர்த்தேஶாநர்ஹமாயிருக்கும் ஸூக்ஷ்மவிகாரம். விஸத்ருஶ விகாரமாவது - நாமரூபவிபாக நிர்த்தேஶயோக்யமா யிருக்கும் ஸ்தூலவிகாரம். (௨௩. "ஸத்வாஸ்ரூநிஸ்ருஜந்தி..." என்கையாலே, அவ்யக்தாவஸ்தையிலுள்ள விகாரமெல்லாம் ஸத்ருஶமா யிருக்கும்; மஹதாதி-விஸத்ருஶவிகாரமாயிருக்கும்.

இனி, காலபேதமாவது - ஸம்ஹாரகாலமும், ஸ்ருஷ்டிகாலமும். ஸம்ஹாரகாலத்தில் இது அவிபக்த தமஸ்ஸாய்க்கிடக்கையாலே. ஓரிடத்திலும் குணவைஷம்ய மில்லாமையால் எங்குமொக்க ஸத்ருஶவிகாரமாயிருக்கும். ஸ்ருஷ்டிகாலத்திலே பகவதிச்சையடியாக விஶேஷத்தாலே விபக்தமாய், கார்யோந்முகமாய், குணவைஷம்யம் பிறந்தவாறே விஸத்ருஶவிகாரத்தை யுடைத்தாகாநிற்கும். ஸததவிகாராஸ்பதமாயிருக்கையாலே, இதுக்கு ஸத்தாப்ரயுக்தமிறே விகாரம்; அதினுடைய ஸௌக்ஷ்ம்யா ஸௌக்ஷ்ம்ய நிபந்தநமான விபாகநிர்த்தேஶமிறேயுள்ளது. அல்லது, நிர்விகாரமாயிருப்பதோரவஸ்தையும் இல்லையிறே. (ப்ரக்ருதி, அவித்யை, மாயை என்கிற பேர்களை யுடைத்தா யிருக்கும் அசித்விஶேஷம்) மிஶ்ரஸத்வமாவது-இப்படி யிருப்பதோர் அசித்விஶேஷமென்று வாக்யார்த்வயம்.

௧0. ப்ரக்ருதியென்கிறது - விகாரங்களைப் பிறப்பிக்கையாலே; அவித்யையென்கிறது - ஜ்ஞாநவிரோதி யாகையாலே; மாயை யென்கிறது - விசித்ரஸ்ருஷ்டியைப்பண்ணுகை யாலே.

௧௧. இதுதான் "பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதமிங்கிவ்வுயிரேய் பிரகிருதிமானாங்காரமனங்கள்" என்கிறபடியே, இருபத்துநாலுதத்வமாயிருக்கும்.

(௧0) ப்ரக்ருத்யாதிநாமபேதங்கள் இதினுடைய ஸ்வபாவங்களைப்பற்றவந்ததென்கிறார்; (ப்ரக்ருதியென்கிறது) என்று தொடங்கி, அதாவது-(உஉ௪) "மூலப்ரக்ருதிரவிக்ருதி:" இத்யாதிகளிலே, ப்ரக்ருதிஶப்தம் காரணவாசியாகச்சொல்லப்பட்டதிறே இதுதான் உபாதாந காரணத்துக்கேவாசகம். ஆகையிறே ப்ரஹ்மத்தினுடைய ஜகதுபாதாநத்வத்தைச் சொல்லுகிற ஸூத்ரகாரர், (உஉரு) "ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தாநுபரோதாத்" என்று, ப்ரக்ருதிஶப்தத்தாலே சொல்லிற்று. ஆகையால், இத்தை ப்ரக்ருதியென்கிறது - மஹதாதிவிகாரங்களைத் தன்பக்கலில் நின்றும் ஜநிப்பிக்கையாலே. அவித்யாஶப்தம், வித்யாபாவத்துக்கும், வித்யேதரத்துக்கும், வித்யாவிரோதிக்கும் வாசகமாயிருந்ததேயாகிலும், விஷயாநுகுணமாயிறே ப்ரயோகமிருப்பது ஆகையால், இத்தை அவித்யை என்கிறது- ஜ்ஞாநவிரோதியாகையாலே. (ஜ்ஞாநாநந்தங்களுக்குத் திரோதாயகமாய்) என்று, இதினுடைய ஜ்ஞாநவிரோதித்வந்தான் கீழே சொல்லப்பட்டதிறே. ஆஸுராஸ்த்ராதிகளை, ஆஶ்சர்யகரத்வத்தைப் பற்ற மாயாஶப்தத்தாலே சொல்லுகிறாப்போலே, இத்தையும் மாயை என்கிறது - விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே. அதாவது- ஒன்றுபோலொன்றன்றிக்கே, விஸ்மயநீயங்களான கார்யங்களை ஜநிப்பிக்கை.

(௧௧) ஏவம்பூதமான வஸ்துதான், கார்யகாரணரூபேண அநேகதத்வமாயிருக்கும்படியை யருளிச்செய்கிறார்; (இதுதான் (உஉசு) பொங்கைம்புலன்) என்று தொடங்கி. ஐம்புலன் - ஶப்தாதிகள்; பொங்குதலால் - சேதநரை விக்ருதராம்படி பண்ணுகைக்கீடான இவற்றினுடைய உத்ரேகஞ் சொல்லுகிறது. இவ்விடத்தில் விஶேஷ்யமாத்ரமே அபேக்ஷிதம். பொறியைந்தாவன -

கஉ. இதில் ப்ரதமதத்வம் ப்ரக்ருதி.

கங. இது, அவிபக்ததமஸ்ஸென்றும், விபக்ததமஸ்ஸென்றும், அக்ஷரமென்றும் சில வவஸ்த்தைகளை யுடைத்தா யிருக்கும்,

---

ஶ்ரோத்ராதிகள். கருமேந்திரியம் - வாகாதிகள். ஐம்பூதம் - ஆகாசாதிகள், "இங்கிவ்வுயிரேய் பிரகிருதி" என்றது - ஸம்ஸாரதஶையில் இவ்வாத்மாவோடே அத்யந்த ஸம்ஸ்ருஷ்டையாய்க் கிடக்கிற ப்ரக்ருதி யென்றபடி. இங்கும் விஶேஷ்யமாத்ரமிறே! தத்வ ஸங்க்யைக்கு வேண்டுவது. மானாங்காரமனங்களாவன-மஹானும், அஹங்காரமும், மநஸ்ஸும்; இப்படி இருபத்துநாலுதத்வத்தையும் அருளிச்செய்கிற வாழ்வார் தந்மாத்ரங்களை யருளிச்செய்யாதே, ஶப்தாதிகளை யருளிச்செய்தது, தந்மாத்ரங்களுக்கு பூதங்களோடு ஸ்வரூபபேத மின்றியிலே அவஸ்த்தாபேதமாத்ர மாகையாலே. தந்மாத்ரங்களான பூதங்கள் பத்தையும் அஞ்சு தத்வமாக்கி ஶப்தாதிகளைந்தையும் ஐந்து தத்வங்களாகக்கொண்டு இவையும், ஞாநகர்மேந்த்ரியங்களும், ப்ரக்ருதி மஹதஹங்காரங்களுமாக சதுர்விம்ஶதி தத்வமென்றுகொள்ளுவதும் ஒருபக்ஷ முண்டாகையாலே, உபயபக்ஷத்திலும் தத்வஸங்க்யையில் ந்யூநாதிரேக மில்லையிறே. ஆகையால், இப்பாட்டிற் சொன்னபடியே, இருபத்துநாலு தத்வமாயிருக்குமென்றதாயிற்று.

(கஉ) இப்பாட்டில் தத்வங்களைச் சொன்னவித்தனையொழிய, அவற்றினுடைய க்ரம கதநம்பண்ணிற்றில்லையிறே; ஆகையால், இதில் ப்ரதமதத்வமேது? என்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்; (இதில் ப்ரதமதத்வம ப்ரக்ருதி) என்று ப்ரக்ருதியென்றும், ப்ரதாநமென்றும், அவ்யக்தமென்றும் ப்ரதமதத்வத்துக்குப்பேர். ப்ரக்ருதி என்று சொல்லுகைக்கடி முன்னே சொல்லப்பட்டது; ப்ரதாநமென்கிறது - எம்பெருமானுடைய லீலைக்கு ப்ரதாநமான வுபகரண மாகையாலே; அவ்யக்தமென்கிறது - அநபிவ்யக்தகுண விபாகமாகையாலே.

(கங) இப்படி, ப்ரதமதத்வமான ப்ரக்ருதிக்குண்டான வவஸ்த்தாவிஶேஷங்களை யருளிச்செய்கிறார்; (இது அவிபக்ததமஸ்ஸு)

என்று தொடங்கி. அதாவது-(உஉஎ) 'அவ்யக்தமக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸி லீயதே, தம: பரே தேவ ஏகீபவதி' என்கிறபடியே, ஸம்ஹ்ருதிஸமயத்தில் அவ்யக்தாவஸ்தைகுலைந்து அக்ஷராவஸ்தமாய், அதுதானும் குலைந்து அதிஸூக்ஷ்மமாய், தமச்சப்தவாச்யமாய், அதுதானும் நாமரூபவிபாகாநர்ஹமாம்படி ஸர்வேச்வரன் பக்கலிலே ஏகீபவித்து நிற்கையாலே அவிபக்ததமஸ்ஸென்றும், ஸர்க்ககாலம்வந்தவாறே (உஉஅ) "[illegible]" என்கிறபடியே, அவனாலே ப்ரேரிதமாய்க்கொண்டு நாமரூபவிபாக யோக்யமாம்படி அவன்பக்கல் நின்றும் விபக்தமாய், கார்யோந்முகமாகையாலே விபக்ததமஸ்ஸென்றும்; அநந்தரம், தத்ஸங்கல்பவிசேஷத்தாலே புருஷஸமஷ்டி கர்ப்பமான வசேதநமென்று விவேகிக்கைக்கு யோக்யமாம்படியான தமோவஸ்தைகுலைந்து, புருஷஸமஷ்டி கர்ப்பத்வம் தோன்றும்படியான அவஸ்தையை ப்ராபித்து நிற்கையாலே அக்ஷரமென்றும், இங்ஙனே சிலவவஸ்தைகளையுடைத்தாயிருக்குமென்கை. ஆகையால், இது அவிபக்ததமஸ்ஸாகையாவது - அவ்யக்தாக்ஷராவஸ்தைகள் குலைந்து தமச்சப்தவாச்யமாய், நாமரூப விபாகாநர்ஹமாம்படி ஸர்வேச்வரன் பக்கலிலே ஏகீபவித்து நிற்கை. விபக்ததமஸ்ஸாவது - நாமரூபவிபாகார்ஹமாம்படி விபக்தமாய், கார்யோந்முகமாகை; அக்ஷரமாகையாவது - இது அசித்தென்றும், இதினுள்ளே புருஷஸமஷ்டி கிடக்கிறதென்றும் விவேகிக்கவொண்ணாதபடி, அதிஸூக்ஷ்மமாயிருக்கிற தமோவஸ்தைகுலைந்து புருஷஸமஷ்டிகர்ப்பத்வம் தோன்றும்படியான வவஸ்தையை பஜிக்கை யென்றதாயிற்று, (உஉக) "[illegible] குணஸாம்ய [illegible] குணஸாம்ய [illegible] ஸர்க்ககாலே [illegible] ப்ரதாநதத்த்வ [illegible]" இதி பராசரவசநாத் (உ௩௦) "[illegible]" [illegible] உபசரிதம், [illegible] யோகாத், "அக்ஷரம் தமஸி லீயதே

கச. இதில் நின்றும், குணவைஷம்யத்தாலே மஹதாதிவிகாரங்கள் பிறக்கும்.

கரு. குணங்களாகிறன-ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள்.

கசு. இவை ப்ரக்ருதிக்கு ஸ்வரூபாநுபந்திகளான ஸ்வபாவங்களாய், ப்ரக்ருத்யவஸ்தையிலநுத்பூதங்களாய், விகாரதசையிலுத்பூதங்களாயிருக்கும்.

(உருக) [illegible]"என்று, ஸுபாலோபநிஷத் வ்யாக்யாநத்திலே ஶ்ருதப்ரகாஶிகாகாரர், இதினுடைய அவஸ்தாவிஶேஷங்களை ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்தார்.

இத்தால், அக்ஷரமும், தமஸ்ஸும் குஸுமத்தினுடைய முகுளகோரகாவஸ்தைகள்போலே, இதினுடைய ஸங்கோசதசையாகையாலே, மஹதாதிகளைப்போலே தத்வாந்தரமன்று என்னுமிடம் ஸித்தம்.

(கச) இனி, இந்தப்ரக்ருதியில்நின்றும் மஹதாதிவிகாரங்கள் ஜநிக்கைக்கு மூலம் இன்னதென்கிறார்; (இதில் நின்றும், குணவைஷம்யத்தாலே மஹதாதிவிகாரங்கள் பிறக்கும்) என்று. குணங்களுக்கு வைஷம்யமாவது பரஸ்பரோத்ரேகம்.

(கரு) அப்படியிருக்கிறகுணங்கள்தானெவை? என்னுமாகாங்க்ஷையிலே; (குணங்களாகிறன-ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்கள்) என்கிறார்;

(கசு) இவை தானிருக்கும்படி எங்ஙனேஎன்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார், (இவைப்ரக்ருதிக்கு) என்று தொடங்கி. (இவை

கஎ. ஸத்வம் - ஜ்ஞாநஸுகங்களையும், உபயஸங்கத்தையும் பிறப்பிக்கும்.

ப்ரக்ருதிக்கு ஸ்வரூபாபந்திகளான ஸ்வபாவங்களாய்) (உ௬உ) ‘ஸக்வம்ரஜஸ்தம இதி குணாஃப்ரக்ருதிஸம்பவாஃ’ (உ௬௩) “ப்ரக்ருதெஃக்ரியமாணாநி குணைஃகர்மாணிஸர்வஶஃ” உ௬௪) “ஸக்வம்ரஜஸ்தம இதி ப்ரக்ருதெர்குணாஃ” என்னக்கடவதிறே. ஸ்வரூபாநுபந்திகளென்றது - ஆகந்துகங்களன்றிக்கே ஸத்தா ப்ரயுக்தங்களாகையாலே, இவற்றை யொழிந்திருப்பதோரவஸ்தை யுமில்லையென்கை. இவற்றை ஸ்வபாவங்களென்றும், ப்ரக்ருதிக்கு ஸ்வரூபாநுபந்திகளென்றும் சொல்லுகையாலே, (உ௬௫) “கார்யகாரணகர்த்ருத்வே ஹேதுஃ ப்ரக்ருதிருச்யதே ... ” என்று, இவற்றை த்ரவ்யங்களாகவும், இவைதானே ப்ராக்ருதிக்கு ஸ்வரூபமாகவும் கொள்ளுகிற ஸாங்க்யமதம் நிரஸ்தமாயிற்று. இந்த மதநிராகரணார்த்தமாகவிறே! ஆளவந்தார். (உ௬௬) “குணாஃ ப்ரயாநஸ்ய” என்று, பிரித்தருளிச்செய்தது. (ப்ராக்ருதவஸ்தையில் அநுத்பூதங்களாய், விகாரதசையில் உத்பூதங்களாயிருக்கும்) அதாவது - ஸாம்யாபந்நங்களா யிருக்கையாலே, ப்ராக்ருதவஸ்தையில் இவற்றினுடைய ஸ்வரூபவிபாகம் தோற்றாது. வைஷம்யாபத்தியாலே விக்ருதவஸ்தையில் இவற்றினுடைய ஸ்வரூபவிபாகம் தோற்றியிருக்குமென்கை. (உ௬௭) “ஸக்வரஜஸ்தமாம்ஸி த்ரயோ குணாஃ, ப்ரக்ருதெஸ்ஸ்வரூபாநுபந்திநஸ்ஸ்வபாவவிஶேஷாஃ கார்யைகநிரூபணீயாஃ ப்ரக்ருத்யவஸ்தாயாமநுத்பூதாஃ விகாரதஶாயாமுத்பூதாஃ” என்றிறே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது.

(கஎ) விகாரதசையில் இவைதான் கார்யைகநிரூபணீயங்களாகையாலே, கார்யகதநமுகத்தாலே இவற்றினுடைய ஸ்வரூபங்களை தர்ஶிப்பிக்கிறார்; ஸத்வம்-ஜ்ஞாநஸுகங்களையும், உபயஸங்கத்தையும் பிறப்பிக்கும்) அதாவது-ஸத்வகுணம் நிர்மலமாகையாலே,

க௮. ரஜஸ்ஸு - ராகத்ருஷ்ணாஸங்கங்களையும், கர்மஸங்கத்தையும் பிறப்பிக்கும்.

க௯. தமஸ்ஸு விபரீதஜ்ஞாநத்தையும், அநவதாநத்தையும் ஆலஸ்யத்தையும், நித்ரையையும் பிறப்பிக்கும்.

உ0. இவை ஸமங்களானபோது விகாரங்கள் ஸமங்களுமாய், அஸ்பஷ்டங்களுமா யிருக்கும்; விஷமங்களானபோது, விகாரங்கள் விஷமங்களுமாய், ஸ்பஷ்டங்களுமாயிருக்கும்.

ஜ்ஞாந ஸுகாவரண மன்றிக்கே அவற்றுக்கு ஜநகமுமாய், அவற்றினுடைய பேற்றுக்கு ப்ரவர்த்திக்கும்படி அவையிரண்டிலும் ஸங்கத்தையு முண்டாக்கு மென்கை. (உங்அ) "[illegible]" எனக்கடவதிறே,

(க௮) (ரஜஸ்ஸு - ராகத்ருஷ்ணா ஸங்கங்களையும், கர்மஸங்கத்தையும் பிறப்பிக்கும்) (உங௧) "[illegible]" என்னக்கடவதிறே. ராகமாவது - யோஷித் புருஷர்களுக்கு அந்யோந்யமுண்டான ஸ்ப்ருஹை. த்ருஷ்ணையாவது-ஸப்தாதி ஸர்வ விஷயஸ்ப்ருஹை; கர்மஸங்கமாவது-க்ரியைகளில் ஸ்ப்ருஹை.

(க௯) (தமஸ்ஸு-விபரீதஜ்ஞாநத்தையும், அநவதாநத்தையும் ஆலஸ்யத்தையும், நித்திரையையும் பிறப்பிக்கும்) (உசு) "[illegible]" என்னக்கடவதிறே. விபரீதஜ்ஞாநமாவது-வஸ்துயாதாத்ம்ய விபரீதவிஷயமான ஜ்ஞாநம்-அநவதாநமாவது-செய்யுமதொன்றில் குறிக்கோளில்லாமை. ஆலஸ்யமாவது ஒரு கார்யத்திலும் ஆரம்பமற்றிருக்கும் சொப்பம்; நித்திரையாவது-புருஷனுக்கு இந்த்ரியப்ரவர்த்தந ஶ்ராந்தியடியாக வருகிறஸர்வேந்த்ரியப்ரவர்த்தநோபரதி.

(உ0) இனி யிக்குணங்களினுடைய ஸமதசையிலும், விஷமதசையிலும், ப்ரக்ருதியினுடைய விகாரங்களிருக்கும் படியை யரு

உக. விஷமவிகாரங்களில் ப்ரதமவிகாரம் மஹான்.

உஉ. இது, ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று த்ரிவிதமாய், அத்யவஸாயஜநகமாயிருக்கும்.

ளிச்செய்கிறார்; (இவை ஸமங்களானபோது) என்று தொடங்கி. அதாவது - இக்குணங்கள் பரஸ்பரோத்ரேகமாதல், க்ருத்ஸ்நோத்ரேகமாதலன்றிக்கே ஸாம்யாபந்நங்களாயிருந்தபோது, ப்ரக்ருதியினுடைய விகாரங்கள் நாமரூபவிபாகராஹித்யத்தாலே தன்னில் ஸமங்களுமாய், ப்ரமாணங்களால் தர்ஶிக்கப்போகாதபடி ஸ்பஷ்டங்களுமன்றிக்கேயிருக்கும். இக்குணங்கள் உத்ரேகித்து விஷமங்களானபோது, ப்ரக்ருதியினுடைய விகாரங்களும் நாமரூபவிபாகராஹித்யத்தாலே தன்னில் விஷமங்களுமாய், ப்ரமாணங்களாலே தர்ஶிக்கலாம்படி ஸ்பஷ்டங்களுமாயிருக்குமென்கை. ப்ரதேஶபேதத்தாலும் காலபேதத்தாலுமென்று கீழ்ச்சொன்னதுக்கும், இந்த குணஸாம்ய வைஷம்யங்களையிறே ஹேது. அது இங்கே விஶதமாயிற்று.

(உக) இந்தகுண வைஷம்ய ப்ரயுக்தமான விஷமவிகாரங்களில் ப்ரதமவிகாரமேது? என்னுமாகாங்க்ஷையிலே,(விஷமவிகாரங்களில் ப்ரதமவிகாரம் மஹான்) என்கிறார்.

(உஅக.) "குணஸாம்யாதனுத்³ரிக்தாத் க்ஷேத்ரஜ்ஞாதி⁴ஷ்டி²தாந்ந்ருப । குணவ்யஞ்ஜநஸம்பூ⁴திஸ்ஸர்க³காலே த்³விஜோத்தம" என்னக்கடவதிறே. அதாவது - குணஸாம்யத்தையுடைத்தாய், க்ஷேத்ரஜ்ஞனுபத்தசேதநனாலே அதிஷ்டிதமான அவ்யக்தத்தில் நின்றும் வ்யக்தகுணோத்ரேகமே ஹேதுவாகையாலே, குணவ்யஞ்ஜநமென்றுபேரான மஹத்தத்வம் உத்பந்நமாமென்றபடி.

(உஉ) இதினுடைய ஸ்வரூபமிருக்கும்படி யெங்ஙனே?என்னும் ஆகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்; (இது ஸாத்விகம்) என்று தொடங்கி. அதாவது-இந்தமஹத்தத்வம், (உஅஉ) "ஸாத்த்விகோ ராஜஸஶ்சைவ தாமஸஶ்ச த்ரிதா⁴ மஹாந்" என்று ப்ரகாஶப்ரவ்ருத்திமோஹஹேதுவான ஸத்வ ரஜஸ் தமோரூபகுணத்ரயத்தாலே, ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்று த்ரிவிதமாய், (உஅங) "த்ரிமஹாந்

உகூ. இதில் நின்றும், வைகாரிகம், தைஜஸம், பூதாதியென்று த்ரிவிதமான அஹங்காரம்பிறக்கும்.

ஸௌ புத்திலக்ஷணம்:” என்று, புத்திலக்ஷணமானதாகையாலே அத்யவஸாய ஜநகமாயிருக்கும் என்கை.

அதில், ஸாத்விகபுத்தியாவது-(உஎச) “ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச கார்யாகார்யே பயாபயே। பந்தம் மோக்ஷஞ்ச யா வேத்தி புத்திஸ் ஸா பார்த்த ஸாத்விகீ” என்று ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுடையவும், கார்யாகார்யங்களினுடையவும், பயாபயங்களினுடையவும், பந்த மோக்ஷங்களினுடையவும் யதாவத் வ்யவஸாயமென்றும்; ராஜஸபுத்தியாவது- (உஎரு) “யயா தர்மமதர்மஞ்ச கார்யஞ்சாகார்யமேவ ச। அயதாவத் ப்ரஜாநாதி புத்திஸ் ஸா பார்த்த ராஜஸீ” என்று, தர்மாதர்மங்களையும், கார்யாகார்யங்களையும் அந்யதாவாக வறுதியிடுகையென்றும்; தாமஸபுத்தியாவது - (உஎசா) “அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாவ்ருதா। ஸர்வார்த்தாந் விபரீதாம்ஶ்ச புத்திஸ் ஸா பார்த்த தாமஸீ”, என்று, அதர்மத்தை தர்மமாகவும, தர்மத்தை அதர்மமாகவும, இப்படி ஸர்வார்த்தங்களையும் விபரீதமாகவும் நிஶ்சயிக்கையென்றும், பகவான் தானே கீதோபநிஷத்திலே யருளிச்செய்தான்.

ஆக, ப்ரக்ருதியினுடைய விஷமவிகாரங்களில் ப்ரதம விகாரமிதென்றும, அதினுடைய ஸ்வரூபமிருக்கும்படியும், அதினுடைய க்ருத்யமும சொல்லிற்றாயிற்று.

(உகூ) இனி, மற்றுமுண்டான விகாரங்களும் க்ரமத்திலே சொலலப்படுகிறது;(இதில் நின்றும) இத்யாதி. அதாவது-இந்தமஹானில்நின்றும், (உஎஎ) “வைகாரிகஸ்தைஜஸஶ்ச பூதாதிஶ்சைவ தாமஸ:। த்ரிவிதோயமஹங்காரோ மஹதஸ்து அஜாயத” என்கிறபடியே, ஸாத்விக ராஜஸ தாமஸரூப பேதத்தாலே வைகாரிகமென்றும், தைஜஸமென்றும், பூதாதியென்றும் த்ரிவிதமான வஹங்காரமும் பிறக்குமென்கை. இத்தால் - த்ரிகுணாத்மிகையான மூலப்ரக்ருதியில் நின்றும் பிறந்ததாகையாலே, மஹானும் த்ரிகுணாத்

உசு. அஹங்கார மபிமாந ஹேதுவாயிருக்கும்.

உரு இதில் வைகாரிகத்தில்நின்றும் ஶ்ரோத்ரத்வக் சக்ஷுர் ஜிஹ்வாக்ராணங்களென்கிற ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், வாக்பாணிபாதபாயூபஸ்த்தங்களென்கிறகர்மேந்த்ரியங்களைந்தும்,மநஸ்ஸுமாகிறபதிநோரிந்த்ரியங்களும்பிறக்கும்

மகமாயிருக்கும; அப்படியேத்ரிகுணாத்மகமான மஹானில் நின்றும பிறந்ததாகையாலே, அஹங்காரமும த்ரிகுணமாயிருக்குமென்கை.

(உசு) (அஹங்காரம் அபிமாநஹேதுவாயிருக்கும்) அதாவது- தேஹாத்மாபிமாநாதிகளை ஜநிப்பிக்கை. இத்தால் - இதினுடைய க்ருத்யம் சொலலப்பட்டது.

(உரு) (இதில் வைகாரிகத்தில் நின்றும) இத்யாதி. அதாவது இப்படி த்ரிவிதமான அஹங்காரத்தில வைகாரிகமாவது-ஸாத்விகாஹங்காரமாகையாலே, இதில் நின்றும, ஸத்வகார்யமானலகுத்வப்ரகாஶத்வங்களையுடைத்தான இந்த்ரியங்கள் பதினொன்றும பிறக்குமென்கை. வைகாரிகத்தில் நின்றும் ஏகாதஶேந்த்ரியங்களும் பிறக்குமென்று சொல்லிவிடாதே (ஶ்ரோத்ர த்வக் சக்ஷுர் ஜிஹ்வ க்ராணங்களென்கிற ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும, வாக் பாணி பாத பாயு உபஸ்த்தங்களென்கிற கர்மேந்த்ரியங்களைந்தும், மநஸ்ஸுமாகிற பதிநோரிந்த்ரியங்களும்) என்று, இப்படியருளிச்செய்தது- இவற்றினுடைய கார்யபேதத்தையும, ஸம்ஜ்ஞாபேதத்தையுமொழிய, இவற்றினுடைய ஸ்வரூபபேதமும், வ்யவஹாரபேதமும தோற்றுதென்று; மநஸ்ஸுக்கு சார்யம உபயஸஹகாரித்வம். அதுதான் இவ்விடத்தில சொலலாதொழிந்தது-மேலே யிவை தன்னை விஸ்தரேண சொலலுகிறவிடத்திலே சொல்லுகிறோமென்று. இந்த்ரியங்கள் ஸாத்விகாஹங்காரகார்ய மென்று அருளிச்செய்கையாலே இவற்றை ராஜஸாஹங்காரகார்ய மென்கிறபக்ஷம் ப்ரதிக்ஷிப்தம். (0சஅ) "வைகாரிகாஸ் த்ரயோ (?) ... வைகாரிகாத் ... தேவா வைகாரிகா ... தா:"; என்றும் (உசக) ... ஶ்ரோத்ரம் த்வக்சக்ஷுஷீ ... ஜிஹ்வா ... [illegible]

அக்ஷிணீ ப்ராவிசத் । திசச்ஶ்ரோத்ரம் பூத்வா கர்ணௌ ப்ராவிசந் ஓஷதிவநஸ்பதயோ லோமாநி பூத்வா த்வசம் ப்ராவிசந்। சந்த்ரமா மநோ பூத்வா ஹ்ருதயம் ப்ராவிசத் । ம்ருத்யுரபாநோ பூத்வா நாபிம் ப்ராவிசத் । ஆபோ ரேதோ பூத்வா சிச்நம் ப்ராவிசந்" என்கிறபடியே, தேவாதிஷ்டிதங்களாகையாலே தேவஶப்த வாச்யங்களான விந்த்ரியங்கள் பதினொன்றும் ராஜஸாஹங்கார கார்யமென்பர்கள் சிலர், ஸாத்விகாஹங்காரகார்ய மென்பர்கள் சிலரென்று சொல்லி, அதில் ஸாத்விகாஹங்காரகார்ய மென்கிறதே ஸ்வபக்ஷமாக ஸ்ரீபராஶரபகவான் நிஶ்சயிக்கையாலே, இவர்க்கு இப்படி யருளிச்செய்யக் குறையில்லையிறே. இந்த்ரியங்கள் பதினொன்று என்கிற நியமமும் வ்யஷ்டி விஷய மன்று, ஸமஷ்டி விஷயம்; (உரு0) "தேஷாந்த்வவயவாந் ஸூக்ஷ்மாந் ஷண்ணாமப்யமிதௌஜஸாம்। ஸந்நிவேச்யாத்மமாத்ராஸு ஸர்வபூதாநி நிர்மமே" என்று, அநுக்கையாலே, ஸூக்ஷ்மங்களான விந்த்ரியங்களினுடைய அவயவங்களை ஆத்மமாத்ரைகளிலே ப்ரவேசிப்பித்து ஸர்வபூதங்களையும் ஈஶ்வரன் ஸ்ருஷ்டித்தானென்று மநுவசநமுண்டாகையாலே. இதில், (உருக) "ஸூக்ஷ்மாந்" என்கையாலே (உருஉ) "அணவஶ்ச" என்கிற ஸூத்ரமர்யாதையாலே, இந்த்ரியங்கள் அணுவென்றும், (உருக) 'ஸவய்வாந்' என்கையாலே, இந்த்ரியங்கள்தோறும் வ்யக்தி பாஹுள்யமுண்டென்றும், ஆத்மமாத்ரைகளிலே கூட்டினனென்கையாலே, அடியிலே கொடுத்த இந்த்ரியங்களை யாவத்ஸம்ஹாரம் அநுவர்த்திக்குமென்றும், (உருரு) "சரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீச்வர: । க்ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநிவாசயாத்" என்கிறபடியே, சரீரத்தைவிட்டு சரீராந்தரத்தை ப்ரவேசிக்கும்போது இந்த்ரியங்களை க்ரஹித்துக்கொண்டு போமென்றும் தோற்றுகிறது. (உருக) "ஷண்ணாம்" என்றும் (உருசு) "இந்த்ரியாணி" என்றும் சொல்லுகிற ஸங்க்யாநிர்த்தேசத்தில் நிர்ப்பந்தமில்லை, இந்த்ரியாந்தரங்களும் கூடிப்போகையாலே.

௨௬. பூதாதியில் நின்றும் ஶப்ததந்மாத்ரை பிறக்கும், இதில் நின்றும் ஆகாஶமும் ஸ்பர்ஶதந்மாத்ரையும் பிறக்கும், இதில் நின்றும் வாயுவும் ரூபதந்மாத்ரையும் பிறக்கும் இதில் நின்றும் தேஜஸ்ஸும் ரஸதந்மாத்ரையும் பிறக்கும், இதில் நின்றும் அப்பும் கந்ததந்மாத்ரையும் பிறக்கும், இதில் நின்றும் ப்ருதிவி பிறக்கும்.

---

(௨௬) இனிமேல், (உ௫௭) "[illegible]" என்கிறபடியே, பூதாதிஶப்தவாச்யமான தாமஸாஹங்காரத்தில் நின்றும் தந்மாத்ரபஞ்சகமும், தத்விஶேஷமான ஆகாஶாதி பஞ்சபூதங்களும் உத்பந்நங்களாம் க்ரமம் அருளிச்செய்கிறார்; (பூதாதியில் நின்றும் ஶப்ததந்மாத்ரை பிறக்கும்) என்று தொடங்கி. அதாவது - பூதாதிஸம்ஜ்ஞிகமான தாமஸாஹங்காரத்தில் நின்றும் ஆகாஶத்தினுடைய ஸூக்ஷ்மாவஸ்த்தையான ஶப்ததந்மாத்ரை பிறக்கும்; இந்த ஶப்ததந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்த்தூலாவஸ்த்தையாய் வ்யக்தஶப்த குணகமான ஆகாஶமும், வாயுவினுடைய ஸூக்ஷ்மாவஸ்த்தையான ஸ்பர்ஶதந்மாத்ரையும் பிறக்கும்; இந்த ஸ்பர்ஶதந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்த்தூலாவஸ்த்தையாய் ஸ்பர்ஶகுணகமான வாயுவும்; தேஜஸ்ஸினுடைய ஸூக்ஷ்மமான ரூப தந்மாத்ரையும் பிறக்கும்; இந்த ரூபதந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்த்தூலாவஸ்த்தையாய் ரூபகுணகமான தேஜஸ்ஸும், அப்பினுடைய ஸூக்ஷ்மமான ரஸதந்மாத்ரையும் பிறக்கும்; இந்த ரஸதந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்த்தூலாவஸ்த்தையாய் ரஸகுணையான அப்பும், ப்ருதிவியினுடைய ஸூக்ஷ்மமான கந்ததந்மாத்ரையும் பிறக்கும்; இந்தகந்ததந்மாத்ரையில் நின்றும், இதினுடையஸ்த்தூலாவஸ்த்தையாய், கந்த குணையான ப்ருதிவி பிறக்கும் என்கை.

ஆகாஶமும் ஸ்பர்ஶ தந்மாத்ரையும் பிறக்கும், வாயுவும் ரூப தந்மாத்ரையும் பிறக்கும் என்று உத்பத்திசொல்லுகிற வளவில், பூதத்தை முற்படச்சொல்லி தந்மாத்ரையைப் பின்படச்சொல்லிக்கொண்டுவந்தது - பூதோத்பத்திக்கு அநந்தரம் தந்மாத்ரோத்பத்தியென்கிற க்ரமம் தோற்றுகைக்காக. இந்த தந்மாத்ராத்தந்மாத்ரோத்பத்திக்ரமம் நம்மாசார்யர்களுக்கு மிகவும் ஆதரணீயமாய்ப்

உஎ. ஸ்பர்ஶதந்மாத்ரை தொடக்கமான நாலுதந்மாத்ரைகளும் ஆகாஶம் தொடக்கமான நாலுபூதங்களுக்கும் கார்யமாய், வாயுதொடக்கமான நாலுபூதங்களுக்கும் காரணமாயிருக்குமென்றுஞ் சொல்லுவர்கள்.

போரும்; அதுக்கடி - (உருகூ) “ஸப்த ப்ரக்ருதயஃ ஷோடஶ விகாராஃ” என்கிற ஶ்ருதிக்கு ஸ்வாரஸ்யம் ஸித்திக்கையாலே; (உருஎ) “ஸம்ஸாராத் ப்ரக்ருதிவிகாராஃ ஷட் ப்ரக்ருதேர்மஹாந், மஹதோ(அ)ஹங்காரோ(அ)ஹங்காராத் பூததந்மாத்ரம், ஶப்ததந்மாத்ராதாகாஶம் ஸ்பர்ஶதந்மாத்ரம், ஸ்பர்ஶதந்மாத்ராத்வாயூ ரூபதந்மாத்ரம், ரூபதந்மாத்ராத்தேஜோ ரஸதந்மாத்ரம், ரஸதந்மாத்ராதாபோ கந்ததந்மாத்ரம், கந்ததந்மாத்ராத் ப்ருதிவீ” என்று இந்தக்ரமத்தை யாதவப்ரகாஶாதிகளும் அங்கீகரித்துக்கொண்டு போந்தார்கள்.

(உஎ) இனி, பூதாத் தந்மாத்ரோத்பத்திக்ரமமும் ஶாஸ்த்ரஸித்தமாகையாலே அத்தையும் ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்; (ஸ்பர்ஶதந்மாத்ரை தொடக்கமான நாலுதந்மாத்ரைகளும்) என்று தொடங்கி. அதாவது—பூதாதியில் நின்றும் ஶப்ததந்மாத்ரை பிறக்கும், ஶப்ததந்மாத்ரையில் நின்றும் ஆகாஶம் பிறக்கும், ஆகாஶத்தில் நின்றும் ஸ்பர்ஶதந்மாத்ரை பிறக்கும்; ஸ்பர்ஶதந்மாத்ரையில் நின்றும் வாயு பிறக்கும், வாயுவில் நின்றும் ரூபதந்மாத்ரை பிறக்கும். ரூபதந்மாத்ரையில் நின்றும் தேஜஸ்ஸு பிறக்கும், தேஜஸ்ஸில் நின்றும் ரஸதந்மாத்ரை பிறக்கும்; ரஸதந்மாத்ரையில் நின்றும் ஜலம் பிறக்கும், ஜலத்தில் நின்றும் கந்ததந்மாத்ரை பிறக்கும், கந்ததந்மாத்ரையில் நின்றும் ப்ருதிவி பிறக்கும் என்றபடி.

இக்க்ரமம் ஸ்ரீவிஷ்ணுபுராணஸித்தம்; பூர்வக்ரமம் புராணாந்தரஸித்தமென்று சொல்லுவர்கள்; அது சொல்லவொண்ணாதிறே. (உருகூ) “ஸப்த ப்ரக்ருதய ஷோடஶவிகாராஃ” என்று, ஆகாஶாதிபூதங்களைந்தையும், இந்த்ரியங்களொபதையும் கேவலவிக்ருதிகளாக ஶ்ருதி சொல்லுகையாலே. ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலே (உருஅ) “ஆகாஶவாயு விகாரவர்ணம் ஸம்ஸார்த்தம் ஸஸ

ஜஸ:" என்று தொடங்கி, ஸ்பர்ஸதந்மாத்ராதிகளுக்கு காரண மாகச்சொன்ன ஆகாஸாதி பதார்த்தங்களையும், தந்மாத்ரலக்ஷண மான பூதங்களாக ஸ்ரீபராஸரபகவானுக்கு விவக்ஷித மென்று நினைத்து வ்யாக்யாதாக்கள் வ்யாக்யாநம்பண்ணி வைக்கையாலே. ஆகையால், ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் பூதாத்தந்மாத்ரோத்பத்தி ஸாபேக்ஷமாய்த் தோற்றிற்றிருந்ததே யாகிலும், வ்யாக்யாநப்ரக்ரியை யைப் பார்த்தால் தந்மாத்ராத் தந்மாத்ரோத்பத்தி யென்றே கொள் ளவேணும். பூதாத் தந்மாத்ரோத்பத்தி பக்ஷத்திலும், (உருக) "அஷ்டௌ ப்ரக்ருதய: ஷோடஶ விகாரா:" என்று சொல்லுகிற ஷோடஶ விகாரங்களாகிறது - பூதங்களையொழிய ஜ்ஞாநகர்மேந்த்ரியங் களும் ஶப்தாதிகளைக்கும் என்று. தந்மாத்ரங்களுக்கு பூதங்க ளோடு ஸ்வரூபபேதமின்றியிலே அவஸ்தாபேதமாத்ர மாகை யாலே; (உருக) "அஷ்டௌ ப்ரக்ருதய:" என்று ப்ரக்ருதி மஹ தஹங்காரங்களையும், ஆகாஸாதிகளைந்தையுஞ் சொல்லுகிறதென் றும் ஸ்ருதப்ரகாஶிகாகாரர் நிர்வஹிப்பர்கள். இதுதான், ஸ்ரீவேதவ்யா ஸபகவானாலே. (உருக) "அஷ்டௌ ப்ரக்ருதய: ப்ரோக்தா விகா ராஶ்சாபி ஷோடஶ । அஸ்ய வ்யக்தாநி ஸப்தைவ ப்ராஹுரத்யா த்மசிந்தகா: । அவ்யக்தஞ்ச மஹாம்ஶ்சைவ ததாஹங்கார ஏவ ச । ப்ருதிவீ வாயுராகாஶமாபோ ஜ்யோதிஶ்ச பஞ்சமம் । ஏதா: ப்ரக்ருதயஸ்த்வஷ்டௌ விகாராநபி மே ஶ்ருணு । ஶ்ரோத்ரம் த்வக் சைவ சக்ஷுஶ்ச ஜிஹ்வா க்ராணஞ்ச பஞ்சமம் । வாக்ச ஹஸ்தௌ ச பாதௌ ச பாயுர்மேட்ரம் ததைவ ச । ஶப்தஸ்பர்ஶௌ ச ரூபஞ்ச ரஸோ கந்தஸ்ததைவ ச । ஏதே விஶேஷா ரா ஜேந்த்ர மஹாபூதேஷு பஞ்சஸு । புத்தீந்த்ரியாண்யதை தாநி ஸவிஶேஷாணி மைதில । மநஷ்ஷோடஶகம் ப்ராஹு ரத்யாத்மகதிசிந்தகா:" என்று, மோக்ஷதர்மத்திலே யாஜ்ஞவல்க்ய ஜநக ஸம்வாதத்திலே சொல்லப்பட்டது. அப்படியே யமஸ்ம்ருதியி லும் (உகூ0) "மநோ புத்திரஹங்காரோ வாய்வக்நிர் ஜலாநிலா: । ஏதா: ப்ரக்ருதயஸ்த்வஷ்டௌ விகாராஶ்சாபி ஷோடஶ । ஶ்ரோ த்ராக்ஷிரஸநாக்ராணத்வக்ஸம்ஜ்ஞம் பஞ்சகம் । ஶப்தாத்யா ரஸ ஸஸ்பர்ஶாஸ்தாக்ரிபாணிவாயவ: । உபஸ்தாஶ்சேதி விகாரா

ஷோடஶஸ்யாதா:" என்று சொல்லப்பட்டது; இந்த ஸ்ம்ருதியில் ப்ராக்ருதிகளிலே பரிகணிக்கையாலும், ப்ரதமத்திலே யெடுக்கையாலும் மந்தவ்யதையாலே மநஸ்ஸினுடைய ப்ராதாந்யம் சொல்லப்படுகிறது. ஸங்கல்பரூபத்தாலே தத்காரணமான மநஸ்ஸு லக்ஷிக்கப்படுகிறதென்று ஸர்வோபநிஷத் வ்யாக்யாநத்திலே ஶ்ருதப்ரகாஶிகாகாரராலே வ்யாக்யாதமாயிற்று; இப்படி இந்த்ரியஸாத்திகளிலே சொல்லப்படுகையாலே, (௨௫௯) "[illegible] தய:" என்கிற ஶ்ருதிக்கு பூதாத் தந்மாத்ரோத்பத்திபக்ஷத்தில் விரோதாபாவம் ஸ்பஷ்டம். (௨௬௧) "த்வசா வீஜமிவாவ்ருதம்" என்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே த்வக்கில்லாத பீஜத்துக்கு அங்குர ஶக்தியில்லாதாப்போலே, ஆவரகத்வமொழிந்தபோது உத்தரகார்யஶக்தியில்லையென்று தோற்றுகையாலும். காரணகுணத்தையொழிய உத்தரோத்தர விஶேஷங்களில் (௨௬௨) "[illegible]" என்று, ஸ்வவிஶேஷத்துக்குச் சொல்லுகிற குணவிஶேஷங்கடாகையாலும், (௨௬௩) "[illegible]" என்கிற புராணவசநங்களினுடைய வாக்யத்துக்காகவும், (௨௬௪) "[illegible] வ்யஞ்ஜாயதே" என்று, இதில் அதிக்ருதனை ஸாங்க்யவாசஸ்பதி சொல்லுகையாலும். "கார்யோத்பாதகங்களான தத்வங்கள் ஸ்வஸ்வகாரணவ்ருத்தங்களாய்க்கொண்டே யுத்பாதிக்கிறதென்று கொள்ளவேணும்" என்று, தத்வத்ரய விவரணத்திலே ஆச்சான்பிள்ளை யருளிச்செய்கையாலும், (௨௬௫) "[illegible]" (௨௬௬) "[illegible]" (௨௬௭) "[illegible]" (௨௬௮) "[illegible]

ஸமாவ்ருணோத்’’ (௨௯௮) ‘‘ஸ்பர்ஸமாத்ரஸ்து வை வாயூ ரூபமாத்ரம் ஸமாவ்ருணோத்’’ (௨௯௯) ‘‘ரஸமாத்ராணி சாம்பாம்ஸி ரூபமாத்ரம் ஸமாவ்ருணோத்’’ என்று, ஸ்ரீபராஸரபகவானாலே உக்தமாகையாலும், ‘‘முன்புத்தை தந்மாத்ரைகளோடே கூடிக்கொண்டு உத்தரோத்தர தந்மாத்ரைகள் ஸ்வவிஸேஷங்களைப் பிறப்பிக்கையாலே’’ என்று, இவர்தாம் மேலேயருளிச்செய்கையாலும் ஆவரணக்ரமங் கொள்ளவேணும்.

அப்படியே, பூர்வாசார்யமதத்தைப்பற்ற ஸ்பர்ஸதந்மாத்ராதிகளுக்கு ஸ்வஸ்வவிஸேஷங்களை உத்பாதிக்குமளவில், ஸ்வஸ்வபூர்வபூதஸஹாயத்வமும் கொள்ளவேணும். அதாவது-பூதாதியில் நின்றும் ஸப்ததந்மாத்ரை பிறக்கும்; ஸப்ததந்மாத்ரையை பூதாதி ஆவரிக்கும்; இதில் நின்றும் ஆகாஸம் பிறக்கும், அநந்தரம் இந்த ஸப்ததந்மாத்ரையில்நின்றும் ஸ்பர்ஸதந்மாத்ரை பிறக்கும்; ஸ்பர்ஸதந்மாத்ரையை ஸப்ததந்மாத்ரை யாவரிக்கும், இப்படி ஸப்ததந்மாத்ராவ்ருதையாய், ஆகாஸத்தை ஸஹாயமாக வுடைத்தான ஸ்பர்ஸதந்மாத்ரையில் நின்றும் வாயுபிறக்கும். இந்த ஸ்பர்ஸதந்மாத்ரையில் நின்றும் ரூபதந்மாத்ரை பிறக்கும். ரூபதந்மாத்ரையை ஸ்பர்ஸதந்மாத்ரையாவரிக்கும், இப்படி ஸ்பர்ஸதந்மாத்ராவ்ருதையாய், வாயுவை ஸஹாயமாக வுடைத்தான ரூபதந்மாத்ரையில் நின்றும் தேஜஸ்ஸு பிறக்கும். இந்த ரூபதந்மாத்ரையில் நின்றும் ரஸதந்மாத்ரை பிறக்கும், ரஸதந்மாத்ரையை ரூபதந்மாத்ரை யாவரிக்கும், இப்படி ரூபதந்மாத்ராவ்ருதையாய், தேஜஸ்ஸை ஸஹாயமாகவுடைத்தான ரஸதந்மாத்ரையில் நின்றும் அப்பு பிறக்கும்; இந்த ரஸதந்மாத்ரையில் நின்றும் கந்ததந்மாத்ரை பிறக்கும், கந்ததந்மாத்ரையை ரஸதந்மாத்ரை யாவரிக்கும், இப்படி ரஸதந்மாத்ராவ்ருதையாய், அப்பை ஸஹாயமாகவுடைத்தான கந்ததந்மாத்ரையில் நின்றும் ப்ருதிவி பிறக்கும் என்கை. ஸப்ததந்மாத்ராவ்ருதமாய், ஆகாஸத்தை ஸஹாயமாகவுடைத்தான ஸ்பர்ஸதந்மாத்ரத்தில் நின்றும் வாயுபிறக்குமென்று தொடங்கிச் சொன்ன விஸேஷோத்பத்தியில க்ரமம் பூதாத் தந்மாத்ரோத்பத்திபக்ஷத்துக்கும் சேரும்; பூர்வபூர்வபூதத்தில் நின்றும் உத்தரோத்தர தந்மாத்ரோத்பத்தி

யாதிறவிது விசேஷம். இது தத்வத்ரய விவரணத்தில் ஆச்சான் பிள்ளை யருளிச்செய்த க்ரமம்.

இங்ஙனன்றிக்கே, தத்வநிரூபணத்திலே ஜீயரருளிச்செய்ததும் ஒருக்ரமமுண்டு. அதாவது-' பூதாதியில் நின்றும் சப்ததந்மாத்ரை பிறக்கும்; சப்ததந்மாத்ரையில் நின்றும் அதிலுடைய ஸ்த்தூலாவஸ்தையான ஆகாசம் பிறக்கும்; சப்ததந்மாத்ரத்தையும், ஆகாசத்தையும் பூதாதியாவரிக்கும்; இப்படி பூதாத்யாவ்ருதமாய் ஸ்தூலாகாசஸஹக்ருதமாய்க்கொண்டு விக்ருதமான சப்ததந்மாத்ரத்தில் நின்றும் ஸ்பர்சதந்மாத்ரம் பிறக்கும்; இதில் நின்றும் ஸ்பர்சகுணகமான வாயு பிறக்கும்; அவையிரண்டையும், காரணமான சப்ததந்மாத்ரை யாவரிக்கும்; சப்ததந்மாத்ராவ்ருதமாய், வாயு ஸஹக்ருதமாய் விகரித்த ஸ்பர்சதந்மாத்ரத்தில் நின்றும் ரூபதந்மாத்ரை பிறக்கும்; அதில் நின்றும் ரூபகுணகமான தேஜஸ்ஸு பிறக்கும்; அவையிரண்டையும், காரணமான ஸ்பர்சதந்மாத்ரை யாவரிக்கும்; இத்தாலே ஆவ்ருதமாய், தேஜஸ்ஸஹக்ருதமாய் விகரித்த ரூபதந்மாத்ரத்தில் நின்றும் ரஸதந்மாத்ரை பிறக்கும்; இதில் நின்றும் ரஸகுணமான ஜலம் பிறக்கும்; அவையிரண்டையும் காரணமான ரூபதந்மாத்ரம் ஆவரிக்கும்; இத்தாலே ஆவ்ருதமாய், அப்ஸஹக்ருதமாய்க்கொண்டு விகரித்த ரஸதந்மாத்ரத்தில் நின்றும் கந்ததந்மாத்ரம் பிறக்கும், அதில் நின்றும் கந்தகுணையான ப்ருதிவி பிறக்கும்; அவையிரண்டையும், காரணமான ரஸதந்மாத்ரம் ஆவரிக்குமென்கை. இதில் முற்பட்ட க்ரமத்திலே, ஸ்பர்சதந்மாத்ராதி சதுஷ்டயத்துக்கு ஸ்வஸ்வவிசேஷோத்பாதநத்தில் பூர்வபூர்வபூத ஸாஹாய்யம் சொல்லப்பட்டது; பிற்பட்ட க்ரமத்தில் பூர்வதந்மாத்ரத்துக்கு உத்தரோத்தரதந்மாத்ரோத்பாதநத்தில ஸ்வஸ்வவிசேஷ ஸாஹாய்யம்சொல்லப்பட்டது. ஆகையால் அந்யோந்ய விரோதமில்லை. ஒன்றில் இரண்டும் அநுக்தமேயாகிலும், இரண்டும் அபேக்ஷிதமாகையாலே, ஆவரணக்ரமத்திலும் "பூர்வபூர்வ தந்மாத்ரம்-உத்தரோத்தர தந்மாத்ரத்தையும், தத்விசேஷத்தையும் ஆவரிக்கும்" என்று ஜீயரருளிச்செய்கையாலும், ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே, (உ௭௦) "சப்தமாத்ரம் ததாகாசம் பூதாதிஸ்ஸ ஸமாவ்ருணோத்" என்றவிதுக்கு - (உ௭௦) "சப்தமாத்ரம் - சப்ததந்மாத்ரம், ததா

உஅ. தந்மாத்ரங்களாவன - பூதங்களினுடைய ஸூக்ஷ்மாவஸ்த்தைகள்.

காஶ்யப-ஸ்பர்ஶமாத்ரம் ஸமாவ்ருணோத்; ஸ ஏதே வ்யோம-வாயு-தந்மாத்ராஃ தேந தந்மாத்ரதா ஸ்ம்ருதா தத் விஶேஷா ந்ருணோஷிதி ஶ்ருதேஃ' என்று, பிள்ளை லோகாசார்யர் வ்யாக்யாநம்பண்ணுகையாலும், தத்வத்ரய விவரணத்தில், தந்மாத்ரத்துக்கு ஆவரணம் சொன்னவோபாதி தத்விஶேஷத்துக்கு ஆவரணம் சொல்லிற்றில்லையேயாகிலும் அது உபலக்ஷணமாயித்தனை. அல்லாதபோது, அவ்விடந்தன்னில் பூதாத்தந்மாத்ரோத்பத்தி சொல்லவும் போகாது. ஆகையால் இரண்டும் கொள்ள வேணும்.

தத்வநிரூபணத்தில், தந்மாத்ர தத்விஶேஷங்களிரண்டுக்கும் ஆவரணம் சொல்லுகிறவளவில் இரண்டையும் சேர்த்துப்பிடித்துச் சொல்லப்பட்டதேயாகிலும், விஶேஷோத்பத்திக்கு முன்பே தந்மாத்ரத்துக்கு ஆவரணங்கொள்ள வேணும். த்வக்கில்லாத பீஜத்துக்கு அங்குரஶக்தியில்லாதாப்போலே, ஆவரகத்தை யொழிந்தபோது உத்தரகார்யஶக்தியில்லையென்னுமிடம் கீழே சொல்லப்பட்டதிறே. இப்படி, பூததந்மாத்ரஸ்ருஷ்டி சொல்லுகிறவிடத்திலே ஆவரணக்ரமம்-வக்தவ்யமாயிருக்கச்செய்தேயும், அருளிச்செய்யாதொழிந்தது அபேக்ஷிதமல்லாமையன்று; ஸங்கோசேந உத்பத்திக்ரமத்தை யருளிச்செய்தாரித்தனை. பெரியவாச்சான்பிள்ளையும் இப்படியிறே அருளிச்செய்தது.

(உஅ) ஆக, பூததந்மாத்ரோத்பத்திக்ரமம் அருளிச்செய்தாராயிற்று; அதில் தந்மாத்ரங்கள்தான் எவை? என்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார்; (தந்மாத்ரங்களாவன - பூதங்களினுடைய ஸூக்ஷ்மாவஸ்த்தைகள்; என்று. அதாவது - (உஎக) "தஸ்மிம்ஸ்தஸ்மிம்ஸ்து தந்மாத்ரம் தேந தந்மாத்ரதா ஸ்ம்ருதா । தந்மாத்ராண்யவிஶேஷாணி அவிஶேஷாஸ்ததோ ஹி தே । நஶாந்தா நாபி கோராஸ்தே ந மூடாஶ்சாவிஶேஷிணஃ" என்று, ஶாந்தத்வ கோரத்வ மூடத்வலக்ஷணமான விஶேஷங்களை யுடைத்

உகூ. மற்றையிரண்டஹங்காரமும் ஸ்வகார்யங்களைப் பிறப்பிக்கும்போது, ராஜஸாஹங்காரம் ஸஹகாரியா யிருக்கும்.

தல்லாத ஶப்தாதிமாத்ரங்களை குணமாகவுடைத்தாயிருக்கிற ஆகாஶாதிபூதஸூக்ஷ்மங்கள்.

ஶாந்தத்வமாவது - அநுகூலவேதநீயத்வம்; கோரத்வமாவது - ப்ரதிகூலவேதநீயத்வம், மூடத்வமாவது - உதாஸீநவேதநீயத்வம். அதில், ஸ்வபாவேந ஶாந்தங்களாயிருக்கும் - பூமியும் ஜலமும்; கோரங்களாயிருக்கும் - தேஜஸ்ஸும் வாயுவும்; மூடமாயிருக்கும் ஆகாஶம். மேளநத்தாலே யெல்லாபூதங்களும், ஶாந்தத்வ கோரத்வ மூடத்வங்களை யுடையனவாயிருக்கும். தந்மாத்ரங்களுக்கு இந்த ஶாந்தத்வாதிவிஶேஷமில்லாமையாலே, அவை அவிஶேஷங்களென்று சொல்லப்படுகிறன. ஆகையாலே, தந்மாத்ரங்களென்றும், அவிஶேஷங்களென்றும் பர்யாயம். அதில் அபியுக்தரான யாதவப்ரகாஶாதிகளும், (உஎஉ) "தந்மாத்ராணி விஶேஷா [illegible]" என்று சொல்லிவைத்தார்கள்.

ஆக, த்ரிவிதாஹங்காரத்திலும் வைத்துக்கொண்டு, ஸாத்விகாஹங்காரத்தில் நின்றும் ஏகாதஶேந்த்ரியங்களும், தாமஸாஹங்காரத்தில் நின்றும் பூததந்மாத்ரங்களும் உத்பந்நமாம் க்ரமம் சொல்லிநின்றது.

(உகூ) இனி, ராஜஸாஹங்காரத்தினுடைய கார்யம் சொல்லுகிறது, (மற்றையிரண்டு அஹங்காரமும்) என்று தொடங்கி. அதாவது - ஸாத்விக தாமஸாஹங்காரங்களிரண்டும் ஸ்வகார்யங்களை யுத்பாதிக்கும்போது, பீஜத்தினுடைய அங்குரத்துக்கு ஜலம்போலவும், அக்நியினுடைய ஜ்வாலைக்கு வாயுபோலவும், ராஜஸாஹங்காரம் ஸஹகாரியா யிருக்குமென்கை. இது ஸஹகரிக்கை

௯௦. ஸாத்விகாஹங்காரம் ஶப்ததந்மாத்ராதி பஞ்சகத்தையு மடைவே ஸஹகாரியாய்க்கொண்டு ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தையும் ஸ்ருஷ்டிக்கும்; தத்ஸஹக்ருதமாய்க்கொண்டு வாகாதி கர்மேந்த்ரியங்களைந்தையும் ஸ்ருஷ்டிக்கும் இவற்றை யொழியத்தானே மநஸ்ஸை ஸ்ருஷ்டிக்குமென்றும் சொல்லுவர்கள்.

யாவது-(௨௪௫) "ராஜஸ் வைகாரிகாத்" என்கிறபடியே, இவற்றில் இந்த்ரியஹேதுவான ஸத்வப்ரசுரத்துக்கும், பூதஹேதுவான தமோப்ரசுரத்துக்கும் சலஸ்வபாவமான ரஜஸ்ஸு - ப்ரேரகமாய்க் கொண்டு ப்ரவர்த்திப்பிக்கை.

(௯௦) இப்படி, ஸாத்விக தாமஸாஹங்காரங்களுக்கு ஸாதாரண ஸஹகாரியை யருளிச்செய்தார் கீழ்; அநந்தரம், ஸாத்விகாஹங்காரத்துக்கு அஸாதாரணமாயிருப்பன சில ஸஹகாரிவிஶேஷங்களை யருளிச்செய்கிறார்; (ஸாத்விகாஹங்காரம்) என்று தொடங்கி. அதாவது - ஸாத்விகாஹங்காரம் - இந்த்ரியங்களை ஸ்ருஷ்டிக்குமளவில், இவற்றினுடைய விஷயப்ரதிநியமத்துக்காக ஶப்ததந்மாத்ரத்தை ஸஹகாரியாகக்கொண்டு ஶ்ரோத்ரத்தையும், ஸ்பர்ஶதந்மாத்ரத்தை ஸஹகாரியாகக்கொண்டு த்வகிந்த்ரியத்தையும். ரூபதந்மாத்ரத்தை ஸஹகாரியாகக்கொண்டு சக்ஷுஸ்ஸையும், ரஸதந்மாத்ரத்தை ஸஹகாரியாகக்கொண்டு ஜிஹ்வையையும், கந்ததந்மாத்ரத்தை ஸஹகாரியாகக்கொண்டு க்ராணேந்த்ரியத்தையும் ஸ்ருஷ்டிக்கும். இப்படி, ஶப்ததந்மாத்ராதி பஞ்சகத்தையும் அடைவே ஸஹகாரியாகக்கொண்டு ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தையும் ஸ்ருஷ்டிக்க வநந்தரம், ஶ்ரோத்ர க்ராஹ்யமான ஶப்தவிஷயமதுவும், த்வகிந்த்ரியக்ராஹ்யமான ஸ்பர்ஶ விஷயமதுவும், சக்ஷுர் க்ராஹ்யமான ரூபத்தில ப்ரவ்ருத்திஹேதுவாயும், ரஸநாவிஷயரஸாஶ்ரயமான ஜலத்தினுடைய நிஸ்ஸரணஹேதுவாயும், க்ராணவிஷய கந்தாஶ்ரயத்ருவ்யாப்ரஸமான அங்காதிகளில் ருஜீஷோத்ஸர்ஜநஹேதுவாயும், இப்படி ஜ்ஞாநேந்த்ரிய பஞ்சகஶேஷமாய்க்கொண்டு ஶப்தாதிபஞ்சகத்தையும் ஒட்டியிருக்கும். கர்மேந்த்ரியபஞ்சகத்தை ஸ்ருஷ்டிக்குமளவில், ஶ்ரோத்ர ஸஹக்ருதமாய்க்கொண்டு வாக்கையும், த்வக்ஸஹக்ருதமாய்க்

௯௧. சிலர், இந்த்ரியங்களிலே சிலவற்றை பூதகார்ய மென்றார்கள்.

௯௨. அது ஶாஸ்த்ரவிருத்தம்.

௯௩. பூதங்களாப்யாயகங்களித்தனை.

கொண்டு பாணியையும், சக்ஷுஸ்ஸஹக்ருதமாய்க்கொண்டு பாதத்தையும், ஜிஹ்வாஸஹக்ருதமாய்க்கொண்டு உபஸ்த்தத்தையும், க்ராணஸஹக்ருதமாய்க்கொண்டு பாயுவையும் ஸ்ருஷ்டித்து, ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கும் கர்மேந்த்ரியங்களுக்கும் ஸஹகாரியாய், உபயாத்மகமான மநஸ்ஸை ஸஹகாரி நிரபேக்ஷமாகத்தானே ஸ்ருஷ்டிக்குமென்று, தத்த்வவித்துக்கள் சொல்லுவர்கள்" என்கை. இது தன்னை ஸ்ரீ விஷ்ணுபுராண வ்யாக்யாநத்திலே, (உஎ௮) "[illegible] என்று பிள்ளை யெங்களாழ்வாரும் அருளிச்செய்தார்.

(௯௧) அநந்தரம், இப்படி தாமருளிச்செய்த விந்த்ரியோத்பத்திக்ரமத்துக்கு விரோதிபக்ஷத்தை நிரஸிக்கைக்காக அத்தை யுத்க்ஷேபிக்கிறார்; (சிலர், இந்த்ரியங்களிலேசிலவற்றை பூதகார்யமென்றார்கள்) என்று. அவர்களாகிறார்-க்ராணாதிகளான விந்த்ரியங்களை ப்ருதிவ்யாதி பூதகார்யமாகவேகொள்ளும் நையாயிகாதிகள்; அவர்கள் தான் ஆநுமாநிகராகையாலே அநுமாநத்தாலேயிறே அர்த்தத்தை ஸாதிப்பது.

(௯௨) அத்தை, காலாத்யயாபதேஶத்தாலே தூஷிக்கிறார்; (அது ஶாஸ்த்ரவிருத்தம்) என்று; அதாவது - இந்த்ரியங்களை பூதகார்யமென்று சொல்லுவது - இவற்றை ஆஹங்காரிகங்களாகச் சொல்லுகிற இதிஹாஸபுராணாதிகளுக்கு விருத்தமென்கை.

(௯௩) அதுவென்? மோக்ஷதர்மத்திலே, (உஎ௯) "[illegible]

வைகாரிகாஸ்தைஜஸாச்ச தாமஸஸ்சைவ வக்ஷ்யமாணாஸ்ததா த்ரிதா தேஜஸானீந்த்ரியாணி ச வைகாரிகா தஶ தேவா ஏகாதஶம் மனஸ்ததா வைகாரிகாஸ் ஸ்ம்ருதா: | பூதாநாம் பௌதிகா: பூர்வே ததா பூதாதி மாத்ராஸ் ஸ்ம்ருதா:" என்று சொல்லுகையாலே; இதிஹாஸாதிகள் தன்னிலேயும் இந்த்ரியங்களுக்கு பௌதிகத்வம் சொல்லப்படுகை யால் பூதங்கள் இவற்றுக்குக் காரணமாகவேணுமே! என்ன; (பூதங்கள் ஆப்யாயகங்களித்தனை) என்கிறார். அதாவது - இதிஹா ஸாதிகளில் இந்த்ரியங்களுக்குச் சொன்ன பௌதிகத்வம் - பூதங்க ளாலுண்டான ஆப்யாயநமாத்ரத்தைப் பற்றவாகையாலே, இந்த்ரி யங்களுக்கு பூதங்கள் ஆப்யாயகங்களித்தனை, காரணங்களன்றென் கை. ஆப்யாயகத்வமாவது - போஷகத்வம்; இன்னமும், அஹங்கா ரத்தை இந்த்ரியங்களுக்கு நிமித்தகாரணமாகவும் பூதங்களை யிவற் றுக்கு உபாதாநகாரணமாகவும் சொல்லுகிறதொரு குத்ருஷ்டிமத முண்டிறே. (௨௭௬) "அஹங்காரஸ்ய வ்ருத்தீ யாணி ப்ரக்ருதிஸ்தத்ஸ்வ ஏவ ஸ்தாநா ஏவாவாதாநகம்" "அணுமயம் ஹிஸௌம்ய மந: ஆபோமயப் ப்ராணஸ்தேஜோமயீ வாக்" "ஜ்யோதிரேவ ரிதிகௌபிநாஸ ஹி, தஸ்யசக்ஷு; அஹங்காரஸ்யவோபாதாந மேவசி ஸ்தாநா ஸாஹ்யயமேவ வித்யாநிஶ்சயோமா வமேத:" என்று; பின்னைபெங்களாழ்வாரெடுத்துக்கழித்தது. அது வும், "இந்த்ரியங்களிலே சிலவற்றை" என்று தொடங்கி இவரரு ளிச்செய்த க்ரமந்தன்னாலே ப்ரதிக்ஷிப்தம். அப்போதைக்கு, (அது மான்த்ரவிருத்தம்) என்றது - (௨௭௭) "வைகாரிகம் தஶஸ்ம்ருதா தேவா வைகாரிகா: ஸ்ம்ருதா:" இத்யாதிகளாலே இவற்றை ஸாத்விகாஹங்கார கார்யமாகவே சொல்லுகிற புராணாதிகளுக்கு விருத்தமென்கை. புராணாதிகளைப்பற்ற, (௨௭௬) "அணுமயம் ஹி ஸௌம்ய மந:" இத்யாதி ஸ்ருதிக்கு ப்ராபல்யமுண்டேயாகிலும், (௨௭௮) "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்" என்கையாலே, உபப்ரும்ஹணாநுகூலமாக அதுக்குஅர்த்தங்கொள் ளவேணுமென்று கருத்து. ஆனால், உபப்ரும்ஹணங்கள் தன்னிலே யும் பௌதிகத்வஞ் சொல்லுகையாலே, இவற்றுக்கு பூதங்கள் கார ணமாயன்றோ தோற்றுகிறது என்ன; (பூதங்கள் ஆப்யாயகங்களித்

௯௪. இவைகூடினாலல்லது கார்யகரமல்லாமையாலே, மண்ணையும் மணலையும் நீரையும் சேர்த்தொரு த்ரவ்யமாக்கிச்சுவரிடுவோரைப்போலே, ஈஶ்வரனிவற்றையெல்லாம் தன்னிலே சேர்த்தோரண்டமாக்கி, அதுக்குள்ளே சதுர்முகனை ஸ்ருஷ்டித்தருளும்

தனை) என்று நிர்வாஹம். க்ராணாதிகளான இந்த்ரியங்களுக்கு ப்ருதிவ்யாதிபூதங்களாலுண்டான வாப்யாயநம் ஶ்ருதிஸ்ம்ருதிகளிலே ப்ரஸித்தம். இது தான் ஸுபாலோபநிஷத்வ்யாக்யாநத்திலே, (உ௭௯) "[illegible]" (உ௭௦) "[illegible]" "[illegible]" என்று, ஶ்ருதப்ரகாஶிகாசார்யராலே அபிஹிதமாயிற்று.

இப்படி, இந்த்ரியங்களுக்கு பூதங்கள் எப்போதும் ஆப்யாயகங்களாயிருக்குமென்னுமிடம், மோக்ஷதர்மத்திலே, ப்ருகு பரத்வாஜ ஸம்வாதத்திலே (உ௮௦) "[illegible]" என்று, ஸுவ்யக்தமாகச் சொல்லப்பட்டது. ஆகையால், பூதங்கள் இந்த்ரியங்களுக்கு ஆப்யாயகங்களித்தனை; காரணங்களன்று என்றதாயிற்று.

(௯௪) ஆக, இப்படி மஹதாதிபதார்த்தங்களினுடைய வுத்பத்திக்ரமம் அருளிச்செய்தாராய் நின்றார் கீழ்; இவற்றைக்கொண்டு ஈஶ்வரன் அண்டஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணும்படியை யருளிச்செய்கிறார் மேல்; (இவைகூடினாலல்லது கார்யகரமல்லாமையாலே) என்று. அதாவது-(உ௮௧) "[illegible]" என்கிறபடியே, ஶாந்தத்வ கோரத்வ மூடத்வங்களாலே நாநாஶக்தியுக்தங்களாய் ப்ருதக்பூதங்களாயிருக்கிற விம்மஹதாதி

பதார்த்தங்கள் பரஸ்பர ஸங்கதமானாலல்லது அண்டரூபமான கார்யத்தை யுத்பாதிக்கமாட்டாமையாலே யென்கை.

(மண்ணையும், மணலையும், நீரையும் சேர்த்து ஒரு த்ரவ்யமாக்கிச் சுவரிடுவாரைப்போலே) அதாவது - ப்ருதக் வீர்யங்களாய், ப்ருதக்ஸ்த்திதங்களா யிருக்கிற ம்ருத்ஸிகதா ஸலிலங்களை அந்யோந்யம்சேர்த்து தத்ஸமுதாயாத்மக மானதொரு த்ரவ்யமாக்கி பித்திரூபமானதொரு கார்யத்தை நிர்மிப்பாரைப்போலே என்கை.

(ஈஸ்வரன் இவற்றையெல்லாந் தன்னிலேசேர்த்து ஒரண்டமாக்கி) அதாவது-ஜகத்ஸ்ரஷ்டாவான ஈஸ்வரன், (உ௮உ) "ஸமேத்யாந்யோந்யஸம்யோகம் பரஸ்பரஸமாஶ்ரயா:" (உ௮௩) "ஏகஸங்காதலக்ஷ்யாஶ்ச ஸம்ப்ராப்யைக்யமஶேஷத: । மஹதாத்யா விஶேஷாந்தா ஹ்யண்டமுத்பாதயந்தி தே" என்கிறபடியே இவற்றையெல்லாம் அந்யோந்யம் ஸங்கதமாக்கி யிவற்றாலே அண்டஸ்ருஷ்டியைப்பண்ணியென்கை. இவ்வண்டத்துக்குள்ளே மஹதாதிகார்யங்களை யடையக்காண்கையாலே, மஹதாதிபதார்த்தங்களெல்லாவற்றையும்சேர்த்து அண்டஸ்ருஷ்டியைப் பண்ணினானென்னுமிடம் ஸுவ்யக்தம். ஆகையாலே, (உ௮௪) "பூதேப்யோண்டம் மஹாபுத்தே ப்ருஹத்ததுதகேஶயம்" என்று, பூதங்களில் நின்றும் அண்டம் உத்பந்நமாம்; அது உதகத்திலே கிடக்குமென்று சொன்னது உபலக்ஷணம் (உ௮ரு "அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமவாஸ்ருஜத் । ததண்டமபவத்தைமம் ஸஹஸ்ராம்ஶுஸமப்ரபம்" என்று, அப்புக்களில்நின்றும் அண்டம் உத்பந்நமாமென்று மநுபகவான்சொன்னதும் உபலக்ஷணம். அதாவது-பூர்வபூதாம்ஶங்களோடே ஸம்ஸ்ருஷ்டமுமாய், ப்ருதிவியும் தனக்குள்ளே கரைந்துகிடக்கிற ஜலத்தில்நின்றும் உத்பந்நமாய் அதிலே கிடக்குமென்றபடி.

இப்படி, அண்டஸ்ருஷ்டியைப்பண்ணும்படியை யருளிச்செய்து, அநந்தரம், இந்தபாஹ்யமானபூதங்கள் ஆந்தரமான வாகாஶாதிகளாய்ப் பரிணமித்தபின்பு அவற்றைக்கொண்டு லோகவிபாகங்களைப்பண்ணுகைக்காகவும், அந்த லோகங்களில் தேவாதிஜீவவிபா

௬௫. அண்டத்தையும் அண்டகாரணங்களையும் தானே யுண்டாக்கும்; அண்டத்துக்குட்பட்டவஸ்துக்களை சேதநர்க்கந்தர்யாமியாய் நின்றுண்டாக்கும்.

கங்கைப் பண்ணுகைக்காகவும், இவ்வண்டத்துக்குள்ளேபத்தாத்ம ஸமஷ்டி பூதனான ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டிக்கருளும்படியை யருளிச்செய்கிறார்; (அதுக்குள்ளே சதுர்முகனை ஸ்ருஷ்டிக்கருளும்) என்று. சதுர்முகனுக்கு பத்தாத்ம ஸமஷ்டிபாவமாவது - இவ்வண்டத்துக்கு வேண்டும் கர்மவஶ்யசேதநர் இவன் ஶரீரத்திலே யுண்டாய்க்கிடக்கை. இப்படி சதுர்முகனை ஸ்ருஷ்டித்தது இனிமேலுண்டான ஸ்ருஷ்டியெல்லாம் ஸத்வாரகமாகநின்று செய்வதாகவிறே.

(௬௫) அதுதன்னை கர்மிபிக்கைக்காக ஸமஷ்டி ஸ்ருஷ்டியிலும், வ்யஷ்டி ஸ்ருஷ்டியிலும் ஸர்வேஶ்வரன் செய்யும் க்ரமத்தை யருளிச்செய்கிறார் மேல்; (அண்டத்தையும், அண்டகாரணங்களையும் தானேயுண்டாக்கும்); அதாவது - ஸமுதாயகார்யமான வண்டத்தையும், தத்காரணமான மஹதாதி பதார்த்தங்களையும் ஸத்ய ஸங்கல்பனான தன்னுடைய அப்ரஹதஸங்கல்பத்தாலே யுண்டாக்குமென்கை. (உ௬௬) "ஸோபித்யாய ஶரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர்விவிதா: ப்ரஜா: । அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு பீஜமவாஸ்ருஜத்" என்னக்கடவதிறே.

(அண்டத்துக்கு உள்பட்ட வஸ்துக்களை சேதநர்க்கு அந்தர்யாமியாய் நின்று உண்டாக்கும்) அதாவது-சதுர்முகாதி சேதநருடைய ஹ்ருதயங்களிலேயிருந்து, (உ௬எ) "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச" என்று, ஸங்கல்பஜ்ஞாநாதிகளை ஜநிப்பித்துக்கொண்டு, அண்டாந்தர்வர்த்திகளான ஸகல பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டிக்குமென்கை. (உ௬அ) "யத்கிஞ்சித் ஸ்ருஜ்யதே யேந ஸத்வஜாதேந வை த்விஜ । தஸ்ய ஸ்ருஜ்யஸ்ய ஸம்பூதௌ தத்ஸர்வம் வை ஹரேஸ்தநு:" என்று, ஈஶ்வரன் ஸகலகர்த்ருஶரீரியாய்க்கொண்டு ஸகலகார்யங்களையும் ஸ்ருஷ்டிக்கும் என்னக்கடவதிறே.

௩௬. அண்டங்கள்தானநேகங்களாய், பதினாலுலோகங்களோடேகூடி, ஒன்றுக்கொன்று பதித்துமடங்கான ஏழாவரணங்களாலும் சூழப்பட்டு, ஈச்வரனுக்கு க்ரீடாகந்துகஸ்த்தாநீயங்களாய், ஜலபுத்புதம்போலே ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களாயிருக்கும்.

(௩௬) (ஈச்வரன் இவற்றையெல்லாந் தன்னிலேசேர்த்து ஓரண்டமாக்கி) என்று, ஸர்வேச்வரன், மஹதாதிபதார்த்தங்களைச் சேர்த்து அண்டஸ்ருஷ்டியைப் பண்ணுமென்னும் இவ்வளவிலே அருளிச்செய்தது; இப்போது, அந்த அண்ட பஹுத்வத்தையும், அவற்றினுடைய கட்டளை யிருக்கும்படியையும், அவைதான் ஸர்வேச்வரனுக்கு இன்னவிநியோகத்துக்கு உறுப்பென்னுமத்தையும், அவற்றினுடைய பரிணாமப்ரகாரத்தையும் அருளிச்செய்கிறார்; (அண்டங்கள் தான்) என்றுதொடங்கி. (அண்டங்கள்தான் அநேகங்களாய்) (உ௫௯) "அண்டாநாம் து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச। ஈத்ருசாநாம் ததா தத்ர கோடிகோடி சதாநி ச" என்னக்கடவதிறே. (பதினாலுலோகங்களோடேகூடி) பதினாலுலோகங்களாவன-கீழில் அண்டகபாலத்துக்குமேல் எண்பத்துமூன்று நூறாயிரத்தைம்பதினாயிரம் யோஜநம் உயர்த்தியுடைத்தான கர்ப்போதகத்தின்மேலே, (உ௬௦) "ஸப்ததிஸ்து ஸஹஸ்ராணாம் த்விஜோச்ச்ராயோபி கத்யதே। தசஸாஹஸ்ரமேகைகம் பாதாளம் முநிஸத்தம। அதலம் விதலஞ்சைவ நிதலஞ்ச கபஸ்திமத்। மஹாக்யம் ஸுதலஞ்சாக்ர்யம் பாதாளஞ்சாபி ஸப்தமம்" என்கிறபடியே, ஓரொன்று பதினாலாயிரம் யோஜநத்தளவு வுயர்த்தியையும் பரப்பையு முடைத்தாய், தைத்யதாநவபந்நகஸர்ப்பாதிகள் வர்த்திக்கும் தேசமாய், (உ௬௧) "சுக்லக்ருஷ்ணாருணா: பீதா: சர்க்கரா: சைலகாஞ்சநா:। பூமயோ யத்ர மைத்ரேய வராப்ராஸாதசோபிதா:" என்கிறபடியே. சுக்லங்களாயும், க்ருஷ்ணங்களாயும், அருணங்களாயும், பீதங்களாயும், அவாலுகாமயமான சர்க்கராரூபமாயும், சைலமாயும், பொன்னாயுமிருக்கிற ஸ்த்தலவிசேஷங்களையுடையவையாய், விலக்ஷணமான மாளிகைகளாலே யலங்க்ருதமாய், ஸ்வர்க்காதிகளிலுங்காட்டில் நிரதிசயபோக்யமாய், அதலமென்றும், விதலமென்றும்,

திதலமென்றும், கபஸ்திமத்தென்றும் சொல்லப்பட்ட தலாதலமென்றும், மஹாதலமென்றும், ஸுதலமென்றும், பாதாளமென்றும் பேரையுடைத்தான அதோலோகங்களேழும், இதுக்குமேல் எழுபதினாயிரம் யோஜநமகலத்தை யுடைத்தாய், ஸப்தத்வீபஸாகரபர்வதாதிவிசிஷ்டமாய், பாதசாரிகளான மநுஷ்யாதிகள் வர்த்திக்கும் தேசமாய், பத்மாகாரமான பூலோகமும், பூலோகத்துக்குமேல் ஆதித்யனுக்குக்கீழ் நூறாயிரம் யோஜநத்தளவு வுயர்த்தியையுடைத்தாய், கந்தர்வாதிகள் வர்த்திக்கும் தேசமான புவர்லோகமும், ஆதித்யனுக்குமேல் த்ருவனுக்குக்கீழ் பதினாலுநூறாயிரம் யோஜநத்தளவு வுயர்த்தியையுடைத்தாய், ஸாத்விகரான க்ரஹ நக்ஷத்ரேந்த்ராதிகள் வர்த்திக்கும் தேசமான ஸ்வர்லோகமும், த்ருவனுக்குமேல் ஒருகோடி யோஜநத்தளவு வுயர்த்தியையுடைத்தாய், (உகூஉ) "வித்ருதாயிகாராநஸுஹ்ரோக நிவாஸிநஃ" என்று, நிவ்ருத்தாதிகாரராய் அதிகாரபேக்ஷரான இந்த்ராதிகள் வர்த்திக்கும் தேசமான மஹர்லோகமும், அந்த மஹர்லோகத்துக்குமேல் இரண்டுகோடி யோஜநத்தளவு வுயர்த்தியை யுடைத்தாய், ப்ரஹ்மபுத்ரர்களான ஸநகாதிபரமயோகிகள் வர்த்திக்கும் தேசமான ஜநர்லோகமும், ஜநர்லோகத்துக்குமேல் எட்டுகோடி யோஜநத்தளவு வுயர்த்தியை யுடைத்தாய், வைராஜாக்யரான ப்ரஜாபதிகள் வர்த்திக்கும் தேசமான தபோலோகமும், தபோலோகத்துக்குமேல் நாற்பத்தெட்டு கோடி யோஜநத்தளவு வுயர்த்தியை யுடைத்தாய், (உகூங). "தெஷாமெஷாமெகைவ நாரதர்ஹோமொகா ப்ரஹ்மஸ்ஹோநோஹ்ஸ ஷிதமெதெவமொகாஃ। விஷெஷாநெஹ்ஸஷிமொகாவிஶாஷா ஸாஸஸாநுமொகாஸஸா ந்பாஸஹ்வ ஜஷி" என்கிற படியே, ப்ரஹ்ம விஷ்ணு சிவர்களும், அவர்களை யுபாஸித்து தத்ப்ராப்தி பண்ணினவர்களும் வர்த்திக்கும்தேசமான ஸத்யலோகமும், ஆக ஊர்த்வாதஃகடாஹங்களுக்கு நடுவு அறுபதுகோடியோஜநம் அண்டோச்ச்ராயமாயிருக்கும். ஐம்பதுகோடியோஜநம் அண்டோச்ச்ராயமென்பாருமுண்டு. அதில், உகூச, "ஸூர்யாணமௌஉயோஉர்த்வெந்கொட்யஸ்ஸு பஞ்சவிம்ஶதிஃ" என்கிற ஶௌநகவசநத்தின்படியே, ஸூர்யனுக்குமேல் இருபத்தஞ்சுகோடியும், கீழ் இருபத்தஞ்சுகோடியுமாயிருக்கும்.

இப்படியிருந்துள்ள சதுர்தசபுவநங்களோடேகூடி, (ஒன்றுக்கொன்று பதிற்றுமடங்கான ஏழாவரணங்களாலும் சூழப்பட்டு) அதாவது-கீழ்ச்சொன்ன பதினாலுலோகத்தையும், (௨௧௫) "ஸ தத்வைர்வ்ருதோ பாதி அண்டகடாஹேந ப்ரதிஷ்டித: கபித்தஸ்ய யதா பீஜம் ஸர்வதோ வை ஸமாவ்ருதம்" என்கிறபடியே, உள்வாயில் விளாஞ்சதையை விளாமேலோடு எங்குமொக்க ஆவரிக்குமாபோலே, (௨௧௬) "கோடியோஜநவிஸ்தீர்ண: கடாஹ: ஸம்வ்ருதஸ்ஸ்தித:" என்று, கோடியோஜனமிட்டம் அவகாசதயோக்தமானபடியே அண்டகடாஹம் ஆவரித்துநிற்கும். ஸாண்டகடாஹமான இவ்வண்டம், (௨௧௭) "தசோத்தரேண பயஸா ஸர்வதஸ்ஸமாவ்ருதம்" என்கிறபடியே, தன்னில் பதிற்றுமடங்கு பரந்திருக்கிற ஜலதத்வத்தாலே ஆவ்ருதமாயிருக்கும். (௨௧௮) "பஞ்சாசத்கோடிவிஸ்தாரா ஸேயமுர்வீ மஹாநதே । ஸஹைவாண்டகடாஹேந ஸத்வீபாப்திமஹீதரா" என்று, ஸாண்டகடாஹமான பூமண்டலம் - பஞ்சாசத்கோடி விஸ்தாரமாகச் சொல்லுவாரும், (௨௧௯) "ஸதத்வீபார்ணவா சதகோடிவிஸ்தாரம் ஸாண்டகடாஹம்" என்று, வாராஹபுராணத்திலே சொல்லுகையாலும், இப்படி, ஸ்காந்தபுராணத்திலே சிவாஹஸ்யத்திலே பரக்கச் சொல்லுகையாலும், மேருவைச் சுற்றும் பஞ்சாசத்கோடி விஸ்தாரத்தைக் கொண்டு பூமியை சதகோடி விஸ்தாரமாகச் சொல்லுவாருமாயிருக்கும். இதில், இரண்டுக்கொரு மர்யாதையையுக்தமாக்கி, அதில் பதிற்றுமடங்கு பெருத்தஜலதத்வத்தாலே ஆவ்ருதமாயிருக்குமென்றபடி. அண்டகடாஹத்தைப்பற்ற பதிற்றுமடங்கு பெருத்த ஜலதத்வத்தாலே ஆவ்ருதமென்பாருமுண்டு. இப்படி தசோத்தரமாய்க் கொண்டு ஜலதத்வத்தை தேஜஸ்தத்வம் ஆவரிக்கும், அப்படியத்தை வாயுதத்வம் ஆவரிக்கும், வாயுவை ஆகாசம் ஆவரிக்கும், ஆகாசத்தை அஹங்காரம் ஆவரிக்கும், அஹங்காரத்தை மஹத்தத்வம் ஆவரிக்கும், அந்த மஹத்தத்வத்தை அவ்யக்தம் ஆவரிக்கும் (௩௦௦) "தசோத்தராண்யாவரணானி" என்று, அபரிமிதப்ரமாணமான அவ்யக்ததுக்கு ஆவரணத்வப்ரயுக்தமான தசோத்தரத்வ கூடும்படி யெங்ஙனே? என்னில்; அபிரத்திலே பத்துமுண்டாமாபோலே அபரிமிதஸங்க்யையிலே பதுவுமுண்டாகையாலே

௯௭. பூதங்களில் ஆகாசம் அவகாசஹேது; வாயு வஹநாதி ஹேது; தேஜஸ்ஸு பசநாதிஹேது; ஜலம் ஸேசநபிண்டீகரணாதிஹேது; ப்ருதிவி தாரணாதிஹேது வென்பர்கள்.

கூடும். (௧௦௧) "வாரிவஹ்ந்யநிலாகாசைஸ் ததோ பூதாதிநா பஹி: । வ்ருதம் தசகுணைரண்டம் பூதாதிர்மஹதா ததா । அவ்யக்தேநாவ்ருதோ ப்ரஹ்மந் தைஸ்ஸர்வைஸ்ஸஹிதோ மஹாந் । ஏபிராவரணைரண்டம் ஸப்தபி: ப்ராக்ருதைர்வ்ருதம்" என்கிறபடியே, இப்படி தமோத்தரங்களான ஸப்தாவரணங்களாலும் சூழப்பட்டு; (ஈச்வரனுக்கு க்ரீடாகந்துகஸ்தாநீயங்களாய்) அதாவது-க்ரீடாபரனான பாலனுக்கு க்ரீடநகங்கள்போலே, க்ரீடாரஸாநுபூஷனான ஈச்வரனுக்கு லீலோபகரணங்களாயிருக்கை. (௧௦௨) "ஹரேர்விஹரதஸ்க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:" என்றும், (௧௦௩) "க்ரீடதோ பாலகஸ்யேவ சேஷ்டாம் தஸ்ய நிசாமய" என்றும் சொல்லுகிறபடியே, ஈச்வரனுக்கு விபூதியாக லீலோபகரணமாயிறே இருப்பது. (ஜலபுத்புதம்போலே, ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களாயிருக்கும்) அதாவது - இவ்வண்டங்களை ஈச்வரன் ஸ்ருஷ்டிக்குமளவில், ஒவ்வொரு படையாக இட்டு அடுக்குமாபோலே, க்ரமத்தாலே பரிணமிக்கையன்றியே, (௧௦௪) "நத்யா: பேநவிவ்ருந்தஸ்ய ஜாயந்தே புத்புதாஸ்ததா" என்கிறபடியே, நீர்க்குமிழிபோலே யொருகாலே உத்பந்நங்களாமென்கையும், அநேக ஜலபுத்புதங்கள் ஏககாலத்திலே யுத்பந்நங்களாமாபோலே, (௧௦௫) "ஸஹைககாலேந ஸ்ருஜ்யந்தே" என்கிறபடியே, ஸகலாண்டங்களும் ஏககாலத்திலே யுத்பந்நங்களாமென்கையும். ஆக, "அண்டங்கள் தான் அநேகங்கள்" என்னுமிடமும், அவை தான் எல்லாமொன்றுபோலே யிருக்குமென்னுமிடமுஞ் சொல்லிற்றாயிற்று.

(௯௭) பூதபஞ்சகங்களுக்கும் தனித்தனியே விநியோகங்களை தர்சிப்பிக்கிறார்மேல்; (பூதங்களில் ஆகாசம் அவகாசஹேது) அதாவது - ஸகலபதார்த்தங்களுக்கும், ஸ்த்திதி கமநாதிகளுக்கு இடங்கொடுத்துக்கொண்டிருக்கிறவிது - ஆகாசத்துக்கு விநியோகமென்கை. (௧௦௬) "ஸர்வேஷாமவகாசம் ஸ

௩௮ ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்துக்கும் அடைவே ஶப்தாதிகளைந்தையும் க்ரஹிக்கை தொழில்; வாகாதிகர்மேந்த்ரியங்களைந்துக்கும் விஸர்க்க ஶில்ப கத்யுக்திகள் தொழில்; மநஸ்ஸு-இவை யித்தனைக்கும் பொது.

க்ஷ்த்ரேவ । ஶப்³த³ஶ்ரோத்ரம் பஞ்சம்ஸ்ஹது ஸுக்ஷ்மகம் விவிக்தா" என்று, இதுக்கு அநேகவிநியோகங்க ளுண்டாயிருக்க இதொன்றையும் அருளிச்செய்தது இதினுடைய ப்ராதாந்யத்தைப் பற்ற. இதுதான் மற்றையவற்றுக்கும் உபலக்ஷணம். (வாயுவஹநாதிஹேது) வஹநம் - வஹிக்கை. ஆதிஶப்தத்தாலே - வ்யூஹந சேஷ்டாதிகளைச் சொல்லுகிறது. இதுதான்-(௩௦எ) "வாயோ: ஸ்பர்ஶோ யதோக்ஷோ க்ராஹ்யஶ்ச ஸ்பர்ஶேந்த்ரியம் । வஹநம் வஹநம்சைவ ஶ்வேகரோதிஸதா" என்று சொல்லப்பட்டதிறே. (தேஜஸ்ஸு-பசநாதிஹேது) பசநமாவது-பாகம்பண்ணுகை, ஆதிஶப்தத்தாலே-ஔஷ்ண்ய ப்ரகாஶாதிகளைச் சொல்லுகிறது. இதுவும், (௩௦அ) "அக்³நேர்ரூபம் சக்ஷுர்க்³ராஹ்யம் ப்ரகாஶகம் ரஸநேந்த்ரிய । ஸங்காதம் ஸர்வதேஹாநாம் பசதி" என்று. கதிதமாயிற்று (ஜலம் ஸேசநபிண்டீகரணாதிஹேது) ஸேசநமாவது-நனைக்கை, பிண்டீகரணமாவது - திரட்டுகை. ஆதிஶப்தத்தாலே - ஶைத்ய மார்த்தவாதிகளைச் சொல்லுகிறது. இதுவும் - (௩௦௯) "ஶுத்³தி⁴ஶேஷத்வம் ஸ்ரோதஸாம் ரஸநேந்த்ரிய । ஸாதாரம் ஶைலம் விஶீர்ணம் க்லேதநம்" என்று, அபிஹிதமாயிற்று. (ப்ருதிவி தாரணாதிஹேது, என்பர்கள்) தாரணம்-தரிக்கை, ஆதிஶப்தத்தாலே, மூர்த்திமத்வ குருத்வாதிகளைச் சொல்லுகிறது. (௩௧௦) "ஶப்³தா³தி³ பஞ்சகம் ஶர்வரீணம் யாராணாம் । உத்பத்திகம் ஸஹிஷ்ணுகம் ஸ்தோதி யதா" என்று, இதுவும் வ்யாஹ்ருதமாயிற்று. என்பர்கள் என்றது-தத்த்வவித்துக்கள் சொல்லுவர்கள் என்றபடி.

(௩௮) இனி, ஏகாதஶேந்த்ரியங்களினுடையவும் வ்ருத்தி பேதத்தை யருளிச்செய்கிறார்மேல் (ஶ்ரோத்ராதி) இத்யாதி.

௫௯. ஆகாஶாதி பூதங்களுக்கு அடைவே ஶப்தாதிகள் குணங்களாயிருக்கும்.

௬௰. குணவிநிமயம் பஞ்சீகரணத்தாலே.

ஶ்ரோத்ரத்துக்கு ஶப்தக்ரஹணமும், த்வகிந்த்ரியத்துக்கு ஸ்பர்ஶ க்ரஹணமும், சக்ஷுஸ்ஸுக்கு ரூபக்ரஹணமும், ஜிஹ்வைக்கு ரஸ க்ரஹணமும், க்ராணத்துக்கு கந்தக்ரஹணமும் தொழில்; (௫௧௧) "ஶ்ரோத்ரம் த்வக் சக்ஷுஷீ ஜிஹ்வா நாஸிகா சைவ பஞ்சமீ । ஶப்தாதீநாமவாப்த்யர்த்தம் புத்தியுக்தாநி வை த்விஜ" என்னக் கடவதிறே; இந்த ஶ்லோகத்தில், இந்த்ரியங்களை வ்யுத்க்ரமமாக வெடுக்கையாலே, இன்னதுக்கு இன்னது விஷயமென்கிறநியமம் ந்யாயங்கொண்டு நிஶ்சயிக்கவேணும். ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கு ஶப்தாதிகளை க்ரஹிக்கை தொழிலென்னுமிவ்வளவே ப்ரகாஶிப்பது. (வாகாதி) இத்யாதி. இப்படி வ்யுத்க்ரமமாக வருளிச்செய்தது வாக்யஸ்வாரஸ்யத்துக்காக. இத்தால், வாக்குக்கு உக்தியும், பாணிக்கு ஶில்பமும், பாதத்துக்கு கதியும், உபஸ்தபாயுக்களுக்கு ஜலமலவிஸர்ஜநமும் தொழிலென்கை. (௫௧௨) "வாயூபஸ்தௌ கரௌ பாதௌ வாக் ச மைத்ரேய பஞ்சமீ । விஸர்க்கஶில்பகத்யுக்தி கர்ம தேஷாம் ச கத்யதே" என்னக்கடவதிறே. (மநஸ்ஸு - இவையித்தனைக்கும்பொது) அதாவது - ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஸ்வ ஸ்வவிஷயங்களை க்ரஹிக்கும்போதும், கர்மேந்த்ரியங்கள் ஸ்வஸ்வ கர்மங்களைப் பண்ணும்போதும் மநஸ்ஸஹகாரம் வேண்டுகையாலே உபயாத்மகமான மநஸ்ஸு - இவையித்தனைக்கும் ஸாதாரணமாயிருக்குமென்கை.

(௫௯) ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கு விஷயங்களாகச் சொல்லப்பட்ட ஶப்தாதிகள் ஐந்தும், ஆகாஶாதிகளுக்கு ப்ரதிநியதகுணங்களாயிருக்கும்படியை யருளிச்செய்கிறார்; (ஆகாஶாதி பூதங்களுக்கு) இத்யாதியால். அதாவது - ஆகாஶகுணம்-ஶப்தம், வாயு குணம்-ஸ்பர்ஶம், அக்நிகுணம்-ரூபம், ஜலகுணம்-ரஸம், பூகுணம்-கந்தம் என்றபடி.

(௬௰) இப்படி, ப்ரதிநியதகுணங்களான பூதங்களுக்கு குண விநிமயம் வருகைக்கு அடி யருளிச்செய்கிறார்; (குணவிநிமயம் -

பஞ்சீகரணத்தாலே) என்று. குணவிநிமயமாவது - ஏகபூதத்திலே பூதாந்தரகுணங்களும் காணலாம்படி பூதங்களிலுண்டான குணக் கலப்பு. ஸ்ருதப்ரகாஶிகாகாரர் ஸாங்க்யபக்ஷத்திலே, (௩௧௩) "தேஜோவாரிக்ஷிதீநாம் ச வ்யதிஷங்க:" என்கிறவிதுக்கு (௩௪௭) "விநி மய:-ஸர்வஸ்ய ஸர்வஸம்மிஶ்ரீகரணம்" என்றாரிறே. இங்கும், பரஸ்பர ஸம்மிஶ்ரீகரணமே விநிமயஶப்தார்த்தம். அங்கு, பூதங்களுக்கு அந்யோந்யம் கலப்புச்சொல்லிற்று; இங்கு, குணங்களுக்கு அந் யோந்யம் கலப்புச்சொல்லுகிறது. குணங்களுக்கந்யோந்யம் கலப் பாவது-பூதமும் பூதாந்தரமும்போலே, குணமும் குணாந்தரமும் தன்னிலே கலக்கையன்று; ஒன்றினுடையகுணம் ஒன்றிலேபுக்கு, எல்லாவற்றிலும் எல்லாமுண்டாம்படியிருக்கை. அதவா, விநிமய மாவது - ஒன்றைக்கொடுத்து ஒன்றைக் கொள்ளுகையாய், தன் குணத்தை பூதாந்தரங்களுக்குக்கொடுத்து, அதின் குணத்தைத் தான் பஜிக்கையென்னவுமாம்; இத்தால், தன்குணம் அந்யத்தின் பக்கலிலுண்டாய் அந்யத்தினுடையகுணம் தன்பக்கலிலுண்டாம் படியிருக்கையைச் சொல்லுகிறது. இந்த குணவிநிமயம்-பஞ்சீகர ணத்தாலே என்றதுக்குக்கருத்து - குணங்களாகையாலே ஆஶ்ர யாதந்யத்ர வ்ருத்தியில்லையிறே இவற்றுக்கு; ஆகையால், த்ரவ்யத்தினுடைய கலப்பே குணக்கலப்புக்கு ஹேதுவென்கை. பஞ்சீகரணமாவது - (௩௧௫) "ஶப்தாதிதேஷ்வ ஸ்த்ரீதாநி வைஷ்ணவம் ஸ்வர்கம்யாதத: । ததஸ்யாநி ஜஸ்ஸ்வ்யகை யங்யங்தயாபூதி தத:। வைஶ்யோ ஸ்யதஶ்ரீமாந் கணைவாஸ்ய தேஜஸ் ஸமாஸவாநு । ஸ்யந்தியாதி வாயோஸ்ஸ வைஶ்ய தேஜஸ் ஸமாஸவாநு" இத்யாதி புராணங்களிலே சொல்லு கிறபடியே ஆகாஶாதிபூதங்களைந்தையும் தனித்தனியே யிரண்டு கூறாக்கி, அவற்றிலே யொருகூறை நாலுகூறாக்கி, அந்தக்கூறுகளை பூதாந்தரங்களிலே கூட்டி, ஸர்வபூதங்களிலும் ஸர்வமுண்டாம்படி பண்ணுகை. இப்படி பஞ்சீகரணமானாலும், அவிபக்தமான வர்த்தங் கள் ப்ரதாநங்களாய் நிற்கையாலே, ஆகாஶாதிபூதபேத வ்யவஹா ரத்துக்கும் குறையில்லை.

௪௩. ஆகாஶம்-கறுத்துத்தோற்றுகிறதுமத்தாலே.

௪௨. முன்புத்தை தந்மாத்ரைகளோடே கூடிக்கொண்டு, உத்த ரோத்தரதந்மாத்ரைகள் ஸ்வவிஶேஷங்களைப் பிறப்பிக் கையாலே, குணாதிக்யமுண்டாயிற்றென்றும் சொல்லு வர்கள்.

---

௪௩. (ஆகாஶம் கறுத்துத் தோற்றுகிறதும் அத்தாலே) அதாவது - அதிஸூக்ஷ்மதையாலே கண்ணுக்குத் தோற்றாதபடி யிருக்கும் ஆகாஶத்துக்கு சக்ஷுர்விஷயத்வமும், (ஞூகரு) "யத்க்ருஷ்ணம் தத்வாயவீ" என்று, ப்ருதிவிக்கு உள்ளதொன்றாகச் சொல்லுகிறக்ருஷ்ணத்வமும் உண்டாயிற்றது பஞ்சீகரணத்தாலே என்கை இத்தால், த்ரிவ்ருத்கரணத்தைச் சொன்னவநந்தரம், ஶ்ருதிதானே, (ஞூகள) "யதக்நே ரோஹிதம் ரூபம் தேஜஸஸ்தத்ரூபம் யச்சுக்லம் ததபாம் யத்க்ருஷ்ணம் ததந்நஸ்ய" என்று, அக்நியிலே த்ரிரூபத்வத்தை தர்ஶிப்பித்தாப்போலே, இவரும் பஞ்சீகரணத்தை யருளிச்செய்த வநந்தரம், அதுதன்னை ஸர்வத்ரையும் பற்ற ஸூக்ஷ்மமாயிருப்பதொரு பூதத்திலே தர்ஶிப்பித்தாராயிற்று. இப்படி ஸ்ரீபாஷ்யத்திலே (ஞூ௪அ) "யதக்நே ரோஹிதம் ரூபம் தேஜஸஸ்ததபாமபி । ஶுக்லம் க்ருஷ்ணம் ப்ருதிவ்யாஶ்ச த்ரிவ்ருத்கரணமேவ த்ரிரூபதா । ஶ்ருதௌ த்ரிவ்ருத்க்ருதத்வாத் ஸர்வே ஸர்வத்ர ஸங்கதா:" என்று, பாஷ்யகாரரு மருளிச்செய்தார். சாந்தோக்யத்தில், பஞ்சீகரணம்சொல்லாதே த்ரிவ்ருத்கரணத்தைச் சொல்லுவானேன் ? என்னில்; இங்கு, தேஜோபந்நங்கள் மூன்றி னுடையவும் உத்பத்திமாத்ரமிறே சொல்லிற்று; ஶ்ருத்யந்தரத்திற் சொல்லுகிற ஆகாஶவாயுக்களினுடையவும், அவ்பக்த மஹதஹங் காராதிகளினுடையவும் உத்பத்தி தானுஞ் சொல்லிற்றில்லையிறே; ஆகையால், தேஜோபந்நமாத்ரகதநம்- தத்வாந்தரங்களுக்கும் உபல க்ஷணமானாப்போலே, த்ரிவ்ருத்கரணகதநமும்-பஞ்சீகரணத்துக்கும் உபலக்ஷணம். இப்படி, பஞ்சீகரணத்தாலே ஸகலபூதங்களும் பரஸ்பர மிஶ்ரங்களாகையாலே, ஶப்தாதிகுணபஞ்சகமும் ஸர்வபூதங்களிலு முண்டாயிருக்குமென்று, குணவிநிமயஹேதுசொல்லிற்றாயிற்று.

(௪௨) இனி, ஆகாஶாதிகளில் பூர்வபூர்வத்தைப்பற்ற, உத்த ரோத்தரதத்வத்துக்கு குணாதிக்ய முண்டாகைக்கு மூலம் அருளிச்

௬௫. ஸத்வ ஶூந்யமாவது - காலம்.

செய்கிறார்; (மூன்புத்ஸைதந்மாத்ரைகள்) என்று தொடங்கி; அதாவது-ஶப்ததந்மாத்ரத்தாலே ஆவ்ருதமாய்க்கொண்டு, ஸ்பர்ஶதந்மாத்ரம்-ஸ்வவிஶேஷமான வாயுவை ஜநிப்பிக்கையாலே வாயுவுக்கு ஸ்பர்ஶஶப்தங்களிரண்டும் குணமாயிற்று. இப்படி, ஶப்ததந்மாத்ரத்தாலே ஆவ்ருதமான ஸ்பர்ஶதந்மாத்ரத்தாலே ஆவ்ருதமாய், அவையிரண்டோடுங்கூடி நின்று, ரூபதந்மாத்ரம்-ஸ்வவிஶேஷமான தேஜஸ்ஸை ஜநிப்பிக்கையாலே அத்தத்வத்துக்கு, ஶப்தஸ்பர்ஶரூபங்களாகிற மூன்றுகுணங்களுமுண்டாயிற்று. இப்படி, பூர்வ தந்மாத்ரத்வயவிஶிஷ்டமான ரூபதந்மாத்ரத்தாலே ஆவ்ருதமாய், அவைமூன்றோடே கூடி நின்று, ரஸதந்மாத்ரம்-ஸ்வவிஶேஷமான ஜலத்தை ஜநிப்பிக்கையாலே, அதுக்கு ஶப்தஸ்பர்ஶரூபரஸங்களாகிற நாலுகுணங்களுமுண்டாயிற்று. இப்படி, பூர்வ தந்மாத்ரத்ரய விஶிஷ்டமான ரஸதந்மாத்ரத்தாலே ஆவ்ருதமாய்க்கொண்டு, கந்ததந்மாத்ரம்-ஸ்வவிஶேஷமான ப்ருதிவியைப் பிறப்பிக்கையாலே, அதுக்கு ஶப்தாதிகளான அஞ்சு குணங்களும் உண்டாயிற்று என்கை. இத்தால் - ஏகைகதுணைஶ்ரயமான ஆகாஶாதிபூதங்களுக்கு குணவிநியமம் பஞ்சீகரணப்ரயுக்தமானவோபாதி உத்தரோத்தரபூதங்களில் குணாதிக்யமும் ஸ்வஸ்வதந்மாத்ரங்களுக்குண்டான ஆவரணப்ரயுக்தமென்றதாயிற்று என்றும் சொல்லுவார்களென்று கீழ்ச்சொன்னத்தோடே இத்தையும் ஸமுச்சயித்தருளிச் செய்கிறார்; இப்படி, தத்வவித்துக்கள் சொல்லுவர்களென்கை. (௯௧௧௯) "ஆகாஶம் ஶப்தமாத்ரம் து ஸ்பர்ஶமாத்ரம் ஸமாவிஶத் । ரூபம் ததைவ விஶத ஶப்தஸ்பர்ஶகுணாவுபௌ । ஶப்தஸ்பர்ஶௌ ச ரூபஞ்ச ரஸமாத்ரம் ஸமாவிஶந் । தஸ்மாச்சதுர்குணா ஹ்யாபோ விஶேஷாஶ்ச்ருதி யத்ராஹா:" என்னக்கடவதிறே.

(௬௫) உத்தேஶக்ரமத்திலே, ஶுத்தஸத்வ மிஶ்ரஸத்வங்களினுடைய ஸ்வரூபாதிகளைத் தெளியவருளிச்செய்தார் கீழ்; இனி ஸத்வஶூந்யமாகிறது ஏது? என்னும் ஆகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார்; (ஸத்வஶூந்யமாவது-காலம்) என்று. ஸத்வகுணம்-ஙு

சச. இது, ப்ரக்ருதிப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய், கலாகாஷ்டாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய், நித்யமாய், ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், ஶரீரபூதமாயிருக்கும்.

ஸ்தமஸ்ஸுக்களுக்குப் உபலக்ஷணமாய், ஸத்வஶூந்யமென்றது - ஸத்வாதிகுணத்ரய ஶூந்யமென்றபடி. இத்தால், கேவல ஸத்வமாயும் குணத்ரயாஶ்ரயமாயு மிருக்கிற அசித்த்வயத்தையும் பற்ற இது வ்யாவ்ருத்தஸ்வரூபமா யிருக்குமென்கை.

(சச) இதினுடைய ப்ரகாரம் ஏது? என்னு மாகாங்க்ஷையிலே சொல்லப்படுகிறது மேல்; (இது, ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்குஹேதுவாய்)ப்ரக்ருதியென்கிறது- அவ்யக்தத்தை; ப்ராக்ருதமென்கிறது - வ்யக்தத்தை; ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு காலதத்வம் ஹேதுவாகையாவது - இவற்றை ஸ்வஸங்கல்பாதிகளாலே பரிணமிப்பிக்கிற ஸர்வேஶ்வரன், காலத்தினுடைய அவஸ்தாவிஶேஷங்களைப் பார்த்துக் கொண்டிருந்து, அவ்வவகாலங்கள் வந்தவாறே யிவற்றை நிர்வஹிக்கையாலே, இவற்றினுடைய பரிணாமங்களுக்கு இது அபேக்ஷிதமா யிருக்கை; (௩௨௦) "ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ ப்ரவிஶ்யாத்மேச்சயா ஹரி: । க்ஷோபயாமாஸ ஸம்ப்ராப்தே ஸர்க்ககாலே வ்யயாவ்யயௌ" (௩௨௧) "காலஸ்வரூபம் விஷ்ணோஶ்ச யந்மயோக்தம் தவாநக ... ப்ரவ்ருத்திஶ்ச ... ஸர்க்காதிஷு ..." என்கிறபடியே, ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுகிறபோது, அக்காலம் வருமளவும் பார்த்துக்கொண்டிருந்திறே ஸ்ருஷ்டித்தது. இதுதான் ஸ்திதியாதிகளுக்கு மொக்குமிறே. இப்படி, காலப்ரதாநமாக ஸர்வேஶ்வரன் நிர்வஹித்தருளுகை யாலே, இவ்விபூதியில் ஸகலபதார்த்தமும் காலக்ருத பரிணாமமா யிருக்கும். இவற்றினுடைய பரிணாமங்களுக்கு காலம் ஹேதுவென்னுமிடம், இதினுடைய அந்வயவ்யதிரேகங்களாலே, லௌகிகபதார்த்தங்களிலே காணலாமிறே. ஆகையால், காலத்தினுடைய ப்ரக்ருதி ப்ராக்ருத பரிணாமஹேதுத்வம், ஆகமத்தாலும். ப்ரத்ய

க்ஷத்தாலும் ஸித்தம். அநந்தரம், கீழ்ச்சொன்னத்துக்கு உபயோகியான விதின் பரிணாமவிசேஷத்தைச் சொல்லுகிறது; (கலாகாஷ்டாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய்) (௩-உஉ) "காஷ்டா பஞ்சதஶாக்யாதா நிமேஷா முநிஸத்தம । காஷ்டாஸ்த்ரிம்ஶத் கலா த்ரிம்ஶத் கலா மௌஹூர்த்திகோ விதி: । தாவத்ஸங்க்யைரஹோராத்ரம் முஹூர்த்தைர் மாநுஷம் ஸ்ம்ருதம் । அஹோராத்ராணி தாவந்தி மாஸ: பக்ஷத்வயாத்மக: । தை: ஷட்பிரயநம் வர்ஷம் த்வேऽயநே தக்ஷிணோத்தரே । அயநம் தக்ஷிணம் ராத்ரிர் தேவாநாமுத்தரம் திநம் । திவ்யைர்வர்ஷஸஹஸ்ரைஸ்து க்ருதத்ரேதாதிஸம்ஜ்ஞிதம் । சதுர்யுகம் த்வாதஶபிஸ்தத்விபாகம் நிபோத மே । சத்வாரி த்ரீணி த்வே சைகம் க்ருதாதிஷு யதாக்ரமம் । திவ்யாப்தாநாம் ஸஹஸ்ராணி யுகேஷ்வாஹு: புராவித: । தத்ப்ரமாணை: ஶதை: ஸந்த்யா பூர்வா தத்ராபிதீயதே । ஸந்த்யாம்ஶகஶ்ச தத்துல்யோ யுகஸ்யாநந்தரோ ஹி ஸ: । ஸந்த்யாஸந்த்யாம்ஶயோரந்தர்ய: காலோ முநிஸத்தம । யுகாக்ய: ஸ து விஜ்ஞேய: க்ருததரேதாதிஸம்ஜ்ஞித:" என்று தொடங்கி, "ஏவம் து ப்ரஹ்மணோ வர்ஷம் ஏவம் வர்ஷஶதம் ச தத் । ஶதம் ஹி தஸ்ய வர்ஷாணாம் பரமாயுர்மஹாத்மந:" என்னுமதளவாக, காலத்தினுடைய பரிணாமவிசேஷம், ஸ்ரீபராஶரபகவானாலே கதிதமாயிற்று. இதுதன்னை, நம்பிள்ளைபட்டர், "நிமேஷம் பதினைந்துகொண்டது காஷ்டை, காஷ்டை முப்பதுகொண்டது கலை, கலை முப்பதுகொண்டது முஹூர்த்தம், முஹூர்த்தம் முப்பதுகொண்டது திவஸம், திவஸம் முப்பதுகொண்டது பக்ஷத்வயரூபமான மாஸம், மாஸமிரண்டுகொண்டது ருது, ருதுமூன்றுகொண்டது அயநம், அயநமிரண்டுகொண்டது ஸம்வத்ஸரம். இப்படி, மாநுஷஸம்வத்ஸரம் முந்நூற்றறுபதுகொண்டது ஒரு தேவஸம்வத்ஸரம், தேவஸம்வத்ஸரம் பன்னீராயிரங்கொண்டது சதுர்யுகம். அதில், க்ருதயுகம் நாலாயிரம், த்ரேதை மூவாயிரம், த்வாபரம் இரண்டாயிரம், கலியுகம் ஆயிரம். க்ருதயுகத்துக்கு பூர்வஸந்த்யை நானூறு, அபரஸந்த்யை நானூறு; த்ரேதைக்கு பூர்வஸந்த்யை முந்நூறு, அபர

ஸந்த்யை மூந்நூறு; த்வாபரத்துக்கு பூர்வஸந்த்யை யிருநூறு, அபரஸந்த்யை யிருநூறு; கலியுகத்துக்கு பூர்வஸந்த்யை நூறு, அபரஸந்த்யை நூறு. இப்படி எழுபத்தொன்று சென்ற சதுர்யுகம் ஒரு மந்வந்தரம்; இப்படி பதினாலு மந்வந்தரம் ஆயிரம் சதுர்யுகம். இது ப்ரஹ்மாவுக்கு ஒருபகல்; ராத்ரியும் இத்தோடே ஸமமா யிருக்கும். இப்படி அஹோராத்ரங்களும், மாஸஸம்வத்ஸரங்களு மாகப் பெருக்கி, பரார்த்தமாக பரிகணிதமான ப்ரஹ்மாயுஸ்ஸுக்கு பரமென்று பேராம்." என்று ஸவ்யக்தமாக வருளிச்செய்தார். ஆக, காலத்தினுடைய கலாகாஷ்டாதிரூப பரிணாமப்ரகாரம் சொல்லப்பட்டது. (நித்யமாய்) இவ்விடத்தில் நித்யத்வமாவது - (கூஉகூ) "[illegible]" என்கிறபடியே ஆத்யந்தரஹிதமாகை.

(ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய்) அதாவது - நிகிலஜகது தயவிபவலயலீலனை ஸர்வேஶ்வரனுக்கு தத்தல்லீலோபகரண மாகை. ப்ரக்ருதி புருஷகாலங்கள் மூன்றும் லீலோபகரணமா யிறே இருப்பது. அதில், ப்ரக்ருதிபுருஷர்கள் ஸ்ருஷ்ட்யாதி களுக்கு கர்மீபவித்து லீலோபகரணமாவர்கள்; இது, ஸஹகாரித் வேந லீலோபகரணமாயிருக்கும்; ஈஶ்வரன் ஸ்ருஷ்ட்யாதிகளை நிர் வஹிக்குமிடத்தில் ஸத்யஸங்கல்பனான தான் அடியிலே பண்ணி வைத்த காலநியமம் தப்பாதபடி அவ்வவகாலாகமநம் பார்த் திருந்தே நிர்வஹிக்கையாலே. இது தன்னை நிமேஷகாஷ்டாதி ரூபேண பரிணமிப்பிக்கையாலே, இது தான் ஸ்ருஷ்டிவிஷயமுமா யிறே இருப்பது. ஆக இப்படிகளாலே ஈஶ்வரனுக்கு க்ரீடாபரி கரமா யிருக்கும். இத்தை க்ரீடாபரிகரமென்றே சொல்லுகையாலே காலக்ருதபரிணாமமேயாய்ச் செல்லுகிறலீலாவிபூதியிலே யிதுக்கு விநியோகம். (கூஉச) "[illegible]" என்கிறபோக விபூதியில் இதுகொண்டு அபேக்ஷையில்லை யென்றதாயிற்று. அநந் தரம், ஏவம்பூதமான காலதத்வம்-ஈஶ்வரனுக்கு அப்ருதக்ஸித்த விஶேஷணமா யிருக்கும்படியை யருளிச்செய்கிறார், (ஶரீரபூதமா யிருக்கும்) என்று. (கூஉரு) "[illegible] । [illegible]" (கூஉசா) "[illegible]

௪௫. மற்றை யிரண்டசித்தும், ஈஶ்வரனுக்கும் ஆத்மாவுக்கும் போக்ய போகோபகரண போகஸ்தாநங்களாயிருக்கும்

காஷ்டாதிவிஹாமய: । ந பரிணாம வ்ருத்திஹ்ராஸாதி வ்ருத்தி ஹேதவ:" (௩-௨-௭) "விஷ்ணோஸ் ஸ்வரூபாத் பரதோ ஹி தே(அ)ந்யே ரூபே ப்ரதாநம் புருஷஶ்ச விப்ர । தஸ்யைவ தே(அ)ந்யேந த்ருதே வியுக்தே ரூபாதி யத் தத் த்விஜ காலஸம்ஜ்ஞம்"

என்னக்கடவதிறே, ஒருசேதநனோடு ஒருத்ரவ்யத்துக்குண்டான ப்ருதக்ஸித்த்யநர்ஹாதாராதேயபாவமும், நியந்த்ருநியாம்ய பாவமும், ஶேஷஶேஷி பாவமும் ஒன்றிறே ஶரீரலக்ஷணமாயிறே இருப்பது; காலஸம்ஜ்ஞிகாசித்த்ரவ்யத்துக்கு ஏதத் ஸம்பந்தத்ரயமும் ஈஶ்வரனோடே யுண்டாகையாலே, இது அவனுக்கு ஶரீரமாயிருக்குமென்றதாயிற்று. இப்படி, ப்ராக்ருதாதி பரிணாம ஸஹகாரியான காலம் - ஈஶ்வரனுக்கு ஶரீரமாயிருக்குமென்கை யாலே ஸஹகாரிகாரணமும் ஈஶ்வரனேயென்னுமதுக்கு விரோத மில்லை. ஆக, ஸத்வஶூந்யமாகிறது இன்னதென்றும், அது செய்யும் கார்யமும், அதுக்குறுப்பான வதினுடைய பரிணாமமும், அதினுடைய அநாதிநிதநத்வமும், அதுதான் ஈஶ்வரனுக்கு இன்னதுக்குப் பரிகரமாயிருக்குமென்றும், அதுதான் அவனுக்கு ஶரீரமாயிருக்குமென்றும் சொல்லிற்றாயிற்று.

(௪௫) த்ரிவிதாசித்தையும் அருளிச்செய்கிறவிடத்தில், அவனுக்கு போகோபகரணமான கௌரவத்தைப்பற்ற ஶுத்தஸத்வத்தை ப்ரதமமருளிச்செய்தார்; அநந்தரம், அவனுடைய லீலைக்கு ப்ரதாநோபகரணமாய்க்கொண்டு ப்ரதாநஶப்தவாச்யமான மிஶ்ர ஸத்வத்தை யருளிச்செய்தார்; அநந்தரம், அந்த ப்ரதாநபரிணாமத்துக்கு ஸஹகாரியாய்க்கொண்டு லீலோபகரணமாயிருக்கும் ஸத்வஶூந்யத்தை யருளிச்செய்தார். இப்படி அசித்த்ரயத்தையும் சொல்லுகிறவிடத்தில், (ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய்) என்று, காலதத்வத்துக்கு விநியோகம் சொன்னவோபாதி, பூர்வாசித் த்வயத்துக்கும் விநியோகம் சொல்லப்பட்டதில்லையிறே. அத்தை யருளிச்செய்கிறார் மேல்; (மற்றை யிரண்டு அசித்தும்) என்று தொடங்கி. ஈஶ்வரனுக்கும், ஆத்மா

௬௯. போக்யங்களாகிறன - விஷயங்கள்; போகோபகரணங்களாகிறன - சக்ஷுராதிகரணங்கள்; போகஸ்த்தாநங்களாகிறன-சதுர்த்தசபுவநமும், ஸமஸ்ததேஹமும்.

வத்சம் என்றது - சேதநரிறே அசேதநத்துக்கு போக்தாக்கள், சேதநராகவுள்ளது ஈஶ்வரனும் ஆத்மாவுமிறே; ஆனபின்பு, உபயர்க்கும் போக்யாதிகளாயிருக்குமென்றபடி. 'ஆத்மாவுக்கு' என்ற ஏகவசநம் ஜாத்யபிப்ராயமாகையாலே த்ரிவிதசேதநரையும்சொல்லுகிறது. இப்படி, உபயாஸித்தும் உபயர்க்கும் போக்யாதிகளாயிருந்ததேயாகிலும் கேவல பகவதிச்சையாலே தத்போகார்த்தமாக ப்பரிணமிக்கையாலும் அநவரதாநுபவாபேக்ஷித ஸ்வ பர ஸ்வரூபரான நித்யமுக்தரில், (௩௨௭) 'திருமகளும் நீயும்' என்கிறபடியே, அம்மிதுநத்தினுடைய போகத்துக்குக் கைகொடுமானமாயிருக்குமதொழிய (௩௨௮) "ஸஹம்ஸ" என்றிருப்பாரில்லாமையாலும், ஶுத்தஸத்வத்தினுடைய விநியோகம் ஈஶ்வரப்ரதாநமாயிருக்கும். அங்ஙனன்றிக்கே, சேதநசர்மாநுகுணமாக பகவத்ஸங்கல்பத்தாலே பரிணமிக்கையாலும், சேதநரெல்லாரும் தேவாதிஶரீரங்களிலே அஹம்புத்தியைப்பண்ணி ஸ்வதந்த்ரபோக்தாக்களாயிருக்கையாலும், ஈஶ்வரனுக்கு இந்தவிபூதியில் லீலாரஸமே ப்ரசுரமாய் போகரஸம் அத்யல்பமாகையாலும் மிஶ்ரஸத்வத்தினுடைய விநியோகம் பத்தசேதநப்ரதாநமாயிருக்கும்.

(௬௯) அந்த விபூதியில் போக்யங்களாவன - அப்ராக்ருதமான ஶப்தாதிகள். போகோபகரணங்களாவன - திவ்யமால்யாதிகளும், சத்ரசாமராதிகளும், கரணங்கள் தானும். போகஸ்த்தாநங்களாவன - அப்ராக்ருத ரத்நமயமான மண்டபமென்ன மாளிகையென்ன இத்யாதிகளும், பஞ்சோபநிஷண்மயமான திவ்யவிக்ரஹங்களும். இப்படி, நித்யவிபூதி ப்ரக்ரியையும் இவ்விடத்திலே யருளிச்செய்ய வேண்டியிருக்க, ஸங்கோசித்து லீலாவிபூதி ப்ரக்ரியாமாத்ரத்தை யருளிச்செய்கிறார்; (போக்யங்களாகிறன) என்று தொடங்கி இது தானே உபயவிபூதிக்குமாறுலோ? என்னில்; போகோபகரணங்களில் ப்ரதாநங்கள் சொல்லாமையாலும், போகஸ்த்தாநங்களில் வைஷம்யத்தாலும் சேராது. இங்கு, சேதநர்க்கு போகமாவது - ஸுகதுஃகரூபமான அநுபவஜ்ஞாநம். அந்தஜ்ஞாநத்துக்கு விஷய

சஎ. இதில், முற்பட்டவசித்துக்குக் கீழெல்லையுண்டாய், சுற்றும் மேலுமெல்லையின்றிக்கே யிருக்கும்; நடுவிலசித்துக்குச் சுற்றுங்கீழுமெல்லையின்றிக்கே, மேலெல்லையுண்டாயிருக்கும், கால மெங்குமொக்க வுண்டாயிருக்கும்.

சஅ. காலந்தான் - பரமபதத்தில் நித்யம், இங்கு அநித்யமென்றுஞ் சொல்லுவர்கள்.

மாகையாலே, ஶப்தாதிவிஷயங்கள் போக்யங்கள். அந்த ஜ்ஞாநத்துக்கு உபகரணங்களாகையாலே, இந்த்ரியங்கள் போகோபகரணங்கள். யாதொரு அதிகரணத்திலே நிற்கிற சேதநனுக்கு அந்தஜ்ஞாநம் பிறக்கிறது, அது போகஸ்த்தாநஶப்தத்துக்கு அர்த்தமாகையாலே போகஸ்த்தாநங்களென்று லோகங்களையும், தேஹங்களையும் சொல்லுகிறது. லோகவிபாகம் கீழே சொல்லப்பட்டது. ஸமஸ்த தேஹங்களாவன-ஸுராநரதிர்யக் ஸ்த்தாவராத்மகமான ஶரீரங்கள். ஈஶ்வரனுக்கு இந்தவிபூதியிலுண்டான போக்ய போகோபகரணாதிகளையும், அவதாரகந்தமான க்ஷீரார்ணவ ஶயநத்திலும் அவதாரவிஶேஷங்களிலும், அர்ச்சாவதாரங்களிலு முண்டான விநியோகவிஶேஷங்களாலே கண்டுகொள்வது.

சஎ. அநந்தரம், த்ரிவித அசித்தினுடையவும் பரிணாமங்களையருளிச்செய்கிறார்; (இதில் முற்பட்ட அசித்துக்கு) என்று தொடங்கி. பூர்வாசித்துக்குக் கீழெல்லையுண்டு என்கிறது - மிஶ்ரஸத்வாவதியாகையாலே. நடுவில் அசித்துக்கு மேலெல்லை யுண்டென்கிறது - ஶுத்தஸத்வாவதியாகையாலே; காலத்துக்கு அங்ஙனொரு அவச்சேதமில்லாமையாலே எங்குமொக்க வுண்டாயிருக்கும் என்கிறது. இப்படி, ஸார்வத்ரிகையான காலந்தான் உபயவிபூதியிலும் நித்யமென்றிறே தமக்குத்திருவுள்ளம்.

(சஅ) இங்ஙனன்றிக்கே, இதுக்குவிபூதி விபாகத்தையிட்டு ஒருபேதம் சொல்லுவாருமுண்டென்கிறார்; (காலந்தான்-பரமபதத்தில் நித்யம், இங்கு அநித்யம் என்றும் சொல்லுவர்கள்) என்று. இப்படி சொல்லுகைக்கடி-பரமபதத்தில் இதுக்கு உத்பத்யாதிகளுண்டாக ஶாஸ்த்ரங்கள் சொல்லாமையாலும், இந்த விபூதியிலே

சக. சிலர் காலத்தை யில்லையென்றார்கள்.

இதுக்கு உத்பத்யாதிகளைச் சொல்லுகையாலும், வ்யூஹாநிருத்தன்களைச் சொல்லுமிடத்திலே கால ஸ்ருஷ்டியை அநிருத்த க்ருத்யமாகச் சொல்லாநின்றதிறே. ப்ரக்ருதியை ஸ்ருஷ்டிக்கையாவது - மஹதாதிரூபேண பரிணமிப்பிக்கையானாப்போலே; காலத்தை ஸ்ருஷ்டிக்கையாவது - நிமேஷகாஷ்டாரூபேண பரிணமிப்பிக்கை; ஸததபரிணாமியான ப்ரக்ருதிக்கு மஹதாதிரூபமான ஸ்தூல பரிணாமம்போலேயிறே ஸததபரிணாமியான இதுக்கும் நிமேஷாதிரூபேண பரிணாமம். அந்த மஹதாதியோபாதி நிமேஷாதியான விதுவும் உத்பத்திவிநாசவத்தாகையாலே இவ்வளவைக்கொண்டு காலம் இங்கு அநித்யமாயிருக்கும் என்கிறது; பரமபதத்தில் ஏத்ருஶ பரிணாமவிசேஷ ப்ரயுக்தோத்பத்த்யாதி வ்யவஹாரராஹித்யத்தாலே நித்யமாயிருக்கும் என்கிறது. இப்படி, காலத்துக்கு பரிணாமங்கொள்ளாதே ஏகரூபத்வத்தைக்கொண்டு, இப்படியிருந்துள்ள காலந்தான், தன்னுடைய நிமேஷம், காஷ்டை, முஹூர்த்தம், அஹோராத்ரம் தொடக்கமாக பரார்த்தமீறாகவுண்டான விசேஷ வ்யவஹாரத்துக்கு ஹேதுவான நிமேஷோந்மேஷங்கள், ஆதித்யகதி தொடக்கமான அவச்சேதகங்களோடே ஸம்பந்தித்திருக்கும். ஆகையாலே, க்ஷணலவாதிபேத வ்யவஹாரமுண்டாகிறதென்று சொல்லுவதும் ஒருபக்ஷமுண்டிறே. இதுவிறே! தத்வத்ரயவிவரணத்தில் ஆச்சான்பிள்ளை ப்ரதாநமாக வருளிச்செய்தது; அந்தப்பக்ஷத்தில் உபயவிபூதியிலும் காலஸ்வரூபம் ஏகரூபமாயிருக்குமாகையாலே பரமபதத்தில் நித்யம், இங்கு அநித்யமென்கிறவிது சொல்லப்போகாது. ஆகையால், இது பரிணாமபக்ஷத்தை யவலம்பித்து சிலர் சொன்னதென்று கொள்ளவேணும், நம்முடைய தர்ஶநஸ்தர்களிலே யிங்ஙனேயும் சிலரருளிச்செய்கையாலே, அத்தையும் தர்ஶிப்பித்தருளினாராயிற்று.

(சக) காலந்தன்னை யில்லையென்று பௌத்தாதிகள் சொல்லுகையாலே, (சிலர் காலத்தை யில்லையென்றார்கள்) என்கிறார்.

௫௦ ப்ரத்யக்ஷத்தாலும், ஆகமத்தாலும் ஸித்திக்கையாலே அது சொல்லவொண்ணாது.

௫க. பலரும் திக்கென்று தனியேயொரு த்ரவ்ய முண்டென்ருர்கள்.

---

(௫௦) அத்தை நிராகரிக்கிறார்; (ப்ரத்யக்ஷத்தாலும்) இத்யாதியாலே. ப்ரத்யக்ஷமாவது - ஸ்தாவர ஜங்கமாத்மகமான ஸமஸ்த பதார்த்தமும் காலக்ருதபரிணாமமாகவே காணப்படுகிறவிது; ஆகமமாவது - ஶ்ருத்யாதிகள். (௬உக) "கலாமுஹூர்த்தாதிமயஶ்ச கால:" (௬௬௦) "நிமேஷா: ஸர்வே ஜஜ்ஞிரே" என்று காலபரிணாம விசேஷங்களான கலை காஷ்டை முஹூர்த்த மஹோராத்ரங்கள் ருதுவிசேஷங்களைச் சொல்லாநின்றதிறே! ஶ்ருதி; (௬௬க) "காலஸ்வரூபம் விஷ்ணோஶ்ச யந்மயோக்தம் தவாநக" இத்யாதியாலே ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே யிதுதான் விஸ்தரேண சொல்லப்பட்டதிறே. புராணாந்தரங்களிலும், இதிஹாஸாதிகளிலும் இப்படி கண்டுகொள்வது; இதுக்கென்னவே நிர்மிதமாய், அத்யயநாதி காலநியமங்களை ப்ரதிபாதிக்கிற ஜ்யோதிஶ்ஶாஸ்த்ரத்தை வேதத்துக்கு த்ருஷ்டியாகச் சொல்லாநின்றதிறே அந்த ஶாஸ்த்ரந்தன்னில், "இந்தக்காலத்திலே இன்னதுண்டாம்" என்று சொன்னால் அது ப்ரத்யக்ஷிக்கலாயிராநின்றதிறே. ஆகையால், ப்ரத்யக்ஷத்தாலும், ஆகமத்தாலும் இப்படி ஸித்திக்கையாலே காலாபாவம் சொல்லவொண்ணாதென்கை.

௫க- வைசேஷிகாதிகள் ப்ருதிவ்யாதிகளைப்போலே திக்கென்றும் தனியே யொரு த்ரவ்யமுண்டென்று சொல்லுகையாலே, (பலரும் திக்கென்று தனியே யொரு த்ரவ்ய முண்டென்ருர்கள்) என்கிருர். (௬௬உ) "ப்ருதிவ்யாபஸ்தேஜோ வாயுராகாஶம் காலோ திகாத்மா மந இதி நவ" என்றிறே! அவர்கள்சொல்லுவது (௬௬௬) "ஜ்யோதிரநிலநபோ திக்காலாத்மாந: ஶ்ருதா ந வ த்ரவ்யாணி" என்ருனிறே வரதராஜன்.

ருஉ. பலஹேதுக்களாலும், ஆகாஶாதிகளிலே அந்தர்ப்பூதமாகையாலே அதுவுஞ்சேராது.

ருங. சிலர் ஆவரணாபாவம் ஆகாஶமென்றார்கள்.

(ருஉ) அத்தை நிராகரிக்கிறார்; (பலஹேதுக்களாலும்) இத்யாதியாலே. அதாவது- நாலுபேர் நாலு திக்கிலும் நின்றால், நால்வர்க்கும் நடுவானப்ரதேஶம் ஒருவனுக்குக்கிழக்காய், ஒருவனுக்கு மேற்காய், ஒருவனுக்கு வடக்காய், ஒருவனுக்குத் தெற்காய்த் தோற்றா நின்றதிறே. அதுக்கடி - த்ரவ்ய மன்றிக்கே ப்ரதியோக்யநுகுணகால்பநிகமாகை. நால்வர்க்கு நடுவே யிருக்கிற ப்ருதிவ்யாதிகள் த்ரவ்யமாகையாலே இப்படி விப்ரதிபத்திவிஷயமாகிறதில்லையிறே. இனித்தான், ஆதித்யன் உதிக்கிறவிடம் கிழக்காகவும், அவன் அஸ்தமிக்கிறவிடம் மேற்காகவுமிறே கொள்ளுகிறது. அதுதான், மஹாமேருவுக்கு நாலுபார்ஶ்வத்திலும் பேதித்திறே இருப்பது. ஆகையாலேயிறே நாலுபார்ஶ்வத்திலு முள்ளார்களுக்கு மஹாமேரு வடக்காயிருக்கிறது. (ககச) "நைவாஸ்தமநமர்க்கஸ்ய நோதயஸ் ஸர்வதா ஸத: | உதயாஸ்தமநாக்யம் ஹி தர்ஶநாதர்ஶநம் ரவே: || ஸர்வேஷாமேவ வர்ஷாணாம் மேருருத்தரத: ஸ்தித:" இதுதான், ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே சொல்லப்பட்டது. இப்படி, பலஹேதுக்களாலும் ஆகாஶாதிகளிலே அந்தர்ப்பூதமாய், தனக்கென்னவொரு த்ரவ்யவ்யவஸ்தையில்லாமையாலே திக்கென்று ஒரு த்ரவ்ய முண்டென்கிற வதுவும் சேராதென்கை (ஆகாஶாதி) என்கிற ஆதிஶப்தத்தாலே-பூமியைச் சொல்லுகிறது. இவற்றிலே, திக்கு அந்தர்ப்பூதமாகையாவது-ஸூர்யனுடைய உதயாதிகளுக்கு ஈடாக விவற்றுக்குள்ளே திக்விபாகத்தைக் கல்பித்துக் கொள்ளுகிறதொழியப் பிரித்துக்காணலாவதொரு வஸ்துவின்றிக்கே யிருக்கை. அதுவும் சேராதென்றது, முன்பேயொரு பக்ஷத்தை நிஷேதிக்கையாலே ஸமுச்சயம்.

(ருங) ப்ருதிவ்யாதி சதுஷ்டயத்தோபாதி ஆகாஶத்தையும் பாவரூபபதார்த்தமாகக் கொள்ளாதே, ஆவரணாபாவரூபமாகக் கொள்ளுகிற பௌத்தமதத்தை யருளிச்செய்கிறார்; (சிலர் ஆவரணாபாவம் ஆகாஶமென்றார்கள்) என்று (ககரு) "ஆவ்ரியதே அநேந" என்கிற காணவ்யுத்பத்தியாலே, ஆவரணங்களாவன -

௫௪. பாவரூபேண தோற்றுகையாலே அதுவுஞ் சேராது.

௫௫. வேறேசிலர் இதுதன்னை, நித்யம், நிரவயவம், விபு, அப்ரத்யக்ஷ மென்றார்கள்,

௫௬. பூதாதியிலே பிறக்கையாலும், அஹங்காராதிகளிலில்லாமையாலும், கண்ணுக்கு விஷயமாகையாலும் அவை நாலுஞ்சேராது.

ஸ்தூலபதார்த்தங்களான ப்ருதிவ்யாதிகளாய், அவற்றினுடைய அபாவமே ஆகாசசப்தவாச்யமல்லது, இது ஆகாசம் என்று காட்டலாம்படி பாவரூபமானதொரு பதார்த்தமன்று என்கை. (௩௩௬) "நாவரணாபாவமாத்ரமாகாச இதி வக்தும் சக்யம்" என்று, இது பாஷ்யகாரர் அருளிச்செய்தது.

(௫௪) அத்தை நிராகரிக்கிறார்; (பாவரூபேண) இத்யாதியாலே. அதாவது-பாவரூபத்வேந அங்கீகரிக்கப்பட்ட ப்ருதிவ்யாதிகளோபாதி (௩௩௭) "அத்ர ச்யேநோ யாதி, அத்ர க்ருத்ர: யாதி" என்று, ச்யேநாதிகளுடைய பதநத்துக்கு தேசமாய்க் கொண்டு ஆகாசமும் பாவரூபேணதோற்றுகையாலே, இத்தை ஆவரணாபாவரூபமாகச் சொல்லுகிறவது சேராதென்கை; 'அதுவும்' என்று நிஷித்தஸமுச்சயம்; இதுதன்னை, (௩௩௮) "ஆகாசே சாவிசேஷாத்" என்கிற ஸூத்ரத்திலே, (௩௩௯) "ஆகாசே து நிருபாக்யத்வாநுபபத்தி:, ஆவரணாபாவமாத்ரம் ஆகாசமிதி வததாம் ஸௌகதாநாமபி ப்ருதிவ்யாதிவதாகாசஸ்யாபி பாவத்வ ப்ரதீதி விசேஷாபாவாத், அத்ர ச்யேநோ பததி அத்ர க்ருத்ர இதி ச்யேநாதிபதந தேசத்வேந" என்று தொடங்கி பாஷ்யகாரர் விஸ்தரேண வருளிச்செய்தார்.

(௫௫) இனி, ஆகாசத்துக்கு நித்யத்வ நிரவயவத்வ விபுத்வ அப்ரத்யக்ஷத்வங்கள் கொள்ளுகிற நையாயிக வைசேஷிகமதத்தை யருளிச்செய்கிறார்; (வேறேசிலர்) என்றுதொடங்கி.

(௫௬) அது தன்னை நிராகரிக்கிறார்; (பூதாதியிலே பிறக்கையாலும்) இத்யாதியாலே. அதாவது-பூதாதி ஸம்ஜ்ஞிகமான தாமஸாஹங்காரத்திலே உத்பந்நமாகையாலும், ஒன்றிலே நின்றும் உத்

௫௭. த்வகிந்த்ரியத்தாலே தோற்றுகையாலே, வாயு அப்ரத்யக்ஷமென்கிறவதுவுஞ்சேராது.

௫௮. தேஜஸ்ஸு-பௌமாதி பேதத்தாலே பஹுவிதம்.

பந்தமானதொன்றுக்கு ஸாவயவத்வம் ஸித்தமாகையாலும் நித்யம், நிரவயவமென்கிற விரண்டுஞ் சேராது. (பூதாதியிலேயிருக்கையாலும்) என்றது, ஶப்ததந்மாத்ரத்தினுடைய ஸ்தூலாவஸ்தையாகையாலே, அதுக்கும் இதுக்குமுண்டான ஐக்யத்தைப்பற்ற. இனி, விபுவாகில ஸர்வகதமாக வேணுமிறே? ஸ்வகாரணமான அஹங்காராதிகளில் இதுக்கு வ்யாப்தியில்லாமையாலே அதுவும் சேராது. பஞ்சீகரண ப்ரயுக்தமான ரூபவத்த்வத்தாலே கண்ணுக்கு விஷயமாகையாலே அப்ரத்யக்ஷமென்கையும் சேராது. "ஆகாஶம் கறுத்துத் தோற்றுகிறதும் அத்தாலே" என்றாரிறே; இது தன்னை, (௩-௰) "[illegible]" என்று, பாஷ்யகாரரும் அருளிச் செய்தார்.

(௫௭) வாயுவும் ப்ரத்யக்ஷமன்று, ஸ்பர்ஶாநுமேயமென்றிறே அவர்கள் சொல்லுவது. அத்தையும் நிராகரிக்கிறார்; (த்வகிந்த்ரியத்தாலே) என்று தொடங்கி. அதாவது-ஜ்ஞாநேந்த்ரியங்களிலே ஏதேனுமொன்றுக்கு கோசரமானபோதே ப்ரத்யக்ஷத்வம் ஸித்தமாகையாலே, த்வகிந்த்ரியத்தாலே தோற்றுகிறவாயுவை அப்ரத்யக்ஷமென்ன வொண்ணாதென்கை.

(௫௮) இனி, பரஸ்பர விலக்ஷணஸ்வபாவங்களான பூதவிஶேஷங்களில் ஜ்ஞாதவ்யாம்ஶங்களை யருளிச்செய்கிறார்; (தேஜஸ்ஸு - பௌமாதிபேதத்தாலே பஹுவிதம்) அதாவது - பௌமம், திவ்யம், ஔதர்யம், ஆகரஜமென்கிற பேதத்தாலே அநேகவிதமாயிருக்குமென்கை. பார்த்திவமாத்ரேந்தநமான தேஜஸ்ஸு - பௌமம், அதாவது - தீபாதி. ஜலமாத்ரேந்தநமான தேஜஸ்ஸு - திவ்யம், அதாவது - ஆதித்யாதி; பார்த்திவஜலேந்தநமான தேஜஸ்ஸு- ஔதர்யம், அதாவது - ஜாடராக்நி; நிரிந்தநமான தேஜஸ்ஸு

௪௯ அதில் ஆதித்யாதி தேஜஸ்ஸு-ஸ்த்திரம்; தீபாதிதேஜஸ்ஸு அஸ்த்திரம்.

௫௦. தேஜஸ்ஸுக்கு நிறம் சிவப்பு; ஸ்பர்ஸமௌஷ்ண்யம்.

௫௧ ஜலத்துக்குநிறம்வெளுப்பு; ஸ்பர்ஸம் ஸைத்யம்; ரஸம் மாதுர்யம்.

௫௨. பூமிக்கு நிறமும் ரஸமும் பஹுவிதம்.

௫௩. ஸ்பர்ஸம் இதுக்கும் வாயுவுக்கு மநுஷ்ணாஸீதம்.

ஆகரஜம், அதாவது-ஸுவர்ணாதி.

(௪௯) இதில், ஸ்திராஸ்த்திர விபாகம் பண்ணுகிறார்; (அதில் ஆதித்யாதி) என்றுதொடங்கி. சிரகாலவர்த்தித்வத்தாலே ஆதித்யாதி தேஜஸ்ஸு ஸ்திரமென்கிறது; க்ஷிப்ரவிநாஸித்வத்தாலே தீபாதிதேஜஸ்ஸு அஸ்த்திரமென்கிறது.

(௫௦) (தேஜஸ்ஸுக்கு நிறம் சிவப்பு) இத்தாலே-தேஜஃ பதார்த்தங்களில் வர்ணபேதம் பதார்த்தாந்தர ஸம்ஸர்க்கஜமென்கை. (ஸ்பர்ஸமௌஷ்ண்யம்) இத்தால், உஷ்ணஸ்பர்ஸம், ஸீதஸ்பர்ஸம், அநுஷ்ணாஸீதஸ்பர்ஸமென்கிற த்ரிவிதஸ்பர்ஸத்திலும் இதுக்கு ஸ்பர்ஸம் ஔஷ்ண்யமென்கை. இதுதான், தேஜஃ பதார்த்தங்களான ஸுவர்ணாதிகளில் (ப)பலவத்ஸஜாதீயத்ரவ்யங்களாலே அபிபூதமாகையாலே தோன்றாது.

(௫௧) (ஜலத்துக்கு நிறம் வெளுப்பு) இதுக்கு ஸ்வாபாவிக வர்ணமிது. வர்ணபேதம் வந்தவிடம் ஔபாதிகம். (ஸ்பர்ஸம்ஸைத்யம்) இத்தால், த்ரிவிதஸ்பர்ஸத்திலும் ஸைத்யம் இதுக்குள்ளதென்கை. ஆகையால், இதுக்கு ஸ்பர்ஸபேதமுண்டாகிறதும் அந்யஸம்ஸர்க்கத்தாலே. (ரஸம்மாதுர்யம்) இத்தால்-இதுக்கு ஸ்வாபாவிகரஸமிது, ரஸாந்தராபத்தி ஸம்ஸர்க்கஜமென்கை.

(௫௨) (பூமிக்கு நிறமும், ரஸமும் பஹுவிதம்) அதாவது-லோகத்தில் காணப்படுகிற நாநாவித வர்ணரஸங்களுக்கெல்லாம் உத்பத்தி ஸ்தானமிதுவென்கை.

(௫௩) (ஸ்பர்ஸம் இதுக்கும், வாயுவுக்கும் அநுஷ்ணாஸீதம்) அதாவது-த்ரிவிதஸ்பர்ஸத்திலும் வைத்துக்கொண்டு, இவற்றுக்கு

௯௪. இப்படி, அசித்து மூன்றுபடிப்பட்டிருக்கும்.

ஸ்பர்ஶம் இதிலில்லை. ஆகையால், இவற்றிலும் காதாசித்கமாகக்காணப்படுகிற ஸ்பர்ஶபேதமும் ஔபாதிகம்.

(௯௪) (இப்படி, அசித்து மூன்றுபடிப்பட்டிருக்கும்) இப்படியென்று-ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே, முன்பு அருளிச்செய்தவற்றையெல்லாம் கடாக்ஷித்து அநுபாஷித்துக்கொண்டு, அசித்தத்வோபந்யாஸத்தை நிகமிக்கிறாராயிற்று.

ஆக ப்ரதமத்திலே, "அசித்து-ஜ்ஞாநஶூந்யமாய், விகாராஸ்பதமாயிருக்கும்" என்று, அசித்தினுடைய லக்ஷணத்தைச்சொல்லி, அநந்தரம், அதுதான் ஶுத்தஸத்வாதிபேதேந த்ரிவிதமாயிருக்கும்படி சொல்லி; உத்தேஶக்ரமத்திலே ப்ரதமம் ஶுத்தஸத்வமாகிற வசித்தினுடைய ப்ரகாரத்தைச்சொல்லி, தத்அநந்தரம், மிஶ்ரஸத்வமாகிற வசித்விஶேஷம் இன்னதென்றும், அதுதான் சதுர்விம்ஶதி தத்வமாயிருக்குமென்றும், அதில் ப்ரதமதத்வம் இன்னதென்றும், அந்ததத்வத்தினுடைய அவஸ்தாவிஶேஷங்களிருக்கும்படியையும், அதில் நின்றும் தத்வாந்தரங்கள் உத்பந்நமாகைக்கு ஹேது-அதினுடைய குணவைஷம்யமென்றும், அந்தகுணங்கள்தான் இன்னதென்றும், அவைதான் அதுக்கு அவிநாபூதங்களாய், அதினுடைய அவஸ்தாபேதங்களாலே அநுத்பூதங்களாயும் உத்பூதங்களாயுமிருக்குமென்றும், அவைதான் கார்யாநுமேயங்களென்றும், அவற்றினுடைய வைஷம்ய ப்ரயுக்தமான மஹதாதி தத்வோத்பத்தி க்ரமத்தையுஞ்சொல்லி; அநந்தரம், இப்படி யுத்பந்நங்களான தத்வங்களினுடைய ஸமுதாயகார்யமான அண்டோத்பத்தியையும், அந்தவண்டத்துக்குள்ளில் ஸமஷ்டிபுருஷ சதுர்முகோத்பத்தியையும், ஈஶ்வரன் ஸமஷ்டி வ்யஷ்டிபதார்த்தங்களை அத்வாரகமாகவும் ஸத்வாரகமாகவும் நின்று ஸ்ருஷ்டிக்கும்படியையுஞ்சொல்லி; அநந்தரம், அண்டங்களினுடைய பாஹுள்யத்தையும், அவற்றினுடைய கட்டளையையும், அவைதான் ஈஶ்வரனுக்கு லீலோபகரணங்களென்னுமத்தையும், அவற்றினுடைய வுத்பத்தி ப்ரகாரத்தையுஞ்சொல்லி, அநந்தரம் ஆகாஶாதிபூதங்களுக்குத் தனித்தனியேயுண்டான விநியோகத்தையும், ஜ்ஞாநகர்மேந்த்ரியங்

களுக்கும், உபயாத்மகமான மநஸ்ஸுக்குமுண்டான வ்ருத்திபேதத்தையும், ஆகாஶாதிகளுக்கு ஶப்தாதிகள் ப்ரதிநியத குணங்களாயிருக்கும்படியையும், அவற்றுக்கு குணவிநிமயம் வருகைக்கு ஹேதுவையும் குணநியமத்துக்கு ஹேதுவையுஞ்சொல்லி; இப்படி, மிஶ்ரஸத்வத்தினுடைய ப்ரகாரத்தை விஸ்தரேண உபபாதித்து, அநந்தரம், இதினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாயிருந்துள்ள ஸத்வஶூந்யமாகிற வசித்விஶேஷத்தையும் ஸங்க்ரஹேண சொல்லி: அநந்தரம், ஏதத்பூர்வோக்தமான வசித்த்வயத்தினுடைய விநியோகப்ரகாரத்தையும், அசித்த்ரயத்தினுடைய பரிணாமங்களையுஞ் சொல்லி, ஏதத்தர்ஶநைகதேஶிகளுடைய காலவிஷயப்ரதிபத்திபேதத்தையுங்காட்டி, அநந்தரம், கீழ்ச்சொல்லப்பட்டவற்றில் பாஹ்யகுத்ருஷ்டிகளுடைய விப்ரதிபத்தி ப்ரகாரங்களையும், அவைதான் அயுக்தமென்னுமிடத்தையுஞ்சொல்லி, அநந்தரம், பரஸ்பரவிலக்ஷணமான பூதவிஶேஷங்களில் ஜ்ஞாநஸம்பந்தங்களையும் தர்ஶிப்பித்து, இப்படி, அசித்த்ரயத்தினுடைய ப்ரகாரத்தையுமருளிச்செய்து தலைக்கட்டினார்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேஶரணம்.

மணவாளமாமுனிகள் திருவடிகளேஶரணம்.

அசித்ப்ரகரணம் முற்றிற்று.

ஸ்ரீ

ஈஶ்வரப்ரகரணம்

௧. ஈஶ்வரன், அகிலஹேய ப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய், ஜ்ஞாநஶக்த்யாதி கல்யாணகுணகண பூஷிதனாய், ஸகலஜகத்ஸர்க்கஸ்த்திதி ஸம்ஹாரகர்த்தாவாய், "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு ரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ" என்கிற சதுர்வித புருஷர்களுக்கு மாஶ்ரயணீயனாய், தர்மார்த்தகாம மோக்ஷாக்ய சதுர்வித பலப்ரதனாய், விலக்ஷணவிக்ரஹ யுக்தனாய், லக்ஷ்மீ பூமி நீளாநாயகனாயிருக்கும்.

இப்படி, சிதசித்ரூபமான தத்வத்வயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவவிஶேஷங்களை ஸுவ்யக்தமாம்படி யருளிச்செய்து, அநந்தரம் (௧௧) "க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:" என்கிறபடியே, ததுபயநியந்தாவான ஈஶ்வரனுடைய ஸ்வரூபாதிகளை ஸம்பரவிபர்யயமற வருளிச்செய்கிறார்.

அதில் ப்ரதமசூர்ணையாலே, ஈஶ்வரத்வம் அஸாதாரணதர்மதயா வஸ்துவுக்கு நிரூபகமாயிருக்கையாலே, "ஈஶ்வரன்" என்றே வஸ்துவை நிர்த்தேஶித்து, தத்ஸ்வரூபாதி வைலக்ஷண்யத்தை ஸங்க்ரஹேண வருளிச்செய்கிறார்.

(௧) அதில், ப்ரதமத்திலே குணங்களுக்கும் ஆதாரபூதமான ஸ்வரூப வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார்; (அகிலஹேய ப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய்) என்று; அதாவது-ஸமஸ்தஹேய ப்ரதிபடமாய், த்ரிவிதபரிச்சேதரஹிதமாய், ஸ்வயம்ப்ரகாஶத்வ ஸுகரூபத்வமே வடிவான ஸ்வரூபத்தை யுடையவனென்கை. (௫-௪௧) "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" (௫-௪௨) "விஜ்ஞாநம் ப்ரஹ்ம" (௫-௪௫) "ஆநந்தோ ப்ரஹ்ம" என்னக்கடவதிறே. (௫-௪௪) "அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிலக்ஷணாநந்தஜ்ஞாநாநந்தைகஸ்வரூப:" என்றிறே எம்பெருமானாருமருளிச்செய்தது. அப்படியே இவருமருளிச்செய்கிறார்.

ஆனால், கல்யாணைகதாநத்வமும், ஸ்வேதர ஸமஸ்தவஸ்து விலக்ஷணத்வமும் இவரருளிச்செய்யாதொழிவானென்னென்னில்; ஹேயப்ரத்யநீகதை புக்கவிடத்தே கல்யாணைகதாநத்வம் வருமென்னுமதைப்பற்றவும், அநந்தத்வம் சொல்லுகையாலே தன்னடையே ஸித்திக்குமென்னுமதைப்பற்றவும் கல்யாணைகதாநத்வம் அருளிச்செய்திலர். ஸ்வேதரஸமஸ்த வஸ்து விலக்ஷணத்வம் உபயலிங்கவிசிஷ்டத்வ ப்ரயுக்தமாகையாலே, அர்த்தாத்ஸித்தமென்று அருளிச்செய்திலர்.

(ஜ்ஞாநஶக்த்யாதி கல்யாணகுணகண பூஷிதனாய்) ஆதிஶப்தத்தாலே-குணபூர்த்தியில், எம்பெருமானருளிச்செய்தகுணங்களையெல்லாம் சொல்லுகிறது; குணங்களுக்கு கல்யாணத்வமாவது-ஆஶ்ரிதர்க்கு பரமபோக்யமாயிருக்கை. கணஶப்தம்-ஸமூஹவாசி. பூஷிதனாகையாவது- இவற்றாலே அலங்க்ருதனாயிருக்கை. திவ்ய மங்களவிக்ரஹத்துக்கு திவ்யாபரணங்கள்போலே யாயிற்று, திவ்யாத்மஸ்வரூபத்துக்கு குணங்கள் ஔஜ்ஜ்வல்ய கரமாயிருக்கும்படி. இத்தால் (௫௨) "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" (௫௩) "பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" (௫௪) "ஸமஸ்தகல்யாணகுணாத்மகோஸௌ" என்கிற குண கணயோகத்தை யருளிச்செய்தாராயிற்று.

(ஸகலஜகத்ஸர்க்கஸ்திதி ஸம்ஹாரகர்த்தாவாய்) ஜகச்சப்தத் தாலே - கார்யாவஸ்தையைச்சொல்லுகிறது. ஸகலஶப்தத்தாலே - ஸமஷ்டி வ்யஷ்டிரூபமான ஸமஸ்த பதார்த்தங்களையுஞ்சொல்லுகிறது. ஸர்க்கமாவது - ஸ்ருஷ்டி; இதுதான், ஸத்வாரகாத்வாரக ரூபேண த்விவிதையாயிருக்கும். ஸ்திதியாவது - ரக்ஷணம்; இதுவும், பாஹ்யாப்யந்தரரூபேண த்விவிதமாயிருக்கும். ஸம்ஹாரமாவது அழிக்கை; இதுவும் ஸத்வாரகாத்வாரகரூபேண த்விவிதமாயிருக்கும். இவையெல்லாம், மேல் இவருபபாதிக்கிறவிடத்திலே காணலாம். (௫௫) "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி, தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம" இத்யாதி ஶ்ருதிகளாலே, இவனுடைய ஸகலஜகத்

ஸர்க்காதிகள் சொல்லப்படாநின்றதிறே. இத்தால், கீழ்ச்சொன்ன குணவிஶிஷ்டனான விஷ்ணுவுடைய வ்யாபார விஶேஷங்களை யருளிச்செய்தாராயிற்று.

(௩௪௮) (“ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்தீ ஜ்ஞாநீ” என்கிற சதுர்வித புருஷர்களுக்கும் ஆஶ்ரயணீயனாய்) ஆர்த்தனானவன் - முன்புண்டான ஐஶ்வர்யத்தை யிழந்து அது திரும்பவேணுமென்று ஆசைப்படுமவன். ஜிஜ்ஞாஸுவாகிறான் - ஜ்ஞாநஸ்வரூபனான ஆத்மாவை யநுபவிக்கவாசைப்படும் கேவலன். அர்த்தார்த்தியாகிறான் - அபூர்வமாக ஐஶ்வர்யத்தை யாசைப்படுமவன். ஜ்ஞாநியாகிறான் - பரமபுருஷார்த்தமான பகவத்ப்ராப்தியை யாசைப்படுமவன். (௩௪௯) “ஆர்த: ப்ரதிஷ்டாஹீந: ப்ரஷ்டைஶ்வர்ய: புநஸ்தத்ப்ராப்திகாம:, அர்தார்தீ அப்ராப்தைஶ்வர்யதயா ஐஶ்வர்யகாம:, தயோர்முகபேதமாத்ரம் ஐஶ்வர்யவிஷயதயா ஏகாதிகார:, ஜிஜ்ஞாஸு: ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபாவாப்தீச்சு:; ஜ்ஞாநமேவாஸ்ய ஸ்வரூபமிதி ஜிஜ்ஞாஸுரித்யுக்த:, ஜ்ஞாநீ ச ‘இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்’ இத்யாதிநாபிஹித பகவச்சேஷதைகரஸாத்மஸ்வரூபவித், ப்ரக்ருதிவியுக்த கேவலாத்மந்யபர்யவஸ்யந் பகவந்தம் ப்ரேப்ஸு: பகவந்தமேவ பரமப்ராப்யம் மந்வாந:” என்று, சதுர்விதாதிகாரிபேதத்தையும், ஶ்ரீகீதாபாஷ்யத்திலே யருளிச்செய்தாரிறே. இந்தசதுர்வித புருஷ ஸமாஶ்ரயணீயத்வத்தை (௩௫௦) “சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந । ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப” என்றும், (௩௫௧) “சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ஶ்ருதா: । ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்தீ ஜ்ஞாநீ [illegible]” என்றும், தாமே யருளிச்செய்தானிறே. இத்தால் ஜகத்காரணபூதனாகக் கீழ்ச்சொல்லப்பட்டவனுடைய ஸர்வஸமாஶ்ரயணீயத்வத்தை யருளிச்செய்தாராயிற்று.

(தர்மார்த்தகாமமோக்ஷாக்ய சதுர்வித பலப்ரதனாய்) (௩௫௨) “தர்மார்தகாமமோக்ஷாக்ய: புருஷார்த உதாஹ்ருத:” என்று, புருஷார்த்தம் சதுர்விதமாயிறே இருப்பது. தர்ம

மாவது- இஷ்டாபூர்த்தங்கள்; இஷ்டமாவது-யாகாதி; பூர்த்தமாவது (வா)காத்ாதி. அர்த்தமாவது-ஸுவர்ணரஜதாதிகள். காமமாவது- ஐஹிகபாரலௌகிக போக்யபதார்த்தாநுபவஸுகம். மோக்ஷமாவது- ஆத்மாநுபவ பகவதநுபவங்கள் இவற்றில். தர்மம் - ஸாதநதயா புருஷார்த்தமாயிருக்கும்; அர்த்தம் - ஸாதநதயாவும், ஸ்வயமாயும் புருஷார்த்தமாயிருக்கும்; காமமோக்ஷங்களிரண்டும் - ஸ்வயம் புருஷார்த்தமாயிருக்கும். ஏவம்விதமான சதுர்வித பலங்களையும் அதிகாராநுகுணமாகக் கொடுக்குமவனென்கை.

இத்தால் - ஸர்வஸமாஸ்ரயணீயனான விஷ்ணுவுடைய ஸகலபல ப்ரதத்வத்தையும் அருளிச்செய்தாராயிற்று. (௫௩) "ஐஹலௌகிகமைஸ்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் | கைவல்யம் பகவந்தம் ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி" என்னக்கடவதிறே.

(விலக்ஷணவிக்ரஹயுக்தனாய்) அதாவது-விக்ரஹந்தான், ஸ்வரூபகுணங்களிலுங்காட்டில் அத்யந்தாபிமதமாயென்று தொடங்கி மேலருளிச்செய்கிற வைலக்ஷண்யத்தையுடைய விக்ரஹத்தோடே கூடியிருக்குமவனென்கை. (௫௪) "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா" இத்யாதியாலே விக்ரஹவைலக்ஷண்யம் ப்ரஸித்தம். (௫௫) "ஸ்வாபிமதாநுரூபைகரூபாசிந்த்ய திவ்யாத்புத நித்ய நிரவத்ய நிரதிசயௌஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்த குணநிதி திவ்யரூப" என்று, திவ்யமங்கள விக்ரஹ வைலக்ஷண்யத்தை யருளிச்செய்தாரிறே எம்பெருமானார்.

இத்தால், கீழ்ச்சொன்ன ஸ்வரூபகுணங்களுக்கு ப்ரகாசகமாய், ஜகத்காரணத்வத்துக்கும், ஸர்வஸமாஸ்ரயணீயத்வத்துக்கும், ஸர்வபலப்ரதத்வத்துக்கும் ஏகாந்தமான திவ்யவிக்ரஹயோகத்தை யருளிச்செய்தாராயிற்று.

(லக்ஷ்மீ பூமி நீளாநாயகனாயிருக்கும்) அதாவது (௫௬) "உனக்கேற்கும்" என்னும்படியான வைலக்ஷண்யத்தை யுடையளாய்

௨. அகிலஹேயப்ரத்யநீகனுகையாவது - தமஸ்ஸுக்கு தேஜஸ்ஸு போலேயும், ஸர்ப்பத்துக்கு கருடனைப்போலேயும் விகாராதி தோஷங்களுக்கு ப்ரதிபடமா யிருக்கை.

சேதநர்க்கு புருஷகாரபூதையாயும், ப்ராப்யையாயு மிருக்கும் ப்ரதாநமஹிஷியான பெரிய பிராட்டியார்க்கும், அவளோடொக்கச் சொல்லலாம்படி யிருக்கும் பூமி நீளைகளான மற்றை யிரண்டுபிராட்டிமார்க்கும் அநுரூபநாயகனாயிருக்குமென்கை.

(௫௰௭) "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்று, லக்ஷ்மி பூமிகளிருவரையும் வேதபுருஷன் சொன்னவிது நீளைக்கும் உபலக்ஷணம். (௫௰௮) "வைகுண்டே து பரே லோகே ஶ்ரீஸஹாயோ ஜநார்தந: । உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேஶ்வர:" என்னக்கடவதிறே. (௫௰௯) "ஸ்வாபிமத நித்ய நிரவத்ய அநுரூப ஸ்வரூப ரூப குண விபவ ஐஶ்வர்ய ஶீலாத்யநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணகணாம் ஶ்ரீவல்லபாம், ஏவம்பூத பூமிநீளா நாயக" என்றிறே எம்பெருமானார் அருளிச்செய்தது; இத்தால் கீழ்ச்சொன்ன விக்ரஹவைலக்ஷண்யம், காட்டிலெரித்த நிலாவாகாதபடி யநுபவிக்கக்கடவரான பிராட்டிமாரோட்டைச்சேர்த்தியை யருளிச்செய்தாராயிற்று.

(௨) இப்படி, உக்தமான ஸ்வரூபாதிகளை விஸ்தரேண உபபாதித்தருளுகிறார் மேல். அதில், ப்ரதமத்திலே "அகிலஹேயப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாய்" என்றவிதில், அகிலஹேயப்ரத்யநீகத்வத்தை யுபபாதிக்கிறார்; (அகிலஹேயப்ரத்யநீகனுகையாவது) என்று தொடங்கி. ஹேயமாவது-தோஷம். அகிலஹேயமென்கையாலே - த்ரிவிதசேதநாசேதந தோஷங்களையும் சொல்லுகிறது. "த்ரிவித சேதநாசேதநதோஷமும் ஈஶ்வரனுக்கு வாராது" என்று இதுதன்னை வ்யக்தமாக மேலே யருளிச்செய்கிறாரிறே.

(தமஸ்ஸுக்கு தேஜஸ்ஸுபோலேயும், ஸர்ப்பத்துக்கு கருடனைப்போலேயும்) என்றது - தமஸ்ஸுக்கு தேஜஸ்ஸு ப்ரதிபடமாயிருக்குமாபோலேயும், ஸர்ப்பத்துக்கு கருடன் ப்ரதிபடனாயிருக்குமாபோலேயுமென்கை.

௩. அநந்தனாகையாவது - நித்யனாய், சேதநாசேதநங்களுக்கு வ்யாபகனாய், அந்தர்யாமியா யிருக்கை.

(விகாராதிதோஷங்கள்) என்கிறவிடத்தில், விகாரசப்தத்தாலே - த்ரிவிதாசித்தினுடையவும் பரிணாமத்தைச் சொல்லுகிறது. ஆதிசப்தத்தாலே - பத்தசேதநருடைய அஜ்ஞாநது:கங்களையும் முக்தருடையசேறுகோய்த்தக்கழவினளைப்போலே, ப்ராக்ருதஸம்ஸ்ருஷ்டராய் விடப்பட்ட வாகாரத்தையும், நித்யருடைய பரிச்சிந்நஸ்வரூபத்வ பாரதந்த்ர்யங்களையும் சொல்லுகிறது. பாரதந்த்ர்யம் தோஷமோ? என்னில்-புருஷனுக்கு ஸ்தநோத்பேதம்போலே ஸ்வதந்த்ரனுக்கு தோஷமென்கை. இத்தோஷங்களுக்கு ப்ரதிபடமாயிருக்கையாவது-தான்மாறாயிருக்கை. ப்ரதிபடமென்கை யாலே- (௨அ) "[illegible]" என்கிறபடியே, ஸ்வரூபநிபந்தநமாக மலஸம்பந்தமில்லையேயாகிலும், உபாதிநிபந்தநமான மலஸம்பந்தத்துக்கு யோக்யமான வாத்மஸ்வரூபத்திற்காட்டில் பகவத் ஸ்வரூபத்துக்கு வாசி தோற்றுகிறது. (௯௦) "[illegible]" (௯௧) "[illegible]" (௯௨) "[illegible]" என்னக்கடவதிறே.

ஹேயப்ரத்யநீகத்வமாவது - ஆஸ்ரிதருடைய ஹேயநிராஸகத்வத்துக்கு அடியான ஹேயப்ரதிபடத்வமென்னவுமாம் என்னுமொருயோஜனையுமுண்டிறே. தத்வவ்யாக்யாநங்களிலே நஞ்சீயர் ஆச்சான்பிள்ளை முதலான வாசார்யர்களருளிச்செய்தது. "ஸர்ப்பதத்துக்கு கருடனைப்போலேயும்" என்கிற த்ருஷ்டாந்தத்தாலே, அதுவும் இவ்விடத்துக்கர்த்தமாகாதோ வென்னில்; விகாராதி தோஷங்களுக்கு ப்ரதிபடனாயிருக்கையாலே, இவ்விடத்தில் இவர்க்கது விவக்ஷிதமன்று.

(௩) அநந்தராய், அநந்தத்வத்தை யுபபாதிக்கிறார்; (அநந்தனாகையாவது) என்று தொடங்கி. அநந்தத்வமாவது தேசதஃ காலதோவஸ்துதஸ்சாபரிச்சேத்யத்வம் : விபுத்வாத்தேசபரிச்சேத

௪. அந்தர்யாமியானால் தோஷங்கள்வாராதோவென்னில் ;

௫. ஶரீரகதங்களான பால்யாதிகள் ஜீவாத்மாவுக்கு வாராதாப் போலே, த்ரிவிதசேதநாசேதநதோஷமும் ஈஶ்வரனுக்கு வாராது.

ராஹித்யம், நித்யத்வாத் காலபரிச்சேதராஹித்யம், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும் ப்ரகாரியாயிருக்கையாலும், தனக்கு ப்ரகாரர்யந்தரமில்லாதபடி நிற்கையாலும், ஸத்ருஶவஸ்த்வபாவத்தாலே வஸ்துபரிச்சேதராஹித்யம். அத்தை யருளிச்செய்கிறார் ; (நித்யனாய், சேதநாசேதநங்களுக்கு வ்யாபகனாய், அந்தர்யாமியா யிருக்கை) என்று. இத்தால், நித்யனாகையாலே, இன்னகாலத்தி லுள்ளான் காலாந்தரத்தில் இல்லையென்கிற காலபரிச்சேதமு மின்றியிலே, ஸகல சேதநாசேதநங்களுக்கும் வ்யாபகனாய்க் கொண்டு விபுவாயிருக்கையாலே, இன்ன தேஶத்திலுள்ளான், தேஶாந்தரத்தி லில்லையென்கிற தேஶபரிச்சேதமின்றியிலே, ஸர்வாந்தர்யாமியாகையாலே ஸர்வத்துக்கும் தான் ப்ரகாரியாய், தனக்கு ப்ரகார்யந்தர மில்லாதபடி யிருக்கையாலே, இன்னவஸ்துபோலே யென்கிற வஸ்துபரிச்சேதமு மின்றியிலே யிருக்கை யென்றதாயிற்று. (௧௩௩) "நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்" (௧௩௪) "அந்த: ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" (௧௩௫) "யஸ்யாத்மா ஶரீரம், யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" (௧௩௬) "அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி" என்னக்கடவதிறே.

(௪) இவற்றோடு தானொட்டற்றிருக்கையன்றிக்கே, அந்தர்யாமிதயா அவஸ்திதனாயிருக்குமாகில், தத்கததோஷங்கள் வாராதோ வென்கிற ஶங்கையை யநுவதிக்கிறார் ; (அந்தர்யாமியானால் தோஷங்கள் வாராதோவென்னில்) என்று.

(௫) அத்தைப் பரிஹரிக்கிறார் ; (ஶரீரகதங்களான) என்று தொடங்கி. அதாவது - இந்த ஶரீரத்தை யதிஷ்டித்து ஸ்வாதீநமாக நிர்வஹித்துக்கொண்டிரா நிற்கச்செய்தேயும், தத்கதமான பால்ய யௌவநாதி விகாரங்கள் ததந்தர்வர்த்தியான ஜீவாத்மாவுக்கு வாராதாப்போலே, த்ரிவிதசேதநாசேதநங்களுக்கும் அந்தர்யாமியாய்,

௬. ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாகையாவது - ஆநந்தரூப ஜ்ஞாநனா யிருக்கை.

௭. அதாவது-கட்டடங்க வநுகூலமாய், ப்ரகாஶமுமாயிருக்கை.

இவற்றை ஶரீரமாகக்கொண்டு இராநிற்கச்செய்தேயும் தத்கத தோஷம் ஈஶ்வரனுக்கு வாராது என்கை. (௯௯) "ஆவிசேருயிரி னுள்ளா லாதுமோர்பற்றில்லாத பாவனையதனைக்கூடி லவனையுங் கூடலாமே" என்றிறே! ஆழ்வாருமருளிச்செய்தது. ஶரீரியான ஜீவாத்மாவுக்கு ஶரீரகதங்களான பால்யாதிகள் வந்ததில்லையே யாகிலும், ஶரீரஸம்பந்த நிபந்தநமாக அஜ்ஞாநாதிகள் வருகிறாப்போலே, ஶரீரபூதமான விவற்றோடே ஸம்பந்தத்தாலே இவனுக்குமிங்ஙனே சில தோஷங்கள் வாராதோ? என்னில்; வாராது. அதுக்கடி-ப்ரவேஶத்து விஶேஷத்தாலே; இவனைப்போலே கர்மமடியாக வன்றிக்கே, அநுக்ரஹமடியாகவிறே அவனுக்கு இவற்றில் ப்ரவேஶமிருப்பது. (௯௭) "அநஶ்நந்ந்யோ" (௯௮) "ஸஷ்ஸ்ஞ்சாஞோஸ்வாதாஹ்வஹத்வாஶ்வா" (௯௯) "விஷ்ணோஸ்ஸர்வாஜிஷ்ணோ" என்னாநின்றதிறே.

(௯) அநந்தரம், ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபத்வத்தை யுபபாதிக்கிறார்; (ஜ்ஞாநாநந்த) இத்யாதியாலே. ஜ்ஞாநாநந்தங்களையே ஸ்வரூபமாக வுடையனாயிருக்கை யென்று, ஶப்தத்துக்கு அர்த்தம் சொல்லவேண்டியிருக்க, ஜ்ஞாநமென்றும் ஆநந்தமென்றும் பிரித்துச்சொல்லாவது, இரண்டவஸ்தையின்றிக்கே ஜ்ஞாநமே ஸ்வரூபமாய், அதுதான் அநுகூலமாயிருக்கை - ஆநந்தமாகையாலே, "ஆநந்தரூபஜ்ஞாநனாயிருக்கை" என்று அருளிச்செய்கிறார். "அநுகூலஜ்ஞாநமே ஸ்வரூபமாயிருக்க ஜ்ஞாநாநந்தங்க ளென்று பிரித்துச்சொல்லுகிறது, இரண்டுமுண்டாகைக்காக" என்றிறே இவர்தாமிட்டருளின தத்வயாக்யாநத்திலே யருளிச்செய்தது.

(௭) "ஆநந்தரூபஜ்ஞாநனாயிருக்கை" என்றதுதன்னை யுபபாதிக்கிறார்; (அதாவது) இத்யாதியாலே. கட்டடங்கவென்றது - ஸ்வரூபமுள்ள பரப்பெங்கும் என்றபடி. இத்தால், ஸ்வரூபத்தில் அநநுகூலமாயாதல், அப்ரகாஶமாயாதலிருக்கு மிடமில்லை யென்கை. ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனென்றவிதில், ஏகஶப்தார்த்தமிதுவிறே.

அ. இவனுடைய ஜ்ஞாநசக்த்யாதி கல்யாண குணங்கள் நித்யங்களாய், நிஸ்ஸீமங்களாய், நிஸ்ஸங்க்யங்களாய், நிருபாதிகங்களாய், நிர்த்தோஷங்களாய், ஸமாநாதிகரஹிதங்களாயிருக்கும்.

அநுகூலத்வமாவது - ஆஹ்லாதகரத்வம். ப்ரகாசத்வமாவது - ஸ்வயம்ப்ரகாசத்வம். (கூ௬௯) "[illegible]" என்னக்கடவதிறே.

அ. இப்படி, ஸ்வரூபவைலக்ஷண்யத்தை யுபபாதித்த வநந்தரம், ஸ்வரூபாச்ரிதமான குணங்களினுடைய வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார்; (இவனுடைய ஜ்ஞாநசக்த்யாதி கல்யாண குணங்கள்) என்று தொடங்கி. ஆச்ரிதர்க்கு ஸௌசீல்யாதிகளுக்கும், ஜ்ஞாநசக்த்யாதிகளுக்கும், வாத்ஸல்யாதிகளுக்கும், ஸௌந்தர்யாதிகளுமாகிற குணவிசேஷங்களெல்லாவற்றையும் சொல்லுகிறது.

நித்யங்களாகையாவது - உத்பத்தி விநாசரஹிதங்களாயிருக்கை. ஸ்வரூபாநுபந்திகளாகையாலே, யாவதாச்ரயபாவிகளாயிருக்குமிறே. (கூ௭௧) "[illegible]" என்று, குணங்களினுடைய நித்யத்வம் ச்ருதிஸித்தம். (கூ௭௧) "[illegible]" என்றிறே இதிஹாஸங்களும். (கூ௭௨) "ஈறிலவண்புகழ்" என்றாரிறே ஆழ்வார்.

நிஸ்ஸீமங்களாகையாவது - ஒவ்வொன்றே அவதிகாணவொண்ணாதிருக்கை. (கூ௭௩) "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்று, மீண்டுவிட்டதிறே ஆநந்தகுணத்தையெல்லாங் காணப்புக்க வேதம். இது, ஆநந்தகுணமொன்றிலுமன்றே; குணங்களெல்லாம் இப்படியேயிறே இருப்பது. (கூ௭௪) "[illegible]" என்னக்கடவதிறே. (கூ௭௫) "உயர்நலம்" என்றிறே! ஆழ்வாரும் அருளிச்செய்தது.

நிஸ்ஸங்க்யங்களாகையாவது- இப்படிப்பட்ட குணங்கள் தான் எண்ணிறந்திருக்கை. (௩௭௬) "यथा रत्नानि जलधेरसंख्येयानि पुत्रक । तथा गुणास्त्वनन्तस्य असंख्येया महात्मनः" (௩௭௭) "वर्षायुतैर्यस्य गुणा न शक्या वक्तुं समेतैरपि सर्वलोकैः । महात्मनः शङ्खचक्रासिपाणेर्विष्णोर्जिष्णोर्वसुदेवात्मजस्य" [௩௭௮] "चतुर्मुखायुर्यदि कोटिवक्त्रो भवेन्नरः क्वापि विशुद्धचेताः । स ते गुणानामयुतैकमंशं वदेन्न वा देववर प्रसीद" [௩௭௯] "न हि तस्य गुणाः सर्वे सर्वैर्मुनिवरैरपि । वक्तुं शक्या वियुक्तस्य सत्त्वाद्यैरखिलैर्गुणैः" என்னக் கடவதிறே. (௩௮௦) "எண்ணில் தொல் புகழ்" என்றாரிறே ஆழ்வாரும். (௩௮௧) "एकैकस्य गुणस्यापि [illegible]" என்கிற ஶ்லோகத்திலே, குணங்களினுடைய நித்யநிஸ்ஸீமநிஸ்ஸங்க்யத்வங்களை யருளிச்செய்தாரிறே ஆழ்வான்.

நிருபாதிகங்களாகையாலே - ஸ்வேதராதிகளிலே ஈஶ்வரேச்சையாகிற உபாதியை யபேக்ஷித்திருக்கும் சேதநகுணங்கள் போலன்றிக்கே, ஸ்வாபாவிகங்களா யிருக்கை. ஶ்ரீபாஷ்யத்தில் (௩௮௨) "स्वभावतो निरस्तनिखिलदोषोऽनवधिकातिशयासंख्येयकल्याणगुणगणः पुरुषोत्तमोऽभिधीयते" என்கிறவிடத்துக்கு வ்யாக்யாநம்பண்ணுகிற ஶ்ருதப்ரகாஶிகாகாரர், அநவதிகாதிஶயபதத்தாலே நித்யஸித்த வ்யாவ்ருத்தி சொல்லுகிறதென்று முந்துறவொரு யோஜநைபண்ணி, (௩௮௩) "अस्मिन् पक्षे न स्वाभाविकत्वेनानित्यव्यावृत्तिः ; ते

ஷாம் தாத்ருஶ ஸமஸ்தகுணகணம் ஹி பகவந்தம் த்ருஷ்ட்வாயீதம்" என்று, அநந்தரயோஜனையிலே யிவ்வர்த்தத்தை யருளிச்செய்தாரிறே. (கூ.அச) "ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" என்று, குணங்களினுடைய ஸ்வாபாவிகத்வத்தை ஶ்ருதி சொல்லாநின்றதிறே. இந்தஶ்ருதியில், க்ரியையென்கிறது-நியமநத்தை; (கூ.அரு) "பராஸ்ய ஶக்திர்-ஜ்ஞாநஶக்த்யாதி நாம ஸ்வாபாவிகத்வஶ்ச; க்ரியா-நியமநம்" என்கிற இதுக்கும் ஶ்ருதப்ரகாஶிகாகாரர் வ்யாக்யாநம் பண்ணிற்று.

நிர்த்தோஷங்களாகையாவது - ஹேயகுண ஸம்ஸர்க்கமாகிற தோஷமின்றிக்கேயிருக்கை. (கூ.அசு) "அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:" (கூ.அஎ) "ஸத்வாதயோ ந ஸந்தீஶே யத்ர ச ப்ராக்ருதா குணா:" (கூ.அஅ) "ஜ்ஞாநஶக்திபலைஶ்வர்யவீர்யதேஜாம்ஸ்யஶேஷத: । பகவச்சப்தவாச்யாநி விநா ஹேயைர்குணாதிபி:" (கூ.அகூ) "தேஜோபலைஶ்வர்யமஹாவபோத ஸுவீர்யஶக்த்யாதிகுணைகராஶி:। பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேஶாதயஸ்ஸந்தி பராவரேஶே" என்கிறபடியே, ஆஶ்ரயம் - ஹேயப்ரத்யநீகமாகையாலே, இவற்றுக்கு, ஹேயகுணஸம்ஸர்க்க தோஷாபத்திக்கு யோக்யதையில்லையிறே.

ஸமாநாதிகரஹிதங்களாகையாவது - சேதநாந்தரகுணங்களை ஸமமாகவும், ஈஶ்வரகுணங்களை அதிகமாகவுமுடைத்தாயிருக்கும் சேதநகுணங்கள் போலன்றிக்கே, தனக்கொத்ததும் மிக்கதுமின்றிக்கேயிருக்கை. (கருஎ) "நதத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே" என்கிற ஸமாதிகதரித்ரவஸ்துவை யாஶ்ரயமாக வுடையவையாகையாலே, இவையும் ஸமாநாதிகரஹிதங்களாயிருக்குமிறே. (கூ.கூய) "ஶோஷோஷாவயாவஸிஷ்டாஸ்ஸ்யா நஸஜ்ஜந்தி ப்ருதக்குண- ணளவஷைவாஷைதா: । ஜ்ஞாநேஶ்வர்யஶக்த்யாதி ஸமாஷ்டிதாஷ்டம் ரஜஸ்ஸ ஹாஸஜவாதத்ஸந்த்யஜதி" என்கிற ஶ்லோகத்திலே, இவையித்தனையும் பட்டரருளிச்செய்தாரிறே.

௯. இவற்றில் வாத்ஸல்யாதிகளுக்கு விஷயமநுகூலர், ஶௌர்யாதிகளுக்கு விஷயம் ப்ரதிகூலர், இவற்றுக்குக் காரணமான ஜ்ஞாநஶக்த்யாதிகளுக்கெல்லாரும் விஷயம்.

---

(௯) இப்படியிருந்துள்ள குணங்கள்தான் மூன்றுவகைப்பட்டிருக்கையாலே, அம்மூன்று வகைக்கும் விஷயங்களை வகுத்து அருளிச்செய்கிறார்; (இவற்றில்) என்று தொடங்கி. (வாத்ஸல்யாதிகள்) என்கிற அதிஶப்தத்தாலே, ஸௌஶீல்ய ஸௌலப்ய மார்த்தவார்ஜவாதிகளான குணவிஶேஷங்களெல்லாவற்றையும் சொல்லுகிறது; விஷயம் அநுகூலரென்றது - ஆஶ்ரிதரென்றபடி.

(ஶௌர்யாதிகளுக்கு) என்கிற அதிஶப்தத்தாலே, பராக்ரமத்தைச்சொல்லுகிறது. விஷயம் ப்ரதிகூலரென்றது - ஆஶ்ரிதவிரோதிகளென்றபடி. (௫-௯௩) "த்³விஷத³ந்நம் ந போ⁴க்தவ்யம் த்³விஷந்தம் நைவ போ⁴ஜயேத் । பாண்ட³வாந் த்³விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்ட³வா:" என்று, ஆஶ்ரிதவிரோதிகள் தனக்கு ஶத்ருக்களென்று அருளிச்செய்தானிறே.

(இவற்றுக்கு காரணமான ஜ்ஞாநஶக்த்யாதிகள்) என்கிறவிதில், அதிஶப்தத்தாலே - பலைஶ்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களைச் சொல்லுகிறது.

வாத்ஸல்யாதிகளுக்கும், ஶௌர்யாதிகளுக்கும் ஜ்ஞாநஶக்த்யாதிகள் காரணமாகையாவது (௫-௯௨) "ஸமஸ்தகல்யாணகு³ணாத்மகோ(அ)ஸௌ ஸ்வஶக்திலேஶாத்⁴ருதபூ⁴தஸர்க³: । இச்சா²க்³ருஹீதாபி⁴மதோருதே³ஹஸ் ஸம்ஸாதி⁴தாஶேஷஜக³த்³தி⁴தோ(அ)ஸௌ । தேஜோப³லைஶ்வர்யமஹாவபோ³த⁴ஸுவீர்யஶக்த்யாதி³கு³ணைகராஶி:" என்றும், (௫-௯௫) "[illegible]" என்றும் சொல்லுகிறபடியே, அவற்றுக்கு ஊற்றுவாயாயிருக்கை.

அவைதான், வஸ்தூத்கர்ஷாபாதக ஷாட்குண்யாயத்தகுணபாவமாயிறே இருப்பது. "எம்பெருமானுடைய திவ்யாத்மகுணங்களாவன - ஜ்ஞாநஶக்த்யாதிஷட்குணங்களும், அதிலே பிறந்த ஸௌஶீல்யாதிகளும்" என்கிற விவ்வாக்யத்துக்கு அர்த்தமே

ஸூக்திகளில், "அறிவிலே பிறக்கையாவது - வஸ்துஸ்வபாவ தக ஷாட்குண்யபரிபூர்ணதையாகை" என்கிற விவரணத்தில் ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தது.

இக்குணஷட்கத்திலும் வைத்துக்கொண்டு, ஜ்ஞாநமாவது- (௩௧௪) "அஜடம் ஸ்வாத்மஸம்போதி நித்யம் ஸர்வாவகாஹநம் | ஜ்ஞாநம் நாம குணம் ப்ராஹு: ப்ரதமம் குணசிந்தகா:" என்கிற படியே, என்றுமொக்க ஸர்வவிஷயமாய் ப்ரகாசரூபமாய், ஸ்வப்ரகாசரூபமான குணவிசேஷம்; சக்தியாவது - (௩௧௫) "ஜகத்ப்ரக்ருதிபாவோ யஸ்ஸா சக்தி: பரிகீர்த்திதா" என்கிற ஜகத்ப்ரக்ருதியமாதல், அகடிதகடநாஸாமர்த்யமாதல். பலமாவது- (௩௧௬) "ச்ரமஹாநிஸ் ஸதா தஸ்ய ஸததம் குர்வதோ ஜகத் | பலம் நாம குணஸ்தஸ்ய கதிதோ குணசிந்தகை:" என்கிற ஜகத்தாரணஸாமர்த்யமாதல், [௩௧௭] "ஸஹாயாநபேக்ஷை" என்கிறபடியே தன்னுடைய தாரணஸாமர்த்யமாதல். ஐச்வர்யமாவது - [௩௧௮] "கர்த்ருத்வம் நாம யத் தஸ்ய ஸ்வாதந்த்ர்யபரிப்ரும்ஹிதம் | ஐச்வர்யம் நாம தத் ப்ரோக்தம் குணதத்த்வார்த்தசிந்தகை:" என்கிற கர்த்ருத்வரூபமான ஸ்வாதந்த்ர்யமாதல், ஸர்வநியந்த்ருத்வமாதல். வீர்யமாவது-௩௧௯ "தஸ்யோபாதாநபாவேபி விகாரவிரஹோ ஹி ய: | வீர்யம் நாம குணஸ்ஸோயம் அச்யுதத்வாபராஹ்வய:" என்று, ஜகதுபாதாநமாகாநிற்கச் செய்தேயும் ஸ்வரூபவிகாரமின்றியிலே இருக்கும்படியான அவிகாரதை. தேஜஸ்ஸாவது - [௩௨௦] "ஸஹகார்யநபேக்ஷா யா தத் தேஜ: ஸமுதாஹ்ருதம்" என்கிற ஸஹகாரிநைரபேக்ஷ்யமாதல், பராபிபவநஸாமர்த்யமாதல். இவற்றுக்கு எல்லாரும் விஷயமாகையாவது - அநுகூலரக்ஷணத்திலும் ப்ரதிகூலநிரஸநத்திலும் - ஜ்ஞாநசக்த்யாதிவிசிஷ்டனாய்க்கொண்டு நிர்வஹிக்கவேண்டுகையாலே, இவற்றுக்கு ஸர்வரும் விஷயமாயிருக்கை.

ஜ்ஞாநம் அஜ்ஞர்க்கு; ஶக்தி அஶக்தர்க்கு, க்ஷமை ஸாபரா தர்க்கு, க்ருபை து:கிகளுக்கு, வாத்ஸல்யம் ஸதோஷர்க்கு, ஶீலம் மந்தர்க்கு; ஆர்ஜவம் குடிலர்க்கு; ஸௌஹார்த்தம் துஷ்டஹ்ருதயர்க்கு; மார்த்தவம் விஶ்லேஷ பீருக்களுக்கு; ஸௌலப்யம் காணவாசைப் பட்டவர்களுக்கு. இப்படி யெங்கும் கண்டுகொள்வது.

இப்படி குணங்களை மூன்றுவகையாக்கி அவற்றுக்கு விஷயங்களை தர்ஶிப்பித்தவளவன்றிக்கே, குணங்களுக்கு ப்ரத்யேகம் விஷயநியமமுண்டாகையாலே, அத்தையும் தர்ஶிப்பிக்கவேணு மென்று திருவுள்ளம்பற்றி, கீழுக்தகுணங்களிலே சிலவற்றுக்குத் தனித்தனியே விஷயங்களை தர்ஶிப்பிக்கிறார்; (ஜ்ஞாநம் அஜ்ஞர்க்கு) என்று தொடங்கி.

ஜ்ஞாநமாவது - சேதநநுடைய ஹிதாஹித நிரூபணத்துக்கு உறுப்பான குணமாகையாலே, (௨௱௧) "[illegible]" என்கிறபடியே, ஸ்வஹிதாஹிதநிரூபணஶக்திகளில் அஜ்ஞராயிருக்குமவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை. (ஶக்தி அஶக்தர்க்கு) என்றது-ஶக்தியாவது - அகடிதகடநாஸாமர்த்யமாகையாலே, ஸ்வேஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களில் அஶக்தராயிருக்குமவர்களுடைய கார்யஸித்திக்கு உறுப்பாயிருக்குமென்கை. (க்ஷமை ஸாபராதர்க்கு) என்றது - க்ஷமையாவது - அபராத ஸஹத்வமாகையாலே, (௨௱௨) "[illegible]" என்கிறபடியே, அபராதஸஹிதராகத்தங்களை யநுஸந்திக்கிறவர்க்கு உறுப்பாயிருக்குமென்கை. (௨௱௩) "[illegible]" என்றிறே பட்டருளிச்செய்தது. (க்ருபை து:கிகளுக்கு) என்றது - க்ருபையாவது - பரது:க ஸஹிஷ்ணுத்வமாகையாலே, ஆரானார் துணையென்றலைநீர்க்கடலுளழுந்தும் நாவாய்போல் - பிறவிக்கடலுள்நின்று துளங்குகை முதலான து:கமுடையவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை. (௨௱௪) "[illegible]

ஸுவாயதேதஸ்மை தக்ஷஹம்ஸாய மஹதே’’ என்று அருளிச்செய்தாரிறே பட்டர். (வாத்ஸல்யம் ஸதோஷர்க்கு) என்றது-வாத்ஸல்யமாவது-அன்றீன்றகன்றினுடம்பின் வழும்பை யாதரித்து புஜிக்கும் தேநுவைப்போலே ஆஶ்ரிதருடைய தோஷங்களை போக்யமாகக்கொள்ளுவதொரு குணமாகையாலே, அவித்யாகர்மாதிதோஷ ஸஹிதராகத் தங்களை யநுஸந்திப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை. (ஶீலம் மந்தர்க்கு) என்றது - ஶீலமாவது-பெரியவன் தாழ்ந்தவர்களோடே புரையறக்கலக்கும் ஸ்வபாவமாகையாலே, தங்களுடைய தண்மையை யநுஸந்தித்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை (ஆர்ஜவம் குடிலர்க்கு) என்றது-ஆர்ஜவமாவது - கரணத்ரயத்தாலும் செவ்வியனாயிருக்கையாகையாலே, தங்களுடைய கரணத்ரய கௌடில்யத்தைநினைத் திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை (ஸௌஹார்த்தம் துஷ்டஹ்ருதயர்க்கு) என்றது-ஸௌஹார்த்தமாவது-எப்போதும் நன்மையைச் சிந்தித்திருக்கும் ஸ்வபாவமாகையாலே, ஸர்வகாலமும் தீமையே சிந்தித்திருக்கும் துஷ்டஹ்ருதயராகத் தங்களை யநுஸந்தித்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை (மார்த்தவம் விஶ்லேஷபீருக்களுக்கு) என்றது-மார்த்தவமாவது - ஆஶ்ரிதவிரஹம் பொறுக்கமாட்டாத மென்மையாகையாலே, தன்னுடைய விஶ்லேஷத்தில் பயமுடையவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை. (ஸௌலப்யம் காணவாசைப்பட்டவர்களுக்கு) என்றது - ஸௌலப்யமாவது - அதீந்த்ரியமான விக்ரஹத்தைக் கண்ணுக்கிலக்காம்படி பண்ணுகையாகையாலே, தன்னைக்காணவேணுமென்று ஆசைப்பட்டவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை.

இத்தால், இவனுடைய ஜ்ஞாநத்தில் அபேக்ஷையுள்ளது - தந்தாமுடைய ஹிதாஹித நிரூபணத்தில் அறிவில்லாதவர்களுக்காகையாலே, ஜ்ஞாநம் - அஜ்ஞர்க்காயிருக்கும். இவனுடையஶக்தியில் அபேக்ஷையுள்ளது - ஸ்வேஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரத்தில் அஶக்தராயிருப்பாருக்காகையாலே, ஶக்தி - அஶக்தர்க்காயிருக்கும். பொறையில் அபேக்ஷையுள்ளது - அபராதமுடையார்க்கா

௧௦. இப்படி, ஈஶ்வரன் கல்யாண குணங்களோடேகூடி யிருக்கையாலே,

கையாலே, க்ஷமை - ஸாபராதர்க்காயிருக்கும். ஐயோவென்று இரங்கவேண்டுவது - நோவுபட்டவர்க்காகையாலே, க்ருபை-து:கிகளுக்காயிருக்கும்; தோஷத்தை போக்யமாகக் கொள்ளவேண்டுவது - தோஷவான்களுக்காகையாலே, வாத்ஸல்யம் ஸதோஷர்க்காயிருக்கும். தன்மையாராதே புரையறக்கலக்கவேண்டுவது-தாழ்ந்தவர்கள் விஷயத்திலே யாகையாலே, சீலம் - மந்தர்க்காயிருக்கும். கரணத்ரயத்தாலும் செவ்வியனாய்க்கொண்டு தன்னை யமைத்துப் பரிமாறவேண்டுவது - செவ்வைக்கேடாம்விஷயத்திலாகையாலே, ஆர்ஜவம் - குடிலர்க்காயிருக்கும். தானெப்போதும் நன்மை சிந்திக்கவேண்டுவது - தந்தாமுக்குத் தீமைகளைச்சிந்திக்கும் தீமனத்தர்விஷயத்திலாகையாலே, ஸௌஹார்த்தம் - துஷ்டஹ்ருதயர்க்காயிருக்கும். விரஹம்பொறாத மென்மைவேண்டுவது - விரஹத்துக்கு அஞ்சுவார் திறத்திலாகையாலே, மார்த்தவம் - விப்லேஷபீருக்களுக்காயிருக்கும். அதீந்த்ரியமான விக்ரஹத்தைக் கண்ணுக்கு இலக்காக்கவேண்டுவது - அவ்வடிவைக் காண்கையிலாசையுடையவர்களுக் காகையாலே,ஸௌலப்யம்- காணவாசைப்பட்டவர்களுக்காயிருக்குமென்று, குணங்களினுடைய விஷயப்ரதிநியதத்வத்தை தர்ஶிப்பித்தாராயிற்று. (இப்படியெங்கும்கண்டு கொள்வது) என்றது - கீழ்ச்சொன்னப்ரகாரத்திலே அநுக்தமான குணங்களெல்லாவற்றுக்கும் ப்ரத்யேகம் விஷயங்களை தர்ஶித்துக் கொள்வது என்றபடி.

௧௦. ஏவம்பூதகுணவிஶிஷ்டனாகையாலே, ஈஶ்வரன் ஆஶ்ரித விஷயத்தில் பரிமாறிப்போரும்படிகளை விஸ்தரேண வொருசூர்ணையாலே யருளிச்செய்கிறார் மேல்; (இப்படி, ஈஶ்வரன் கல்யாண குணங்களோடே கூடியிருக்கையாலே) என்றுதொடங்கி.

இப்படியென்று - கீழுக்தமான குணயோகப்ரகாரத்தைப் பராமர்ஶிக்கிறது. (கல்யாணகுணங்களோடே கூடியிருக்கையாலே) என்று, குணயோகத்தை ஹேதுவாக வருளிச்செய்தது - மேற்

பிறர்நோவு கண்டால், ஐயோ! என்றிரங்கி, அவர்களுக்
கெப்போதுமொக்க நன்மையைச் சிந்தித்து, தனக்
கேயாயிருந்தல், தனக்கும் பிறர்க்கும்பொதுவாயிருத்தல்
செய்யாதே, நிலா, தென்றல், சந்தநம், தண்ணீர்போலே
பிறர்க்கேயாய், தன்னையாம்ரயித்தவர்கள் பக்கல் ஜந்ம
ஜ்ஞாநவ்ருத்தங்களாலுண்டான நிகர்ஷம் பாராதே,

சொல்லுகிறபரிமாற்றங்களெல்லாம் ஒரோகுணகார்யமென்றுதோற்றுகைக்காக. (பிறர்நோவுகண்டால் ஐயோ! என்று இரங்கி) இது-க்ருபாகார்யம். பிறர்நோவுகண்டால் ஐயோ! என்று ஈடுபடுகிறது-பரதுஃகாஸஹிஷ்ணுவாகையாலேயிறே. (அவர்களுக்கு எப்போதுமொக்க நன்மையைச்சிந்தித்து) இது - ஸௌஹார்த்தகார்யம். எப்போதுமொக்கவென்றது - இவர்கள் அறிந்தகாலத்தோடு அறியாதகாலத்தோடு வாசியற ஸர்வகாலத்திலுமென்றபடி. ஆம்ரித ஸர்வமங்களாந்வேஷணபரனாயிருக்கிறது - ஸௌஹார்த்தத்தாலேயிறே. (தனக்கேயாயிருத்தல், தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருத்தல்செய்யாதே, நிலா, தென்றல், சந்தநம், தண்ணீர்போலே பிறர்க்கேயாய்) இது-ஆம்ரிதபாரதந்த்ர்யகார்யம். ஸ்வார்த்தபரனேயயிருத்தல், ஸ்வார்த்த பரார்த்தங்கள் இரண்டுக்கும் பொதுவாயிருத்தல் செய்கையன்றிக்கே, சந்த்ரிகாதிபதார்த்தங்கள்போலே, பாரார்த்யைகவேஷனாயிருக்கிறது—பாரதந்த்ர்யத்தாலேயிறே, (தன்னையாம்ரயித்தவர்கள் பக்கல் ஜந்மஜ்ஞாநவ்ருத்தங்களால் உண்டான நிகர்ஷம்பாராதே) இது-ஸாம்யகுணகார்யம். ஆம்ரிதர் பக்கல் ஜந்மாதிகளால் உண்டானதண்மை பாராமல் பரிமாறுகிறது - (சoரு) "ஸமோऽஹம் ஸர்வபூதேஷு" என்கிறபடியே, ஜந்மாதிகளால் உத்க்ருஷ்டரோடு அபக்ருஷ்டரோடு வாசியறஆம்ரயணீயத்வே ஸமனாயிருக்கும் ஸ்வபாவத்தாலேயிறே. (தாங்களும் பிறரும் தஞ்சமல்லாதபோது தான்தஞ்சமாய்) இது - அமரண்யமரண்யத்வகார்யம். தாங்களும் தங்களுக்கு ரக்ஷகரன்று, பிறரும் தங்களுக்கு ரக்ஷகரன்றென்றுகைவாங்கின தசையில் தான் ரக்ஷகனாகிறது -]சoசு] பற்றிலார்பற்றநின்ற குணகையாலேயிறே.

தாங்களும் பிறரும் தஞ்சமல்லாதபோது தான்தஞ்சமாய், ஸாந்தீபிநீபுத்ரனையும், வைதிகன் புத்ரர்களையும் மீட்டுக்கொண்டுவந்தாப்போலே அரியனசெய்தும், அவர்களபேக்ஷிதங்களைத் தலைக்கட்டியும், அவர்களுக்கு த்ருவபதம்போலே பண்டில்லாதவற்றையுமுண்டாக்கியும்,

---

(ஸாந்தீபிநீபுத்ரனையும், வைதிகன் புத்ரர்களையும் மீட்டுக்கொண்டுவந்தாப்போலே அரியனசெய்தும், அவர்களபேக்ஷிதங்களைத் தலைக்கட்டியும்) இது - ஸத்யகாமத்வகார்யம். (௨௭) "மாதவத்தோன்புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை" என்கிறபடியே, நெடுங்காலத்திலே கடல் கொண்டுபோன ஸாந்தீபிநீ புத்ரனையும், (௨௮) "பிறப்பகத்தேமாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும்" என்கிறபடியே, ஜநித்தபோதே, [௨௯] "என்னுடைமனைவி காதல் மக்களைப் பயத்தலும்காணாள்" என்கிறபடியே, பெற்ற தாயும் தர்ஶிக்கப்பெறாதபடி நாய்ச்சிமார் தங்கள் ஸ்வாதந்த்ர்யத்தாலே யழைப்பிக்க, (௩௦) "தப்பினபிள்ளைகளை" என்கிறபடியே, கைதப்பிப்போய் * சுடரொளியாய்நின்ற தன்னுடைச்சோதியிலே கிடந்த வைதிகன்புத்ரர்களையும், (௩௧) 'உருவுருவேகொடுத்தான்' என்றும், (௩௨) "உடலொடுங்கொண்டு கொடுத்தவனை" என்றுஞ் சொல்லுகிறபடியே, அவ்வவ ரூபங்களோடேமீட்டுக்கொடுவந்துகொடுத்தாப்போலே, து்ஷ்கரங்களைச்செய்தும் ஆஶ்ரிதர் அபேக்ஷிதங்களைத் தலைக்கட்டுகிறது-[௩௩] "ஶ்ரீ்ரு தாரக்ஷணவிஷயொ ஜ்நெநாரயஜ்காஜஜ் ஸொஸஂவு்ரு திஹநொதா ஹவதீ திஸதா்ஶகாஜஜ்" என்கிற ஸத்யகாமனுகைபாலேயிறே. 'ஸத்யகாமனுகையாவது - ஸாந்தீபிநீ புத்ரனைக்கொடுவந்தாப்போலே, ஸகலாபேக்ஷிதங்களும் முடிக்கவல்லனுகை." என்றிறே நடுவிற்றிருவீதிப்பிள்ளை பட்டர், தத்வத்ரயத்திலே யருளிச்செய்தது.

(அவர்களுக்கு, த்ருவபதம்போலே பண்டில்லாதவற்றையுமுண்டாக்கியும்) இது - ஸத்யஸங்கல்பத்வகார்யம். உத்தாநபாத

தந்தாம் ஸ்வம் தாந்தாம் விநியோகம் கொண்டாப்போலேயிருக்க தன்னையும் தன்னுடைமையையும்வழங்கி, அவர்கள் கார்யம் தலைக்கட்டினால்தான் க்ருதக்ருத்யனாய்,

---

புத்ரனான த்ருவனுக்கு, ஸ்வர்க்கத்தினுடைய ஊர்த்வாவதியிலே அபூர்வமாயிருப்பதொருபதம் கல்பித்துக் கொடுத்தாப்போலே, ஆச்ரிதர்க்குப் பண்டில்லாதவற்றையுமுண்டாக்குகிறது - அபூர்வ போக்யங்களை ஸ்ருஷ்டிக்கவல்ல அமோகஸங்கல்பனானமையாலே யிறே. “ஸத்யஸங்கல்பனாகையாலே * த்ருவபதம்போலே பண்டில்லாத வற்றையுமுண்டாக்கவல்லனாகை” என்று, இதுவும்பட்டர்தாமேயருளிச்செய்தாரிறே. (தம்தாம்ஸ்வம் தாம்தாம் விநியோகங்கொண்டாப்போலே யிருக்கத் தன்னையும் தன்னுடைமையையும் வழங்கி) இது-ஔதார்யகார்யம். (சாகஉ) “[illegible] [illegible]” என்கிறபடியே, தங்களுடைமையைத் தாங்கள் விநியோகங் கொள்ளுமாபோலே விநியோகங் கொள்ளலாம்படி, ஆத்மாத்மீயங்களை ஆச்ரிதர்க்குக்கொடுக்கிறது- கொடுத்தோம் என்று பரிமாறும் நெஞ்சிலில்லாதபடியாகவும், கொள்ளுமவர்களுக்கு ப்ரத்யுபகாரங்தேட வேண்டாதபடியாகவும்கொடுக்கும்பரமோதாரனாகையாலேயிறே.

(அவர்கள் கார்யம் தலைக்கட்டினால், தான் க்ருதக்ருத்யனாய்) இது-க்ருதித்வகார்யம்! ஆச்ரிதர் கார்யந்தலைக்கட்டினால், அவர்கள் க்ருதக்ருத்யராகையன்றிக்கே, (சாகூ) “[illegible]” இத்யாதிப்படியே, தான் க்ருதக்ருத்யனாகிறது - ஆச்ரிதகார்யத்தைப்பெற்றால், பேறுதன்னதாயிருக்கும்ஸ்வபாவத்தாலேயிறே. † “க்ருதியாவது - ஆச்ரிதருடையவபேக்ஷிதம் பூர்ணமானால், தான் க்ருதக்ருத்யனாகை.” என்றிறே பட்டரும் அருளிச்செய்தது

---

* † [பா] க்ருதித்வமாவது.

தான் செய்த நன்மைகளொன்றையும் நினையாதே அவர்
கள் செய்த ஸுக்ருதலவத்தையேநினைத்து, அநாதிகா
லம் வாஸிதங்களான ரஸங்களைமறக்கும்படி யெல்லா
தசையிலும் இனியனாய்,பார்யா புத்ரர்கள்குற்றங்களைக்
காணக் கண்ணிட்டிருக்கும் புருஷனைப் போலே,
அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தால்நினையாதே,

(தான்செய்த நன்மைகளொன்றையும் நினையாதே, அவர்கள் செய்த ஸுக்ருதலவத்தையேநினைத்து) இது-க்ருதஜ்ஞதாகார்யம்; தன்திறத்திலே யொருவனாநுஷங்கிகமான ஸுக்ருதலேசத்தைப் பண்ணினால், அவர்களுக்குத் தான் எல்லா நன்மைகளுஞ் செய்தாலும் அவற்றை யொன்றையும் நினையாதே, அவர்கள் செய்த ஸுக்ருதலவத்தையே நினைத்திருக்கிறது-செய்த நன்றியறியுமவனாகையாலேயிறே. "க்ருதஜ்ஞனாகையாவது - ஆஸ்ரிதருடைய ஸுக்ருதலவத்தை யொன்றையும் நினைத்து, தான் செய்த நன்மைகளொன்றும் பாராதேயிருக்கை" என்று, இதுவும் பட்டரருளிச்செய்தார். (அநாதிகாலம் வாஸிதங்களான ரஸங்களை மறக்கும்படி யெல்லாதசையிலும் இனியனாய்) இது - மாதுர்யகார்யம். அநாதிகாலமே பிடித்துக்கொண்டுகிடக்கிறப்ராக்ருதவிஷயரஸங்களை விஸ்மரிக்கும்படி ஸர்வாவஸ்தையிலும் இனியனாகிறது - (௪௧௪) "ரஸோவைஸ:" என்கிறபடியே, நிரதிசயபோக்யனாயிருக்கையாலேயிறே.

(பார்யாபுத்ராதிகள் குற்றங்களைக் காணக்கண்ணிட்டிருக்கும் புருஷனைப்போலே, அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தாலேநினையாதே) இது-சாதுர்யகார்யம். பார்யா புத்ராதிகளோடே கூடி வர்த்திப்பானொருபுருஷன், அவர்கள் செய்கிற குற்றங்களைக் கண்டிருக்கச் செய்தேயும் காணாதாரைப்போலே யிருக்குமா போலே ஆஸ்ரிதர் செய்த குற்றங்களைக் கண்டிருக்கச் செய்தேயும் திருவுள்ளத்தால் நினையாதிருக்கிறது - ஆஸ்ரித தோஷங்களைத் தெரியாதபடி மறைக்கவல்ல சதுரனாகையாலேயிறே.

குற்றங்களைப் பெரியபிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறுதலைத்துத் திண்ணியனாய் நின்று ரக்ஷித்து, காமினியுடைய அழுக்கு உகக்கும் காமுகனைப்போலே, அவர்கள் தோஷங்களை போக்யமாகக் கொண்டு அவர்கள் பக்கல் கரணத்ரயத்தாலும் செவ்வியனாய், பிரிந்தால் அவர்கள்வ்யஸநம் தாளப்படியென்னும்படி தானீடுபட்டு

வர்த்திப்பானொருபுருஷன், அவர்கள் செய்கிற குற்றங்களைக் கண்டிருக்கச் செய்தேயும் காணாதாரைப்போலே யிருக்குமாபோலே, ஆஶ்ரிதர்செய்த குற்றங்களைக் கண்டிருக்கச்செய்தேயும் திருவுள்ளத்தால் நினையாதிருக்கிறது -ஆஶ்ரித தோஷங்களைத் தெரியாதபடி மறைக்கவல்ல சதுரனாகையாலேயிறே. (குற்றங்களைப் பெரியபிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறுதலைத்துத்திண்ணியனாய் நின்று ரக்ஷித்து) இது - ஸ்த்தைர்யகார்யம். சொன்னது செய்யவேண்டும்படி தனக்கு அபிமதையாய், சேதநர் குற்றங்களைப் பொறுப்பித்துச் சேர்விடும் பெரியபிராட்டியார் (சகரு) “தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்” என்கிறபடியே, குற்றங்களைக்காட்டினாலும், (சகரு) “என்னடியார துசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்” என்று, அவளோடே மறுதலைத்து நிஶ்சலனாய் நின்று ரக்ஷிக்கிறது - ஸ்த்திர ஸ்வபாவனாகையாலேயிறே; (காமினியுடைய அழுக்கு உகக்கும் காமுகனைப்போலே, அவர்கள் தோஷங்களை போக்யமாகக்கொண்டு) இது - ப்ரணயித்வகார்யம். காமினிவிஷயத்தில்ப்ராவண்யத்தாலே அவளுடம்பிலழுக்கைவிரும்பும் காமுகனைப்போலே, ஆஶ்ரிதரானவர்களுடைய ப்ரக்ருதிஸம்பந்தாதிதோஷங்களை போக்யமாகக்கொள்ளுகிறது - பரமப்ரணயியாகையாலேயிறே. (அவர்கள்பக்கல் கரணத்ரயத்தாலும்செவ்வியனாய்) இது - ஆர்ஜவகார்யம். மனோவாக்காயங்கள் மூன்றிலும் செவ்வைக் கேடராயிருக்குமவர்கள் பக்கலிலே, நீரேறுமேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைப்போலே, தன்னையமைத்து த்ரிவித கரணங்களாலும் செவ்வியனாய்ப் போருகிறது - ருஜுஸ்வபாவனாகையாலேயிறே. (பிரிந்தால் அவர்கள்வ்யஸநம் தாளப்படியென்னும்படி தான் ஈடுபட்டு) இது - மார்த்தவகார்யம். (சகக) “[illegible]” என்றால் (சகவ) “[illegible]

அவர்களுக்குப் பாங்காகத் தன்னைத்தாழவிட்டு, அவர்களுக்குக்கட்டவுமடிக் கவுமாம்படி யெளியனாய், அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்கி முன்னணைக்கன்றையும் புல்லிடவந்தவர்களையும் கோம்பிலும் குளம்பிலுமேற்குமாபோலே பெரியபிராட்டியாரையும் ஸூரிகளையும் விட்டு ஸ்நேஹித்துக் கொண்டுபோரும்.

கக. இவனே ஸகலஜகத்துக்கும் காரணபூதன்.

உவீ" என்கிறபடியே, தன்னைப்பிரிந்தால் ஆஶ்ரிதர்படும் வ்யஸநம்-கடல்போன்ற தன் வ்யஸநத்துக்கு ஒரு குளப்படிமாத்ரமென்னும்படி தான் க்லேஶப்படுகிறது ஆஶ்ரிதவிரஹம் பொறுக்கமாட்டாத மென்மையாலேயிறே. (அவர்களுக்குப்பாங்காகத்தன்னைத்தாழவிட்டு) இது - ஸௌஶீல்யகார்யம். ஜந்மாதிகளால் தண்ணியராயிருக்கு மவர்களுக்கு அநுகூலமாக ஸர்வேஶ்வரன், ஸர்வோத்க்ருஷ்டனான தன்னைத்தாழவிடுகிறது - ஶீலவத்தையாலேயிறே. (அவர்களுக்குக் கட்டவும் அடிக்கவுமாம்படி யெளியனாய்) இது - ஸௌலப்யகார்யம். அவதாரதசையிலே நவநீதசௌர்யவ்யாஜத்தாலே (சகஅ) "சிக்கெனவார்த்தடிப்ப" என்கிறபடியே யஶோதாதிகளுக்குக் கட்டவும் அடிக்கவுமாம்படி யெளியனாயிற்றது-(சகக) எளிவருமியல்வினனாகையாலேயிறே. (அன்று ஈன்றகன்றுக்குத்தாயிரங்கி முன்னணைக்கன்றையும் புல்லிடவந்தவர்களையும் கொம்பிலும் குளம்பிலு மேற்குமாபோலே, பெரிய பிராட்டியாரையும் ஸூரிகளையும்விட்டு ஸ்நேஹித்துக்கொண்டுபோரும்) இது-வாத்ஸல்யகார்யம். அன்று தான்பெற்ற கன்றுக்குத் தாயான பசுவிரங்கி, முன்புதான் ஸ்நேஹித்துக்கொண்டுபோந்த முன்னணைக்கன்றையும், தனக்கு போக்யமானபுல்லிடவந்தவர்களையும் உட்பட மூசிக் கொம்பிலேகோத்தெடுப்பது,குளம்பாலே மிதிப்பதாமாபோலே, பரிரம்பணாதி போக்யோபகாரகையான பெரியபிராட்டியாரையும், முன்பு ஸ்நேஹவிஷயமாய்ப்போந்த நித்யஸூரிகளையும் தள்ளிவிட்டு, இன்று ஆஶ்ரயித்தவிவர்களை ஸ்நேஹித்துக்கொண்டுபோருகிறது - வத்ஸலனாகையாலேயிறே.

(கக). ஆக, "ஜ்ஞாநஶக்த்யாதிகல்யாணகுணகணபூஷிதனாய்" என்றத்தை விஸ்தரேண உபபாதித்தாராய் நின்றார்கீழ்; அநந்தரம்

கஉ. சிலர்பரமாணுவை காரணமென்றார்கள்.

"ஸகலஜகத்ஸர்க்கஸ்த்திஸம்ஹாரகர்த்தாவாய்" என்றத்தை, விஸ்தரேண உபபாதிப்பதாக வுபக்ரமிக்கிறார் ; (இவனே ஸகலஜகத்துக்கும் காரணபூதன்)என்று. இவன் என்று, கீழ்ச்சொன்ன விலக்ஷணஸ்வரூபகுண விஶிஷ்டனான ஈஶ்வரனைப்பராமர்ஶிக்கிறது; அவதாரணத்தாலே, ஜகத்காரணத்வத்தினுடைய அந்யயோக வ்யவச்சேதம்பண்ணுகிறது; வேதாந்தத்திலே (சஉ0) "ஸதெவஸெளமெ்யதமகூஆஸீத்" என்று சாந்தோக்யத்திலும்,(சஉக)"ப்ரஹ்மவாஇதமெகமெவாக்ர ஆஸீத்" என்று வாஜஸநேயகத்திலும், (சஉஉ) "ஆத்மாவாஇதமெகமெவாக்ர ஆஸீத்" என்று ஐதரேயகத்திலும், ஸத்ப்ரஹ்மாத்மரூப ஸாமாந்ய ஶப்தங்களாலே சொல்லப்பட்ட காரணவஸ்துவேது ? என்னுமாகாங்க்ஷயிலே, கதிஸாமாந்யந்யாயத்தாலே (சஉங) "ஏகொஹவை நாராயண ஆஸீத்"என்று, மஹோபநிஷத்திலே விஶேஷிக்கப்பட்ட நாராயணனே ஜகத்காரணபூதனாக நிஶ்சயித்திருக்கும்பரமவைதிகராகையாலே, "இவனே" என்று ஸாவதாரணமாக வருளிச்செய்கிறார்.

(ஸகலஜகத்துக்கும் காரணபூதன்) என்றது - ஸமஷ்டி வ்யஷ்டி ரூப ஸமஸ்தகார்யங்களுக்கும் காரணபூதனென்றபடி. இத்தால்- ஸமந்வயமும், அவிரோதமும், ஸாதநமும், பலமுமாகிற வர்த்தசதுஷ்டயத்தையும் அடைவே ப்ரதிபாதிக்கிறவுத்தரமீமாம்ஸையில் அத்யாயசதுஷ்டயத்திலும் வைத்துக்கொண்டு, (சஉச) "அதாதொ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்று, ஜிஜ்ஞாஸ்யமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமாக (சஉரு)"ஜந்மாத்யஸ்ய யத:" என்று, ஜகத்காரணத்வத்தைச்சொல்லி, அதினுடைய அயோகாந்யயோகவ்யவச்சேதமுகத்தாலே, ஜகத்காரணவஸ்து ப்ரதிபாதக ஸகலவேதாந்தவாக்யங்களுக்கும் ப்ரஹ்மணிஸமந்வயத்தைப்ரதிபாதித்த ப்ரதமாத்யாயத்தில் அர்த்தத்தை யருளிச்செய்தாராயிற்று.

(கஉ) அவிரோத ப்ரதிபாதகமான த்விதீயாத்யாயத்திற்படியே, ப்ரஹ்மகாரணத்வவிரோதியான பரமாணு காரணவாதிகளை நிராகரிக்கிறார் ; (சிலர் பரமாணுவை காரணமென்றார்கள்)

கங. பரமாணுவில் ப்ரமாணமில்லாமையாலும், ஶ்ருதிவிரோ தத்தாலும் அது சேராது.

கச. காபிலர் ப்ரதாநம் காரணமென்றார்கள்.

என்று தொடங்கி. சிலரென்று, பௌத்தார்ஹத வைஶேஷிகாதிகளைச்சொல்லுகிறது. இதில், பௌத்தார்ஹதர்க்கு கேவல பரமாணுக்களே ஜகத்காரணமாக மதமாயிருக்கும்; வைஶேஷிகாதிகளுக்கு பரமாணுக்கள் உபாதாநகாரணமாய், ஆநுமாநிகேஶ்வரன் நிமித்தகாரணமாக மதமாயிருக்கும். இவர்களில்பௌத்தவைஶேஷிகாதிகள், பார்த்திவாப்யதைஜஸவாயவீயங்களென்று, பரமாணுக்கள் சதுர்விதமாகக்கொள்ளுவர்கள்; ஆர்ஹதர், ஏகரூபமாகக்கொள்ளுவர்கள். இங்ஙனே சிலவிஶேஷங்கள் உண்டானாலும், பரமாணுகாரணத்வாங்கீகாரம் எல்லார்க்கும் ஒத்திருக்கையாலே, சிலரென்று, ஸமுச்சித்யோபாதாநம்பண்ணுகிறார்.

(கங) இவர்கள், மஹீ மஹீதராதி ஸகலகார்யங்களும் பரமாணுபரிணாமமென்றிறே! சொல்லுவது. அந்தப்பக்ஷத்தை நிராகரிக்கிறார்; (பரமாணுவில் ப்ரமாண மில்லாமையாலும், ஶ்ருதிவிரோதத்தாலும் அதுசேராது) என்று. அதாவது-ஜகத்காரணதயா அங்கீகரிக்கப்படுகிற பரமாணுக்கள் ப்ரத்யக்ஷஸித்தமுமன்றியே, ஆகமஸித்தமுமன்றியே, அநுமாநத்தாலே ஸாதிக்கப்பார்க்கில், அது,ஆகமவிருத்தமான வர்த்தத்தை ஸாதிக்கமாட்டாமையாலே, அநுமாநஸித்தமுமன்றியே யிருக்கையாலே, பரமாணுஸத்பாவத்தில் ஒரு ப்ரமாணமும் இல்லாமையாலும், ஈஶ்வரனே ஜகத்காரணம் என்கிற ஶ்ருதிக்கு விரோதமாகையாலும், பரமாணுக்கள் ஜகத்காரணம் என்கிறவது சேராது என்கை.

(கச) அநந்தரம், ஜகத்துக்கு ப்ரக்ருதியே ஸ்வதந்த்ரகாரணம் என்று சொல்லுகிற காபிலமதத்தை நிராகரிக்கைக்காகவத்தை யுத்க்ஷேபிக்கிறார்; (காபிலர் ப்ரதாநம் காரணமென்றார்கள்)என்று. காபிலரென்கிறது - கபிலமதநிஷ்டரான ஸாங்க்யரை. ம்ருதாத்மகமான க(வ)டத்துக்கும்ருத்த்ரவ்யமே காரணமாகிறாப்போலே, ஸத்வ ரஜஸ் தமோமய ஸுகதுஃகமோஹாத்மகமான ஜகத்துக்

கரு. ப்ரதாநம் அசேதந மாகையாலும், ஈஶ்வரனதிஷ்டியாத போது பரிணமிக்க மாட்டாமையாலும், ஸ்ருஷ்டிஸம் ஹாரவ்யவஸ்த்தை கூடாமையாலும் அதுவும் சேராது.

கசா. சேதநனும் காரணமாகமாட்டான்,

கும், குணத்ரயங்களினுடைய ஸாம்யரூபமான ப்ரதாநமே ஸ்வதந்த்ரமான காரணம். தநிபாவேந பரிணமியாநிற்கும் பயஸ்ஸுக்கு, அநந்யாபேக்ஷமாக ஆத்யபரிஸ்பந்தம் முதலான பரிணாமபரம்பரை ஸ்வதஏவகூடுகிறாப்போலேயும், மேகவிமுக்தமாய் ஏகரஸமாயிருக்கிறஜலத்துக்கு நாரிகேள தால சூத கபித்த நிம்ப திந்த்ரிண்யாதிவிசித்ர ரஸரூபேண பரிணாமப்ரவ்ருத்தி காணப்படுகிறாப்போலேயும் பரிணாமஸ்வபாவமாய், ப்ரதிஸர்க்காவஸ்த்தையில்ஸதூருபபரிணாமமுமாயிருந்த ப்ரதாநத்துக்கு, அநந்யாதிஷ்டிதமாக்வேஸர்க்காவஸ்த்தையில் குணவைஷம்ய நிமித்தமான விசித்ர பரிணாமங்கூடுமாகையாலே, ப்ரக்ருதியே ஸ்வதந்த்ரமாய்க்கொண்டு ஜகத்காரணமாகிறதென்றிறே! அவர்கள் சொல்லுவது.

(கரு) அத்தை நிராகரிக்கிறார் ; (ப்ரதாநம் அசேதநமாகையாலும்) என்று தொடங்கி. அதாவது - விசித்ரஜகதாகாரேண பரிணமிக்குமிடத்தில், இன்னபடி பரிணமிப்போமென்றிருக்கைக்கு யோக்யதை யில்லாதபடி ப்ரதாநம் சைதந்யரஹிதமான வஸ்துவாகையாலும், (சஉக) “[illegible]” என்கிறபடியே, ஈஶ்வரன் அதிஷ்டித்தபோதொழிய பரிணமிக்கமாட்டாமையாலும், ததநிஷ்டிதமாகவொழிய பரிணமிக்குமாகில், ஸர்வகாலமும் ஸ்ருஷ்டியேயாய்ச் செல்லுமதொழிய ஸம்ஹ்ருதமாய்க் கிடக்கையென்னுமது கூடாமையாலே, காலபேதேந வருகிற ஸ்ருஷ்டிஸம்ஹார வ்யவஸ்த்தை கூடாமையாலும், ப்ரதாநம் காரணமென்கிற வதுவும் சேராதென்கை. (அதுவும்) என்று-பூர்வோக்த பரமாணு காரணவாதத்தை ஸமுச்சயிக்கிறது.

கசு. “இப்படி அசேதநமான ப்ரதாநத்தை ஜகத்காரணமாகக் கொள்ளுகிறபக்ஷத்தை நிராகரித்த வநந்தரம், சேதநனை ஜகத்கா

கஎ. கர்ம பரதந்த்ரனுமாய் துக்கியுமாயிருக்கையாலே.

ரணமாகக்கொள்ளும் பாசுபதாதிமதத்தை நிராகரிக்கிறார்;(சேதந னும்காரணமாகமாட்டான்) என்று. சப்தத்தாலே, கீழ்ச்சொன்ன சேதநத்தை ஸமுச்சயிக்கிறது. ஆகமஸித்தேஸ்வரன் நிமித்த காரணமென்றும், அநுமாநிகேஸ்வரன் நிமித்தகாரணமென்றும், பாஸுபதவைசேஷிகாதிகள் சொல்லுகிற ருத்ரன் - சேதநரிலே அந்யதமனிறே; (சஉஎ) "ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரே" இத்யாதி வாக்யங்களைக்கொண்டு, சேதநரிலே அந்யதமனான ப்ரஹ்மாவையும் ஜகத்காரணமகாச் சொல்லுவாருமுண்டிறே. அவை யெல்லாவற்றையுந் திருவுள்ளம்பற்றியிறே (சேதநனும்) என்று, பொதுவிலே யருளிச்செய்தது. காரணமாகமாட்டான் என்றது- காரணமாக க்ஷமன் அல்லன் என்றபடி.

(கஎ) எத்தாலேயென்னவருளிச்செய்கிறார்;(கர்மபாரதந்த்ரனு மாய்) என்றுதொடங்கி. அதாவது - அஸங்குசித ஜ்ஞாநஸக்திக னாய்க்கொண்டு, தான்நினைத்தபடி யொன்றுஞ்செய்ய க்ஷமனல்லா தபடி கர்மாதீநனுமாய், ஆநந்தியாய்க்கொண்டு ஜகத்வ்யாபாரத் திலே மூளுகைக்கு யோக்யதை யில்லாதபடி துக்கியுமாயிருக்கை யாலேயென்கை. (சஉஅ) "அவஶஸ்தவார்த்த" என்கிறபடியே; அகர்மவஸ்யனுமாய், (நக) "ஆநந்தமயஃ" என்கிறபடியே, நிரதி ஸயாநந்தியுமாயிருக்குமவனுக்கிறே ! அப்ரதிஹதஜ்ஞாநஸக்திக னாய், மநஃப்ரீதியோடே பண்ணும் ஜகத்வ்யாபாரங்கூடுவது; (சஉகூ) "ப்ரஹ்மா தக்ஷாதய: காலஸ்ததைவாகில ஜந்தவ: । விபூதயோ ஹரேரேதா ஜகதஸ்ஸ்ருஷ்டிஹேதவ: । ஸ்ருஷ்டிஞ்ச ப்ராப்ய காலேந ஜ்ஞாநமோஹைர்விமோஹிதா: । ப்ராணிநஃகர்மஜநிதா ஸம்ஸாரவஸவர்த்திந:" என்கிறபடியே, கர்மவஸ்யருமாய், (சஙூ0) "ததஃப்ரப்ருதி தே நித்யம் ஸந்த்யஜ்ய கர்மநிதம் । வாதாதிஜ்வரிதா: ஸர்வே தாபத்ரயவஸம்வதா: । த்ருஷ்டாதிதுஃகை: ஸந்தப்தா: ஸர்வே துஃகைகபாஜந:" என்கிறபடியே, தலையறுப்பாரும், அறுப்புண்பாரு மாய்க்கொண்டு துஃகிகளுமாயிருப்பார்க்கு ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங் கூடாதிறே.

கசு. ஆகையால் ஈஶ்வரனே ஜகத்துக்குகாரணம்.

ககூ. இவன்காரணமாகிறது - அவித்யாகர்மபரநியோகாதிகளாலன்றிக்கே ஸ்வேச்சையாலே.

கசு. ஆக, இப்படி விரோதிபரிஹாரங்களைப் பண்ணி, ப்ரதிஜ்ஞாநுகுணமாக நிகமிக்கிறார் ; (ஆகையால், ஈஶ்வரனே ஜகத்துக்குக்காரணம்) என்று. ஆகையால் என்றது - சேதநாசேதநங்கள் இரண்டும் காரணமன்றிக்கே யொழிகையாலேயென்கை.

(ககூ) லோகத்திலே அவித்யாகர்மநிபந்தநமாகவும், பரநியோக நிபந்தநமாகவும் காரணமாகையுண்டாகையாலே அவற்றைக்கழித்து, இவனுடைய காரணத்வஹேதுவை யருளிச்செய்கிறார் ; (இவன்காரணமாகிறது) என்றுதொடங்கி. அவித்யாகர்ம நிபந்தநமான காரணத்வம் ஸகலஜந்து ஸாதாரணம். அதாவது-லோகத்தில் ஒன்றுக்கொன்று உத்பாதகமாய்க்கொண்டு வருகிற காரணத்வம், வைஷயிகஸுகப்ராவண்யஹேதுவான வஜ்ஞாநத்தாலும், கர்மத்தாலுமிறே. அதில், ஶாஸ்த்ரவஶ்யமானவற்றினுடைய வுத்பாதகத்வம் கர்மப்ரதாநமா யிருக்கும் ; அல்லாதது, அவித்யா ப்ரதாநமாயிருக்கும். இரண்டும், ஒன்றையொன்றுவிட்டிராது. அதிகாரிபுருஷர்களான ப்ரஹ்மாதிகளுடைய காரணத்வம் பரநியோகப்ரதாநமாயிருக்கும்.(சஙக) "ப்ராஜாபத்யம் த்வயா கர்ம ஸர்வம் மயி நிவேஶிதம்" (சஙஉ) "[illegible]" இத்யாதிகளிலே கண்டுகொள்வது. "ஆதிஸம்பத்தத்தால், இவர்க்குவிவக்ஷிதம் - அவர்ஜநீயமான ரோகமோ" என்று, நடுவிற்றிருவீதிப்பிள்ளைபட்டர் அருளிச்செய்ததாமித்தனை. "இந்த ஸ்ருஷ்ட்யாதிவ்யாபாரங்கள், எம்பெருமானுக்கு அவித்யாகர்மநிபந்தநமோ ? அன்றிக்கே, அவர்ஜநீயமாயிருப்பதொரு ரோகமோ ? இல்லையாகில், பரப்ரேரிதனாய்க்கொண்டு செய்கிறானோ ?" என்றிறே ! அவர் ஶங்காவாக்யத்தில் அருளிச்செய்தது.

இவற்றாலன்றிக்கே, ஸ்வேச்சையாலே என்றது (சஙங) "நிரவத்யம் நிரஞ்ஜநம்" (சஉஅ) "[illegible]" (சஙச)

௨0. ஸ்வஸங்கல்பத்தாலே செய்கையாலே, இதுதான் வருத்தமற்றிருக்கும்.

௨௧. இதுக்கு ப்ரயோஜநம் கேவலலீலை.

“ ந தஸ்ய ப்ரயோஜநம் ” என்கிறபடியே, அவித்யாதிதோஷ ப்ரதிபடனாய், தனக்கொரு நியாமகரின்றிக்கே யிருப்பானொருவனாகையாலே, தன்னிச்சையொழிய ஹேத்வந்தரமில்லை யென்றபடி. (௨௫) “ [illegible] ” (௨௬) “ [illegible] ” என்றிறே! பட்டரருளிச்செய்தது.

௨௦. இப்படி, இச்சையாலே யானாலும் இதுதான் ஆயாஸரூபமாயிருக்குமோ? என்ன வருளிச்செய்கிறார்; (ஸ்வஸங்கல்பத்தாலே செய்கையாலே இதுதான் வருத்தமற்றிருக்கும்) என்று. அதாவது - யத்நரூபமான காயிகவ்யாபாரத்தாலன்றிக்கே, அயத்நமான மாநஸவ்யாபாரரூபஸங்கல்பத்தாலே செய்கையாலே, இந்த ஜகத்ஸ்ருஷ்டிரூபவ்யாபாரந்தான் அவனுக்கு அநாயாஸமாயிருக்குமென்கை. (௨௭) “ ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி ” (௨௮) “ [illegible] ” (௨௯) “நினைந்த வெல்லாப்பொருள்களுக்கும் வித்தாய்முதலிற்சிதையாமே மனஞ்செய்ஞானத்துன்பெருமை” என்னக்கடவதிறே.

(௨௧) அநாயாஸமாயிருந்ததேயாகிலும், அவாப்த ஸமஸ்த காம தயா பரிபூர்ணனாயிருக்கிறவனுக்கு இந்தவ்யாபாரத்தால் ப்ரயோஜநமென்? என்ன வருளிச்செய்கிறார்; (இதுக்கு ப்ரயோஜநம் கேவலலீலை) என்று. அதாவது - இந்த ஜகத்ஸ்ருஷ்டிரூப வ்யாபாரத்துக்கு ப்ரயோஜநம் வெறும் லீலையென்றபடி. லீலையாவது - தாதாத்விகரஸமொழிய காலாந்தரத்தில் வருவதொருபலத்தைக்கணி

சியாமல் பண்ணும் வ்யாபாரமேயாகிலும், "இதுக்குப்ரயோஜநம்" என்று, ஸ்ருஷ்டிரூபவ்யாபாரத்துக்கு ப்ரயோஜநமாகச் சொல்லுகையாலே, தாதாத்விகரஸமாத்ரத்தைச் சொல்லிற்றாகக்கடவது. இந்தஸ்ருஷ்டிரூபவ்யாபாரந்தான் - ஸார்வபௌமரான ராஜாக்களுக்கு த்யூதாதிகள் போலேயும், பாலர்க்கு மணற்கொட்டகம்போலேயும் தாதாத்விகரஸமாயிருப்பதொன்றிறே இவனுக்கு. இத்தால், (௪௪0) "லோகவத்து லீலாகைவல்யம்" என்கிற ஸூத்ரார்த்தத்தை யருளிச்செய்தாராயிற்று. (௪௪௧) "க்ரீடா ஹரேரிதம் ஸர்வம்" என்று, ஸ்ரீபராஶரபகவானும் (௪௪௨) "க்ரீடார்த்தம் [illegible]" என்று, ஸ்ரீவேதவ்யாஸபகவானும், (௪௪௩) "களிர்மாமலருந்தி வீட்டைப்பண்ணி விளையாடும்விமலன்" (௪௪௪) "இன்புறுமிவ்விளையாட்டுடையான்" என்று அபியுக்தரும், இவனுடைய ஜகத்வ்யாபாரத்துக்கு ப்ரயோஜநம் லீலையாகவே சொன்னார்களிறே.

ஆனால், (௪௪௫) "சென்றுசென்றாகிலும் கண்டு சன்மம்கழிப்பானெண்ணி யொன்றியொன்றி யுலகம்படைத்தான்" என்றும், (௪௪௬) "உய்யவுலகுபடைத்து" என்றும், (௫) "விசித்ரா தேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும் । பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதிஸம்யுதா" என்றும், (௪௪௭) "மாயவன்றன்னை வணங்கவைத்தகாரணமிவை" என்றும், (௪௫௫) "[illegible]" என்றும், சேதநருடைய உஜ்ஜீவநம் ப்ரயோஜநமாக ஜகத்ஸ்ருஷ்டி பண்ணினானென்று சொல்லுகிற விவ்வசநங்களுக்கு வையர்த்த்யம் வாராதோவென்னில்; வாராது. எங்ஙனே யென்னில்; உபயப்ரயோஜந முண்டாயிருக்கச்செய்தேயும், லீலையேப்ரயோஜநமென்றது - ப்ராசுர்யத்தைப்பற்றச்சொன்ன வித்தனையாகையாலே; (௪௪அ) "[illegible]" என்கிறபடியே, நினைத்தபடி செய்யவல்ல ஶக்திமா

௨௨. **ஆனால், ஸம்ஹாரத்தில் லீலை குலையாதோவென்னில் ;**

௨௩. **ஸம்ஹாரந்தானும் லீலையாகையாலே குலையாது.**

னாகையாலே, ஸகலாத்மாக்களையும் யுகபத்தேவமுக்தராக்கவல்லனா யிருக்கச்செய்தேயும், ஸ்வாதீநஸ்வரூபஸ்த்தித்யாதிகரானவாத்மாக்களை கர்மத்தை வ்யாஜீகரித்துக் கைகழியவிட்டு, ஶாஸ்த்ரமர்யாதையிலே வரவர வங்கீகரிப்பனென்றிருக்கிறவிது லீலாரஸேச்சையாலேயிறே. லீலாவிபூதியென்றிறே இதுதனக்கு நிரூபகம். ஆகையாலே, இவ்விபூதியில் லீலையே ப்ரசுரப்ரயோஜநமாய்ச் செல்லுகையாலே, ஸூத்ரகாராதிகளெல்லாரும், ஸ்ருஷ்டிப்ரயோஜநம்-லீலையேயாகச்சொல்லுகையாலே, இவரும் "கேவலலீலை" என்றருளிச்செய்தாராயிற்று.

(௨௨) இப்படி ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுகிறது-லீலார்த்தமாகவாகில், ஸம்ஹாரதஶையில் லீலைகுலையாதோ வென்கிற ஶங்கையை யநுவதிக்கிறார் ; (ஆனால், ஸம்ஹாரத்தில் லீலைகுலையாதோ வென்னில்) என்று.

(௨௩) அத்தைப் பரிஹரிக்கிறார் ; (ஸம்ஹாரந்தானும் - லீலையாகையாலே குலையாது) என்று. அதாவது - கொட்டகமிட்டுவிளையாடுகிறபாலர்க்கு, இட்டகொட்டகந்தன்னை மீளவழித்துப்பொகடுகிறதுதானும் லீலையாயிருக்குமாபோலே, இவற்றை ஸம்ஹரிக்கைதானும் ஸ்ருஷ்டியோபாதி லீலையாயிருக்கையாலே, எப்போதும் லீலைகுலையாதென்றபடி. (௪௪௯) "[illegible]"என்றும், (௪௫௦)"[illegible]" என்றும், ஸ்ருஷ்டியோபாதி ஸம்ஹாரத்தையும் அவனுக்கு லீலையாக வருளிச்செய்தாரிறே எம்பெருமானார்.

ஆக, இதுக்குக்கீழ் ஈஶ்வரனே ஜகத்துக்கு காரணமென்றும், இவன்காரணமாகிறது ஹேத்வந்தரங்களாலன்று; ஸ்வேச்சையாலேயென்றும், ஸங்கல்பமாத்ராவக்லுப்தமாகையாலே, இதுதான் அநாயாஸமாயிருக்குமென்றும், இதுதனக்கு ப்ரயோஜநம் லீலையென்றும் சொல்லிநின்றது.

உச. இவன், தானே ஜகத்தாய்ப் பரிணமிக்கையாலே, உபா தாநமுமா யிருக்கும்.

(உச) இனி, இவனுக்கு ஜகத்தைப்பற்றவுண்டான காரணத்வம், கடபடாதிகளைப்பற்ற குலாலாதிகளுக் குண்டான காரணத்வம் போலே, நிமித்தத்வ மாத்ரமோ வென்கிற ஶங்கையிலே, உபாதாநகாரணமும் இவனே யென்னுமத்தை யருளிச்செய்கிறார்; (இவன் தானே) என்று தொடங்கி. லோகத்தில், கார்யோத்பத்தியில் காரணம் நிமித்தோபாதாநஸஹகாரிரூபேண த்ரிவிதமாயிருக்கும். இதில், நிமித்தகாரணமாவது - உபாதாநமான வஸ்துவை கார்யரூபேண விகரிப்பிக்கும் கர்த்ருவஸ்து. உபாதாந காரணமாவது - கார்யரூபேண விகரிக்கைக்கு யோக்யமான வஸ்து. ஸஹகாரிகாரணமாவது-கார்யோத்பத்திக்கு உபகரணமான வஸ்து; கடபடாதிகளுக்கு குலால குவிந்தாதிகள் நிமித்தமாய், ம்ருத் தந்த்வாதிகள் உபாதாநமாய், தண்டசக்ரவேமாதிகள் ஸஹகாரியாயிருக்கும். இங்ஙனன்றிக்கே, ஜகத்ரூபகார்யோத்பத்தியில் ஈஶ்வரனே த்ரிவிதகாரணமுமாயிருக்கும். எங்ஙனேயென்னில்;(சகூ) "ஸஹ-ஸஸ்ரீ" என்கிற ஸங்கல்பவிஶிஷ்டனாய்க்கொண்டு நிமித்தகாரணனாயும், நாமரூப விபாகாநர்ஹமாம்படி தன்னுடனே கூடிக்கிடக்கிற ஸூக்ஷ்ம சிதசித்விஶிஷ்டனாய்க்கொண்டு உபாதாந காரணமாயும், ஜ்ஞாநஶக்த்யாதிவிஶிஷ்டனாய்க்கொண்டு ஸஹகாரிகாரணமாயுமிருக்கும். ஆகையாலே, உபாதாநகாரணமும் இவனே யென்கிறார்.

"இவன்" என்று, கீழ் நிமித்தகாரணமாகச் சொன்ன ஈஶ்வரனைப்பராமர்ஶிக்கிறது. சிதசித்துக்கள் இரண்டும் அப்ருதக்ஸித்த விஶேஷணமாய்க் கொண்டு, தானென்கிற சொல்லுக்குள்ளே அந்தர்ப்பூதமாம்படி யிருக்கையாலே, "தானே ஜகத்தாய்ப் பரிணமிக்கையாலே" என்கிறார். "உபாதாநமுமாயிருக்கும்" என்று, கீழ்ச் சொன்ன நிமித்தகாரணத்வத்தோடே உபாதாந காரணத்வத்தையும் ஸமுச்சயிக்கிறது.

இத்தால், ப்ரஹ்மத்தினுடைய ஜகத்காரணத்வத்தை ப்ரதிபாதிக்கிற வேதாந்த ஸூத்ரத்தில் நிமித்தகாரணத்வத்தை ஸாதித்த வநந்தரம், (உடு) "ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநு-

உரு. ஆனால், நிர்விகாரனென்னும்படி யென்னென்னில்;

ரோயாக"என்று, உபாதாந காரணத்வத்தையும் சொன்னப்போலே, இவரும் அருளிச்செய்தாராயிற்று.

(உஉ) "வ்ரக்ருதிஶ்ச" என்றத்தை யுட்கொண்டிறே இவரும் உபாதாநமுமாயிருக்குமென்றது. அங்கு, (உஉ)' வ்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தாநுவரோயாக" என்று, ஸாத்யம்முன்னாக ஸாதநத்தைச்சொல்லிற்று; இங்கு, "இவன், தானே ஜகத்தாய்ப் பரிணமிக்கையாலே" என்று, ஸாதநம் முன்னாக ஸாத்யத்தைச்சொல்லிற்று. அங்கு, (சஙக) "யேநாஶ்ருதம் ஶ்ருதம்பவதி..." என்று, ஏகவிஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞையாலும், (சஙஉ) "யதா..." என்கிற ருஷ்டாந்தத்தாலும், "ஏகவஸ்துபரிணாமம்-ஜகத்து" என்றிறே சொல்லிற்று. அந்த ஏகவஸ்துவாகிறது - ஸூக்ஷ்மசிதசித்விஶிஷ்டமான ப்ரஹ்மமிறே. அத்தையிறே இவரும், "தானே" என்கிறசொல்லாலே யருளிச்செய்தது. ஆகையால், அந்த ஸூத்ரார்த்தமே இதென்னத்தட்டில்லை. (சஙங) "ஸோகாமயத..." (சஙச) "ததாத்மாநம் ஸ்வயமகுருத" (சஙரு) "ஸர்வஸ்ருஜதி..." (சஙசா) "..." இத்யாதிகளாலே, இந்த நிமித்தோபாதாநயோரைக்யத்தை, ஶ்ருதி ஸ்ம்ருதிகள் ஸுவ்யக்தமாகச் சொல்லாநின்றனவிறே.

(உரு)இப்படி தானேஜகத்தாய்ப்பரிணமிக்குமாகில்,(சஙங)"நிஷ்களம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்" (ஙசக) "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம"(ஙஙஉ) "அவிகாராய ஶுத்தாய" என்று, இவனை நிர்விகாரனாகச்சொல்லும்படி யெங்ஙனேயென்கிற ஶங்கையை யநுவதிக்கிறார்; (ஆனால், நிர்விகாரனென்னும்படி யென்னென்னில்) என்று.

உசு. ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே.

உஎ. ஆனால், பரிணாம முண்டாம்படி யென்னென்னில்;

உஅ. விஶிஷ்டவிஶேஷணஸத்வாரகமாக.

(உசு) அத்தைப்பரிஹரிக்கிறார். (ஸ்வரூபத்துக்கு) இத்யாதியாலே; அதாவது-சிதசித்ரூபவிஶேஷண விஶிஷ்டனான தானே ஜகத்தாய்ப் பரிணமிக்குமிடத்தில் விஶேஷ்யமான ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே, நிர்விகாரனென்னக் குறையில்லை யென்கை.

(உஎ) ஸ்வரூபத்திற்கு விகாரமில்லையாகில், "இவன் தானே ஜகத்தாய்ப் பரிணமிக்கிறான்" என்ற பரிணாமம்-இவனுக்குண்டாம்படி யெங்ஙனேயென்கிற ஶங்கையை அநுவதிக்கிறார்; (ஆனால், பரிணாம முண்டாம்படி யென்னென்னில்) என்று.

(உஅ) அதற்கு உத்தரமருளிச்செய்கிறார்; (விஶிஷ்டவிஶேஷணஸத்வாரகமாக) என்று. (சஙு) "விஶிஷ்டஞ்ச தச்ச விஶேஷணஞ்ச இதி விஶிஷ்டவிஶேஷணம்" என்று, ப்ரதமம் கர்மதாரய ஸமாஸத்தைப்பண்ணி, (சஙு அ) "த்வாரேண ஸஹ வர்த்தத இதி ஸத்வாரம்" என்று, அநந்தரபதத்தைப் பரிக்ரஹித்து (சஙுகூ) "விஶிஷ்டவிஶேஷணேந ஸத்வாரகம் விஶிஷ்டவிஶேஷணஸத்வாரகம்" என்று, த்ருதீயாதத்புருஷஸமாஸத்திற்கு வ்யுத்பத்தி பண்ணிக்கொள்வது. விஶிஷ்டமாவது - விஶேஷ்யாந்தமானதாய், விஶிஷ்டமான விஶேஷணமென்று - தண்டகுண்டலாதிகள்போலன்றிக்கே ஶரீர பூதமாகையாலே, ப்ருதக்ஸித்யர்ஹமல்லாத விஶேஷத்தை யுடைத்தான சிதசித்ரூப விஶேஷணத்தைச் சொல்லுகிறது. அன்றிக்கே, விஶிஷ்டவிஶேஷணமென்கிற விதுக்கு - ஶரீரபூதமாய்க்கொண்டு, என்றுமொக்கத் தன்னோடே கூடி யிருக்கிற விஶேஷண மென்று பொருளாகவுமாம். அப்போதும், ப்ருதக்ஸித்யர்ஹமான தண்டகுண்டலாதிகளில் வ்யாவ்ருத்தி ஸித்திக்குமிறே. விஶேஷணத்தாலே ஸத்வாரகமாகவென்றது - இப்படி அப்ருதக்ஸித்தமான விஶேஷணமாகிற ஹேதுவாலே த்வாரஸஹிதமாக விவனுக்கு பரிணாமமுண்டாகிறதென்கை. இத்தால். அப்ருதக்ஸித்தமான சிதசித்ரூப விஶேஷணத்வாரா இவனுக்கு பரிணாம முண்டாகிறதென்றதாயிற்று.

உகூ. ஒரு சிலந்திக்குண்டான ஸ்வபாவம் ஸர்வஶக்திக்குக் கூடாதொழியாதிறே.

(உகூ) இப்படி, ஸ்வரூபத்திற்கு விகாரமின்றிக்கே யிருக்க, ஸ்வஶரீரபூதவிஶேஷணத்வாரா, கார்யஜாதத்துக்கெல்லாம் இவனே உபாதாநமாகை கூடுமோவென்னவருளிச்செய்கிறார் (ஒரு சிலந்திக்கு உண்டான) என்று தொடங்கி. அதாவது - அல்பஶக்திகமான சிலந்திக்கு ஸ்வரூபவிகாரமின்றிக்கே யிருக்கச்செய்தே, ஸ்வஶரீரபூத விஶேஷம் முகத்தாலே தந்துஜாதமான கார்ய ஜாதத்துக்குத் தான் உபாதாநமாம்படி யுண்டான ஸ்வபாவம், (சகூ௦) "பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே" என்று ஓதப்படுகிற ஸர்வஶக்திக்குக் கூடாதொழியாதிறேயென்கை. (சகூக) "யதோர்ணநாபிஸ்ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச" (சகூஉ) "ஊர்ணநாபிர்யதாஸூத்ரம் ஸ்ருஜதே பாதி ச ஸ்வயம் । ததா ஸ்ருஷ்டிகாலே ஸ்வயம் ஸ்ருஜதே ஹரி: ॥" என்னக்கடவதிறே. (சகூங) "காரணத்வே ஸதி நிர்விகாரத்வாதி யதாஸம்பவம் ஶக்திர் விசித்ரா யுக்திர் விசிந்த்யா ஸர்வதோ பாவம் அவாப்ய ஸூத்ரம் ஸ்ருஜதே ப்ரஜாநாம் ஸௌஸௌக்ஷ்ம்ய நாபி: ஶ்ரீயக: ஊர்ணநாப இவாயம் ॥" என்றருளிச் செய்தாரிறே பட்டர்.

இப்படி, நிமித்தோபாதாந காரணத்வங்களைச்சொல்லி, ஸஹகாரி காரணத்வம் சொல்லாதொழிந்தது - ஸர்வஜ்ஞத்வாதி குணயோகம் கீழே சொல்லுகையாலும், நிமித்தோபாதானங்களுக்கு ஐக்யம் சொல்லுகையாலும், தன்னடையே ஸித்திக்குமென்னுமத்தாலே. ஆகையிறே வேதாந்த ஸூத்ரத்திலும், இது விஶேஷித்துச் சொல்லாதொழிந்தது.

(ரு௦) ஆக, ஈஶ்வரனை த்ரிவித காரணமுமென்னுமிடம் ஸாதித்தாராய் நின்றார் கீழ்; அநந்தரம், (உகச) "கூடஸ்தோऽகோ" (சகூச) "மனோநாஸ்த்ரக்ஷவதீ" (சகூரு) "த்ரிகுணம் தத்ஜ்ஞத்ராஹிர நாஸ்வரூபாவ்யய:" (சகூகூ) "கூடஜாஹ்வக:" (ருஅ) "ஜ்ஞாஜ்ஞள் ஆவ

௯௦. ஈஶ்வரன் ஸ்ருஷ்டிக்கையாவது-அசித்தைப் பரிணமிப்பிக்கையும், சேதநர்க்கு ஶரீரேந்த்ரியங்களைக் கொடுத்து ஜ்ஞாந விகாஸத்தைப் பண்ணுகையும்.

௯௧. ஸ்த்திதிப்பிக்கையாவது - ஸ்ருஷ்டமான வஸ்துக்களிலே, பயிருக்கு நீர்நிலைபோலே, அநுகூலமாக ப்ரவேசித்து நின்று ஸர்வ ரக்ஷைகளையும் பண்ணுகை.

ஜாவீஶநீஶள” நௌ “ஈஜொ நிகஂஶ்ஶாஷூெதாயஂவெ-ஸாாணஃ” இத்யாதி ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லுகிறபடியே, நித்யமாயிருந்துள்ளவசித்தையும் சித்தையும் ஈஶ்வரன் ஸ்ருஷ்டிக்கையாவது தானேதென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்; (ஈஶ்வரன் ஸ்ருஷ்டிக்கையாவது) என்று தொடங்கி. இத்தால், ஜகத்காரணபூதனாகச் சொல்லப்பட்ட வீஶ்வரன் சேதநாசேதநாத்மகமான ஜகத்தை ஸ்ருஷ்டிக்கையாவது-(சஹா) “தஜஂவெரெஷவவஙீஹவதி” என்கிறபடியே, தன்னோடு அவிபக்தமாய்க்கிடந்த தமஶ்ஶப்த வாச்யமானவசித்தை-(சஹா) “தஹஸஂஊ-ஹிஊ-ஃமவா நவஂஶ்ஜோ வஂஜய நிஷஂ । உஹாஊ-ஹிதாஷிவஂதஂஜாஜெவஂாஷ-ஸாாவஸீஂ ஜொ நஷஂ” என்கிறபடியே, ஸ்வஸங்கல்ப விஶேஷத்தாலே ஸ்வஸ்மாத் விபக்தமாக்கி, அநந்தரம் அக்ஷராவஸ்த்தமாக்கி, அது தன்னைப்பின்பு அவ்யக்தாவஸ்தமாக்கி, அத்தை வ்யக்தஶப்த வாச்யமான ஸமஷ்டி வ்யஷ்டிரூப ஸமஸ்தகார்யங்களுமாம்படி பரிணமிப்பிக்கையும், (சஹா) “ஈவிஷவிஶெஷிதாநுஷஂஊயவீஉநி ஸஂஸாாஹஂ” என்கிறபடியே, கரணகளேபர விதுரனாய், போக(மொக்ஷ)மோக்ஷ ஶூந்யனாய், அசித்விஶேஷிதனாய்க்கிடந்த சேதநனுக்கு, போகஸ்தாநமான ஶரீரத்தையும், போகோபகரணங்களான விந்த்ரியங்களையும் கொடுத்து, போகமோக்ஷ பாகித்வார்ஹனாம்படி முன்பு ஸங்குசிதமாய்க்கிடந்த ஜ்ஞாநத்தினுடைய விகாஸத்தைப் பண்ணுகையுமென்கை. சேதநனுக்கென்றவிது-ஜாத்யேகவசநம்.

அநந்தரம், ஸ்திதிஸம்ஹாரங்களினுடைய ப்ரகாரங்களையுமருளிச்செய்யவேணுமென்று திருவுள்ளம்பற்றி, ப்ரதமம்ஸ்த்திதியினுடைய ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்; (ஸ்த்திதிப்பிக்

௯௨. ஸம்ஹரிக்கையாவது அவிநீதனான புத்ரனை பிதாவிலங்கிட்டு வைக்குமாபோலே, விஷயாந்தரங்களிலே கைவளருகிற கரணங்களைக் குலைத்திட்டுவைக்கை

கையாவது) என்று தொடங்கி. ஸ்த்திதிக்கையாவதென்னுதே, ஸ்த்திதிப்பிக்கையாவதென்றது-ஸ்த்திதியாவது-ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள்போலே கர்த்த்ருகதமன்றிக்கே, ரக்ஷணத்துக்கு கர்மீபவிக்கிற வஸ்துகதமாயிருப்பதொன்றுகையாலே, ஸ்த்திதிப்பிக்கையே கர்த்த்ருவ்யாபாரமாகையால்.

(ஸ்ருஷ்டமான) இத்யாதி. அதாவது (ஸ௦) "தத்ஸ்ருஷ்ட்வா" என்கிறபடியே, தன்னாலே ஸ்ருஷ்டமான வஸ்துக்களிலே, பயிருக்கு ரக்ஷகமாய்க்கொண்டு அநுகூலமாய் நிற்கும் நீர்நிலைபோலே (ஸ௦) "ததேவாநுப்ராவிஶத்" என்கிறபடியே தத்ரக்ஷணாநுகூலமாக வுள்ளே ப்ரவேசித்து நின்று, தத்தத்வஸ்த்வநுகுணமான ஸர்வ ரக்ஷைகளையும் பண்ணுகை யென்கை. அநுப்ரவேஶ ஶப்தத்திற்கு அநுகூலதயாப்ரவேஶம் இவர்க்கிவ்விடத்தில் விவக்ஷிதம். இத்தால் - ஸ்த்திதிப்பிக்கையாவது-நிலைப்பிக்கை யாகையாலே, தத்ரக்ஷணங்களைப் பண்ணுகை யென்றதாயிற்று.

(௯௨)அநந்தரம், ஸம்ஹார ப்ரகாரத்தை யருளிச் செய்கிறார்; (ஸம்ஹரிக்கையாவது)என்று தொடங்கி, அதாவது-(ஸ)"விசித்ரா தேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும்" என்கிறபடியே, ஸ்வஸமாஶ்ரயணத்தைப் பண்ணி உஜ்ஜீவிக்கைக்கு உறுப்பாகத் தான் கொடுத்த கரணங்களைக்கொண்டு தன்னை வழிபடுகையன்றிக்கே, பாஹ்யவிஷய ப்ரவணனாய்ப்போகப்புக்கவாறே, விதிநிஷேதவஶ்யனாய் ஒடுங்கிவர்த்தியாமல், ஸ்வைரசாரியான புத்ரனை ஹிதபரனான பிதாவானவன் ஒரு வ்யாபாரார்ஹனல்லாதபடி விலங்கையிட்டு ஒடுக்கி வைக்குமாபோலே, தன்னை யொழிந்த விஷயங்களிலே அதி ப்ரவணமாய் நடக்கிற கரணங்களைக்குலைத்து ஒடுக்கி விட்டு வைக்கை யென்கை.

(௯௩)இனி, இந்த ஸ்ருஷ்ட்யாதிகள் தான் ப்ரத்யேகம் சதுர்விதமாயிருக்கையாலே, அத்தையும் தர்ஶிப்பிக்கைக்காக வருளிச்

௯௩. இம்மூன்றும் தனித்தனியே நாலு ப்ரகாரமாயிருக்கும்.

௯௪. ஸ்ருஷ்டியில், ப்ரஹ்மாவுக்கும், ப்ரஜாபதிகளுக்கும், காலத்திற்கும், ஸகல ஜந்துக்களுக்கும் அந்தர்யாமியாய், ரஜோகுணத்தோடே கூடி ஸ்ருஷ்டிக்கும்.

௯௫. ஸ்த்திதியில், விஷ்ண்வாதிரூபேண அவதரித்து, மந்வாதிமுகேந ஶாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்து, நல்வழி காட்டி,

---

செய்கிறார். (இம்மூன்றும், தனித்தனியே நாலு ப்ரகாரமாயிருக்கும்) என்று. (௪௭௧) “ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம் । ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந: ॥” என்னக்கடவதிறே.

௯௪. (ஸ்ருஷ்டியில்) இத்யாதி; அதாவது-ஸ்ருஷ்டியில் வந்தால், சதுர்த்தஶபுவந ஸ்ரஷ்டாவாய் ஸமஷ்டி புருஷனை ப்ரஹ்மாவுக்கும், அவனாலே ஸ்ருஷ்டராய் நித்யஸ்ருஷ்டி கர்த்தாக்களான தஶப்ரஜாபதிகளுக்கும், ஸ்ருஷ்டிக்கு அபேக்ஷிதமான காலத்திற்கும், ஒன்றுக்கொன்று உத்பாதகங்களான ஸகல ஜந்துக்களுக்கும், தத்தத்ப்ரவ்ருத்திகளடையத் தன் பக்கலிலே பர்யவஸிக்கும்படி அந்தராத்மாவாய், ப்ரவ்ருத்திஹேதுவான ரஜோகுணவிஶிஷ்டனாய்க்கொண்டு ஸ்ருஷ்டிக்குமென்கை. (௪௭௨) “[illegible] । இத்தம் [illegible] ரஜோகுண:” என்னக்கடவதிறே.

௯௫. (ஸ்த்திதியில்) இத்யாதி. அதாவது - ஸ்த்திதியில் வந்தால் (௪௭௩) “[illegible] அவதாரா:” என்கிற விஷ்ண்வவதாரம் தொடக்கமாக, (௪௭௪) “[illegible]” (௪௭௫) “எந்நின்றயோநியுமாய்ப் பிறந்தாய்” என்கிறபடியே அநேகாவதாரங்களைப்பண்ணி, (௪௭௬) “அஜாயமாநோ பஹுதா விஜாயதே” என்று, ஆப்ததமனாக ஶ்ருதிப்ரஸித்த

காலத்துக்கும், ஸகல பூதங்களுக்கும் அந்தர்யாமியாய், ஸத்வகுணத்தோடே கூடி ஸ்த்திதிப்பிக்கும்.

௩௬. ஸம்ஹாரத்தில், ருத்ரனுக்கும், அந்யந்தகாதிகளுக்கும், காலத்துக்கும், ஸகலபூதங்களுக்கும் அந்தர்யாமியாய், தமோகுணத்தோடே கூடி ஸம்ஹரிக்கும்.

ஞான மநுமுதலான யாஜ்ஞவல்க்ய பராஶர வால்மீகி ஶௌநகாதிகள் முகேந ஸ்ம்ருதீதிஹாஸ புராணரூப ஶாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்து, சேதநர் அபதே(ஶ)ப்ரவ்ருத்தராகாமல் ஈடேறுகைக்கு உறுப்பான நல்வழிகளை தர்ஶிப்பித்து, ரக்ஷ்ணோபயோகியான காலத்துக்கும், லோகத்தில் ஒன்றுக்கொன்று ரக்ஷகமான ஸர்வ பூதங்களுக்கும், தத்தத்ப்ரவ்ருத்திகள் தன்னதாம்படி அந்தராத்மாவாய், ஜ்ஞாநப்ரகாஶாதிஹேதுவான ஸத்வகுணவிஶிஷ்டனாய்க்கொண்டு ஸ்த்திதிப்பிக்குமென்கை. (௬௭) “[illegible]” என்னக்கடவதிறே. புராணத்தில் (௬௮) “[illegible]” என்று - விஷ்ணவவதாரமொன்றையும் சொன்னவிது-அவதாராந்தரங்களுக்கும் உபலக்ஷணமென்று கொள்ளவேணும்; “விஷ்ணவாதிரூபேண அவதரித்து” என்று, இவர் அருளிச்செய்கையாலே.

௩௬. (ஸம்ஹாரத்தில்) இத்யாதி. அதாவது - ஸம்ஹாரத்தில் வந்தால், ஸம்ஹர்த்தாக்களில் தலையான ருத்ரனுக்கும், அவாந்தர ஸம்ஹர்த்தாக்களான அந்யந்தகாதிகளுக்கும், ஸம்ஹாரோபயோகியான காலத்துக்கும், ஒன்றுக்கொன்று நாஶகமான ஸகல பூதங்களுக்கும், தத்தத்ப்ரவ்ருத்திகளெல்லாம் தன்னதாம்படி அந்தராத்மாவாய், கண்பாராமல் செய்கைக்கு உறுப்பான தமோகுண விஶிஷ்டனாய்க்கொண்டுஸம்ஹரிக்குமென்கை. (௬௯) “[illegible]

௱௭. சிலரை ஸுகிகளாகவும், சிலரை து:கிகளாகவும் ஸ்ருஷ்டித்தால் ஈஶ்வரனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யங்கள் வாராதோ வென்னில்;

௱௮. கர்மமடியாகச் செய்கையாலும், மண்திண்ற ப்ரஜையை

[illegible] ஹேதவ:” என்னக்கடவதிறே. ஸ்ருஷ்ட்யாதிகளில் சதுர்விபாகஞ் சொல்லுகிறவிடத்தில் அம்ஶ ஶப்தத்தாலே - ப்ரஹ்மாதிகளைச் சொல்லிற்று அவர்கள் அவனுக்கு ப்ரகாரபூதராகையாலே யென்னுமிடத்தை, அநந்தரம், (௪௭௯) “ப்ரஹ்மதக்ஷாதய: காலஸ்ததைவாகிலஜந்தவ: விபூதயோ ஹரேரேதா ஜகத: ஸ்ருஷ்டிஹேதவ: । விஷ்ணுர்மந்வாதய: கால: ஸர்வபூதாநி ச த்விஜ । ஸ்திதேர்நிமித்தபூதஸ்ய விஷ்ணோரேதா விபூதய: । ருத்ர: காலாந்தகாத்யாஶ்ச ஸமஸ்தாஶ்சைவ ஜந்தவ: । சதுர்தா ப்ரலயாயைதா ஜநார்தந விபூதய:” என்று, மூன்று ஶ்லோகத்தாலே ஸ்புடமாக ப்ரதிபாதித்தானிறே ஸ்ரீ பராஶரபகவான். இத்தை நினைத்திறே இவரும், “அந்தர்யாமியாய்” என்றருளிச்செய்தது. (௪௭௯) “விஷ்ணுர்மந்வாதய:” என்கிற ஶ்லோகத்தில், விஷ்ணுவையும் விபூதியாகச்சொன்னவிது அவதாரப்ரயுக்தமான விக்ரஹபரமாகக்கடவது.

௱௭. இனி, விஷமஸ்ருஷ்டியடியாக மந்தமதிகளுக்கு உண்டாகக்கடவ ஶங்கையைப்பரிஹரிக்கைக்காக ப்ரதமம், தத்விஷயஶங்கையையநுவதிக்கிறார்; (சிலரை) என்று தொடங்கி. அதாவது-ஸ்ருஷ்டிக்கிறவளவில், ஸர்வாத்மாக்களையும் ஏகப்ரகாரமாக வன்றிக்கே, தேவமநுஷ்யாதிவிபாகேந, சில வாத்மாக்களை ஸுகிகளாகவும், சிலவாத்மாக்களை து:கிகளாகவும் ஸ்ருஷ்டித்தால், ஸர்வஸமனும், பரமதயாவானுமிருக்கும் ஈஶ்வரனுக்கு, எல்லாரளவிலும் ஒத்திராமையாகிற வைஷம்யமும், து:கிகளாக ஸ்ருஷ்டிக்கையாலே, பரது:காஸஹிஷ்ணுத்வ ரூபையான க்ருபையில்லாமையும் வாராதோ வென்கிறதாகிலென்கை.

௱௮ அத்தைப்பரிஹரிக்கிறார்; (கர்மமடியாக) என்று தொடங்கி. அதாவது-சிலரை ஸுகிகளாகவும், சிலரை து:கிகளாகவும், ஸ்ருஷ்

நாக்கிலே குறியிட் டஞ்சப்பண்ணும் மாதாவைப் போலே ஹிதபரனுய்ச் செய்கையாலும் வாராது.

௩௬. இவன்றான் "முந்நீர்ஞாலம்படைத்த வெம்முகில்வண்ணன்" என்கிறபடியே ஸவிக்ரஹனுய்க்கொண்டு ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணும்.

டிக்கிறவிது-விஷமஸ்ருஷ்டிக்குறுப்பான சேதநருடைய கர்மமடியாகச் செய்கையாலும், துக்கிகளாக ஸ்ருஷ்டிக்கிறவிது-தனக்கு ரோககரமான மண்ணை விரும்பித்தின்ன ப்ரஜையை மேலே தின்னுதபடி நாக்கிலேகுறியிட்டு மண்தின்ன பயப்படும்படி பண்ணும் ஹிதபரையான மாதாவைப்போலே, இவர்கள், மேல் துக்கஹேதுவான கர்மங்களைப் பண்ண வஞ்சும்படி ஹிதபரனுய்ச் செய்கையாலும், வைஷம்ய நைர்க்ருண்யங்களிரண்டும் இவனுக்கு வாராதென்கை.

இத்தால்,(௪௮௦)"வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" என்கிற வேதாந்த ஸூத்ரார்த்தத்தை யருளிச் செய்தாராயிற்று. (௪௮௧)"நிம்நோந்நத ஸ்தாவரஜங்கம ஸ்ருஷ்டிர் த்ரைகுண்ய கர்மாபேக்ஷ்ய ஸ்ருஜதஸ்தவாஹுர் ஸேஷிந்: । வைஷம்ய நிர்க்ருணதயோர் ந ஸகலஸ்ய ஹேது: ஸாபேக்ஷதா ஸவிஶேஷ தயோ ப்ராஹுர் ஹி" என்று இது தன்னை பட்டரும் அருளிச்செய்தாரிறே.

௩௬ ஆக, "ஸகலஜகத்ஸர்க்கஸ்த்திதி ஸம்ஹாரகர்த்தாவாய்" என்றத்தை யுபபாதித்தாராய் நின்றார் கீழ்; அநந்தரம், "விலக்ஷணவிக்ரஹயுக்தனுய்" என்றத்தை யுபபாதிப்பதாக வுபக்ரமிக்கிறார்; (இவன்றான்) என்று தொடங்கி. நடுவுசொன்ன ஆர்த்தாதி சதுர்வித புருஷஸமாஶ்ரயணீயத்வமும், தர்மாதி சதுர்விதபல ப்ரதத்வமுமாகிற வினை யிரண்டையும் உபபாதியா தொழிவானென்னென்னில், (௪௮௨) "காரணம் து த்யேய:" (௪௮௩) "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" இத்யாதியிற் சொல்லுகிறபடியே, காரணவஸ்துவே உபாஸ்யமும், ஆஶ்ரயணீயமு மாகையாலே, காரணத்வஞ் சொன்னபோதே, (௪௯௦) "சதுர்விதா பஜந்தே மாம் ஜநா:" என்கிற சதுர்விதபுருஷ ஸமாஶ்ரயணீயத்வமும், (௪௮௪) "பலமத உபபத்தே:" என்கிறபடியே, பலப்ரதத்வஹேதுவான

௪௦. விக்ரஹந்தான் ஸ்வரூப குணங்களிலுங் காட்டில் அத்யந்தாபிமதமாய், ஸ்வாநுரூபமாய்,

ஸர்வஶக்தியோகம், கீழே உக்தமாகையாலே, தர்மாதி சதுர்வித பலப்ரதத்வமும் அர்த்தாத் உக்தமென்னும் நினைவாலும், அவற்றில் உபபாதநீயாம்ஶம் மிகவுமில்லாமையாலும் ததுபாதாநம் பண்ணிற்றிலர். ஆகையாலே, கீழ்ச்சொன்ன காரணத்வத்தோடே விக்ரஹ யோகத்துக்கு அந்வயத்தைச் சொல்லிக்கொண்டு நிகமிக்கிறார்; (இவன்றான் (௯) "முந்நீர்ஞாலம்படைத்த வெம்முகில் வண்ணன். என்கிறபடியே, ஸவிக்ரஹனாய்க்கொண்டு ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணும்) என்று.

அதாவது - இப்படி ஜகத்ஸர்க்காதி கர்த்தாவாகச்சொல்லப் பட்ட இவன்றான், எனக்காக, ஆற்றுநீர் ஊற்றுநீர் வர்ஷஜலமென்று மூன்றுவகைப்பட்ட நீரை யுடைத்தான ஸமுத்ரத்தோடே கூடின ஜகத்தை ஸ்ருஷ்டித்த வர்ஷுகவலாஹகம்போலே யிருக்கிறவடிவை யுடையவனே யென்று. ஆழ்வாருடைய திவ்யப்ரபந்தத்திற் சொல்லுகிறபடியே, விக்ரஹ ஸஹிதனாய்க்கொண்டு ஸ்ருஷ்டி ஸ்த்திதி ஸம்ஹாரங்கள் மூன்றையும்பண்ணுமென்கை. " முகில்வண்ணன் " என்கிறவிது - ஔதார்யகுணபரமாக, வ்யாக்யாதாக்கள் பலரும் வ்யாக்யாநம் பண்ணினார்களேயாகிலும், விக்ரஹபரமாக விவரருளிச்செய்கையாலே, இங்ஙனுமொரு யோஜனையுண்டென்று கொள்ளவேணும். ஒன்றுக்குப் பலயோஜனையுமுண்டாயிறேயிருப்பது.

௪௦. இனி, இந்த விக்ரஹத்தினுடைய வைலக்ஷண்யத்தை யொருசூர்ணையாலே விஸ்தரேண உபபாதிக்கிறார்; (விக்ரஹந்தான்) என்று தொடங்கி. ஸ்வரூப குணங்களிலுங்காட்டில் அத்யந்தாபிமதமாகையாவது-ஆநந்தமயமான ஸ்வரூபமும் ஆநந்தாவஹமான குணங்களும் போலன்றியே, நிரதிஶயாநந்தாவஹமா யிருக்கையாலே, அவற்றிற்காட்டிலும் மிகவுமபிமதமாயிருக்கை. (௪அ) "ஐஹஸ்ஸாகி ஹீதா ஹிஃவெதாாா-ஒெஉ ஹஃ" என்னக்கடவதிறே. ஸ்வாநுரூபமாகையாவது - அநநுரூபமாயிருக்கச்செய்தேயும் அபிமதமாயிருக்குமவைபோலன்றிக்கே, தனக்கு அநுரூபமாயிருக்கை.

நித்யமாய், ஏகரூபமாய், ஶுத்தஸத்வாத்மகமாய், சேதந தேஹம்போலே ஜ்ஞாநமயமான ஸ்வரூபத்தை மறைக்கை யன்றிக்கே, மாணிக்கச்செப்பிலே பொன்னையிட்டு வைத்தாப் போலே யிருக்க, பொன்னுருவான திவ்யாத்ம ஸ்வரூபத்திற்கு ப்ரகாஶகமாய்,

---

நித்யமாகையாவது - ஸ்வரூபகுணங்களோபாதி அநாதிநிதந மாயிருக்கை. லோகத்தில் அவயவிகளுக்கு அநித்யத்வம் காண்கையாலே இதற்கும் அவயவித்வேந அநித்யத்வம் வாராதோ வென்னில்; வாராது. "எங்குமொகக அவயவஸம்பந்த மாத்ரமல்ல அநித்யத்வஹேது; அவயவாரப்தத்வம். அவயவ ஸம்பந்தமாத்ரமே அநித்யத்வ ஹேதுவாமாகில், கரசரணாத்யவயவ ஸம்பந்தமுண்டான வாத்மாவுக்கும் விநாஶம் வரவேணும்; இங்கு அப்படி அவயவாரப்தத்வத்தில் ப்ரமாணமில்லாமையாலே, இது கரசரணாத்யவயவ யோகியாகாநிற்கச்செய்தேயும் நித்யமாயே யிருக்கும்" என்று, இப்படி விவரணத்திலே ஆச்சான்பிள்ளை யருளிச் செய்தாரிறே.

ஏகரூபமாகையாவது- வ்ருத்தி க்ஷயாதிவிகார ரஹிதமாயிருக்கை. (ரு-கூ-உ) " ஸதைகரூபரூபாய " என்னக்கடவதிறே. ஶுத்தஸத்வாத்மகமாகையாவது - குணாந்தர ஸம்ஸர்க்கமில்லாத ஸத்வத்துக்கு ஆஶ்ரயமாயிருக்கிற அப்ராக்ருத த்ரவ்யமே வடிவாயிருக்கை. (ச-அ-ரு) " நதஸ்ய ப்ராக்ருதா மூர்த்திঃ " என்னக்கடவதிறே.

சேதநதேஹம்போலேயித்யாதி - பொன்னுருவான திவ்யாத்ம ஸ்வரூபத்திற்கு ப்ரகாஶகமாகையாவது-ஶுத்தஸத்வாத்மகமாகையாலே, குணத்ரயாஶ்ரயமான சேதந தேஹம்போலே ஜ்ஞாநமயமாகையாலே, தேஜோரூபமான ஸ்வரூபத்தை புறந்தோற்றுதபடி மறைக்கையன்றிக்கே, மாணிக்யத்தைச் செப்பாகச்சமைத்து அதிலே பொன்னையிட்டு வைத்தால் உள்ளிருக்கிற பொன்னை அது புறம்பே நிழலெழும்படி தோற்றுவிக்குமாபோ

நிரவதிகதேஜோரூபமாய், ஸௌகுமார்யாதி கல்யாண குண கண நிதியாய், யோகித்யேயமாய், ஸகலஜநமோஹநமாய், ஸமஸ்த போக வைராக்ய ஜநகமாய்,

---

லே. (சஅஎ) "எண்ணும் பொன்னுருவாய்" என்கிறபடியே, ஸ்ப்ரு ஹணீயமாகையாலே, பொன்னுருவென்று சொல்லப்படுமதான திவ்யாத்ம ஸ்வரூபத்துக்குத்தான் ப்ரகாஶகமாயிருக்கை.

நிரவதிகதேஜோரூபமாகையாவது - நித்யமுக்த விக்ரஹங்களும் இதுவும் ஏகஜாதீய த்ரவ்யமாயிருக்கச்செய்தே, ஏகஜாதீய த்ரவ்யாத்மகமான கத்யோதஶரீர தேஜஸ்ஸிற்காட்டில் ஆதித்ய ஶரீரத்திற்குண்டான தேஜோதிஶயம்போலே, இவை ஸர்வதிக தேஜஸ்ஸாம்படி தான் நிரவதிக தேஜஸ்ஸை வடிவாக வுடைத்தாயிருக்கை.

